வெளியீடு 30-11-2002 Issued 30-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 16, 2002 – தொகுதி 21– எண் 1

**Tuesday the 16th April, 2002 – Volume 21 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

D.
V211,31'P02
P02-21.1,
22411

## 16-4-2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| *1.* தகவல் கோரல்— | |
| (அ) ஒரு கட்சி உறுப்பினர்கள் கறுப்பு உடையில் அவைக்கு வந்துள்ளது | 1 |
| (ஆ) ஓர் உறுப்பினரது தெலுங்கு உரைக்கு மொழி பெயர்ப்பு வழங்கக் கோரியது | 116 |
| *2.* அறிக்கை அளித்தல்— | |
| பொதுக் கணக்குக் குழு | 2 |
| *3.* அரசினர் தனித் தீர்மானம்— | |
| திரு. ராஜீவ் காந்தி கொலையில் முதல் குற்றவாளி பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைக்கவும், தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சார்ந்த எவரையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்காமல் இருக்கவும் உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுதல் | 2-51, 72-115 |

பக்கங்கள்

**3. அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி**

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 2-8, 26-27, 43, 44
திரு. லா. சந்தானம் — 9-10
திரு. எச். ராஜா — 10-12
திரு. ஜி. பழனிசாமி — 12-13
திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 13-14
திருமதி டி. யசோதா — 14-18
திரு. ஜி.கே. மணி — 18-26
*திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 27-41
*பேராசிரியர் க. அன்பழகன் — 41-46,
திரு. ப. ரங்கநாதன் — 72

**4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

(அ) கோரிக்கை எண் 33 -நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 40 - ஊரக வளர்ச்சித் துறை — 52-72, 73-90, 96-129

மாண்புமிகு திரு. சி. துரைராஜ் — 52, 62, 71
திரு. மீ.அ. வைதியலிங்கம் — 58, 68, 71, 73-81, 82-83
*திரு. கே.கே. உமாதேவன் — 84-90
*திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி — 59, 69, 94-106
*திரு. கே.கே. சிவசாமி — 106-110
திரு. கே. கோபிநாத் — 110-115
செல்வி க. பாலபாரதி — 116-121
திரு. த. ஆறுமுகம் — 121-129





பக்கங்கள்

**5. உரிமைப் பிரச்சினை—**

மாண்புமிகு முதலமைச்சர் மீது - தீர்ப்பு — 91-93, 94-95

**6. அறிவிப்பு—**

அரசினர் தனித் தீர்மானம் திருத்தப்பட்டவாறு அவைக் குறிப்பில் இடம்பெறுதல் — 93

**7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்—** — 129-130

D
4/2", 31'/02
DOL. 21.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22-4-91.
சென்னை-600 008
நூலகம்



# ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள்துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. **நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

   நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல்.

4. **கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப்பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

5. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்து-சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :

இந்து-சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்பநலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மின்துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வ்ணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

**17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. மோகன் :**
வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**18. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :**
குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம்.

**19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :**
வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு. நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :**
கால்நடை பராமரிப்பு.

**21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

**22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :**
தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

**23. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :**
பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம் செய்தித்தாள் கட்டுப்பாடு.



**25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :**
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**26. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :**
மீன்வளம்.

**27. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works and Prohibition and Excise** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including Minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption and Prisons. |
| 3. | **Minister for Finance and Information Technology** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money lending, Chits and Registration of Companies and Information Technology. |
| 4. | **Minister for Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal; Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional energy development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines & Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

| | | |
|---|---|---|
| 19. | **Minister for Housing and Urban Development** | .. **The Hon. Thiru M.C. Sampath:**<br>Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 20. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**<br>Animal Husbandry. |
| 21. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru K. Sudarsanam:**<br>Backward Classes, Most Backward Classes and De-notified Communities. |
| 22. | **Minister for Labour** | .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 23. | **Minister for Dairy Development** | .. **The Hon. Thiru S. Ramachandran:**<br>Milk and Dairy Development. |
| 24. | **Minister for Information and Publicity** | .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**<br>Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control. |
| 25. | **Minister for Handlooms and Textiles** | .. **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| 26. | **Minister for Fisheries** | .. **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| 27. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |



## *பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்*

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள்**

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**

**திரு. செ.கு. தமிழரசன்**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.சு. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

**12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல்., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ., | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ., | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | |
|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ.,பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ஒ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., (விடுப்பு) | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ.,பி.ஜி.எல். (விடுப்பு) | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல்., (விடுப்பு) | .. தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ. பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல்., | .. தலைமை நிருபர் |



| | |
|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ., | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ., | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்தரமணி, எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| செல்வி தா. இந்திரா பாய், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி, வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா. ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு.மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர். திருமதி. ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி, கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி, சி., .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி, எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்கரபாணி, திரு. ஆர் .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை, கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி, வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. க. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு.பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி. செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி, சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராஜன், திரு. வ.து. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

| | | |
|---|---|---|
| 157. பாரிமோகன், திரு. கி. | .. | தருமபுரி |
| 158. பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. | கடலாடி |
| 159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | .. | தொண்டாமுத்தூர் |
| 160. பாலசுப்பிரமணியன், திரு. க.க. | .. | ஸ்ரீரங்கம் |
| 161. பாலபாரதி, செல்வி, க. | .. | திண்டுக்கல் |
| 162. பாலன், திரு. எஸ்.எம். | .. | லால்குடி |
| 163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | .. | சேரன்மகாதேவி |
| 164. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 165. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 166. பூபதி மாரியப்பன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 167. பெருமாள், திரு. என்.கே. | .. | விளாத்திக்குளம் |
| 168. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 169. பொன்னம்பலம், திரு. ப. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 170. பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு |
| 171. போளூர் வரதன், திரு. | .. | செங்கம் (செ.வ.) |
| 172. மகாலிங்கம், திரு. எஸ். | .. | அவினாசி (செ.வ.) |
| 173. மகேந்திரன், திரு. கே. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 174. மகேஸ்வரி, திருமதி எஸ். | .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 175. மணி, திரு. கோ.சி. | .. | கும்பகோணம் |
| 176. மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 177. மணி, திரு. ஜி.கே. | .. | பெண்ணாகரம் |
| 178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |



| | | |
|---|---|---|
| 179. மலையப்பசாமி, திரு. அ.இரா. | .. | கபிலர்மலை |
| 180. மல்லிகா சின்னசாமி, திருமதி | .. | முசிறி |
| 181. மாணிக்கராஜ், திரு. எஸ். | .. | நாங்குநேரி |
| 182. மில்லர், திரு. அ. | .. | கூடலூர் |
| 183. முரளிதரன், திரு. கே.வி. | .. | தளி |
| 184. முருகவேல் ராஜன், திரு. க. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 185. முருகேசன், திரு. ஆகு. | .. | ஆத்தூர் |
| 186. முனுசாமி, திரு. கா.பூ. | .. | காவேரிப்பட்டினம் |
| 187. மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. | பாளையங்கோட்டை |
| 188. மோகன், திரு. ப. | .. | சின்னசேலம் |
| 189. யசோதா, திருமதி டி. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 190. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 191. ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. | பட்டுக்கோட்டை |
| 192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | .. | கோபிசெட்டிப்பாளையம் |
| 193. ராதாகிருஷ்ணன், திரு. எம். | .. | திருமயம் |
| 194. ராமராஜ், திரு. ச. | .. | போடிநாயக்கனூர் |
| 195. ராம்குமார், திரு. எம். | .. | பாபநாசம் |
| 196. ராஜகோபால், திரு. ஆ. | .. | சிவகாசி |
| 197. ராஜம்மாள், திருமதி. எஸ். | .. | தூத்துக்குடி |
| 198. ராஜா, திரு. எச். | .. | காரைக்குடி |
| 199. ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. | சோழவந்தான் |
| 200. ராஜு, திரு. எச்.எம். | .. | உதகமண்டலம் |
| 201. ரெங்கநாதன், திரு. என். | .. | பூம்புகார் |

202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
203. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
205. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
206. வளர்மதி, ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
207. வள்ளல் பெருமான், டாக்டர், பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
208. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
209. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
210. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்காநகர்
212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி, ப. .. பனமரத்துப்பட்டி
214. வீரபாண்டியன், திரு. ஜெ.க. .. மயிலாடுதுறை
215. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
216. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-I
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
218. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
219. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
220. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
221. வைதியலிங்கம், திரு. மீ. அ. .. தாம்பரம்
222. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு



223. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி
225. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
226. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
227. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி
228. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
229. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
230. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)
233. (வெற்றிடம்) .. சைதாப்பேட்டை
234. (வெற்றிடம்) .. வாணியம்பாடி
235. (வெற்றிடம்) .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 3, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033**
**2002 ஏப்ரல் 16, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு".*

பொது நல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளரின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### (அ) ஒரு கட்சி உறுப்பினர்கள் கறுப்பு உடையில் அவைக்கு வந்துள்ளது

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் கறுப்பு உடையிலே வந்திருக்கிறார்கள். முக்கியமானதொரு தீர்மானத்தை நாம் கொண்டு வருகிற இந்தவேளையில் நாட்டு நலன் முக்கியமேயொழிய, இப்படிப்பட்ட ஒரு கறுப்புச் சட்டையை அணிந்து வந்து, இவர்கள் இதற்கு ஒரு களங்கம் கற்பிக்க முயல்வது நியாயமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களுடைய கருத்தைத் தெரிவிக்க கறுப்பைப் பயன்படுத்துகிறார்கள்.

[2002 ஏப்ரல் 16

## 2. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 46 முதல் 48 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. அரசினர் தனித் தீர்மானம்

**திரு. ராஜீவ் காந்தி கொலையில் முதல் குற்றவாளி பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைக்கவும், தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சார்ந்த எவரையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்காமல் இருக்கவும் உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஸ்ரீலங்காவில் நடைபெற்று வரும் செயல்கள், குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், சர்வதேச பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தது குறித்து இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அந்தச் செயல்கள் அனைத்துமே இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கும், இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் நேரடியாகச் சம்பந்தம் உள்ளவை. இவை குறித்து தமிழக மக்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளார்கள். இந்தப் பேரவையில் அங்கம் வகிக்கும் பல்வேறு உறுப்பினர்களும் தங்களுடைய கவலையைத் தெரிவித்து இங்கே பேசியுள்ளார்கள். தமிழக மக்களின் ஒட்டுமொத்த எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த விஷயத்தில் மத்திய அரசை வலியுறுத்தி, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்ப வேண்டுமென இந்த அரசு முடிவு செய்தது. அதன் அடிப்படையிலேயே இன்று இந்தத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டுள்ளது. முன்னதாக நான் ஒருசில விஷயங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.





நான் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோதெல்லாம் இந்திய அரசாங்கத்தை ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்பு கொண்டு பயங்கரவாத அமைப்பான L.T.T.E.-யின் தலைவரான பிரபாகரனை ஸ்ரீலங்கா நாட்டிலிருந்து இங்கு கொண்டு வந்து சேர்த்து, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமென திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தேன். 20-9-1991 ஆம் தேதியிட்ட எனது கடிதத்தில் அப்போது மாண்புமிகு பாரதப் பிரதமராக இருந்த திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை, தேவைப்படும்பட்சத்தில் ஸ்ரீலங்கா அரசினுடைய அனுமதி பெற்று நம்முடைய இராணுவத்தை அனுப்பியேனும், பிரபாகரனைப் பிடித்து இந்தியாவிற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். முன்னாள் பிரதமர், அமரர் திரு. ராஜீவ் காந்தியின் படுகொலையை நிறைவேற்ற திட்டமிட்டு சதி செய்து, பின்னர் அந்தக் கொலையைப் புரிந்தமைக்காக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இந்திய நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமெனக் கோரியிருந்தேன். அதன் பின்னர் பலமுறை இதே கோரிக்கையை வலியுறுத்தினேன். அப்போது பாரதப் பிரதமராக இருந்த திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களின் அரசு, இதுகுறித்து நடவடிக்கை எடுத்து, 1995-ல் Interpol-International Criminal Police Commission அமைப்பின் வாயிலாக பிரபாகரனைக் கைது செய்ய Red Corner Notice வழங்கப்பட்டது. ஆனால், அதன் பின்னர் எதுவும் நடக்கவில்லை. 1991 ஆம் ஆண்டு தமிழக மண்ணிலே நிகழ்த்தப்பட்ட திரு. ராஜீவ் காந்தியின் கோரப் படுகொலையையும், இந்தக் கொடூரமான செயலில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் உறுதியாகச் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதையும், இந்திய நாடு இன்னும் மறக்கவில்லை. திரு. ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில், பிரபாகரன் நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட முதல் குற்றவாளியாக உள்ளார் என்பதை நான் இங்கு மீண்டும் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

2-12-1998 அன்று மத்திய அரசு பல்துறை சார்ந்த கண்காணிப்புக் குழு – Multi Disciplinary Monitoring Agency – ஒன்றை அமைத்து, திரு. ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் முழுமையான விசாரணையை மீண்டும் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. 1992 ஆம் ஆண்டு என்னுடைய கடுமையான வற்புறுத்தலின்பேரில், இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை – Unlawful Activities (Prevention) Act, 1967 – அதாவது, 1967 ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடை செய்து, அந்தத் தடை உத்தரவு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீட்டித்து வருகிறது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 16 முற்பகல் 10-05

அண்மையில் நிறைவேற்றப்பட்ட 2002 ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்புச் சட்டம் – Prevention of Terrorism Act, 2002-ன்கீழ் இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்து இந்திய மக்களை நிம்மதியடையச் செய்தது. அந்தப் பயங்கரவாத அமைப்பினால், இந்திய நாட்டிற்குள்ள அபாயத்தை உணர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவே நான் கருதுகிறேன். ஆனால், அண்மைக் காலங்களில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளில் மத்திய அரசாங்கம் மௌனம் காத்து வருவது எங்களுக்கு கவலை அளிக்கிறது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் சில பத்திரிகைகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் ஆன்டன் பாலசிங்கம் தமிழ்நாட்டில் இருந்துகொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமெனக் கோரியுள்ளதாகச் செய்திகள் வெளியிடப்பட்டு இருந்தன. அப்போது, தமிழக முதலமைச்சராக இருந்த எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து மத்திய அரசின் கவனத்தை ஈர்த்து, விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் காலூன்ற எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் அனுமதிக்கக்கூடாது என்பதைத் தெளிவுப்படுத்திக் கூறியிருந்தார். தமிழ்நாட்டு விடுதலைக்காகப் போராடும் இயக்கங்கள் என்று தங்களைப் பறைச்சாற்றிக்கொள்ளும் சில அமைப்புகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு சேர்ந்துகொண்டு நாட்டைத் துண்டாடச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்ற தகவல் இந்திய உளவுத் துறை அமைப்புகள் மூலம் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். தமிழ்நாடு அரசும், அதனைச் சார்ந்த உளவு நிறுவனங்களும் மிகுந்த விழிப்புணர்வோடு இருப்பதால் மாநிலத்தின் பாதுகாப்பிற்கு விடுதலைப் புலிகளால் எந்தவிதமான குந்தகமும் ஏற்படாமல் காப்பாற்றப்பட்டு வருகிறது. எனினும், குறுகிய எண்ணம் கொண்ட அமைப்புகளான தமிழ்நாடு விடுதலைப்படை – Tamil Nadu Liberation Army – மற்றும் தமிழ் நாடு மீட்புப் படை – Tamil National Retrieval Troop – போன்ற அமைப்புகளுடன் விடுதலைப் புலிகள் தொடர்பு கொண்டுள்ளன என்பதற்கு வலுவான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.



2002 ஏப்ரல் 16] [செல்வி ஜெ ஜெயலலிதா]

உள்நாட்டிலுள்ள இந்தப் பிரிவினைவாத அமைப்புகளினால் ஏற்படும் அபாயத்தைத் தவிர்க்க – Criminal (Law Amendment) Act 1908 – அதாவது 1908ஆம் ஆண்டு குற்றத் தடுப்பு (திருத்தச்) சட்டத்தின்கீழ் தமிழ்நாடு விடுதலைப் படை மற்றும் தமிழ் தேசிய மீட்புப் படை ஆகியவற்றைத் தடை செய்துள்ளோம். மேலும், 1967ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் இந்த அமைப்புகளைத் தடை செய்யுமாறு மத்திய அரசை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

உலகின் மற்ற பகுதியினருக்கு தற்போது ஸ்ரீலங்காவில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள், ஸ்ரீலங்காவில் இனக் கலவரத்திற்கு ஒரு முடிவு கட்டவும், அங்கு அமைதியை நிலைநாட்டவும் ஸ்ரீலங்கா அரசு எடுத்துவரும் ஒரு முன்னேற்ற நடவடிக்கையாகத் தோன்றலாம். ஆனால், உலகிலேயே மிகவும் அபாயகரமான பயங்கரவாத அமைப்பின் தலைவர் பிரபாகரன், உலகச் செய்தியாளர்கள் முன்னிலையில் தோன்றி, தன்னுடைய அமைப்பு, படைக்கலன்களைத் துறக்காமல் தமிழர்களுக்காகத் தனி நாடு கோரி தொடர்ந்து போராடும் என்று அறிவித்ததைக் கேட்டு நாங்கள் கண்களை மூடிக்கொண்டு இருக்க முடியாது. அந்த அறிவிப்பு இந்தியாவில் செயல்பட்டு வரும் பயங்கரவாத அமைப்புகள் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய விளைவைக் குறைத்து மதிப்பிட முடியாது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் மத்திய அரசுக்கு வந்து விட்டது என்றே நாங்கள் கருதுகிறோம்.

அமெரிக்காவில் பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் எனக் கருதப்பட்ட ஒசாமா-பின்-லேடனைப் பிடிப்பதற்கு அமெரிக்கா நாடு எடுத்த ஒருமித்த நடவடிக்கைகளைப் போன்று பிரபாகரனைப் பிடிப்பதற்கு நாமும் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அண்டை நாடுகளுடன் சுமுகமான உறவுகளைப் பேண வேண்டுமென்பதற்காக இந்திய அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றபோதிலும், அதற்காக பிரபாகரனை நீதிமன்றத்திற்கு கொண்டு வரச் செய்வதில் எவ்வித சுணக்கமும் காட்டக் கூடாது. இந்த விஷயத்தில் ஸ்ரீலங்கா அரசின் எண்ணம் எப்படிப்பட்டதாக இருந்தபோதிலும், நாம் அதில் உறுதியாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் நிகழ்ந்த திரு. ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலைக்கு விடுதலைப் புலிகள் காரணமாக இருந்தார்கள் என்பதையறிந்து மனவேதனையுற்ற தமிழக மக்கள்

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 16

விடுதலைப் புலிகளுக்கு எதிரான கடுமையான நிலையை மேற்கொண்டார்கள். இந்தப் படுகொலைக்கு முன்பு தமிழ்நாட்டிலுள்ள அத்தனை அரசியல் கட்சிகளும், தமிழக மக்களும் விடுதலைப் புலிகள் மீது அனுதாபத்தைக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீலங்காவிலுள்ள தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் விருப்பம் கொண்டிருந்தார்கள். ஆனால், அந்த அனுதாபமே திரு. ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்பு கடுமையான எதிர்ப்பாக மாறிவிட்டது.

முற்பகல் 10-10

அதேநேரத்தில், ஸ்ரீலங்காவில் வாழும் தமிழர்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதைத் தமிழக மக்களும் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அங்கிருந்து அகதிகளாகத் தமிழகத்திற்கு வந்ததையும், பல இன்னல்களை அவர்கள் சந்தித்ததையும் தமிழ்நாட்டு மக்கள் கவலையோடு பொறுத்துக்கொண்டார்கள். எனவே, ஸ்ரீலங்காவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதிக்கான முயற்சிகள் வெற்றி பெறவேண்டுமென்பதில் தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. ஸ்ரீலங்காவில் அமைதிக்கான முயற்சிகளுக்கு எதிரான நிலையை தமிழக அரசும், தமிழக மக்களும் எப்போதும் மேற்கொள்ளமாட்டார்கள். ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு, அமைதி திரும்பும் வேளையில், தமிழகத்தில் குடியேறியுள்ள ஸ்ரீலங்கா தமிழ் அகதிகள் அவர்களது தாய்நாடு திரும்புவதையும், தத்தம் உறவினர்களோடு சேர்ந்து வாழ்வதையும், தமிழக அரசு பெரிதும் விரும்புகிறது.

அண்டை நாடான ஸ்ரீலங்காவில் அமைதி நிலவ வேண்டும். அங்குள்ள தமிழர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. ஆனால் அதற்காக இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டின் பாதுகாப்பிற்கும் குந்தகம் விளைவிக்கக் கூடியவர் யாராக இருந்தாலும், அவர்களை நாம் சகித்துக்கொள்ள முடியாது. இந்தக் கருத்தை உள்ளடக்கித்தான் இன்று தமிழக அரசின் சார்பாக நான் ஒரு தீர்மானத்தை முன்மொழிய விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்களின் கருத்துகளையும், மாநிலத்திலுள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் எடுத்துச்சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 16] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

இந்திய இறையாண்மையை, ஒருமைப்பாட்டை, அமைதியைப் பேணிக் காக்கவே, இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையில் முன்மொழிந்து, மத்திய அரசை வற்புறுத்த முன்வந்துள்ளேன். இத்தகைய உன்னத நோக்கத்தை உள்ளடக்கிய இந்தத் தீர்மானத்தைப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

ஏற்கெனவே ஒரு தீர்மானம் வரையப்பட்டு, அதன் நகல்கள் இங்கே மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அது மிகவும் நீண்டதொரு தீர்மானமாக இருக்கிறது என்று பலர் கருத்து தெரிவித்ததால், அதனைச் சுருக்கி, திருத்தி, திருத்தப்பட்ட தீர்மானத்தை இப்பொழுது முன்மொழிகிறேன்.

**அரசினர் தனித் தீர்மானம்**

"படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாரதப் பிரதமர் அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கொலை வழக்கில் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படும் இலங்கை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இச்சட்டப் பேரவை வற்புறுத்துகிறது. மேலும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சார்ந்த எந்த ஒருவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்துகிறது.

@தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்மீது தமிழக மக்கள் கொண்டிருந்த அனுதாபமும், ஆதரவு மனப்பான்மையும், திரு. ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்பு முற்றிலும் மாறிவிட்டது. அதிலும் அந்தக் கொடூர சம்பவத்தின் பின்னணியில் இருந்து செயல்பட்டது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும் தான் என்பது தெரிய வந்தபோது, தமிழக மக்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும், அதன் நடவடிக்கைகள் மீதும், ஓர் அச்சம் கலந்த வெறுப்பைக் காட்டத் துவங்கினர். தமிழக மக்களின் உணர்வை எப்போதும் பிரதிபலிக்கும் இந்தத் தமிழக அரசு, அது முதல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தனது எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது.

---

@27ஆம் பக்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பத்தி 2 இணைக்கப்பட்டுள்ளது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 16

தற்போது ஸ்ரீலங்காவில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட சூழ்நிலையினால் அந்த நாட்டில், குறிப்பாக யாழ்ப்பாணம் பகுதியில் அமைதி திரும்பும் நிலை உருவாகுமென்றால், அதில் தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் மகிழ்ச்சிதான். அந்தச் சூழ்நிலை உருவாகுமேயானால், ஸ்ரீலங்காவிலிருந்து புகலிடம் தேடி தமிழகத்திற்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான ஸ்ரீலங்கா தமிழ் அகதிகள் தங்கள் தாயகத்திற்குத் திரும்பவும், ஸ்ரீலங்காவில் உள்ள தத்தம் உறவினர்களுடன் சேர்ந்து வாழவும் வாய்ப்பு உருவாகும்.

அதேநேரத்தில், இந்தியாவின் பாதுகாப்புக்கும், ஒருமைப்பாட்டுக்கும், இறையாண்மைக்கும், குந்தகம் விளைவிக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும் இந்திய மண்ணில் காலூன்றுவது ஒருபோதும் ஏற்கப்படமாட்டாது—அனுமதிக்கப்பட மாட்டாது.

இந்த எண்ணங்களையும், உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையில், திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அறிவிக்கப்பட்ட முதல் குற்றவாளியான பிரபாகரனை இந்தியாவிற்கு கொண்டு வருவதற்கு ஸ்ரீலங்கா அரசோடு சட்டப்படியாகவும், தூதரக நடைமுறைப்படியும், அனைத்துவிதமான முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், பிரபாகரனை அவர் புரிந்த குற்றங்களுக்காக இந்தியாவில் உள்ள நீதிமன்றத்தில் உரிய விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், தமிழக சட்டமன்றப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

பிற்பகல் 10-15

ஸ்ரீலங்கா அரசினால் L.T.T.E. இயக்கத் தலைவர் பிரபாகரனை பிடித்து நாடு கடத்த இயலவில்லை என்றால், ஸ்ரீலங்கா அரசின் அனுமதியோடு, இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்கா அரசின் உதவிக்கு அனுப்பி, பிரபாகரனை சிறை பிடிப்பதற்கு உரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசை தமிழக சட்டமன்றப் பேரவை கேட்டுக்கொள்கிறது."

இந்தத் தீர்மானத்தை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானத்தின்மீது விவாதம். தலைவர்கள் மட்டும் சுருக்கமாகத் தங்கள் கருத்துகளை எடுத்துச்சொல்ல கேட்டுக்கொள்கிறேன். திரு. லா. சந்தானம்.



2002 ஏப்ரல் 16]

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் தமிழக முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தின் மீது, இலங்கையின் விடுதலைப் புலிகள் இயக்கத்தினுடைய தலைவர் பிரபாகரன் அவர்களை நீதிமன்றத்திலே கொண்டு வந்து நிறுத்தி, ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே அவர் ஒரு எதிரி என்கின்ற முறையில் நல்லதொரு தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையைத் தமிழகச் சட்டமன்றத்திலே வைத்து தீர்மானமாக ஆக்குவதற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்து இருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்த அளவிலே, ஒரு தமிழன் என்கின்ற உணர்வோடு கடந்த 18 ஆண்டுகாலமாக இலங்கையிலே மிகுந்த துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டு வந்திருக்கின்ற தமிழ் மக்களுடைய கோரிக்கைக்காகத் தமிழகத்திலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே அந்தத் தமிழ் மக்களுடைய வாழ்க்கை உயர்வுக்காகக் குரல் கொடுத்தவர்களிலே நானும் ஒருவனாக இருந்து, என்னுடைய அரசியல் வாழ்க்கையில் மிக அதிகமாக சிறைத்தண்டனை ஏற்றுக்கொண்டது, தமிழ் மக்களாகிய இலங்கை வாழ் தமிழர்களுக்காகத்தான் நான் சிறைத் தண்டனையை ஏற்றிருக்கிறேன் என்கின்ற உணர்வோடு கூறுகிறேன். அந்தத் தமிழ் மக்களுக்கு நல்லது வரவேண்டும், அந்தத் தமிழ் மக்கள் நல்ல நிலையிலே இருக்கவேண்டும் என்பதிலே, பலமுறை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில்கூட, அவரால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டங்களிலே எல்லாம் கலந்துகொண்டு அந்தத் தமிழ் மக்களுடைய உயர்வுக்காகக் குரல் கொடுத்தவன் என்கின்ற முறையிலும், அந்தத் தமிழ் இனம் இலங்கையிலே வாழ வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறையும், ஆர்வமும் உண்டு என்பதை மீண்டும் இந்த அவையிலே நான் பதிவு செய்வதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இருந்தாலும்கூட, நமது இந்திய நாட்டினுடைய பிரதமராக இருந்த திரு. ராஜீவ் காந்தி அவர்கள், இந்தத் தமிழ் மண்ணிலே கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்கின்ற ஒரு வருத்தமான செய்தியை நாம் யாரும் மறக்கவில்லை என்கின்ற காரணத்தால், அந்தத் தவறைச் செய்தவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதிலே கருத்து மாறுபாடு இல்லை. என்னைப் பொறுத்தவரையிலே, எங்களுடைய அகில இந்தியக் கட்சித் தலைமை, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறது என்று சொன்னாலும், அதிலே, அங்கே இந்திய இராணுவத்தை அனுப்பித்தான் பிரபாகரனை கைது செய்ய வேண்டுமென்கிற ஒரு

[திரு. லா. சந்தானம்] [2002 ஏப்ரல் 16

நிலையைத் தவிர்த்து, எப்படியும் இலங்கை அரசோடு பேசி, அதன் மூலமாகக் குற்றம் செய்த பிரபாகரனை இந்தியாவிற்குக் கொண்டு வந்து நீதிமன்றத்திலே விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து என்கின்ற முறையில், எப்படியிருந்தாலும் அவர் தண்டனைக்குரிய குற்றவாளி என்கின்ற முறையில் இந்தத் தீர்மானத்தை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் ஆதரித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** அவைத் தலைவர் அவர்களே, என் சார்பாக, எங்கள் கட்சியின் துணைத் தலைவர் திரு. எச். ராஜா அவர்களை இதிலே பேச அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சி, தீவிரவாதம் எந்த வடிவில் வந்தாலும் அதைத் தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது. தீவிரவாதிகளின் சதித் திட்டங்களுக்கு பல பாரதிய ஜனதா கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் பலியாகி உள்ளனர். தமிழகத்திலே, L.T.T.E.-யினுடைய தீவிரவாத, பயங்கரவாதச் செயல்களை, ஆரம்பகாலம் தொட்டு அவர்கள் தமிழகத்திலே நடத்தியிருக்கின்ற படுகொலைகளை பாரதிய ஜனதா கட்சி வன்மையாகக் கண்டித்து வந்துள்ளது.

முற்பகல் 10-20

தமிழகத்திலே L.T.T.E.-க்குப் பயிற்சி முகாம்கள் நடைபெறுவதை, பல கட்சிகள் கண்டுகொள்ளாமல் இருந்த காலகட்டத்தில்கூட, 1980-களிலேயே எங்களுடைய அகில இந்தியத் தலைவராக இன்றைக்கு இருக்கின்ற திரு. ஜனா கிருஷ்ணமூர்த்தி அவர்கள், மிகப் பெரிய அளவில் அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்து, தீவிரவாதம் தமிழ் மண்ணில் பரவாமல் இருக்க வேண்டும் என்பதற்காகப் பலமுறை தீவிரமான முறையிலே எங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். திரு. ராஜீவ் காந்தி அவர்கள், படுகொலை செய்யப்பட்டதற்கு முன்பேகூட, E.P.R.L.F.-னுடைய தலைவர் பத்மநாபா இங்கு கொல்லப்பட்டார். அதன் பின்னும்கூட, பல கட்சிகள் L.T.T.E.-யின்பால் ஒரு soft approach வைத்திருந்ததை நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 16] [திரு. எச். ராஜா]

பல்வேறு தலைவர்களும், அதற்குப் பிறகுகூட, பிரபாகரனைச் சந்தித்திருக்கிறார்கள். அதேபோல, இங்கு ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு முன்பாக, மத்திய அரசாங்கம் இங்கிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசை நாங்கள் இது தொடர்பாக நீக்குகிறோம் என்று சொல்லி, 1991 ஜனவரியிலே அவர்கள் நீக்கினார்கள். ஆனால், அதற்குப் பிறகு, 4 மாதங்களுக்குப் பிறகு, இந்தச் சம்பவமானது நடந்திருக்கிறது.

இடைப்பட்ட காலத்திலே, அதிலும் குறிப்பாக, தேர்தல் சமயத்திலே, திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இங்கு வருகின்ற சமயத்திலே, சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாதது மாத்திரமல்ல, இன்னும் சில தகவல்களும் அப்போது சில காங்கிரஸ் தலைவர்களினுடைய வீடுகளிலும், உறவினர்கள் வீடுகளிலும், தாணு, சிவராஜன் போன்றவர்கள் ஏற்கெனவே பழகி இருந்தார்கள், தொடர்பு வைத்திருந்தார்கள் என்றெல்லாம் வெளியாயின. ஆகவே இம்மாதிரியான அஜாக்கிரதையான போக்கின் காரணமாகவும் L.T.T.E.-னுடைய இயல்பான வன்முறை குணத்தின் காரணமாகவும், தமிழ் மண்ணில் வன்முறையானது செயல்படுத்தப்பட்டது. ஆகவே, திரு. ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலைக்குக் காரணமாக இருந்த L.T.T.E.-மீதான தடை தொடர வேண்டும் என்பதிலும், பிரபாகரன் இந்த நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, இந்த நாட்டினுடைய நீதிமன்றத்தின் முன்பாக நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும், பாரதிய ஜனதா கட்சிக்கும், மைய அரசிற்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஏனென்று சொன்னால் இந்தத் தீர்மானத்தினுடைய Core portion மத்திய அரசாங்கம்-ஏற்கெனவே பாரதப் பிரதமர் அவர்களும், நேற்றைய முன்தினம் External Affairs Ministry-யினுடைய spokesperson-னும் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதாவது L.T.T.E.-என்பது தடை செய்யப்பட்ட இயக்கம்; அதன்மீதான தடை நீக்கப்படமாட்டாது; மேலும், பிரபாகரனை இங்கு கொண்டு வருவதற்காக நாங்கள் ஸ்ரீலங்கா அரசோடு பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்டதொரு தீர்மானமாக இருந்ததை, சுருக்கிச் சொன்னதிலே, முந்தைய, பழைய தீர்மானத்திலே சில பகுதிகள் நீக்கப்பட்டு, இப்போது சுருக்கமான தீர்மானமாக இருப்பதிலே, அவர்கள் முன்னுரையிலே சொல்லும்போது, மத்திய அரசு அமைதி காப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசு அமைதி காப்பதாக நாம் எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், பாரதப் பிரதமர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

[திரு. எச். ராஜா] [2002 ஏப்ரல் 16

அதையேதான் நேற்றைய முன்தினம் கோவாவிலே, நம்முடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசியபோது, எந்தவிதத்திலேயும், தமிழகத்திலே L.T.T.E.-யோடு தொடர்புடைய எவரும் வருவதற்கு, தமிழகத்தினுடைய அமைதி குலைவதற்கு, மத்திய அரசு அனுமதிக்காது என்கிற வாக்குறுதியையும் கூறியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த இடத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த ஒரே ஒரு கடைசி பாரா தீர்மானத்திலே—அதாவது, 'ஸ்ரீலங்கா அரசினால், L.T.T.E. இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பிடித்து நாடு கடத்த இயலவில்லை என்றால், ஸ்ரீலங்கா அரசின் அனுமதியோடு, இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்கா அரசின் உதவிக்கு அனுப்பி' என்கின்ற, அதாவது, Defence, External Affairs இரண்டும் மத்திய அரசாங்கத்தினுடைய subject-ஆக இருக்கின்ற காரணத்தால், அந்த ஒரு பாராவை மாத்திரம் நீக்கிக்கொள்ள வேண்டும் என பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு, தீவிரவாதத்தை எதிர்ப்பதிலே பாரதிய ஜனதா கட்சியும், அதன் தலைமையிலான மத்திய அரசும் நிச்சயமாக, தமிழக அரசோடு இங்கு அமைதி காப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதையும் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தீர்மானத்தின்மீது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

அண்டை நாடான ஸ்ரீலங்காவில், ஈழத் தமிழ் மக்களினுடைய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்பட்டு வருகின்ற இந்த முயற்சியில் சுமுகமான முடிவு ஏற்பட வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஸ்ரீலங்காவினுடைய அரசு, விடுதலைப் புலிகளினுடைய அமைப்பு உள்ளிட்ட ஈழத் தமிழ் மக்களுடைய அமைப்புகளோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. சுமுகமான தீர்வு கண்டால், ஸ்ரீலங்காவிலேயும், அதன் அண்டை நாடான இந்தியாவிற்கும், குறிப்பாக, தமிழ்நாட்டு தமிழ் மக்களுக்கும் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்குமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

முற்பகல் 10-25

இந்நிலையில் நாம் எடுக்கின்ற எந்த ஒரு முடிவும் அந்தப் பேச்சுவார்த்தைக்கு இடையூறாக அமைந்துவிடக் கூடாது என்று இந்தியக்



2002 ஏப்ரல் 16] [திரு. ஜி. பழனிசாமி]

கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. தமிழ் மண்ணில் முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டது மிகத் துயரமான சம்பவம், கோர சம்பவம்; இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அன்றைக்கும் கண்டித்து இருக்கிறது; இன்றைக்கும் அதைக் கண்டிக்கிறது. இந்திய நாட்டில் விடுதலைப் புலிகளின் அமைப்பு தடை செய்யப்பட்டு இருக்கிறது. அவை தொடர்ந்து தடை செய்யப்பட்டு இருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஆனாலும், இன்றைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும், வேண்டுமானால் இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்கா அரசின் உதவிக்கு அனுப்பி, பிரபாகரனைச் சிறை பிடிக்க உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசை தீர்மானம் கேட்டுக்கொண்டதில், இந்தியாவினுடைய இராணுவத்தை அனுப்புவது சரியில்லை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி—இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவது என்பதை ஆதரிக்கவில்லை என்பதை—இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துகளாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன். இலங்கையில் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக நீடித்துவரும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. இலங்கையில் உள்ள சிங்கள மொழி பேசுவோரும், தமிழ் மொழி பேசுவோரும், இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினை தீர்க்கப்பட்டு, அமைதியாக சுமுகமாக வாழ வேண்டுமென்ற அடிப்படையில் பேச்சுவார்த்தையை வரவேற்கின்றோம். ஒன்றுபட்ட இலங்கைக்கு உட்பட்டு தமிழ் மக்களுக்கு இன, மொழி, கலாச்சார உரிமைகள் உள்ளிட்ட அதிக அதிகாரம் கொண்ட மாநில சுயாட்சி—கூடுதல் அதிகாரம் கொண்ட மாநில சுயாட்சி—கூடுதல் அதிகாரம் அளித்து, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுவதற்கான வாய்ப்புகளுக்கு எந்தவகையிலும் பாதகம் ஏற்படுத்தும் முறையில் எதுவும்

செய்துவிடக் கூடாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஏற்கெனவே இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை நீடிக்க வேண்டுமென்ற கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது.

மேலும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்காக இந்தியா வருவதையோ, இந்திய மண்ணை அவர்கள் தீய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதையோ அனுமதிக்கக்கூடாது; விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாக உள்ளார். அந்த வழக்கில் அவர்மீது சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. அதேநேரத்தில் பிரபாகரனைப் பிடிப்பதற்காக இலங்கை அரசின் அனுமதியுடன் இந்திய இராணுவம் இலங்கைக்கு செல்ல வேண்டும் என்ற கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கவில்லை. எக்காரணத்தைக் கொண்டும் இலங்கை அரசின் இறையாண்மையைப் பாதிக்கும் அளவிற்கு நாம் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது. எனவே, இந்திய இராணுவம் இலங்கைக்கு செல்ல வேண்டும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சேபிக்கிறது. எந்தவிதத்திலும் தமிழ்நாடு சட்டமன்றம் இன்னொரு நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும்படியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கவில்லை. மேற்கண்ட காரணத்திற்காக அப்படிப்பட்ட ஒரு தீர்மானம் வருமேயானால், அந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்துகொள்ள விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் அமைதிப் பேச்சுவார்த்தை வேண்டி அந்நாடு புலிகள் இயக்கத்துடன் பேசத் தொடங்கியுள்ளது. அங்கு அமைதி ஏற்பட்டால் அவர்களுடன் நாம்கூட மகிழ்ச்சி அடைவோம். இருந்தாலும் முன்னாள் பாரதப் பிரதமர், எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்த மண்ணிலே புலிகள் இயக்கத்தின் சூழ்ச்சி காரணமாக ஒரு பெண்ணை வைத்து படுகொலை செய்யப்பட்ட துயரச் சம்பவத்தை, மறக்கப்பட வேண்டிய ஒரு பழைய விஷயமாக பிரபாகரன் தன்னுடைய பேட்டியிலே தெரிவித்திருப்பது உண்மையிலேயே மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.





முற்பகல் 10-30

இங்கே கருத்து சொல்கிறபோது காங்கிரஸ் தலைவர்களுக்கும் இதில் பங்கு இருக்கிறது என்பதுபோலக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தலைவர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்கு முயற்சித்து, அந்த முயற்சியில் வெற்றி பெற்ற, விடுதலைப் புலிகளுக்கும் காங்கிரஸ் கட்சியிலே நிச்சயமாக யாருக்குமே எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்வதோடு மட்டுமல்ல, அப்படி இருக்கின்றவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இருந்திருக்கவும் முடியாது என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெயின் கமிஷனிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், யார் யாருக்கு சம்பந்தம் இருக்கிறது என்பதை. ஆகவே, அதை மறுபடியும் நீங்கள் படிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அன்னை சோனியா காந்தி அவர்கள் சொன்னதைப்போல, இந்த நாட்டு நீதிமன்றத்தின் மூலம், அறிவிக்கப்பட்ட குற்றவாளியான பிரபாகரன் நீதிக்குத் தலை வணங்கி, நீதிமன்ற விசாரணைக்கு உட்பட வேண்டும். அவர் செய்த செயல் மறக்கப்பட வேண்டியதா அல்லது மன்னிக்கப்பட வேண்டியதா என்பதை இந்திய நீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பு பெற வேண்டுமேயன்றி, பிரபாகரன் பேட்டியின் மூலமாக அல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தீவிரவாதிகளால் அமெரிக்கா தாக்கப்பட்டபோது அந்த நாட்டின் அதிபர் சொன்னார், 'மதங்களையும், அதன் கோட்பாடுகளையும் மதிக்கின்றேன். வணங்குகின்றேன். என்றாலும் அதன் போர்வையில் வந்து ஏற்படுத்திய தீவிரவாதத்தைக் கடுமையாக எதிர்க்கின்றேன். குற்றவாளிகளை அமெரிக்கச் சட்டத்தின் முன் நிறுத்தி அமெரிக்க மக்களுக்கு நியாயம் பெறுவேன்' என்று சொன்னார். Charity begins at home என்பார்கள். இங்கே தமிழகத்தில் உள்ளவர்கள் முதலில் 'இது நம் தேசம், அதுவே நம் நேசம்' என்ற நியாய உணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம். யூனிபார்ம் தேவை இல்லை. நம்மை நாமே ஒரு நியாயமான ஆத்ம பரிசோதனை செய்துகொள்ளத்தக்க வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சமுதாயத்தின் உயரிய நிலையில் உள்ள இந்த மாமன்றத்தில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

[திருமதி டி. யசோதா] [2002 ஏப்ரல் 16

வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரத்திற்காக இந்த நாடு பாடுபட்டபோது வீரபாண்டிய கட்டபொம்மனை எட்டப்பன் காட்டிக் கொடுத்தான். வீராங்கனை ஜான்சி ராணியை சில வெள்ளிக் காசுகளுக்காக அவரது பாதுகாவலனே காட்டிக் கொடுத்தான். இங்கேயும் மொழியின் பெயரால், இனத்தின் பெயரால் தமிழகம் சோவியத் யூனியனைப்போலப் பிரிந்துபோகும் உரிமை அடைய வேண்டும், தமிழகம் இந்திய வரைபடத்திலேயே இல்லாமல் போகும் என்று பேசிய பெரியவர்களும் உண்டு. தமிழக எம்.பி. ஒருவரும் பாஸ்போர்ட் இல்லாமல் கள்ளத் தோணி மூலம் தலைமறைவாய் வாழும் பிரபாகரனைத் திரைமறைவாய்ப் பார்த்துப் பேசிவிட்டு வந்திருப்பதும் உண்டு. இன்றைக்குச் சின்னத் திரையிலே பிரபாகரனைப் பார்த்ததும் பாவசமாகிறார்கள். இன்றைய செய்தியில்கூட அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகக் கூறப்பட்ட சூழ்நிலையில் இலங்கைக்கு இராமேஸ்வரத்திலிருந்து கள்ளத் தோணி மூலம் ஆர்.டி.எக்ஸ்-ஐவிட சக்தி வாய்ந்த Cortex wire-களும், பிரபாகரன் புகழ்பாடி, இந்தியாவை பழித்துப் பேசிய கேசட்டுகள் கடத்தப்பட்டதைக் காவல் துறை கண்டுபிடித்துள்ளது. இந்த சுயமைச் செயல் யாரால், எதற்காக, ஏன், யாருக்காக நடக்கிறது என்ற கேள்வியும் பிறக்கிறது. சக்தி வாய்ந்த இந்திய இராணுவத்திற்குப் பயன்படும் Cortex எப்படி, யார் மூலம் இலங்கைக்குக் கடத்தப்படுகிறது? இதனையும் மத்திய அரசு உறங்காமல் விழிப்புடன் கவனிக்க வேண்டுகிறேன்.

விஞ்ஞான இந்தியாவை வடிவமைத்த சிற்பி, எங்கள் தலைவர் முன்னாள் பாரதப் பிரதமர், இளைய பாரதத்தின் எழுச்சிமிக்க நாயகன் ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு இந்திய மக்கள் என்ன நினைக்கிறார்கள்? நரி இடம் போனால் என்ன, வலம் போனால் என்ன, மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி என்றே நினைக்கிறார்கள். தமிழ் அறிஞர் அமிர்தலிங்கம் உள்ளிட்ட ஏராளமான தலைவர்களைக் கொன்றவர்கள் புலிகள்; இன்றைக்கு அமெரிக்கா உலகெங்கும் நடைபெறும் தீவிரவாதத்தை வேரறுப்போம் என்று அறிவித்த பின்னால் இவர்களும் இலங்கையுடன் மோதலைத் தவிர்த்து, பேசுதலைத் தொடங்கியதாகச் சொல்கிறார்கள். நாம் அறிந்தது, புலி வகைகளிலே சைவப் புலி இருப்பதாக நாம் அறியவில்லை என்பதுதான். ஆயுதங்களைப் போட மாட்டோம், புலிகள் மீதான தடையையும் நீக்க வேண்டும் என்று பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை போட்டிருக்கிறார்கள் புலிகள். இந்தியாவிற்கும், புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும், பாலசிங்கம் இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெற கருணையுடன்



2002 ஏப்ரல் 16] [திருமதி டி. யசோதா]

அனுமதிக்க வேண்டும் என்ற கூடுதல் கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். குறிப்பாக இலங்கை அரசு இதுகுறித்து எதுவும் இந்தியாவிடம் கோரவில்லை.

முற்பகல் 10-35

இந்நிலையில் தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் கோரிக்கையை இந்திய அரசு எப்படி நேரிடையாகப் பரிசீலிக்க இயலும் என்பதும் விளங்கவில்லை. "தீமை உடையோர் வருந்தினார் என்று வயப்படுவதும் உண்டோ. என்னே இடர் வரும் என்பார், புலி முகத்து உன்னி பருத்து விடல்" என்பார்கள். இதுபோல மத்திய அரசு புலி முகத்தில் உள்ள உன்னியை எடுக்கப் பார்ப்பது, தனக்குத்தானே கூலி கொடுத்து சூன்யம் வைத்துக்கொள்வதற்குச் சமம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். புலிகளைப் பொறுத்தவரை, பாலசிங்கத்திற்கு மருத்துவ உதவி என்பதெல்லாம் இரண்டாம் பட்சம் தான்.

கடுமையான சோதனைக்கும், வேதனைக்கும் உள்ளான இந்தியாவே பரிவு காட்டலாம் என்றால், ஏன் இலங்கை அரசு புலிகளின் மீதான தடையை நீக்கக் கூடாது என்ற மறைமுகமான எண்ணம்தான் இங்கே பிரதானம். கடந்த காலத்தில் இலங்கை அதிபர் திரு. பிரேமதாசாவும், பிரபாகரனும் கூட அமைதிப் பேச்சுவார்த்தை என்று ஒரு முயற்சி செய்தார்கள். இது எங்கள் உள்நாட்டு விஷயம். நாங்களே கூடிப் பேசி முடிவு செய்வோம் என்றார்கள். முடிவுபற்றி பேசிய பிரபாகரனுக்கு எல்லா தர்மங்களும் தெரியும். எல்லா நியாயங்களும் தெரியும். ஆகவேதான், பிரேமதாசாவையே முடிவு கட்டி முடித்தார்கள் புலிகள். எனவேதான் சொல்லுகிறேன், இந்த நாடு, இந்த தேசம், இதன் நலனையே முதன்மைப்படுத்தாத சுயமை உள்ளங்களை இலங்கைக்குச் சென்று, பல துன்பங்களுக்கு ஆளாகி தாயகம் திரும்பிய இந்திய இராணுவத்தை, அது ராஜீவ் காந்தியின் இராணுவம், அதை வரவேற்க மாட்டேன் என்று சொன்னவர்களையும், புலிகள் இருக்கும் இடத்தில் எலிகளுக்கு என்ன வேலை என்று இந்திய இராணுவத்தைக் கொச்சைப்படுத்தியவர்களையும் இந்த நாடு ஏற்காது.

இந்த வன்முறையைக் கண்டித்துத்தான் சட்டமன்றத்திலேகூட நாங்கள் ஏழு பேர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கின்றோம். இந்த மண், மொழியின் பெயரால், இனத்தின் பெயரால் தீவிரவாதத்தை பார்த்தீனியப் பயிராக, விஷக் கிருமிகளாகப் பரப்பிவிடக் கூடாது

[திருமதி டி. யசோதா] [2002 ஏப்ரல் 16

என்ற உண்மையான தேசப்பற்று கொண்டு இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதல்வரை 100 கோடி இந்தியர்கள் சார்பாகவும், அன்னை சோனியா காந்தி சார்பாகவும் உளமாறப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிரபாகரனை இந்திய நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்த எடுக்கவிருக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் தனது முழுமையான ஆதரவைத் தருவதோடு மட்டுமல்லாமல், அவசியம் ஏற்பட்டால் இந்திய இராணுவத்தை, இலங்கை அரசினுடைய ஒப்புதலோடு அனுப்பி பிரபாகரனை, எங்கள் தலைவர் ராஜீவ் காந்தியை கொன்றவனை, கொலைக் குற்றவாளியைக் கைது செய்யவேண்டுமென்ற தீர்மானத்தை முழு மனதுடன் வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று கொண்டு வந்து முன் மொழிந்த தீர்மானத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கருத்துகளைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், படுகொலை செய்யப்பட்டது வன்மையான கண்டனத்திற்குரிய செயல். அதுவும், குறிப்பாகத் தமிழகத்திலே நடந்த மாபெரும் படுகொலையை மனித நேயம் உள்ள தமிழர்கள் ஒவ்வொருவரும் கண்டிக்கத் தவறவில்லை. அதை நினைத்துப் பார்த்தால் இன்றும் நெஞ்சம் எல்லாம் வெடித்துச் சிதறிவிடுமோ என்ற அச்ச உணர்வு நமக்கு ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட படுகொலையை பாட்டாளி மக்கள் கட்சி அன்றும் கண்டித்தது; இன்றும் கண்டிக்கத் தவறவில்லை. அதே நேரத்திலே இப்படிப்பட்ட படுபாதகச் செயலைச் செய்த படுகொலை செய்த அந்தக் குற்றவாளிகளை நீதிமன்றத்தின் முன்னால் கொண்டு வந்து நிறுத்துவதிலே அல்லது நீதிமன்றத்தின் வாயிலாகச் சட்டமன்றப் பேரவை ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுப்பதிலே, பாட்டாளி மக்கள் கட்சி மாத்திரம் அல்ல, இந்தியத் திருநாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளுக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்பதை இங்கே நான் தெளிவுபடக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2002 ஏப்ரல் 16] [திரு. ஜி.கே. மணி]

ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையிலே தமிழ் இனம் படுகொலை செய்யப்படுவதை, சிங்கள இனவெறி அரசாலே அந்த இராணுவத்திலே இப்படிப்பட்ட தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றன என்பதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள், இந்திய நாட்டு மக்கள் உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் எல்லாம் இதுவரையிலே உற்று நோக்கி வந்தார்கள். அப்படிப் பார்க்கின்ற நேரத்திலே அன்று அந்த இலங்கைத் தமிழர்களுக்கு வாழ்வுரிமை வேண்டுமென்று சொன்ன காரணத்தினாலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிறுவனத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தானும் கறுப்புச் சட்டை அணிந்தார். அமைச்சர்களையெல்லாம் அணியச் சொன்னார். அதிகாரிகளையெல்லாம் அணியச் சொன்னார். அந்த வகையிலே, இந்த ஈழத் தமிழ் மக்களுக்கு அவர் அளித்து வந்த அந்தக் குரல், கொடுத்துவந்த அந்த ஆதரவின் அடிப்படையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இன்றும் நாங்கள் கறுப்புச் சட்டை அணிந்து வந்திருக்கிறோம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் கறுப்புச் சட்டை மாத்திரம் அணியவில்லை. சட்டமன்றத்திலே சொல்லிவிட்டு 4 கோடி ரூபாயை அவர்களுக்கு உதவியாக வழங்கினார்கள்.

முற்பகல் 10-40

அதுமட்டுமல்ல, அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, அந்தப் போராளிகளை இந்தியாவிற்கு அழைத்து பயிற்சி கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வேண்டுகோளை ஏற்று, அன்னை இந்திரா காந்தி அவர்கள் அந்த நேரத்திலே ஆயுத உதவிகளைச் செய்தார்கள். ஆயுத உதவி செய்ததோடு மாத்திரமல்ல, ஆயுதப் பயிற்சிக்கு இந்தியாவிலே வழிவகை செய்து கொடுத்ததை எல்லாம் நாம் பார்த்தோம். ஆகவே, இப்படி பல்வேறு நிலைகளில், எல்லா காலக்கட்டங்களிலும் உதவி செய்த அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள், சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தையும் கொண்டு வந்தார்கள். அது மிகுந்த, வரவேற்கக்கூடிய தீர்மானம். சட்டமன்றத்தில், அதாவது 9-4-1984-லே அன்றைய முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசியது. "இன்றையதினம் நான் சொல்கிறேன், இலங்கை அரசு இனியும் அதே வன்முறையில் ஈடுபடுமானால், இந்தத் தமிழக அரசு தன் சக்திக்குட்பட்ட அனைத்தையும் நிச்சயமாகச் செலவிட்டு எப்படி முறியடிக்க முடியுமோ அப்படி முறியடிப்பதற்கு ஆவன செய்ய களத்தில்

[திரு. ஜி.கே. மணி] [2002 ஏப்ரல் 16

இறங்கும். மீண்டும் பழைய சம்பவமே நடக்கும் என்றால், இந்தத் தமிழகம் தனித்து நின்று, ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அதைச் செய்ய நான் முன்வருவேன் என்பதை ஒரு நல்ல முடிவாக அதை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களே அன்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, அன்று தமிழ்நாடு முழுவதும் பொதுக் கூட்டங்களை நடத்தி, அமைச்சர்களையெல்லாம், தலைவர்களை எல்லாம் அழைத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் தீர்மானத்தின் மேலே கருத்தைச் சொல்லுங்கள். அதாவது, ராஜீவ் காந்தி கொலைக்கு முன்னாலே நடைபெற்ற சம்பவங்களை எல்லாம் விவரிக்கிறீர்கள். இந்தத் தீர்மானத்தின் மேலே உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தீர்மானத்தையொட்டி சொன்னால்தான் வலுச் சேர்க்கும் என்பதற்காக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய வரலாறு எல்லாம் இப்போது தேவையில்லை.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிடும்போது அன்னை இந்திரா காந்தியின் ஒப்புதலுடன் புரட்சித் தலைவர் காலத்திலே போராளிகளுக்கு இங்கு பயிற்சி தரப்பட்டது என்ற கருத்தைச் சொன்னார்கள். அவர்களுக்கு வேண்டிய, இராணுவத்திற்கு வேண்டிய தளவாடங்களை எல்லாம் கொடுத்ததாகச் சொன்னார்கள். அதை அவைக் குறிப்பிலே கொண்டுவருவது சரியான முறையா என்பதைச் சிந்திக்க வேண்டும். காரணம்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பழைய நிகழ்ச்சி.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பழைய நிகழ்ச்சியாக இருந்தால் கூட, அதைக் கொடுத்தார்கள், பயிற்சி தந்தார்கள் என்பதைக் கொண்டுவர வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதில் நடந்த உண்மையைச் சொல்கிறேன். பத்திரிகைச் செய்தி. உண்மை. இதிலே ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. அதேநேரத்திலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள்கூட அன்று பேசிய பேச்சிலே இலங்கை அரசினுடைய கறுப்புச் சட்டத்தைக் கிழித்து, காலிலே



2002 ஏப்ரல் 16] [திரு. ஜி.கே. மணி]

மிதித்து கண்டன உரையாற்றியது இருக்கிறது. அதேநேரத்திலே, அங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவைத் தலைவராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய புலமைப்பித்தன் அவர்கள் ஆற்றிய உரை இருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே பார்ப்போம் என்று சொன்னால், எல்லா வகையிலும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருந்த நிலை, அனைத்துக் கட்சிகளினுடைய நிலைப்பாடு என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேநேரத்திலே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை இப்போது உலகத்தின் கவனத்தையே ஈர்த்து வருகின்றது. இது ஓர் இனத்தவரின் வாழ்வுரிமைப் பிரச்சினை என்பதை உலகம் அங்கீகரிக்கத் தொடங்கி இருக்கிறது. 4 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நார்வே நாடு, நாடிவந்து உதவுவதும், சமரசப் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்திருப்பதும், இதைத்தான் நமக்கு உணர்த்துகிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது ஒரு தனிப்பட்ட நபரின் பிரச்சினையோ அல்லது ஒரு தனிக் குழுவினரின் பிரச்சினையோ அல்ல. அது அங்கே வாழ்ந்து வருகிற 25 இலட்சம் தமிழர்களின் பிரச்சினை. சிங்களர்களைப்போல் தங்களுக்கும் சம உரிமை வேண்டுமென்று அரை நூற்றாண்டாக அங்குள்ள தமிழர்கள் போராடி வரும் பிரச்சினை. இப்போது தொடங்கி இருக்கிற சமரசப் பேச்சுவார்த்தையினால், இந்தப் போராட்டத்தில் வெற்றி கிடைக்கும். அரசியல் ரீதியாகவும், சமூகப் பொருளாதார ரீதியாகவும், சம உரிமை கிடைக்கும் என்று 25 இலட்சம் இலங்கைத் தமிழர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதில் அவர்கள் வெற்றியடைய வேண்டும் என்று வாழ்த்தவும், ஏன், உதவிடவும் தார்மீக ரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் நமக்கு கடமை இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் வேறு பிரச்சினைகள் குறுக்கிட நாம் அனுமதிக்கக்கூடாது. இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலை மிகப் பெரிய இழப்பு. அது கண்டிக்கப்பட வேண்டியது என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்டி இருக்கிறேன். அந்தக் குற்றத்திலே ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், இதற்கு நீதிமன்றங்கள் வாயிலாக, சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை இங்கே மீண்டும் நான் வலியுறுத்துகிறேன். வேறு பல வழக்குகளில் எல்லாம், இந்த நடைமுறைகள்தான் பின்பற்றப்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பம்பாய் தொடர் வெடி குண்டு வழக்கு,

[திரு. ஜி.கே. மணி] [2002 ஏப்ரல் 16

விமானக் கடத்தல் வழக்கு, காஷ்மீர் தீவிரவாதிகள் குறித்த வழக்கு முதலியவற்றில் இப்படித்தான் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முறபகல் 10-45

இந்த நிலையில் இந்தப் பிரச்சினையில் மட்டும் இராணுவத்தை அனுப்பி கைது செய்து வாருங்கள் என்று சொல்வது நடைமுறை சாத்தியம்தானா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இலங்கையில் பத்து ஆண்டுகளாக சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அரசாங்கங்கள் இருந்தபோது, நடக்காத ஒரு காரியத்தை, இப்பொழுது அங்கே சண்டையை நிறுத்தி சமரசப் பேச்சுவார்த்தையைத் தொடங்கியிருக்கிற ஓர் அரசு பதவியில் இருக்கிறபோது எந்த அளவிற்கு சாத்தியம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இலங்கையில் பெரும்பாலான தமிழர்கள் வாழும் பகுதிக்குள் இராணுவம் இதுவரையில் நுழையவே முடியவில்லை. தமிழர்கள் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை என்பதனாலே இலங்கை அரசு சமரசப் பேச்சுவார்த்தையைத் தவிர வேறு வழியில்லை என்று அதை நாடி இருக்கிறது. 'பிடித்துக் கொடு அல்லது எங்கள் படையை அனுப்பி பிடிக்க அனுமதி கொடு' என்று கேட்போமானால், இலங்கை அரசு திருப்பிக் கேட்காதா? பாகிஸ்தானில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளை, விமானக் கடத்தல்காரர்களைப் பிடித்து வர இராணுவத்தையா அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, சட்டசபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துவிடுவதால் மட்டும் என்ன பயன் ஏற்பட்டுவிடும் என்பதை எண்ணிப் பார்ப்பதோடு, நமது தீர்மானத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு மத்திய அரசு நடவடிக்கையில் இறங்கிவிடுமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு முன்னுதாரணங்கள் எல்லாம் இருக்கின்றன. இதற்கு முன்னர் இதே மாமன்றத்திலே நிறைவேற்றிய தீர்மானத்தைப் பார்த்தால், 8-7-1991 அன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அன்றும் முதலமைச்சர். அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கிறார்கள். காவிரி நடுவர் மன்றம் வழங்கியிருக்கும் இடைக்கால உத்தரவை கண்டிப்பாக அமல்படுத்தும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிட



2002 ஏப்ரல் 16] [திரு. ஜி.கே. மணி]

வேண்டுமென்று அந்தத் தீர்மானத்திலே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. 11 ஆண்டுக் காலம் கடந்துவிட்டது. இதுவரையில் என்ன நடந்தது? இன்றைக்கும் கர்நாடகம் அடம்பிடித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் நாம் கர்நாடக அரசாங்கத்திடம் கையேந்திக் கொண்டிருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order.

**திரு. ஜி.கே. மணி:** I am not yielding. நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order.

**திரு. ஜி.கே. மணி:** விளக்கம் சொல்ல வேண்டும், அவ்வளவுதானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். திரு. மணி, இந்தத் தீர்மானத்தையொட்டி சொல்ல வேண்டிய கருத்துகளை நீங்கள் சொல்லி முடியுங்கள். இதற்கு முன்னால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பற்றியெல்லாம் நீங்கள் சொல்ல வேண்டாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, you give me an opportunity. I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசி முடித்துவிடுகிறேன். அடுத்து நீங்கள் பேசப் போகிறீர்கள். நீங்கள் பேசும்போது சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நீங்கள் முடிக்க முடியாது. Point of order. I have got a right to talk. (Interruption) I have got a right to talk. You cannot prevent me.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அவர் என்னவென்று சொல்லட்டும், கேட்போம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், அவர் பேசி முடித்தவுடன் நீங்கள் கேட்கலாம்.

[2002 ஏப்ரல் 16

**திரு. சி. ஞானசேகரன்:** அவர் திசை திருப்பிப் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** நான் திசை திருப்பிப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியதில்தான் நீங்கள் கேட்கிறீர்கள். அவர் பேசி முடித்த பிறகு உங்களைக் கூப்பிடுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனைக்கும் கர்நாடகம் நமது அண்டை மாநிலம். இந்தியாவின் இறையாண்மையின் மீதும், அரசியல் சட்டத்தின் மீதும், நம்பிக்கையும், பற்றுறுதியும் வைத்துள்ளோம் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டு அமையும் ஆட்சிகள் நடந்து வரும் மாநிலம். அப்படிப்பட்ட ஒரு மாநில அரசு, நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் கொண்ட, நடுவர் மன்ற ஆணையை அமல்படுத்த மறுத்து வருகிறது. நாம் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி வைத்துள்ள மத்திய அரசிலும் இதுவரையில் எதுவும் செய்யவில்லை. இதுதான் நிலைமை. இந்த நிலையில் இலங்கை நாடு, தனி நாடு, தனி இறையாண்மை படைத்த நாடு. அப்படி இருக்கும்போது, அங்கே இராணுவத்தை அனுப்புங்கள் என்று சொல்வதும், அதற்காக தீர்மானத்தை நிறைவேற்றுவதும் உலக அரங்கில் ஏற்றுக்கொள்ளப்படுமா? அண்டை வீட்டில் ஏதாவது நடந்துவிட்டாலே சர்வதேச அரங்கில் கண்டனமும், எதிர்ப்பும் கிளம்புகிற காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது இன்னொரு நாட்டுக்கு, அதன் அனுமதியில்லாமல் இராணுவத்தை அனுப்ப முடியுமா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதுதான் பாயிண்ட் ஆப் ஆர்டர். தீர்மானத்தைப் படித்துவிட்டுப் பேசவேண்டும். நான் குறுக்கிட விரும்பவில்லை. தீர்மானத்தைப் படித்துவிட்டுப் பேசவேண்டும். தீர்மானத்திலே நாமே இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று சொல்லவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். அடுத்து நீங்கள் பேசப் போகிறீர்கள். அவருடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்.



2002 ஏப்ரல் 16]

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். இன்றைக்கும் தமிழர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் எத்தனையோ உள்ளன. அவற்றில் கவனம் செலுத்த வேண்டும். கவனத்தை திசை திருப்புகிற பிரச்சினையில் நாம் ஈடுபடுவது நல்லதல்ல. குறிப்பாக, நமது தமிழ்ப் பத்திரிகையில், தினமணி பத்திரிகையில் வந்த ஒரு செய்தியை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுவதில் கடந்த காலம் குறுக்கிட அனுமதிக்கக் கூடாது' என்று தினமணி நாளிதழ் வலியுறுத்துகிறது. அதைப்போலவே, 'The Hindu,' 'The Times of India' போன்ற ஆங்கிலப் பத்திரிகைகள்கூட சமரசப் பேச்சுவார்த்தைக்கு குந்தகம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற பொதுவான கருத்தை வலியுறுத்துகின்றன. அதையே நானும் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-50

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கான நல்ல சூழ்நிலை உருவாகி வருகிறது. முடிந்தால் இந்த நாமும் உதவுவோம். அங்கே யார் யாருடன் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது இலங்கைத் தமிழர்களும், இலங்கை அரசும் முடிவு செய்துகொள்ளட்டும். நாம் நேரடியாக உதவாவிட்டாலும், குந்தகம் ஏற்படுத்திவிடாமல் இருப்போம் என்று இங்கே அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். வழக்குப் பிரச்சினையில் சட்டம் அதன் கடமையைச் செய்யட்டும். அது வேறு. 25 இலட்சம் தமிழர்களின் வாழ்வுரிமை என்பது வேறு. இரண்டையும் ஒன்றாக்கி 25 இலட்சம் இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தையும், அவர்களது உரிமைகளையும் பின்னுக்குத் தள்ளிவிடாதீர்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களே, தமிழர்கள் என்ற காரணத்தினாலே இங்கே தமிழ்நாட்டிலே வாழக்கூடிய தமிழர்கள், இந்தியத் திருநாட்டிலே வாழக்கூடிய தமிழர்கள், உலகமெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் எல்லாம் எதிர்நோக்கி இருக்கிற பிரச்சினையை தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்த்து இதிலே ஒரு நல்ல முடிவினை உண்டாக்க வேண்டும். இந்தத் தீர்மானம் என்பது ஏற்புடையதாக இருக்காது என்பதை இங்கே நான் மீண்டும், மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

[திரு. ஜி.கே. மணி] [2002 ஏப்ரல் 16

அதிலும் இன்னொன்று, மத்திய அரசு இப்போது சரியான நடவடிக்கை எடுத்து வருகிறது. மத்திய அரசினுடைய அணுகுமுறை சரியாக இருக்கிறது. உலக நாடுகள் எல்லாம் பாராட்டக்கூடிய வகையிலே இருக்கிறது. அந்த வேளையில் மத்திய அரசை இது புண்படுத்துவது போல, குறை சொல்லுவது போல இந்தத் தீர்மானத்திலே வாசகம் இடம் பெற்றிருக்கிறது. அதையும் திருத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டு, இந்தத் தீர்மானம் என்பது உள்நோக்கம் கொண்டதாகக் கருதப்படுகிறது. இது தமிழர்களுக்கு எதிரான தீர்மானம். தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான தீர்மானம். உலகமெங்கும் வாழக்கூடிய தமிழர்களுக்கு எதிரான தீர்மானம் என்பதைச் சொல்லி எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த விவாதத்தில் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால், சில கருத்துகளை சொல்லியே ஆகவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது ஸ்ரீலங்கா நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கின்ற வகையில் நாம் இராணுவத்தை அங்கே அனுப்ப முடியாது என்று குறிப்பிட்டார். அதைப் போலவே இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகின்றபோதும் இலங்கை அரசின் அனுமதி இல்லாமல் இராணுவத்தை அனுப்ப முடியாது என்று குறிப்பிட்டார். அவர்களுக்கு இந்தத் தீர்மானத்தின் கடைசிப் பத்தியிலுள்ள வாசகங்களை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

'ஸ்ரீலங்கா அரசினால், LTTE இயக்கத் தலைவர் பிரபாகரனை பிடித்து நாடு கடத்த இயலவில்லை என்றால், ஸ்ரீலங்கா அரசின் அனுமதியோடு, இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்கா அரசின் அனுமதி' என்றுதான் வருகிறது. ஆகவே, தீர்மானத்திலேயே ஸ்ரீலங்கா அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று நாங்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் தெரிவித்த கருத்துகளைப் பார்க்கும்போது அவர்களைப் போன்றவர்கள் இந்த அவையின் உள்ளேயும், வெளியேயும் இந்தத் தீர்மானத்தின் நோக்கத்தையே திசை திருப்பும் வகையில் பல கருத்துகளை எடுத்துச் சொல்லக்கூடும் என்பதால், ஏற்கெனவே வரையப்பட்டு, மாமன்ற



2002 ஏப்ரல் 16] [செல்வி ஜெ ஜெயலலிதா]

உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பழைய தீர்மானத்தின் பக்கம் 3-ல் இருக்கின்ற ஒரு பத்தியை இந்தத் திருத்தப்பட்ட தீர்மானத்தோடு இணைத்துக்கொள்ள வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். சபாநாயகர் அவர்களின் அனுமதியைக் கோருகிறேன்.

இப்போது திருத்தப்பட்ட அரசினர் தனித்தீர்மானத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட ஒரு பத்தியை முதல் பத்தியாக நான் வாசித்தேன். அதனை அடுத்து இரண்டாவது பத்தியாக பழைய தீர்மானம் பக்கம் 3-ல் வருகின்ற இந்தப் பத்தியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதாவது 'தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்மீது தமிழக மக்கள் கொண்டிருந்த அனுதாபமும், ஆதரவு மனப்பான்மையும், திரு. ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்பு முற்றிலும் மாறிவிட்டது. அதிலும், அந்தக் கொடூர சம்பவத்தின் பின்னணியில் இருந்து செயல்பட்டது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும்தான் என்பது தெரிய வந்தபோது, தமிழக மக்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும் அதன் நடவடிக்கைகள் மீதும், ஓர் அச்சம் கலந்த வெறுப்பைக் காட்டத் துவங்கினர். தமிழக மக்களின் உணர்வை எப்போதும் பிரதிபலிக்கும் இந்தத் தமிழக அரசு, அது முதல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தனது எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது' என்ற பத்தியை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். அதன்பிறகு அப்படியே தொடர்ச்சியாக அந்தத் தீர்மானம் முடிகின்ற வரை திருத்தப்பட்ட தீர்மானத்திலும் அப்படியே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பத்தி இணைக்கப்படுகிறது. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

முற்பகல் 10-55

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகுதான் இந்தத் தீர்மானம் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகவே புலப்படுகிறது. இந்தத் தீர்மானத்தை இரண்டு வகையில் பார்க்க

வேண்டும். இலங்கை தமிழர்களுடைய நலன்களைப் பாதுகாப்பது,
அதே நேரத்திலே பயங்கரவாதத்தின் ஆணி வேரை அழித்திடுவது
என்ற இரண்டு அடிப்படை அம்சங்கள்மீது இந்தத் தீர்மானம்
உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் கருத்திலே கொள்ள வேண்டும்.

இலங்கையிலே தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ
வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. அதற்காக
எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை நாங்கள் முழுமையாக ஆதரிப்போம்.
இலங்கைப் பிரச்சினை என்பது, இலங்கையிலே தமிழர்களுடைய
பிரச்சினை என்பது இன்று புதியதாகத் தோன்றிய ஒன்றல்ல. நான்,
சுதந்திரம் பெற்ற நாளிலிருந்த பிரச்சினைக்குப் போகவில்லை.
தமிழர்களுக்கு குடியுரிமை கொடுக்கக் கூடாது என்று யார்
சொன்னார்கள் என்பதையெல்லாம் நான் பேசப்போவதில்லை. ஆனால்,
அங்கே ஜனநாயக நாடாக மலர்ந்து, ஜனநாயக தேர்தல்கள்
நடைபெற்றதற்குப் பின்னால், அன்றையதினம் பிரதமராக இருந்தவர்
சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று ஒரு சட்டத்தை
நிறைவேற்றினார்கள். 1956-ஆம் ஆண்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது.
அதனுடைய தொடர்ச்சியாக தமிழ்ப் பகுதிகளில் போராட்டம்
நடைபெற்றது. பெரிய போராட்டம் நடைபெற்றது. போராட்டம்
அன்றையதினம் செல்வநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.
அதனைத் தொடர்ந்து 1957-ல் பண்டார நாயகா-செல்வநாயகம்
ஒப்பந்தம் ஏற்பட்டது. அதேபோல, 1965-ல் சேனநாயகா-செல்வநாயகம்
ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த இரண்டு ஒப்பந்தங்களுமே
தோல்வியிலேதான் முடிந்தன. 1983-ல் மிகப் பெரிய இனக் கலவரம்
நடைபெற்றது. அந்த இனக் கலவரம் நடைபெறுவதற்கு முன்னாலே
போராளிக் குழுக்கள் அப்போதுதான் தலையெடுக்க ஆரம்பித்தன.
அதுமட்டுமல்ல, அதுகாறும் தமிழரசு கட்சி என்று தன்னுடைய
பெயரை வைத்துக்கொண்டிருந்த Federal Party செல்வநாயகம் அவர்கள்
தலைமையிலே இயங்கி வந்த அந்தக் கட்சி, தன்னுடைய பெயரையே
மாற்றிக்கொண்டு, தமிழர்கள் ஐக்கிய விடுதலை முன்னணி என்று
பெயரை மாற்றிக்கொள்கிறது. காரணம், நம்பிக்கை இழந்துவிடுகிறார்கள்.
எத்தனை முறை பேச்சுவார்த்தை நடத்தினாலும், இதிலே பலன்
இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள், கருதுகிறார்கள். அதனுடைய
விளைவாக அது தமிழர்கள் ஐக்கிய விடுதலை முன்னணியாக வருகிறது.
அந்த நேரத்திலே பயங்கரமாக கலவரம் நடைபெற்று, ஒரு இலட்சத்து
50 ஆயிரம் தமிழர்கள் அகதிகளாக இந்தியா வந்தார்கள். அன்றையதினம்
இந்திரா காந்தி அவர்கள் பாரதப் பிரதமராக இருந்தார்கள்.




அதுமட்டுமல்ல, அணிசேரா நாடுகளுடைய தலைவியாகவும்
அன்றையதினம் இருந்தார்கள். அணிசேரா நாடுகளுடைய தலைவி
என்ற முறையில் அணிசேரா நாடுகளுடைய அணியிலே ஸ்ரீலங்காவும்
இருந்தது என்ற முறையிலே அன்றையதினம் அவர்களுடைய அதிபரோடு
தொலைபேசியிலே பேசினார்கள்.

இலங்கையிலே நடைபெறுகின்ற சம்பவங்கள் உங்களுடைய உள்
நாட்டுச் சம்பவங்கள் என்று நாங்கள் அதைப் புறக்கணித்துவிட
முடியாது. எங்களுக்கு அண்டை நாடு என்பது மட்டுமல்ல.
வரலாற்றாலும், கலாச்சாரத்தாலும் நாங்கள் பிணைக்கப்பட்டவர்கள்.
எனவே, அதிலே எங்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு. நீங்கள் இதைப்
போன்று நடந்துகொள்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.
உடனடியாக நீங்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று
கேட்டுக்கொண்டார்கள். பேச்சுவார்த்தை என்றால் யாரோடு என்கிற
பிரச்சினை வந்தது. அன்றையதினம் அதற்கு முன்னாலே, இந்தச்
சம்பவத்திற்கு முன்னாலே நடைபெற்ற தேர்தலிலே 14 இடங்களிலே
வடக்கு மாநிலத்திலே மட்டும் தமிழர்கள் ஐக்கிய விடுதலை முன்னணி
வெற்றி பெற்றிருந்தது. எம்.பி.-க்கள் வந்தார்கள். கிழக்கிலே 4 எம்.பி.-க்கள்
வெற்றி பெற்றார்கள். ஆக 18 எம்.பி.-க்கள் தமிழர்கள் ஐக்கிய விடுதலை
முன்னணியிலே இருந்தார்கள். எனவே, தமிழர்கள் ஐக்கிய விடுதலை
முன்னணியோடு பேச வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அனைத்துக்
கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்திலே 1983-லே
கொழும்பிலே நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டிலே இணைப்பு 'சி'-
Annexure-C ஒரு சமரசத் திட்டம் ஏற்பட்டது. அந்தச் சமரசத் திட்டமும்
வெற்றி பெறவில்லை. தோல்வியிலே முடிந்தது. அதற்குப் பிறகு 1985-ல்
ராஜீவ் காந்தி அவர்களுடைய முயற்சியாலே திம்புவிலே பேச்சுவார்த்தை
நடைபெற்றது. அதிலேதான் முதல் முறையாக போராளிக் குழுக்கள்
அனைவரையும் அங்கு ராஜீவ் காந்தி அனுப்பி வைத்தார்கள்.

இதே L.T.T.E., PLOT-Peoples' Liberation Organisation of Tamil
Eelam, TELO- Tamil Eelam Liberation Organisation, Eelam
Revolutionary Organisation for Students, EROS, E.P.R.L.F. அத்தனை
பேரும் பங்கேற்றார்கள். ஆனால், பேச்சுவார்த்தை தோல்வியிலேதான்
முடிந்தது. பெங்களூரில் நடைபெற்ற சார்க் மாநாட்டிலே இலங்கை
அதிபர் ஜெயவர்தனாவுடன் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி
பேசியதினுடைய அடிப்படையிலே டிசம்பர் 19 பிரேரணை முன்
வைக்கப்பட்டது. இந்த சமரசத் திட்டமும் தோல்வியிலே முடிந்தது.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 16

ராஜீவ் காந்தி அவர்கள் அதற்குப் பிறகு கொஞ்சம் கண்டிப்பு காட்ட
ஆரம்பித்தார்கள். எங்களுக்கு அதிலே அக்கறை உண்டு என்பதைக்
காட்டுவதற்காக தமிழர் பகுதிகளில் உணவுப் பண்டங்கள் கிடைப்பதற்கு
சிரமமாக இருக்கிறது, கஷ்டமாக இருக்கிறது என்று அங்கே குரல்
எழும்ப ஆரம்பித்தது. இங்கிருந்து கப்பலில் உணவுப் பண்டங்களை
அனுப்பினார்கள். அந்தக் கப்பல்கள் உணவுப் பண்டங்களை
இறக்கக்கூடாது என்று இலங்கை அரசாங்கம் அன்றையதினம் தடுத்தது.
உடனே கப்பல்கள் திரும்பின. எல்லோரும் கேலிப் புன்னகையோடு
பார்த்தார்கள். எதற்காக அனுப்ப வேண்டும்? எப்படியும் தடுக்கப்
போறான், ஏன் அனுப்ப வேண்டுமென்று கேட்டார்கள். இரண்டொரு
நாட்களுக்குள்ளாக விமானத்திலே அனுப்பி வைத்தார்கள். உணவுப்
பண்டங்களை சுமந்த விமானங்கள், அந்த விமானங்கள் தாழப் பறந்தன.
அந்த விமானங்களுக்குப் பாதுகாப்பாக நம்முடைய போர்
விமானங்களும் உயரத்திலே பறந்தன. 'ஆப்பரேஷன் பூமாலை' என்று
அதற்குப் பெயர் சூட்டினார்கள்.

முற்பகல் 11-00

அன்றையதினம் உணவுப் பண்டங்கள் அங்கே, இலங்கையிலே
வாழ்கின்ற தமிழ் மக்கள் அத்தனை பேருக்கும் உணவுப் பண்டங்கள்
விநியோகிக்கப்பட்டன. அதற்குப் பிறகுதான் ஜெயவர்த்தனா
நிலைமையை உணர்ந்தார். உணர்ந்து, அவர் ராஜீவ் காந்தியோடு
பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டார். 'இந்தியா பெரிய நாடு,
எம்முடைய அண்டை நாடு, எங்கேயோ எட்டத்திலே இருக்கிற நாட்டை
நாங்கள் நம்பி இருக்கவில்லை' என்று ஜெயவர்த்தனா பகிரங்கமாகவே
சொன்னார். அதனுடைய விளைவாக, ஜுலை மாதம் 29-ஆம் தேதி
1987-லே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்தியா - இலங்கை உடன்பாடு
ஏற்பட்டது.

அந்த இந்திய-இலங்கை உடன்பாட்டைப் பொறுத்தவரையில்,
அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டார்கள். போராளிக் குழுக்கள்
அத்தனைபேரும் ஏற்றுக்கொண்டார்கள். தமிழர் ஐக்கிய விடுதலை
முன்னணியும் ஏற்றுக்கொண்டது. அதுமட்டுமல்ல, ராஜீவ் காந்தி அங்கே
போன நேரத்திலே, அந்த உடன்பாடு தமிழர்களுக்கு எதிரான உடன்பாடு
என்று சொன்னால், சிங்களவன் ஏன் வெறி கொண்டு ராஜீவ்
காந்தியைத் தாக்கிக் கொல்ல முயற்சித்திருக்க வேண்டும்? சிங்களவன்
அங்கே தாக்க முயற்சித்தான். அதுவும் யார்? இராணுவ மரியாதை
கொடுக்கப்படுகிறது; அந்த இராணுவ மரியாதை கொடுக்கப்படுகின்ற



2002 ஏப்ரல் 16] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

நேரத்தில் அந்த இராணுவ மரியாதையிலே நின்றுகொண்டிருந்த ஒரு போர் வீரன் தன்னுடைய துப்பாக்கியை எடுத்து, ராஜீவ் காந்தியின் தலையிலே அடித்துக் கொல்வதற்கு ஒரு முயற்சி மேற்கொண்டான். அதனாலே அது, நிச்சயமாக சிங்களவனுக்குச் சாதகமான ஓர் ஒப்பந்தம், உடன்படிக்கை அல்ல என்பது மட்டுமல்ல சிங்களவர்களுக்கு எதிரான உடன்படிக்கை என்றுதான் அவர்கள் கொண்டார்கள்.

அந்த உடன்படிக்கையிலே முக்கியமான அம்சங்கள், நான்கு அம்சங்கள் மிக முக்கியமான அம்சங்கள். ஒன்று, நீண்டகாலமாக அங்கே தமிழர்கள் போராடி வருவது, வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மாநிலம் வேண்டும். அதுதான் தமிழரசு கட்சி, பெடரல் பார்ட்டி, சமஷ்டி வேண்டும் என்பதிலே வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மாநிலம் வேண்டும் என்று கேட்டார்கள். இலங்கை அரசாங்கம் எந்தக் கட்டத்திலேயும் அதற்கு இடம் கொடுக்க உடன்படவேயில்லை. வேண்டுமானால் மாவட்ட அந்தஸ்து தருகிறோம். அதுவும் வடக்கு தனியாக இருக்கும். கிழக்கு தனியாக இருக்கும். இரண்டும் இணையக் கூடாது, அதுதான் இலங்கை அரசாங்கத்தினுடைய, தொடர்ந்து அது பண்டாரநாயகாவாக இருந்தாலும் சரி, சேனநாயகாவாக இருந்தாலும் சரி, ஜெயவர்த்தனாவாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அதற்கு மேலே அவர்கள் வரவேயில்லை. ஆனால், ராஜீவ் காந்தியுடன், உடன்பாட்டிலே இலங்கையில் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பில் வடக்கு, கிழக்கு மாகாணம் ஒன்றாக இணைக்கப்பட்டது. லிங்கேஜ். தமிழ்த் தாயகம், மாநில நிர்வாகச் சுயாட்சி என்று உருவானது.

அதுமட்டுமல்ல, அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர், தமிழ்த் தாயகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் அவர்கள் இருப்பார்கள். அதுமட்டுமல்ல, 1956 முதல் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற நிலை இருந்தது. அந்த நிலை மாறி தமிழும் ஆட்சி மொழி என்ற சம உரிமை பெற்றது. இலங்கைச் சிறைச்சாலையிலே கைதிகளாக நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இருந்த 5,000 தமிழ்க் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டார்கள்.

இந்தியப் பெருங்கடல் அமைதி மண்டலமாக்கப்பட்டது. அந்நிய சக்திகளின் நடமாட்டம் முழுவதுமாகத் தடுத்து நிறுத்தப்பட்டது. L.T.T.E.-யும் முதலிலே இதை ஏற்றுக்கொண்டார்கள். அனைத்துப் போராளிக் குழுக்களும் ஏற்றுக்கொண்டது. அதுமட்டுமல்ல, இந்த உடன்பாடு கையெழுத்து ஆனதற்குப் பின்னாலே, யாழ்ப்பாணத்திற்குப்

பக்கத்திலே இருக்கிற, நல்லூர் அம்மன் கோவில் திடலிலே அன்றையதினம் பிரபாகரன் அவர்கள் பேசினார்கள். உடன்பாட்டை வரவேற்று, அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று பேசினார்கள். இனி தமிழர்கள் பாதுகாப்பை இந்திய இராணுவம் ஏற்றுக்கொள்ளும் என்று பேசினாரே தவிர தொடர்ந்து அவர், ஒரு கட்டத்திலேகூட அதை அவராலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த உடன்பாட்டை எப்படியாவது உடைத்தெறிய வேண்டும் என்பதில் அவர் தீவிரம் காட்டினார்.

அன்றையதினம், அந்த உடன்பாட்டில் முக்கியமான அம்சம் என்பது இடைக்கால நிர்வாகம். யார் கையில் இருக்கிறது? இது நடப்பதற்குக் கொஞ்சம் நாள் ஆகும். அதற்காக ஓர் இடைக்கால நிர்வாகம் வேண்டும். அதிலே, அவர்கள், ஜெயவர்த்தனா அவர்கள் சொன்னார்கள். அவர்கள் கொடுக்கிற பட்டியலிலேயிருந்து நான் 5 பேரை ஏற்றுக்கொள்கிறேன். எந்தப் பட்டியலைக் கொடுக்கிறார்களோ, அந்தப் பட்டியலிலேயிருந்து 5 பேர்களை ஏற்றுக்கொள்கிறேன் என்று ஜெயவர்த்தனா அவர்கள் சொன்னார்கள். அவர்கள் கொடுத்த அந்த கவுன்சிலர்கள் பட்டியலிலே மாத்தையா, யோகி, ரமேஷ், காசி ஆனந்தன், ரூபன், ஸ்ரீதரன், ரவி, அல்ஹஞ் ஹாடம் லப்மே சையத் முகமது, டாக்டர் ஏ.எம்.எம். ஜமீல் இவ்வளவு பெயர்களைக் கொடுத்தார்கள். இதிலே அவர்கள் ஏற்றுக்கொண்டது மாத்தையா, யோகி, ரூபன், ஸ்ரீதரன், ரவி, அல்ஹஞ் ஹாடம் லப்மே சையத் முகமது. இதிலே விடுதலைப் புலிகள் சொன்னார்கள், ஸ்ரீதரன், ரவி, இவர்களுக்குப் பதிலாக ரமேஷ், சிவானந்த சுந்தரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஏற்றுக்கொண்டு, இதிலே என்ன பிரச்சினை வந்தது என்றால், யார் பிரதம நிர்வாக அலுவலராக இருப்பது? Chief Executive Councillor-ஆக யார் இருப்பது என்ற பிரச்சினை வந்தது. அதிலே 3 பேரின் பெயர்களைக் கொடுங்கள். அதிலே ஒரு பெயரை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்று ஜெயவர்த்தனா அவர்கள் சொன்னார்கள். 3 பேர்களின் பெயர்களைக் கொடுத்தார்கள். சிவானந்த சுந்தரம், நமச்சிவாயம் பத்மநாபன், சி.வி.கே. சிவஞானம் என்று 3 பெயர்களைக் கொண்ட பட்டியலைக் கொடுத்தார்கள். இந்த 3 பேரிலே சி.வி.கே சிவஞானத்தை Chief Executive Councillor -ஆக அன்றையதினம் ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது. இதை பிரபாகரன் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். அன்றிலேயிருந்து பிரபாகரன் முரண்டு பிடித்தார். எப்படியாவது உடைத்தெறிய வேண்டும் என்ற ஒரு முரண்டு பிடித்து, பிறகு நம்முடைய இராணுவத்திற்கு எதிராகப் போர் தொடுத்தார்கள்.





இதுதான் வரலாறு. ஆனால், இன்றைக்குத் திடீரென்று, 15 ஆண்டுகள் கழித்து என்ன செய்யப் போகிறார்கள்? புதிய நிலை என்ன? எந்த இடம் எடுத்தாலும், அதிலே இடைக்கால நிர்வாகம் வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஏன் அந்த இடத்திற்கு வந்தார் பிரபாகரன்? அமைதி திரும்ப வேண்டும் என்ற நோக்கம் மட்டுமா? நிச்சயமாக நான் அப்படிக் கருதவில்லை.

செப்டம்பர் 11 ஆம் தேதி உலக வர்த்தக மையம் தாக்குதலுக்கு இலக்கான பிறகு—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் குறிப்பிட்டார்கள்—உலகம் முழுவதும் பயங்கரவாதத்திற்கு எதிராக ஒரு அபிப்பிராயம் திரண்டு கொண்டிருக்கிறது. யாரும் அதை மறுக்க முடியாது. பயங்கரவாதம் வேரோடு களையப்பட வேண்டும் என்று உலகம் முழுவதும் இருக்கிற அனைத்து மக்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதனுடைய விளைவாக பல கஷ்டங்கள் வந்திருக்கின்றன. ஒன்று, ஆப்கன் யுத்தம். ஆப்கன் யுத்தத்திற்குப் பின்னால் அந்தப் பகுதியிலே இராணுவ வீரர்கள், அமெரிக்கா இராணுவ வீரர்கள் இன்றையதினம் நிற்கிறார்கள். பாகிஸ்தானிலே இராணுவ வீரர்கள் நிற்கிறார்கள். ஆப்கானிஸ்தானிலிருந்து பாகிஸ்தான் வழியாக போதை மருந்து கடத்தல் நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த போதை மருந்துக் கடத்தலிலே புலிகளுக்குத் தேவையான பணம் நிறைய கிடைக்கிறது. இப்போது அது நின்றுபோய்விட்டது ஒன்று.

முற்பகல் 11-05

இரண்டு, உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழர்கள், இலங்கைத் தமிழர்களிடத்திலே வசூல் நடைபெறுகிறது. அவர்களாக விரும்பிக் கொடுக்கிறார்கள் என்று நினைக்காதீர்கள். மிரட்டி பணம் வாங்குகிறார்கள். நான் இரண்டு நாடுகளிலே இருக்கிற தமிழர்களிடம் நேரடியாகக் கேட்டேன். யாழ்ப்பாணத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்களிடம் நான் நேரடியாகக் கேட்டேன். நாங்கள் விரும்பிக் கொடுக்கிறோம் என்று சொல்ல இயலாது, ஆனால் நாங்கள் நிர்பந்திக்கப்படுகிறோம். கொடுக்கவில்லை என்றால் வேறு ஏதாவது ஆபத்து எங்களுக்கு வரும். அதனால் அதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் பணம் கொடுத்து விடுகிறோம் என்று சொன்னார்கள். அந்தப் பணம் எல்லாம் அந்தந்த நாடுகளுடைய வங்கிகளிலிருந்து வேறு சில நாடுகளுடைய வங்கிகளுக்கு மாற்றப்பட்டன. அதை இன்றையதினம் அமெரிக்கா தடை செய்துவிட்டது. அது இன்றைக்குக்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 16

கிடையாது. அதற்கும் மேலே சொல்ல வேண்டுமென்றால் Deep Penetration Strike Unit அதுதான் கடைசியாக நிறுத்தியதற்கு காரணம் என்று சொல்லுகிறார்கள். ஒன்று இதுகாறும் வந்ததைவிட நல்ல பயிற்சி பெற்ற இராணுவ வீரர்களை இலங்கை இராணுவம் உள்ளே அனுப்பியது. அதன் விளைவாக சில பின்னடைவுகள் பிரபாகரனுக்கும் அவருடைய போராளிகளுக்கும் ஏற்பட்டது. அதுவும் ஒரு காரணம். இவையெல்லாம் உண்மையான காரணங்கள். இதற்குப் பின்னாலே இலங்கைத் தமிழர்களுக்குத் தீர்வு காணும் ஏகப் பிரதிநிதியாக பிரபாகரனை இலங்கைத் தமிழர்கள் தேர்ந்தெடுக்கவில்லை என்பதை நாம் நினைவிலே கொள்ள வேண்டும். யாரும் அவரைத் தேர்ந்தெடுக்கவில்லை. எங்களுடைய பிரதிநிதி யார், பிரபாகரன், எங்களுடைய பிரதிநிதி எந்த அமைப்பு, L.T.T.E. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் என்று யாரும் சொல்லவில்லை. தேர்ந்தெடுக்கப்படவில்லை. அவராகவே தன்னை நியமித்துக்கொள்கிறார். பயங்கரவாதத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழர்களை அச்சுறுத்தி பிரபாகரன் தானாகவே உருவாக்கிக்கொண்ட தலைமையை ஜனநாயகப் பண்புள்ள யாரும் அங்கீகரிக்க முடியாது. அடிப்படையில் பிரபாகரன் ஒரு பயங்கரவாதி, ஹிட்லரை விட மோசமான ஒரு fascist. சக போராளி அமைப்புகளில் யாராவது உயிரோடு இருக்கிறார்களா? அவர் இந்த ஊரிலே இருந்தபோது பல போராளி அமைப்புகள் இருந்தன. பல தலைவர்கள் இருந்தார்கள், அவருக்குச் சமமான தலைவர்களாகக் கருதப்பட்டவர்கள். முகுந்தன், உமாமகேஸ்வரன், பத்மநாபா, அதேமாதிரி ஸ்ரீசபாரத்தினம், பாலகுமாரன்; இவர்கள் யார் எல்லாம் உயிரோடு இருக்கிறார்கள்? E.P.R.L.F. பத்மநாபா ஒரு இன்ஜினியரிங் கிராஜுவேட், நன்கு படித்தவர், முற்போக்கு சிந்தனை உள்ள அரசியல்வாதி, அவர் இந்த ஊரில், தமிழ் மண்ணில், நம்முடைய சென்னை மாநகரில், அவரை மட்டுமல்ல அவரோடு சேர்ந்த 17 பேரைக் கொன்றார்கள், அந்த 17 பேரில் 5 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள். அதை நாம் மறந்துவிடக்கூடாது. அதேபோல T.E.L.O. ஸ்ரீசபாரத்தினம், அவரை எப்படிக் கொன்றார்கள் தெரியுமா? 150 பேர் உட்கார்ந்து சாப்பிடும்போது, முதல் கவளம் வாய்க்குள் போகவில்லை, ஈவு இரக்கம் இல்லாமல், காக்கை, குருவியை சுட்டுக்கொல்வது மாதிரி, புறாக்களை சுட்டுக் கொல்வது மாதிரி (குறுக்கீடு) கொடூரமான முறையில் கொன்றார்கள்.



2002 ஏப்ரல் 16]

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியது தீர்மானத்தில் இல்லை என்று சொன்னார்கள் இது தீர்மானத்தில் வருகிறதா என்று கேட்கிறேன். (குறுக்கீடு.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே தீர்மானத்திற்கு வந்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் தீர்மானத்தின் பின்னணியிலே பேசவில்லை. (குறுக்கீடு) நான் தீர்மானத்தின் பின்னணியில்தான் பேசுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் பேச வேண்டியதை எல்லாம் பேசிவிட்டீர்கள். தீர்மானத்தின் பின்னணியில்தான் நான் பேசுகிறேன். தீர்மானத்தின் பின்னணியில்தான் நான் பேசுகிறேன். ஒன்று, E.R.O.S. என்று ஒரு அமைப்பு இருந்தது. அதை மட்டும் கொஞ்ச நாள் விட்டு வைத்திருந்தார். நிர்பந்தப்படுத்தி, கட்டாயப்படுத்தி, அந்த அமைப்பை தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொண்டார். இப்போது அவருடைய கதி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. பாலகுமாரனுடைய கதி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஆளைக் காணோம். அதுமட்டுமா? அதுமட்டுமல்ல, சக போராளி அமைப்புகளில் யாரையும் விட்டு வைக்கவில்லை. பெரும்பான்மையான தமிழர்களை பிரதிநிதிப்படுத்திய தமிழர்கள் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்கள் அத்தனை பேரையும் அழித்துவிட்டார். யார், அமிர்தலிங்கம்? அவர்தான் அந்த அமைப்பின் தலைவராக இருந்தார். அமிர்தலிங்கத்தோடு நான் பேச்சுவார்த்தை நடத்த வருகிறேன் என்று சொல்லி, மதிய உணவு உங்களோடு உண்ணப்போகிறேன் என்று உறுதி அளித்து, அவர் வீட்டுக்கு புலிகள் இரண்டு பேர் வருகிறார்கள். இவர் பேச்சுவார்த்தைதான் நடத்தப் போகிறார் என்று நம்பி அவருடைய மனைவி மங்கையர்க்கரசி, சமையல் செய்து கொண்டிருக்கிறார். திடீரென்று அவரையும், யோகேஸ்வரனையும் சுட்டுக் கொன்றுவிட்டு இரண்டு பேரும் ஓடிப்போய்விட்டார்கள். ஒருவர் இல்லை, ஒரு யோகேஸ்வரன் இல்லை, ஒரு அமிர்தலிங்கம் இல்லை, யார் உயிரோடு இருக்கிறார்கள்? திரு. சம்பந்தம் இல்லை, ஆலால சுந்தரம் இல்லை, சாம் தம்பி முத்து இல்லை. அவர்கள் எல்லாம் படம்போட்ட முற்போக்கு சிந்தனையாளர்கள், முற்போக்கு அரசியல்வாதிகள். ஒருவர்கூட இல்லை. எல்லோரையும் சுட்டுக்கொன்றுவிட்டார்கள். யாரையும் விடவில்லை.

பிறகு ஒரு தேர்தல் நடந்தது. சமீபத்திலே ஒரு தேர்தல் நடந்தது. யாழ்ப்பாணத்தில், தமிழர்கள் குடியேறிய பின்னாலே மேயரை பெண்

என்றும் பார்க்காமல் சுட்டுக்கொன்றுவிட்டார்கள். யாரையும் விடவில்லை. அங்கே யாரையும் விட்டு வைப்பது அவர்களுடைய கொள்கையே அல்ல. தன்னுடைய இயக்கத்திலே தனக்கு இணையாக வளர்ந்த போராளிகளை ஒழித்து விடுவார். தனக்குச் சமமாக நினைத்து யாராவது வெளியே பேசிக் கொண்டிருக்கிறார் என்று சொல்லுங்கள், எப்படியாவது பார்த்து அவரை முடித்துக் கட்டிவிடுவார். யாராவது இருக்கிறாரா? இவருக்கு அடுத்த இடத்தில் இருந்தாரே? இந்த ஊரில் இவரும் ஆன்டன் பாலசிங்கமும் Air condition room-லே இருக்கிற நேரத்திலே, அங்கே இருந்து போர் நடத்தியவர் ஒருவர். நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. பெயர் உங்களுக்குத் தெரியும். அவர் எங்கே இன்றைக்கு? மரண தண்டனை விதித்து அவரைக் கொன்றுவிட்டார்கள். இதுதான் பிரபாகரன். இதை யாரும் எந்தக் காரணத்தைக்கொண்டும் மறந்துவிடக்கூடாது. ஜனநாயக நெறிமுறைகளை நம்பாத ஒரு கொடுமையான fascist ஆக வளர்ந்து இருப்பவர்தான் பிரபாகரன். சுருக்கமாகச் சொன்னால் பிரபாகரன் ஒரு பஸ்மாசுரன். அதை மறந்துவிடக் கூடாது. இதைக் கருத்தில் கொண்டுதான் இந்தத் தீர்மானத்தையானாலும் சரி வேறு எதுவாக இருந்தாலும் சரி, நாம் நோக்க வேண்டுமே தவிர வேறு எதுவும் கிடையாது. மிக மிக முக்கியமானது இதுதான்.

(முற்பகல் 11-10

இரண்டாவது. பயங்கரவாதத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது நம்முடைய நாடு என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மறந்துவிடக்கூடாது. பிரதமராக இருந்த 2 பேரை பயங்கரவாதத்திற்குப் பலி கொடுத்தது நம்முடைய நாடு. வடக்கே காஷ்மீரிலும், மேற்கே பஞ்சாபிலும், வட கிழக்கு மாநிலங்களும் பயங்கரவாத அமைப்புகளால் மிகப் பெரிய இழப்புகளைத் தொடர்ந்து சந்தித்திருக்கும் நம் நாடு, பிரபாகரன் என்ற பயங்கரவாதியையும் L.T.T.E. என்ற பயங்கரவாத அமைப்பையும் ஆதரிப்பதற்கான வாய்ப்பே இல்லை. தனி ஈழம் என்ற கோரிக்கையையும் ஆயுதம் ஏந்திய போரையும் கைவிடவில்லை என்று வெளிப்படையாகவே பேட்டி கொடுத்திருக்கிறார், பிரபாகரன். ஒரு தீர்வினைக் காண முன் வராத பிரபாகரன் அமைப்பை இந்தியா ஆதரிக்க இயலாது. அப்படி ஆதரித்தால் காஷ்மீர் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடுவதாகச் சொல்லும் பயங்கரவாத அமைப்புகளை, வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவிலேயிருந்து பிரித்தெடுக்க முயலும் பயங்கரவாத அமைப்புகளையும், தமிழகத்தை





சுய நிர்ணய உரிமையுடன் தனியாகப் பிரிக்க முனையும் தீவிரவாத சக்திகளையும் இந்தியா ஊக்கப்படுத்துவதாக அமையும். அதன் விளைவாக இந்திய தேசிய இனங்கள் சுய நிர்ணய உரிமை கோரும் போர்வையில், இந்தியா பல துண்டுகளாகச் சிதறுவதற்கு பிரபாகரனை ஆதரிக்கும் அணுகுமுறை அடிகோலும் என்று நான் இந்த நேரத்திலே எச்சரிக்க விரும்புகிறேன்.

இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களுடைய படுகொலை ஒரு துன்பியல் சம்பவம் என்று மட்டும் வர்ணித்த பிரபாகரனின் போக்கு, சாலையோரத்தில் உயிர்விட்ட ஒருவருடைய முடிவு குறித்த சாதாரண விமர்சனம் போன்றே அமைந்துள்ளது. நான் சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள் இதை. அவரோடு இன்னும் அந்த நாட்டிலேயே இருக்கிற ஒரு தமிழர் விடுதலை இயக்கத்தினுடைய தலைவர் ஒருவர் சொன்னது. அதைத்தான் நான் சொல்கிறேன். நான் சொந்தமாகச் சொல்லவில்லை. அவர் சொன்னார் என்று சொன்னால், நீ சொன்னாயா என்று தேடி ஏதாவது பண்ணிவிடுவார்கள். அதற்காகப் பயந்து நான் பெயரைச் சொல்லவில்லை. பெயரும் பத்திரிகையிலே வந்திருக்கிறது அவர் சொன்னதாக. என்னுடைய சொந்தக் கருத்து அல்ல.

ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையில் தனக்கோ L.T.T.E. அமைப்புக்கோ எள்ளளவும் தொடர்பில்லை என்று பிரபாகரன் திட்டவட்டமாக மறுக்கவில்லை; மறுக்க இயலவில்லை. அதுமட்டுமல்ல, இங்கே இருக்கும்போதே, 1987-ல் அங்கே போவதற்கு முன்பே, இங்கே இருக்கும்போதே திருவாரூரிலே ஒரு முறை பேசினார். இந்திய இராணுவம் இலங்கைக்கு வருமேயானால், சிங்கள இராணுவத்தோடு சேர்ந்துகொண்டு, இந்திய இராணுவத்திற்கு எதிராகப் போர் புரிவோம் என்று சொல்லியிருக்கிறார் பிரபாகரன். இது இங்கே, திருவாரூரிலே. வேறு எங்கேயும் பேசவில்லை. இப்போது, இந்தியா அன்னிய நாடு alien country. இந்திய இராணுவம், இந்திய அமைதி காக்கும் படை அவர்களைப் பாதுகாப்பதற்காகப் போயிற்று. அதை ஆக்கிரமிப்பு இராணுவம் என்று சொன்னார். Occupation army என்று சொன்னார். இந்திய இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவம் என்றும், இந்திய இராணுவத்தை சிங்கள இராணுவத்தோடு சேர்ந்து எதிர்த்துப் போராடுவோம் என்றும் கொக்கரித்தவர்தான் பிரபாகரன். யாரும் மறந்துவிட வேண்டாம்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 16

மதத்தின் போர்வையில் உலகத்தை அச்சுறுத்தும் ஒசாமா பின்லேடனைப் போன்று தமிழினத்தின் போர்வையில் பயங்கரவாதத்தை வளர்த்தெடுத்தவர் பிரபாகரன். ஒசாமா பின்லேடனின் அணுகுமுறைக்கும், பிரபாகரனின் அணுகுமுறைக்கும் பெரிய வேற்றுமை இல்லை. ஒசாமா பின்லேடன் இப்படியொரு பத்திரிகையாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தால் அமெரிக்கா ஏற்றுக்கொள்ளுமா, அனுமதிக்குமா, வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்திருக்குமா என்று அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

காதல் வயப்பட்டு விரும்பியவரோடு போலி பாஸ்போர்ட்டைப் பயன்படுத்தி இந்தியாவிற்கு வந்த தலால் ஆஸ்மி என்ற பெண்ணை, குவைத் அரசு திரும்பப் பெறுவதற்கு இண்டர்போலின் உதவியை நாடுகிறது. கோடிக்கணக்கான மக்களின், அன்பையும், ஆதரவையும் பெற்று பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியை மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்த பிரபாகரனை கைது செய்து இந்தியச் சட்டத்தின் முன் கொண்டுவந்து நிறுத்தி விசாரிக்க வேண்டுமென்பதில் என்ன தவறு இருக்கிறது? அதுதான் இந்தத் தீர்மானம். இங்கே கொண்டு வந்து நிறுத்த வேண்டும். விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். விசாரணை நடந்து ஒருவேளை அவர் நல்லவர், அவர் ரொம்ப யோக்கியமானவர், அவருக்குத் தெரியாமல் அவருடைய அமைப்பு கொன்றுவிட்டது என்று சொன்னால், அதைக்கூட நாம் ஏற்றுக்கொள்ளலாம். இங்கே விசாரணைக்கு அவர் வந்து நிற்பதுதான் நமக்கு ரொம்ப முக்கியம்.

ஆண்டன் பாலசிங்கம் சிகிச்சை பெறுவதற்கு மனிதாபிமான அடிப்படையில் இந்திய அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அவரைப் பொறுத்தவரைக்கும் என்ன சிகிச்சை என்று கேட்டபோது, தினசரி டயாலிசிஸ் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று, பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. கொஞ்சம் ஞாபகப்படுத்திப் படித்துப் பாருங்கள். அப்புறம் சொன்னார்கள். தினமும் அல்ல, ஒரு நாள் விட்டு ஒரு நாள் என்று சொன்னார்கள். இப்போது சொல்கிறார், பேட்டியில் அவர் சொல்கிறார், எனக்கு ஏற்கெனவே மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை நடைபெற்றிருக்கிறது என்று. மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், தினசரி டயாலிசிஸ் வேண்டியதில்லை. டயாலிசிஸே வேண்டியதில்லை. அதுமட்டுமல்ல, ஒருவேளை அவர் சிகிச்சை பெற வேண்டுமென்றால் என்ன பண்ணலாம், அவர் இந்த நாட்டு பிரஜையும் இல்லை; இலங்கை நாட்டுப் பிரஜையும் இல்லை; இங்கிலாந்து நாட்டுப் பிரஜை. இங்கிலாந்து நாட்டிலேதான் வாழ்கிறார். இங்கிலாந்து நாட்டைவிட தமிழ்நாட்டிலே, சென்னையிலேதான் நல்ல மருத்துவ சிகிச்சைக்கு வசதி இருக்கிறதா என்ன? நிச்சயமாகக் கிடையாது. அவர்கள் எதற்காகச் சொல்கிறார்கள் என்றால், இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் தங்கி சிகிச்சை பெற வேண்டும் என்று சொல்வதில் உள்நோக்கம் இருப்பதாகவே நமக்குத் தோன்றுகிறது. மனிதாபிமானப் போர்வையில் பயங்கரவாதம் தமிழகத்திற்குள்ளே ஊடுருவக் கூடாது என்ற உணர்வின் அடிப்படையில் பாலசிங்கத்தின் பிரச்சினை அணுகப்பட வேண்டும் இந்தியாவின் இறையாண்மையை, அமைதிக் கலாச்சாரத்தை சீர்குலைப்பதற்கான எந்த முயற்சியையும், அது மனிதாபிமானப் போர்வையில் வந்தாலும் அனுமதிக்க முடியாது.



2002 ஏப்ரல் 16] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

சிலர் பேசுகிறார்கள், வெளியிலே. பாலசிங்கம் என் உடன்பிறப்பு; பாலசிங்கத்தை உள்ளே வரக்கூடாது என்று சொல்வதற்கு இவர் யார்? தமிழர்கள் என்றால் உடன்பிறப்புதான். ஒப்புக்கொள்கிறேன்; நான் இல்லை என்று சொல்லவில்லை. இப்போது தினசரி பேப்பரில் வருகிறது. எம்.கே.பாலன் என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் இருந்தார்; அவரைக் காணோம். அவருடைய நண்பர் ஜெயக்குமார் என்பவர் இருந்தார்; இரண்டு பேரையும் யார் கொன்றார்கள் என்று கேட்டால் தமிழன்தான் கொன்றான். வேறு யார் கொன்றார்கள்? உடன்பிறப்பு என்று விட்டுவிடலாமா அவனை? இரண்டு நாட்களுக்கு முன்னாலே இங்கே ஒரு கற்பழிப்புச் சம்பவம் நடைபெற்றது. கதறக் கதற கற்பழித்தார்கள். அவன் யார் என்று கேட்டால் அவனும் தமிழன்தான். உடன்பிறப்பு என்று விட்டுவிடலாமா அவனை? இதைவிட மோசமான ஒரு வாதம் இருக்கவே முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) மனம் வெதும்பி பலமுறை எனக்கும் L.T.T.E. க்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கலைஞர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஏன் என்றால் அதுமாதிரி அவருடைய நெஞ்சே நோகத்தகும் வகையில் L.T.T.E. பலமுறை நடந்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 11-15

இன்னும் சொல்லப் போனால், E.R.O.S.- ஸ்ரீசபாரத்தினத்தை கொன்றார்களே, அப்போது என்ன சொன்னார் என்றால், தலையிடமாட்டோம் என்று மட்டும் சொல்லி நிறுத்தவில்லை. முடிந்தால் எனக்குக் கொஞ்சம் சயனைடு கொடுங்கள் என்று கேட்டார். அவ்வளவு கொடூரமான சம்பவம் என்று அவரே அதை வர்ணித்திருக்கிறார்.

L.T.T.E. அவர்களுடைய நாட்டில் யார் ஆள வேண்டும் என்று தீர்மானித்தால் நாம் அதில் தலையிடவில்லை. ஆனால், நம்முடைய நாட்டில் யார் ஆள வேண்டும், யார் பிரதமராக வரவேண்டும் அல்லது யார் பிரதமராக வரக்கூடாது என்று நிர்ணயிக்கிற உரிமை L.T.T.E.-க்கு நிச்சயமாகக் கிடையாது.

அதுமட்டுமல்ல, ஆட்சி அதுவொரு பக்கம். இன்னொரு பக்கம் என்ன சொல்கிறார்கள் என்றால், ஒரு கட்சிக்கே யார் தலைவராக இருக்க வேண்டும். பெரிய இயக்கமாக இருந்தால், அந்தப் பெரிய இயக்கத்தினுடைய தலைவராக யார் இருக்க வேண்டும், அவர்கள்தான் நிர்ணயிக்க வேண்டும். நம்முடைய ஊரில் இருக்கிற, நம்முடைய நாட்டில் இருக்கிற, நம்முடைய ஜனநாயக நாட்டில் இருக்கிற, நம்முடைய ஜனநாயக நடைமுறைகளை ஏற்றுக்கொண்டு, போட்டி போடுகிற பெரிய கட்சியில் தலைவராக யார் இருக்க வேண்டும், அதை இந்தக் கட்சிக்காரர்கள் தீர்மானிக்க முடியாது. அங்கிருக்கிற விடுதலைப் புலிகள், அங்கிருக்கிற பிரபாகரன் அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டுமாம். அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? அதை அப்படியே விட்டுவிடலாம் என்று சொல்கிறீர்களா? அதை அவர்களுடைய அணுகுமுறை. ஒரு கட்டத்திலே நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது. களத்திலே பலியானவர்கள் தவிர, பிரபாகரனாலே கொல்லப்பட்ட தமிழர்களுடைய எண்ணிக்கையே அதிகம். மொத்தத் தமிழர்கள் அங்கு சாகடிக்கப்பட்டவர்கள் யாராலே அதிகம் என்று சொன்னால், விடுதலைப் புலிகளால், பிரபாகரனால் கொல்லப்பட்டவர்கள்தான் அதிகம். 10,000 தமிழ் முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள். ஒரு இலட்சம் பேர், ஒரு இலட்சம் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்பதை நான் சொல்லவில்லை. இந்தப் பேட்டிக்குப் பின்னாலே பாலசிங்கம் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்தப் போராளிகளை எம்.ஜி.ஆர். ஆதரித்திருக்கிறார். எம்.ஜி.ஆர். ஆதரித்தது 1987, ராஜீவ்-ஜெயவர்த்தனே உடன்பாட்டுக்கு முன்பு என்பதை மறந்துவிடக் கூடாது. ராஜீவ் -ஜெயவர்த்தனே உடன்பாட்டுக்கு முன்புதான் எம்.ஜி.ஆர். ஆதரித்தார். இங்கே இருக்கிற பலரும் ஆதரித்தார்கள், பல அமைப்புகள் ஆதரித்தன, அந்த அடிப்படையில்தான் ஆதரித்தார்கள், யாராக இருந்தாலும் சரி; அதற்கும் இதற்கும் வேறுபாடு உண்டு. அதுமட்டுமல்ல, ராஜீவ் காந்தி கொலைக்கு முன்பாக இதெல்லாம் நடந்தது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. அந்த இரண்டையும் கருத்திலே கொண்டு, இதை முடிவு பண்ண வேண்டுமே தவிர வேறு எதுவும் தேவையில்லை, தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண பிரபாகரனாலே மட்டுமே முடியும் என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது.





Brute force could achieve nothing enduring என்று சொல்வார்கள். கொள்கையும், இலட்சியமும் இல்லாத மூர்க்கத்தனமான படையினாலே எந்த நீடித்து நிலைக்கக்கூடிய சாதனையும் புரிய முடியாது. இலங்கையில் வாழும் தமிழர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கையில் தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று நிம்மதியாக வாழ வேண்டும். அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் துணை நிற்போம் என்று கூறி, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தைக் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஈழப் போராளிகளால் இருபது ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நடத்தப்படும் விடுதலைப் போராட்டத்தில், ஸ்ரீலங்கா நாடு தலைவர்கள் பலரையும், பல்லாயிரம் படைவீரர்களையும் இழந்த பின்னர், எப்படியேனும் போராட்டத்தை நிறுத்தி அமைதி காணும் நோக்கில், நார்வே நாட்டு அரசின் மூலம் ஒரு சமரச முயற்சி தொடங்கப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தை தொடங்கியுள்ள நிலையில் there is a little light at the end of the tunnel. குகைப் பாதையின் மறுமுனையில் சிறிது வெளிச்சம் தெரிவதாக இலங்கைப் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ள நிலையில், இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இயலுமா என்பதை முதலில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த சமரச முயற்சியில் இந்திய அரசு நேரடியாகப் பங்கு பெறாது என்றும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்துள்ளது விலக்கிக்கொள்ளப்பட மாட்டாது என்றும், திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை இலங்கை அரசு இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் 1995 ஆம் ஆண்டு பிரதமர் நரசிம்மராவ் காலத்தில் இந்திய அரசு எடுத்த நிலை இன்றும் பிரதமர் வாஜ்பாய் காலம் வரை தொடர்கின்றது என்றும், திரு. ஆன்டன் பாலசிங்கம் இந்தியாவில் தங்கி இலங்கை அரசுடன்

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 ஏப்ரல் 16

பேச்சுவார்த்தை நடத்த அனுமதிக்க முடியாது என்றும் இன்றைய மத்திய அரசு தெளிவாகவே கூறியுள்ளது. இலங்கை அரசின் ஒத்துழைபபுக்கு வாய்ப்பற்ற நிலையில் மைய அரசு, இந்தியப் படையை அனுப்புதல் போன்ற நடவடிக்கையில் ஈடுபடுவது என்பது, வேறு பல அந்நிய நாடுகளுடன் உள்ள உறவு நிலைமைகளைப் பொறுத்து, ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டியதாகவே அமையும். எந்த நிலையிலும் நமது நாட்டின் உரிமையையும் அமைதியையும் காப்பதே நமது முதல் கடமை என்று கருதிய பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளிநாட்டு உறவுக் கொள்கையில் மைய அரசின் முடிவையே ஆதரித்து வந்ததை நாடறியும்.

முறபகல் 11-20

இலங்கை அரசு ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட உடன்பாடுகள் எல்லாம் பின்னர் புறக்கணிக்கப்பட்டு, தமிழர்கள் உரிமை பறிக்கப்பட்டதால், போராளிகள் பல்வேறு குழுக்களாக உருவாகி, ஈழத் தமிழகம் கேட்டுப் போராடலானார்கள். தமிழர்களின் இரத்தம் ஆறாக ஓடிய அந்த நெடிய வரலாற்றில், 60,000-க்கும் மேற்பட்ட குடிமக்களும், 17,000 போராளிகளும் உயிரிழந்துள்ளனர். தமிழ் மக்களின் வாழ்க்கையே போர்க்கள வாழ்க்கை ஆகிவிட்டது. அதன் எதிரொலியாகப் பல இலட்சம் ஈழத் தமிழர் இந்தியாவிலும் பல்வேறு அந்நிய நாடுகளிலும் அகதிகளாகவே வாழ்கின்றனர். அவர்களில் பலர் இரண்டு தலைமுறையாகவே அகதிகள்.

இந்தச் சூழலிலிருந்து விடுபட்டு அச்சம் நீங்கிய அமைதி வாழ்வு காண்பதற்கும், அகதிகளாக அலையும் நிலை மாறி தாயகத்தில் குடியமர்வதற்கும் ஒரு வாய்ப்பு உருவாகாதா என்று எதிர்பார்க்கும் நிலை ஈழ மக்களிடம் தோன்றியுள்ளது. ஈழத்தில் அமைதி வாழ்வு திரும்புவதை அந்நாட்டு இஸ்லாமிய மக்களும் வரவேற்கின்றனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் உயிரைப் பறித்தவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்வது சட்டப்படி ஆற்ற வேண்டிய கடமை என்பதில் கடுகளவு கருத்து மாறுபாடும் இல்லை. எனினும், ஈழத் தமிழர் சமாதான அமைதி வாழ்வு பெற இந்தப் பேச்சுவார்த்தை ஒரு வாய்ப்பாக அமையக்கூடும். Possible-ஆக அமையக்கூடும் என்னும் எதிர்பார்ப்புக்கு இந்தத் தீர்மானம் இடையூறாகிவிடுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது.



2002 ஏப்ரல் 16] [பேராசிரியர் க. அன்பழகன்]

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட பின், அதில் விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன தலைவரும் உறுதியாகச் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பதாலேயே 14-5-1992 முதல் அந்த அமைப்பு தடை செய்யப்பட்டது. பின்னர் அந்தத் தடையை 14-5-1994 முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று இந்தப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது இந்தத் தடை 13-5-2002 அன்று முடிவடைவதால் 14-5-2002 முதல் மேலும் இரண்டு ஆண்டுகட்கு நீட்டிக்கக் கோரி தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார் என்பது தீர்மானத்தில் காணப்படுகிறது.

அதே கடமையை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற காலத்திலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை முதல்வர் கலைஞர் நிறைவேற்றினார் என்பதை —இது ஒரு பொதுக் கடமை என்பதற்காக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட விரும்பவில்லை. இருந்தாலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்ற ஒரு தவறான கருத்து இங்கே பதிவாகிவிடக்கூடாது என்பதற்காக நான் குறுக்கிடுகிறேன்.

1991 முதல் 1996 வரை நான் முதல்மைச்சராக இருந்த காலத்தில் நானே மத்திய அரசுக்கு, பாரதப் பிரதமர் அவர்களுக்கு, மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்று விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும், விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்பட்ட வேறு பல விஷயங்கள் குறித்தும், நாட்டின் பாதுகாப்புக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நானே 9 கடிதங்கள் அனுப்பியிருக்கிறேன். ஆனால் 1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீட்டிக்க வேண்டுமென்று ஒரு முறைகூட முதலமைச்சர் என்ற முறையில் திரு. கருணாநிதி அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியதே இல்லை. 3 முறை அன்றைய தலைமைச் செயலாளர்தான் கடிதம் அனுப்பியிருக்கிறார் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2002 ஏப்ரல் 16

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனக்கு இருந்த தீவிரமான உணர்வு கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு இல்லை என்னும் கருத்தில் இப்படிக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் உண்மை என்னவென்று கேட்டால், மத்திய அரசு ஒரு கருத்திற்கு உடன்படாதபோது, வலியுறுத்த நேர்கிறபோது முதலமைச்சர்களே எழுத வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மத்திய அரசே எவ்வித மாறுபாடும் இல்லாமல் இருக்கிறபோது தலைமைச் செயலாளரே எழுதினாலும் அது ஏற்கப்படும் என்பது அரசாங்கத்தினுடைய கருத்தாகும். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றையும்விட இதிலே கருத்து மாறுபாடு இல்லை. கடிதம் எழுதினாரா, அல்லவா, என்ன தேதி, அவையெல்லாம் விவரங்கள்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு முதலமைச்சர் கடிதம் எழுதினாலும், தலைமைச் செயலாளர் கடிதம் எழுதினாலும், அது அரசினுடைய கடிதம்தான். அது எனக்குத் தெரியாமல் இல்லை. ஆனால், 1996, மீண்டும் 1998, மீண்டும் 2000 ஆகிய மூன்று சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீட்டிக்க வேண்டிய அவசியம் வந்தபோது, மூன்று முறையும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர்தான் மத்திய அரசிற்கு கடிதம் எழுதி இருக்கிறார். அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் கடிதம் அனுப்பவில்லை என்னும்போது, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினைக்கு அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பது இதிலிருந்தே தெரிய வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே அதற்கு முக்கியத்துவம் கொடுப்பது கடிதம் எழுதியது மூலமாகத்தான் தெரியும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், ஓர் அரசாங்கம் அனுமதித்தால்தான், முதலமைச்சர் அனுமதித்தால்தான், தலைமைச் செயலாளர் இப்படிப்பட்ட கடிதம் எழுத முடியும். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, அதுவல்ல முக்கியம். இந்தக் கருத்திலே மாறுபாடு இல்லை என்பதற்காக மட்டும்தான் நான் இதைத் தெரிவிக்கிறேன். ஒருவேளை மறுபடியும் முதலமைச்சராக வந்தால்,



2002 ஏப்ரல் 16] [பேராசிரியர் க. அன்பழகன்]

கலைஞர் கருணாநிதி அவர்களை தொடர்ந்து கடிதம் எழுதும்படி நான் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு)

இரண்டாவது, ஒவ்வொரு பிரச்சினையிலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான உணர்வு மேலோங்கி நிற்கிறது. இந்த அவையிலே இருக்கிற, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற அத்தனை பேருக்கும் இடையில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் இருப்பினும் அடிப்படையிலே சில உண்மைகளில் அத்தனை பேரும் ஏறத்தாழ ஒன்றாக இருக்கிறோம். ஒன்று, ஈழத் தமிழர்களுடைய பிரச்சினை. அவர்களுக்கு அமைதியான வாழ்வு கிடைப்பது, நிம்மதி ஏற்படுவது, இங்குள்ள அகதிகள் திருப்பிச் செல்வது, அதிலே அத்தனை பேரும் உடன்படுகிறோம். அதே நேரத்தில், பிரபாகரனால் ஏற்பட்ட கேடுபாடுகளை வைத்து அதை எடுத்துச் சொல்கிறபோது, ஒவ்வொருவரும் அவரவரின் உணர்ச்சி நிலையிலேயிருந்து அதை எடுத்துச் சொல்கிறோம். சிங்கள அரசினைப் பற்றிக் குறிப்பிடுகிறபோதும், நம்முடைய கண்ணோட்டத்திலே நாம் தெரிவிக்க நேரிடுகிறது. ஆகவே, சிலசில வேறுபாடுகள் இருந்தாலும்கூட, இதில் பொது நோக்கம் இருந்தது என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

இன்னும் ஒன்று, விடுதலைப் புலிகளுக்கு தடை இந்தியாவில் நீடிக்க வேண்டும் என்பதிலே கருத்து மாறுபாடு இல்லை என்பதற்காக இதை நான் தெரிவிக்கிறேன். அடுத்து இந்தியக் குடியரசில் இருந்து தமிழ்நாட்டைப் பிரித்துவிட வேண்டும் என்னும் கொள்கையுடைய தமிழ் தீவிரவாத அமைப்புக்களான தமிழ்நாடு விடுதலைப் படை Tamil Nadu Liberation Army, தமிழ்நாடு மீட்புப் படை- Tamil National Retrieval Troop ஆகியவற்றால் மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் ஏற்பட்ட பாதிப்பு மிகவும் அதிகமாக இருந்ததால், தமிழ்நாடு அரசு இந்த இரண்டு அமைப்புகளையும் 9-11-2001 அன்று தடை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது என்னும் செய்தி, என்னும் கருத்து, தீர்மானத்தில் காணப்படுகிறது.

அதே காரணங்களுக்காக, அதே நோக்கத்துடன் தி.மு.க. ஆட்சியிலே 2-2-2001 அன்று சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் ஆற்றியுள்ள உரையில் விரிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த இரண்டு தீவிரவாத இயக்கங்களையும் தடை செய்ய வேண்டுமென்று தி.மு.க. அரசு, மத்திய அரசுக்கு 16-12-2000 அன்று கடிதம் எழுதியிருக்கிறது என்பதையும், 3-1-2001 அன்று மத்திய அரசு அதைப்பற்றி வேறு சில விவரங்களைக் கேட்டு, கடிதம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 ஏப்ரல் 16

அனுப்பியதால் அந்த விவரங்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதையும் அப்போதே கலைஞர் சட்டப் பேரவையில் தெரிவித்துள்ளார். அதற்குப் பின்னர்தான் அது ஒரு தொடர் முயற்சி, எந்த அரசாக இருந்தாலும், ஏற்படக்கூடிய கேடுபாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்காக, வன்முறை, தீவிரவாத கலாச்சாரம் வளராமல் தடுப்பதற்கு ஒரு வித்து, அன்றைக்கே அந்த முயற்சி எடுக்கப்பட்டது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 'தற்போது ஸ்ரீலங்காவில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட சூழ்நிலையினால், அந்த நாட்டில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் அமைதி திரும்பும்நிலை உருவாகுமென்றால், அதில் தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் மகிழ்ச்சிதான். அந்தச் சூழ்நிலை உருவாகுமேயானால், ஸ்ரீலங்காவிலிருந்து புகலிடம் தேடி தமிழகத்திற்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான ஸ்ரீலங்கா தமிழ் அகதிகள் தங்கள் தாயகத்திற்குத் திரும்பவும், ஸ்ரீலங்காவில் உள்ள தத்தம் உறவினர்களுடன் சேர்ந்து வாழவும் வாய்ப்பு உருவாகும்' என்று அரசின் தீர்மானத்திலேயே கூறப்பட்டுள்ளதற்கு மாறாக—தீர்மானத்திலேயே அந்த ஆர்வம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாக, இந்தத் தீர்மானம் சமாதானப் பேச்சுவார்த்தையைத் தடுத்துவிடுமோ, அவர்களிடையே உடன்பாடு காண முடியாமல் செய்துவிடுமோ என்ற ஐயம் ஏற்படுகிற அளவிற்கும், பல இலட்சம் இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் அமைதி காண்பதும், உலகெங்குமுள்ள தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவதும் முடியாமற் போகுமோ என்ற ஐயத்தையும் ஏற்படுத்துகிறது. எனவே, இப்படிப்பட்ட தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய மொத்த வடிவத்திலே ஆதரிக்கவுமில்லை, எதிர்க்கவுமில்லை, நடுநிலை வகிக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானம், திருத்தப்பட்டவாறு, பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2002 ஏப்ரல் 16]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தீர்மானத்தை எதிர்த்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்பு செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் மற்றும் திரு. இரா. திருமாவளவன் ஆகியோர் வெளிநடப்பு செய்தனர்.)

## @திருத்தப்பட்டவாறு நிறைவேற்றப்பெற்ற அரசினர் தனித் தீர்மானம்

"படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாரதப் பிரதமர் அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கொலை வழக்கில் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படும் இலங்கை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இச்சட்டப் பேரவை வற்புறுத்துகிறது. மேலும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சார்ந்த எந்த ஒருவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்துகிறது.

ஸ்ரீலங்கா நாட்டில் தற்போது நடந்து வரும் நிகழ்வுகளையும், அந்த நாட்டைச் சார்ந்த தீவிரவாத இயக்கமான L.T.T.E. - தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், 10-4-2002 அன்று சர்வதேச பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்ததையும் பார்த்து, தமிழக மக்கள் மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பாரதத்தின் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து, நழுவும் தோரணையில் பிரபாகரன் தெரிவித்த கருத்துகள் பற்றி இந்தச் சட்டமன்றப் பேரவை மிகவும் கவலை கொள்கிறது. 1991ஆம் ஆண்டு மே 21ஆம் நாள் அன்று திரு. ராஜீவ் காந்தி அவர்கள் மிகவும் கோரமான முறையில் படுகொலை

@93ஆம் பக்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணையிட்டவாறு.

[2002 ஏப்ரல் 16

செய்யப்பட்டதையும். இந்தக் கொடூரமான செயலில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும் உறுதியாக சம்பந்தப்பட்டிருந்தனர் என்பதையும் இந்த நாடு இன்னும் மறந்துவிடவில்லை.

1991 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளில், தமிழக அரசு எடுத்த தொடர் முயற்சிகளின் காரணமாக, மத்திய அரசு, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை 1967 ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின்கீழ்-Unlawful Activities (Prevention) Act, 1967-ன்படி 14-5-1992 முதல் தடை செய்தது.

நாட்டின் ஒருமைப்பாட்டையும், பாதுகாப்பையும் கட்டிக் காக்க வேண்டியதில் தனது பங்கை நன்கு உணர்ந்த தமிழக சட்டமன்றப் பேரவை, 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி அன்று, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை, 14-5-1994 முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று மத்திய அரசை கோரி ஒரு தீர்மானத்தை இந்தப் பேரவையில் நிறைவேற்றியது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பயங்கரவாத நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் தொடரும் அபாயம் இருந்து வந்ததால், இந்தத் தடை மேலும் நீட்டிக்கப்பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள இந்தத் தடை வருகின்ற 13-5-2002 அன்றோடு முடிவடைகிறது. இந்தத் தடையை வருகின்ற 14-5-2002 அன்று முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கக் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 10-4-2002 அன்று கடிதம் எழுதி உள்ளார்கள்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால், நமது நாட்டுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை நன்கு உணர்ந்த மத்திய அரசு, அண்மையில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம், அதாவது Prevention of Terrorism Act, 2002, சட்டத்தின்கீழ் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு தீவிரவாத அமைப்பாக அறிவித்து இருக்கிறது. 1967ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின்படியும், 2002 பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்படியும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ள



2002 ஏப்ரல் 16]

போதிலும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதன் ஆதரவு அமைப்புகளின் தொடர்ச்சியான பயங்கரவாத நடவடிக்கைகளின் மூலம் இந்தியாவின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் தொடர்ந்து ஆபத்து ஏற்படும் நிலைமை நீடித்து வருகிறது.

இந்தியக் குடியரசிலிருந்து தமிழ்நாட்டைப் பிரித்து விட வேண்டும் என்ற பொதுவான கொள்கை உடைய தமிழ்நாட்டுக்குள் இயங்கி வருகின்ற தமிழ்த் தீவிரவாத அமைப்புகளான தமிழ்நாடு விடுதலைப் படை TNLA (Tamil Nadu Liberation Army) மற்றும் தமிழ்நாடு மீட்புப் படை TNRT (Tamil National Retrieval Troop) என்ற அமைப்புகளுடன், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்தத் தமிழ் தீவிரவாத அமைப்புகள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரிப்பதோடு, அதனிடம் இருந்து உதவியையும் பெறுகின்றன. இவற்றின் பயங்கரவாத நடவடிக்கைகளும், அதன் விளைவாக மக்களின் உடைமைக்கும், உயிருக்கும் ஏற்பட்ட பாதிப்பும் மிகவும் அதிகமாகவும், பரவலாகவும் இருந்ததால், தமிழ்நாடு அரசு இந்த இரண்டு அமைப்புகளையும், 1908ஆம் ஆண்டு குற்றத் தடுப்பு திருத்தச் சட்டம் அதாவது, Criminal Law (Amendment) Act, 1908-ன்படி 9-11-2001 அன்று தடை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

பிரபாகரனின் அரசியல் ஆலோசகர் கடந்த 10-4-2002 அன்று செய்தியாளர்களிடம் பேசும்போது, பாரதத்தின் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டது 10 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி என்றும், அதுபற்றி வழக்கு இன்னும் நடைபெற்று வருவதால், அது முடியும்வரை கருத்து ஏதும் கூற இயலாது என்றும் தெரிவித்திருப்பது முற்றிலும் புதிராக உள்ளது. திரு. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டது பற்றிய வழக்கை விசாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றம், திரு ராஜீவ் காந்தி அவர்களின் கொலையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும் சம்பந்தப்பட்டிருப்பதை எடுத்துரைத்து இருப்பதோடு, பிரபாகரனை அந்தக் கொலை வழக்கில் அறிவிக்கப்பட்ட முதல் குற்றவாளி--First Proclaimed Offender என்ற அறிவிப்பையும் செய்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1991ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது, அப்போதைய பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்களுக்கு, ஸ்ரீலங்கா அரசோடு தொடர்பு கொண்டு, L.T.T.E. தலைவர் பிரபாகரனை ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்குக் கொண்டு வர வேண்டும் என்பதை வலியுறுத்திக் கடிதம் எழுதியுள்ளார். ஸ்ரீலங்கா அரசின் அனுமதியைப் பெற்று, நமது இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்காவிற்கு அனுப்பி, பிரபாகரனை சிறை பிடித்துக் கொண்டு வர வேண்டும். அதாவது extradite செய்ய வேண்டும் என்றுகூட அவர் பாரதப் பிரதமரைக் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவில் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட பிரபாகரன், ஸ்ரீலங்காவில் சர்வதேச பத்திரிகையாளர்கள் முன்பு பகிரங்கமாகத் தோன்றி, தனது இயக்கம் ஆயுதங்களைத் துறக்காது என்றும், தனித் தமிழ் ஈழமே தங்கள் கொள்கையாக நீடிக்கும் என்றும் அறிவித்துள்ளது பற்றி தமிழக மக்கள் மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடந்த கால வரலாற்றையும், அந்த அமைப்பினால் நமது நாட்டிற்கு ஏற்படக்கூடிய பேராபத்தையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, ஸ்ரீலங்காவில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து இந்தியா அமைதி காப்பது, பிரபாகரனை புனிதப்படுத்தும் ஸ்ரீலங்காவின் முயற்சிக்கு மறைமுகமாக ஒப்புதல் அளிப்பதாக ஆகிவிடுமோ என்று தமிழக மக்கள் கருதுகிறார்கள்.

சட்டத்தை மதிக்கின்ற, தேசப்பற்று கொண்ட இந்தியக் குடிமக்கள் யாரும் பிரபாகரன் போன்ற ஒரு கொலைக் குற்றவாளியை தேசத் தலைவராக சித்தரித்து காட்டப்படுவதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தமிழக மக்களும், மாநிலத்திலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும், பிரபாகரன் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டு, அவர் புரிந்த குற்றங்களுக்காக இந்திய நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தினையே கொண்டுள்ளார்கள்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்மீது தமிழக மக்கள் கொண்டிருந்த அனுதாபமும், ஆதரவு மனப்பான்மையும், திரு. ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்பு முற்றிலும் மாறிவிட்டது. அதிலும் அந்தக் கொடூர சம்பவத்தின் பின்னணியில் இருந்து செயல்பட்டது





தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும்தான் என்பது தெரிய வந்தபோது, தமிழக மக்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்மீதும், அதன் நடவடிக்கைகள்மீதும், ஓர் அச்சம் கலந்த வெறுப்பைக் காட்டத் துவங்கினர். தமிழக மக்களின் உணர்வை எப்போதும் பிரதிபலிக்கும் இந்தத் தமிழக அரசு, அது முதல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தனது எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது.

தற்போது ஸ்ரீலங்காவில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட சூழ்நிலையினால் அந்த நாட்டில், குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் அமைதி திரும்பும் நிலை உருவாகுமென்றால், அதில் தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் மகிழ்ச்சிதான். அந்தச் சூழ்நிலை உருவாகுமேயானால், ஸ்ரீலங்காவிலிருந்து புகலிடம் தேடி தமிழகத்திற்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான ஸ்ரீலங்கா தமிழ் அகதிகள் தங்கள் தாயகத்திற்குத் திரும்பவும், ஸ்ரீலங்காவில் உள்ள தத்தம் உறவினர்களுடன் சேர்ந்து வாழவும் வாய்ப்பு உருவாகும்.

அதே நேரத்தில், இந்தியாவின் பாதுகாப்புக்கும், ஒருமைப்பாட்டுக்கும், இறையாண்மைக்கும் குந்தகம் விளைவிக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும், இந்திய மண்ணில் காலூன்றுவது ஒருபோதும் ஏற்கப்படமாட்டாது—அனுமதிக்கப்பட மாட்டாது.

இந்த எண்ணங்களையும், உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையில், திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அறிவிக்கப்பட்ட முதல் குற்றவாளியான பிரபாகரனை இந்தியாவிற்கு கொண்டு வருவதற்கு ஸ்ரீலங்கா அரசோடு சட்டப்படியாகவும், தூதரக நடைமுறைப்படியும், அனைத்து விதமான முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், பிரபாகரனை அவர் புரிந்த குற்றங்களுக்காக இந்தியாவில் உள்ள நீதிமன்றத்தில் உரிய விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், தமிழக சட்டமன்றப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

ஸ்ரீலங்கா அரசினால் L.T.T.E. இயக்கத் தலைவர் பிரபாகரனை பிடித்து, நாடு கடத்த இயலவில்லை என்றால், ஸ்ரீலங்கா அரசின் அனுமதியோடு, இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்கா அரசின் உதவிக்கு அனுப்பி, பிரபாகரனை சிறைபிடிப்பதற்கு உரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசை தமிழக சட்டமன்றப் பேரவை கேட்டுக்கொள்கிறது."

[2002 ஏப்ரல் 16

## 4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 33 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### (ஆ) கோரிக்கை எண் 40 - ஊரக வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 33 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை எண் 33-ன்கீழ் வருவாய் கணக்கில் ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.9,24,25,16,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1237, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி, ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்கு என்று தனியாக மேலும் ஒரு குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 644, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர், ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், குடியாத்தம், ஆற்காடு,





இராணிப்பேட்டை நகராட்சிகளுக்கும் மற்றும் பல பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்கும் மாசடையாத நல்ல குடிநீர் கிடைக்க அரசு அறிவித்த ஒகேனக்கல் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2230, திரு. ஜே. ஹேமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 979, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 129, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 191, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1359, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1801, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1689, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1966, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2497, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2931, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3400, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3620, திரு. அ. இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 845, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1820, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2743, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1027, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1079, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1792, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3077, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநகராட்சி எல்லைக்குள் பிற துறைகட்குச் சொந்தமான சாலைகள் அனைத்தையும் மாநகராட்சியே செப்பனிட்டு நிர்வகிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2115 திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3687, திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1157, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2703, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சி, வேளச்சேரி, விஜயநகர் பகுதியில் உள்ள வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1532, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூர் ஒன்றியத்தில் உள்ள பனையக்குறிச்சி கீழமுல்லக்குடி வேங்கூர், அரசங்குடி, நடராஜபுரம், கிளியூர், பத்தாளப்பேட்டை, வாளவந்தான்கோட்டை, திருநெடுங்குளம் ஆகிய ஊராட்சிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்குவது பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2390, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2407, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் நகருக்கு குடிநீர் வழங்கும் வக்காரமாரி ஏரியிலுள்ள குடிநீர் சுத்தம் செய்யும் Filter பழுதடைந்துள்ளதால் குடிநீர் சுத்தம் செய்யப்படாமல் விநியோகிக்கப்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 407, திரு. கோவை தங்கம்.



**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள சோலையார் டேம், ரொட்டிக்கடை ஆகிய பகுதிகளில் குடிநீரில் மண் கலந்து களிம்புடன் வரும் குடிநீரைத் தடுத்து பொது மக்களுக்கு நல்ல குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8225, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கெங்காதபுரம் ஊராட்சி தொல்லங்கரம்பையில் மக்கள் பயன்படும் வகையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3268, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3511, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3748, திரு. ஏ.எஸ். கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1202, திரு. லா. சந்தானம்.

[2002 ஏப்ரல் 16

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடுமையான வறட்சி காரணமாக நகராட்சிப் பகுதிகளில் குறிப்பாக உசிலம்பட்டியில் நிலவி வரும் குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்குவது பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 444, செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2211, திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4482, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதி, பம்மல், அனகாபுத்தூர், உள்ளகரம், புழுதிவாக்கம் பேரூராட்சிகளில் கிருஷ்ணா நீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1928, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



2002 ஏப்ரல் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 359, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சியில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டினை நீக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3140, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1177, திரு எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெட்டுத் தீர்மானம் எண் 2149, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அருப்புக்கோட்டை நகருக்கு புதிதாக ஆய்வில் உள்ள வைகையிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

[2002 ஏப்ரல் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2620, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இணைந்துள்ள திருவாரூர் நகரத்தில் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகன், கருப்புச் சட்டையா, பாட்டாளி மக்கள் கட்சியா?

**திரு. அ. அசோகன்:** இது எப்போதும் உள்ள சட்டை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1548, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாநகராட்சிக்குள் போதிய இடங்களில் கூடுதலாக பொது குடிநீர் குழாய் அமைத்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2446, திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தியாகராயநகர் தொகுதியில் உள்ள மேற்கு மாம்பலம், தியாகராயநகர் போன்ற இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2002 ஏப்ரல் 16] [திரு. ஜெ. அன்பழகன்]

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1542, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க காவிரி படுகையில் மேலும் இரண்டு ஆழ்குழாய் விசைப் பம்புகள் (Water pumping station) அமைப்பது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2182, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகுந்த முன் நடவடிக்கை எடுத்து நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கிராமங்களுக்கு கோடையில் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1316, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. மு. பெ. சாமிநாதன்] [2002 ஏப்ரல் 16

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,24,25,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1111, திரு. சோ. இராசேந்திரன், இருக்கையில் இல்லை.

பிறபகல் 11-35

**(ஆ) கோரிக்கை எண் 40 - ஊரக வளர்ச்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 40 - ஊரக வளர்ச்சித் துறை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 40-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.38,00,71,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1244, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 1. புலியூர் நத்தம்-காட்டூர் சாலை, 2. கோடங்கிபட்டி-நால்ரோடு சாலை, 3. இடையகோட்டை-அய்யம்பாளையம் சாலை, 4. இடையகோட்டை ஊராட்சிகளில் சக்கரநாயக்கனூர் சாலை, 5. மொய்யாண்டியூர்-நாகப்பன்பட்டி செல்கின்ற சாலை, ஆகிய சாலைகளை நபார்டு வங்கியின் மூலமாகவோ அல்லது பிரதமர் சாலைகள் மேம்பாட்டு திட்டத்திலோ சேர்த்து பணி ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2002 ஏப்ரல் 16] [திரு. ஆர். சக்ரபாணி]

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 640, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க பயன்படுத்தி குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2232, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்ளாட்சி மன்றங்களில் செயல்படும் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு மாத அலவன்சுகள் நிர்ணயித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 952, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 110, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 194, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 16

வெட்டுத் தீர்மானம் எண் 901, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1378, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1815, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1671, திரு கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை

வெட்டுத் தீர்மானம் எண் 1973, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2577, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3462, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3640, திரு. அ. இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 852, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1863, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2744, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2002 ஏப்ரல் 16] [திரு. க. பாரமலை]

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1034, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மேலும் ஒரே ஒரு............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், வெட்டுத் தீர்மானத்தோடு நில்லுங்கள்.

வெட்டுத் தீர்மானம் எண் 1084, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1788, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3045, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சி மன்றங்களே ரேஷன் கடைகளை நடத்த வகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1527, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1150, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1299, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை தொகுதி, நொச்சிமலையில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4642, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2421, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணி தேர்வு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணியினை பின்னர் மாற்றுவதை தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8211, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3227, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1190, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரகப் பகுதிகளில் பல இடங்களில் நல்ல குடிநீர் இல்லாது, உப்பு நீர் கிடைப்பதால் அவற்றை கருத்தில் கொண்டு தூய குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 442, செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2064, திரு. பி.எஸ். உல்கரட்சகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4483, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதி, பொழிச்சலூர் மற்றும் கவுல் பசார் கிராமங்களுக்கு கிருஷ்ணா நீர் வழங்க பணிகள் முடிந்துள்ள நிலையில் உடனடியாக கிருஷ்ணா நீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1927, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 357, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம் ஓம் சக்தி நகரில் ஒரு சமுதாயக் கூடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2289, திரு. டிகே. இராஜா. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1178, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.



**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1390, திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைப்பம்புகளை விசைப்பம்புகளாக மாற்ற வேண்டியது குறித்தும் ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதும்" குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2617, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சி ஒன்றியங்களில் செயற்படுத்தப்படும் இலவச தொகுப்பு வீடு கட்டும் திட்டத்திற்கு கூடுதல் நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2678, திரு. எம்.ஆர்.கே பன்னீர்செல்வம்.

[2002 ஏப்ரல் 16

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குறிஞ்சிப்பாடி ஒன்றியம் கீழ்பவானிகுப்பம், கோதண்டராமபுரம், கருங்குழி ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டித்தர வேண்டியது பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1525, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கான்கிரீட் தளம், வடிகால், சாக்கடைகளின் குறுக்கில் கான்கிரீட் தளம் (சிறிய பாலம்) அமைக்க நிர்வாக அனுமதி வழங்க வேண்டியது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2185, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரக சாலைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2638, திரு. டி. சுதர்சனம்.



2002 ஏப்ரல் 16]

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் தொகுதியில் உள்ள கிராமங்களில் குடிநீர் கைப்பம்புகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,00,71,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1107, திரு. சோ. இராசேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2060, திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை, போய்விட்டாரா?

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்க குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம், திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

---

@131 முதல் 232 வரையிலான பக்கங்களில்இணைப்பு-I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

**திரு. ப. ரங்கநாதன்:** ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் பேசுகின்றார். (குறுக்கீடு)

முற்பகல் 11-40

## 3. அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி

**திரு. ராஜீவ் காந்தி கொலையில் முதல் குற்றவாளி பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைக்கவும், தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சார்ந்த எவரையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்காமல் இருக்கவும் உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுதல்—** தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ரங்கநாதன்? திரு. வைதியலிங்கம். திரு. ரங்கநாதன் ஏதோ சொல்ல விரும்புகிறார். சொல்லுங்கள்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை, அதாவது விடுதலைப் புலிகள் மீது கொண்டு வந்த அரசுத் தீர்மானத்தை நானும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வள்ளல் பெருமான் அவர்களும் ஆதரிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் கருத்து உங்கள் கருத்து இல்லையா?

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களுடைய கருத்து அவர்கள் கட்சியினுடைய கருத்து. இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், மறைந்த திரு. ராஜீவ் காந்தி அவர்கள் எங்கள் இயக்கத்தின் தலைவர். ஆகவே, அந்தத் தீர்மானத்தை நாங்கள் வரவேற்பதிலே மகிழ்ச்சி அடைகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி போடு. (சிரிப்பு) திரு. வைதியலிங்கம், பேசுங்கள்.



## 4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 33 —நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### (ஆ) கோரிக்கை எண் 40— ஊரக வளர்ச்சித் துறை — தொடர்ச்சி

***திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அளிக்கும் எந்தத் துறையைச் சேர்ந்த நலத்திட்டமாக இருந்தாலும் அதை மக்களிடம் கொண்டுபோய் சேர்க்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த, ஜனநாயகத்தினுடைய ஆணிவேராகத் திகழும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்ததற்காக தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு"

'பிறர் கூறும் கருத்துகள் காதுகளிலே கேட்கிறபோது, கசப்பானவைகளாக இருந்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு, அக்குறைகளை நீக்கும் பண்புள்ள வேந்தர்தம் ஆட்சியில் மக்கள் மகிழ்வோடு இருப்பார்கள்' என்று வள்ளுவர் பெருந்தகை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வள்ர்ச்சித் துறை மானியத்தில் அரசு பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்திருக்கின்ற இந்த நேரத்தில், சென்னை மாநகரத்தினுடைய மக்களுடைய அடிப்படை தேவைகளில் தலையாய ஒன்றாகக் கருதப்படுகிற குடிநீர்ப் பிரச்சினையில் டிசம்பர் மாதம் 2001-ல் நாள்தோறும் வழங்கப்பட்ட 140 மில்லியன் லிட்டர் குடிநீரின் அளவை 12-1-2002-லிருந்து, 220 மில்லியன் லிட்டர் அளவுக்கு படிப்படியாக அதிகப்படுத்தப்பட்டது என்று பக்கம் 76-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அளவு எப்படி உயர்த்தப்பட்டது என்று பார்க்கிறபோது, கண்டலேறுவிலிருந்து பூண்டிக்கு வரும் தண்ணீர் வரத்தைப் பற்றி 18-2-2001, 6-2-2002 மற்றும் 22-2-2002 ஆகிய தேதிகளில் நம்முடைய மாநில அரசினுடைய அதிகாரிகளும், அதைப்போல் ' ஆந்திரப் பிரதேச அதிகாரிகளுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தையின்போது ஏற்பட்ட முக்கியத் தீர்மானத்தின்படி கே.பி. கால்வாயில் ஏற்பட்டிருந்த உடைப்பை சரிபார்க்கும் பணி முடிக்கப்பட்டு 27-2-2002-ல் தண்ணீர் திறந்துவிடப்பட்டு, அது 7-3-2000-ல் தமிழகத்திலுள்ள பூஜ்ஜியம் முனைக்கு வந்து சேர்ந்து 8-3-2002-ல்

அத்தண்ணீர் பூண்டி ஏரியை வந்தடைந்தது. அதனால் ஏரியினுடைய தண்ணீர் அளவு உயர்ந்தது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நான் இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், கிருஷ்ணா நதிநீர் வரவேயில்லை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பொய் சொன்னார்கள் என்று கூறியது போய், கால்வாயே வெட்டவில்லை, உண்மைக்கு மாறான கருத்தைச் சொல்கிறார்கள் என்று சொன்னது போய், கால்வாய் வெட்டாமலேயே இன்றைக்கு கண்டலேறுவிலிருந்து கிருஷ்ணா நீர் வந்தது. Hindu பத்திரிகையில் "Krishna Water from Kandaleru" என்று எழுதினார்கள். கண்டலேறுவிலிருந்து தண்ணீர் பூண்டிக்கு வந்தது. பூஜ்ஜியம் பாயிண்டுக்கு வந்தது. பிறகு பூண்டி ஏரிக்கு வந்தது என்று சொல்லுகிறபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எங்கள் தலைவர் கொண்டு வந்தார்கள் என்று ஒப்புக்கொண்டதற்காக நான் உள்ளபடியே நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் 1-ல் 2001-2002-ல் அரசாணை எண் 105 நகராட்சி நிருவாகம் நாள் 9-8-2001-ல் வீராணம் ஏரியிலிருந்து நீரை எடுத்து சுத்திகரித்து, குழாய் மூலம் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீரை சென்னை நகருக்குக் கொண்டுவர ரூபாய் 720 கோடி திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. வீராணம் ஏரி என்பது காவிரியை நம்பி இருக்கிற ஏரி என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. காவிரி நீர் பொய்த்துவிடுமேயானால், காவிரியிலே தண்ணீர் வரவில்லையானால், வீராணம் ஏரிக்கு தண்ணீர் வருவதற்கு வாய்ப்பு இல்லை. அப்படி வருகிற ஓரளவு தண்ணீர்கூட, அங்கு இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு போதுமானதாக இருக்காது என்கிறபோது, இவ்வளவு பெரிய தொகையை அதிலே செலவழிக்க வேண்டுமா என்பதை அரசு எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அதைப்போலவே, சென்னைக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்-2-ல் புறநகரிலே உள்ள நீராதாரத்தைக் கண்டுபிடித்து, திருக்கண்டலம், ஜமீன் கொரட்டூர், திருநீர்மலை மற்றும் பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளில் நான்கு புதிய நீர்த்தேக்கங்கள் அமைப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இது பாராட்டத்தக்கது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி காலத்திலே, தலைவர் கலைஞர் அவர்கள்,



இன்றைய உறுப்பினராக இருக்கிற அன்றைய பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள், திருநீர்மலைப் பகுதியிலே, அடையாற்றிலே வந்து ஆய்வு செய்து, அதைப்போலவே பள்ளிக்கரணைப் பகுதியிலே ஆய்வு செய்து, அங்கே அணைகள் கட்ட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆய்வுகள்கூட முடிக்கப்பட்டு, ஒரு புத்தகம்கூட பொதுப்பணித் துறையால் வெளியிடப்பட்டது. அதை மீண்டும் எடுத்துக் கொண்டதற்காக நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

அதைப்போலவே, கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தில், புறநகர்ப் பகுதிகளான மீனம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர், உள்ளகரம், புழுதிவாக்கம் போன்ற பேரூராட்சிகள், பொழிச்சலூர், கவுல்பஜார் போன்ற ஊராட்சிகள், சேர்த்துக்கொள்ளப்பட்டு, அதற்காக சற்றொப்ப 9 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டு, அதற்குரிய தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், நீர்த்தேக்கத் தொட்டிகள், குழாய் அமைப்புகள் எல்லாம் முடிக்கப்பட்டு, வறட்சியின் காரணமாக தண்ணீர் வராமல் இருந்தது. அந்தக் குறிப்பிட்ட பேரூராட்சிகள், ஊராட்சிகள் போன்றவை வறட்சி காலத்திலே மட்டுமல்ல, இயற்கை பொய்க்காமல், வளமாக மழை பெய்தால்கூட, நிலத்தடி நீரைப் பயன்படுத்த முடியாத மிக அவலமான நிலையிலே இருக்கிற கிராமங்கள். அங்கு இருக்கிற தோல் பதனிடும் தொழிற்சாலைகளினுடைய விளைவாக, 50 ஆண்டு காலமாக நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு, அதற்காகத்தான் அரசு அந்த கோரிக்கையை எடுத்துக்கொண்டு, கிருஷ்ணா நதிநீர் தருவதாக ஒப்புக்கொண்டு, பணிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி, இந்த மானியத்திலே எதுவும் கூறப்படவில்லை. அது ஏன் என்பதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், கல்வியிலே எந்த அளவுக்கு முன்னேற்றம் என்பதைப்பற்றி அன்றைக்குப் பேசுகிறபோது, மாநகராட்சிக் கல்விக் கூடங்களில், மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்திருப்பதாக, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். நான் சில புள்ளிவிவரங்களை அறிந்தேன். 1996-97-இல் பள்ளிகளினுடைய எண்ணிக்கை 329. 2000-2001-இல் அந்த எண்ணிக்கை 354 ஆக உயர்ந்தது. 25 பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டன. 1996-97-இல் மாணவர்களுடைய எண்ணிக்கை 1,29,500 என்றிருந்தது. 2000-2001-இல் அந்த எண்ணிக்கை 1,47,447 ஆக உயர்ந்தது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப்போலவே, 1996-க்குப் பிறகு, புதிய தொடக்கப் பள்ளிகள் 8

தொடங்கப்பட்டன. தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக 12 தரம் உயர்த்தப்பட்டன. நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக 22 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டன. அதைப்போலவே, உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக 6 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டன. 1996-க்குப் பிறகு, ஆசிரியர்கள் நியமனத்தைப் பார்த்தால், இடைநிலை ஆசிரியர்கள் 1,767 பேர் அமர்த்தப்பட்டார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் 80 பேர் மாநகராட்சியால் அமர்த்தப்பட்டார்கள். முதுநிலைப் பட்டதாரிகள் 60 பேர் மாநகராட்சியால் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதைப்போல், தேர்ச்சி விகிதத்தைப் பார்த்தால், 1996-லே 55 விழுக்காடாக இருந்த தேர்ச்சி விகிதம், 2001-லே 70 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. அதேபோல், கணிப்பொறி கல்விக்கு 500 கணிப்பொறிகள், L.C.D Projectors இவை அளிக்கப்பட்டு, இந்தியாவில் எங்கும் இல்லாத புதுமைத் திட்டமாக சமுதாயக் கல்லூரி, தொழில் பயிற்சி மையம் I.T.I. தொடங்கப்பட்டு, 4 வளாகங்களில் 600 மாணவர்கள் பயிற்சி பெற்று, அவர்களிலே 200 பேர் தனியார் நிறுவனங்களிலே பணியமர்த்தப்பட்டு விட்டார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல், மாநகராட்சிகளிலே வருமுன் காப்போம் திட்டம் பகுப்பாய்வு மையங்கள் அமைக்கப்பட்டு, மருத்துவப் பரிசோதனை, வாழ்வொளித் திட்டம், அதேபோன்று கண் பரிசோதனை திட்டம் என்ற பல்வேறு திட்டங்கள் மாநகராட்சியால் கொண்டு வரப்பட்டு, இலட்சக்கணக்கான மக்கள் பயன்பெற்றார்கள்.

அதைப்போலவே, சென்னையினுடைய போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக 10 மேம்பாலங்களில் 9 மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய மதிப்பீடு 94.50 கோடி ரூபாய். ஆனால், கட்டி முடித்ததற்குப் பின்னாலே, அதற்கான செலவு 60.78 கோடி ரூபாய்தான் என்பதையும், அதிலே கிட்டத்தட்ட 34 கோடி ரூபாய் மாநகராட்சிக்கு மீதப்படுத்தப்பட்டது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெரம்பூர் 10-வது பாலம்கூட 21 கோடி ரூபாய் மதிப்பீடு என்று சொன்னாலும், மத்திய அரசு நிறுவனம், National Building Construction அதற்கு tender எடுத்திருக்கிறார்கள். மூன்று முறை I.T.I. ஆய்வு அறிக்கையை மாற்றி மாற்றி அளித்த காரணத்தினால், கூடுதலாக 13.84 கோடி ரூபாய் அதிகமாகி, அது இன்றைக்கு 84.84 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு, அரசு ஒப்புதலும் பெறப்பட்டிருக்கிறது.



முற்பகல் 11-50

அடுத்து இந்த நிதிநிலை அறிக்கையில், இந்த மானியத்திலே சுட்டிக்காட்டுகிறபோது, தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக நடைபெற்றிருக்கிற பணிகளைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இந்தியாவிலே தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் நடைபெறுகிற பணிகள் 3300 கோடி ரூபாய்க்கு நடைபெறுகின்றன; அதிலே தமிழ்நாட்டில் மட்டும் 1093 கோடி ரூபாய்களுக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தியாவிலே நடைபெறுகிற பணிகளிலே மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாட்டிலே மட்டும் நடைபெறுகிறது என்று பார்க்கிறபோது, இந்தத் திட்டம் 1995 ஆம் ஆண்டு ஜூலையில் அன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது, அமைச்சர் இருந்தபோது வாங்கியது ஈரோடு, பவானி, குமாரபாளையம், பள்ளிப்பட்டு இவைகளைச் சேர்த்து சற்றொப்ப 35 கோடி ரூபாய்க்கு அனுமதியைப் பெற்றார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர்கள் அங்கே அங்கம் வகிக்க ஆரம்பித்ததற்குப் பின்னால்தான், திராவிட முன்னேற்றக் கழகம்—அதுவும் குறிப்பாக மத்திய அரசிலே ஓர் அனுமதியைப் பெற வேண்டுமென்றால், எந்த அளவிற்கு அதிலே கடினம் இருக்கும் என்பதை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அறிவார்கள்; அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகள் அறிவார்கள்; 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டம் இணைக்கப்படவே இல்லை; 9-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே இணைக்கப்படாத ஒரு திட்டத்தை கடைசி நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அமைச்சர் மாண்புமிகு டி.ஆர். பாலு அவர்கள் அமைச்சரவைக்குக் கொண்டு சென்று ரூ. 1093 கோடிக்கு அனுமதி வாங்கியது மட்டுமல்ல, இந்தியாவிலே பல நகரங்களிலே இந்தப் பணிகள் நடைபெற்றாலும்கூட, எந்த நகரத்திலும் சென்னை நகருக்குக் கொடுத்ததைப்போல 491.52 கோடி ரூபாய்க்கான அனுமதியை தந்து இருக்கிறார்களா என்றால், இல்லை என்கிற உண்மை நன்றாக புரியும்; ஆகவே சென்னைக்கு வழங்கி இருக்கிற அந்த ரூ. 491.52 கோடியும் மானியமாக மத்திய அரசு வழங்கி இருக்கிறது. இதுவரை இந்திய வரலாற்றில் ஒரு திட்டத்திற்காக மட்டும் தனியாக ஒரு நகருக்கு 491.52 கோடி வழங்கியதாக வரலாறு இருக்காது. அதற்காக மாண்புமிகு மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை கேட்டால், அவர்கள் சென்னையிலே மட்டும் 7 முறை ஆய்வுக்

கூட்டம் நடத்தி இருப்பார்கள். இந்தியாவிலே பல நகரங்களிலே நடப்பதைப்போல, தமிழ்நாட்டிலே நடைபெறவேண்டும் என்பதற்காக, நம்முடைய சென்னையிலே இருக்கிற அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி கால்வாய், கிரேட் காட்டன் கால்வாய், வீராங்கல் ஓடை என்று இப்படி பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டதன் நோக்கமே—மாநகராட்சியின் வரலாறு எழுதப்பட்டபோது, ஒரு காலத்தில் பச்சையப்பன் முதலியார் கூவம் ஆற்றிலே சித்ரா தியேட்டருக்கு எதிரிலே போய் குளித்துவிட்டு கோயிலுக்கு பூஜை செய்ய போவார் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த நிலைக்கு சென்னை மீண்டும் வரவேண்டும், சென்னை மாநகர மக்கள் கொசுத் தொல்லையிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும்; சுகாதாரமாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் அந்தப் பகுதியிலே இருக்கிற கூவம் ஆற்றிலே வந்து சேருகிற கழிவு நீர் கால்வாயை தடுத்து அதை வேறு வழியாக கொண்டுசென்று, அதைச் சுத்திகரித்து தொழிற்சாலைகளுக்கு அல்லது வேளாண்மைக்கு பயன்படுத்துகிற அந்தத் திட்டத்தை செய்வதன் மூலமாக அந்த நதி சுத்தப்படுத்தப்படுவதோடு, அதிலே சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்தால், அரசுக்கும் வருமானம் வரும் என்கிற நோக்கத்தோடுதான் (மணியடிக்கப்பெற்றது) அந்தத் திட்டம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித்துளிகளில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை. இன்னும் 5 நிமிடம்கூட பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 15 மணித்துளிகள் ஆகியிருக்கிறது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இது முக்கியமான மானியம்; 2 நாட்கள் நடைபெறப் போகிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11-40-க்கு ஆரம்பித்து இருக்கிறீர்கள்; 2 மணித்துளியில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** என்ன 13 நிமிடம் என்று சொல்கிறீர்கள்? இன்னும் 3 நிமிடம் கூட பேசவில்லை நான்; தயவு பண்ணி இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள்; நான் பேசி முடித்துவிடுகிறேன்.



தமிழ்நாட்டிலேயே பல்வேறு நகரங்களில், மதுரையிலே, கும்பகோணத்திலே, தஞ்சையிலே, நெல்லையிலே, மாயவரத்திலே, கரூரிலே, ஸ்ரீரங்கம்-திருச்சியிலே நதிகளை எல்லாம் சுத்தப்படுத்துவதற்காக, ஊட்டி, கொடைக்கானல் ஏரிகளைத் தூர் வாருவதற்காக மத்திய அரசிலே இருந்து தொகை பெற்றுத்தரப்பட்டது என்று சொன்னால், அதற்காக மாண்புமிகு அமைச்சர் டி.ஆர். பாலு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி மிக சாதாரண முயற்சி அல்ல; 10 முறை அந்த இடங்களுக்கு அவர் நேரடியாகவே போய் அதிகாரிகளோடு, அங்கு இருக்கிற உள்ளாட்சி மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களோடு பேசி, தலைவரோடு பேசி, பொதுமக்களோடு பேசி, அவர்களுடைய பங்கு, மாநில அரசினுடைய பங்கு 50 சதவீதம் என்றும், மத்திய அரசின் பங்கு 50 சதவீதம் என்றும் அதைக் கொண்டுவந்தார்கள் என்பதை நாம் இந்த நேரத்திலே மறந்துவிடக்கூடாது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மிக முக்கியமான திட்டம். அந்தத் திட்டத்தை பெயர் மாற்றி, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று கொண்டு வந்து, ஒரு தொகுதிக்கு ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் செய்து கொண்டிருந்த பணிக்குப் பதிலாக, ஒரு ஒன்றியத்திலே ஒரு கிராமத்தை எடுத்து, அங்கு கிடைக்கிற பொருட்களை வைத்து, வேளாண் சார்ந்த தொழில்வளம் பெருக்குவதற்காக நாங்கள் தொழிற்சாலைகளை உருவாக்கப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். உள்ளபடியே கிராமப் பகுதி மக்களுக்கு தொழிற்சாலைகளிலே வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தால்—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் நம்முடைய நீதியரசர் திரு. ரத்னவேல் பாண்டியன் அவர்களை தென் மாநிலங்களிலே இருக்கிற ஏழை எளிய மக்கள், விவசாய மக்கள் ஏன் அடிக்கடி கலவரங்களுக்கு ஆளாகிறார்கள் என்பதை ஆராயச் செய்து, அவர்கள் அளித்த ஆலோசனையின்படி 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று ஒரு திட்டத்தினைக் கொண்டுவந்தார்கள்.

பத்தாயிரம் ஏக்கர் நிலத்திலே வரியில்லாத வணிக வளாகம் அமைக்க வேண்டுமென்று கொண்டு வந்து அதிலே மூவாயிரம் ஏக்கர் நிலம் ஆர்ஜிதப்படுத்தப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள ஏழு ஆயிரம் ஏக்கர் நிலத்தை எப்போது ஆர்ஜிதப்படுத்தப் போகிறீர்கள்? அதற்காக இந்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? அதைச்செய்தால்

இலட்சக்கணக்கான கிராம மக்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள். அதுமட்டுமல்ல, அதனுடைய விளைவாக அதனைச் சுற்றியிருக்கிற கிராமங்களிலே இருக்கிற மக்கள் பயன்பெறுவதன் மூலமாக உள்ளாட்சி மன்றங்களுக்கு நல்ல வருவாய் கிடைக்கிற வாய்ப்பும் இருக்கும். அதை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் பேசுகிறபோது சொன்னார்கள். நிதியாதாரம் இல்லை, மூவாயிரம் கோடி ரூபாய் நிதி வேண்டும்; திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் மைய அரசிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; நீங்கள் நம்முடைய ஆந்திர முதல்வரைப்போல பதவியைப் பார்க்காமல் போராடி பெற்றுத்தர வேண்டுமென்று சொன்னார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம் எந்தத் தலைப்பிலே தமிழ்நாடு அரசு மூவாயிரம் கோடி கேட்டிருக்கிறது? எந்த நலத் திட்டத்திற்கு குறைவாக இருக்கிறது என்று எந்தத் துறையிலே கேட்டிருக்கிறீர்கள்? அதற்காக மத்திய அமைச்சர்களை மாண்புமிகு அமைச்சர்கள் அணுக வேண்டாம். உங்களுடைய சிறப்புத் தூதர் அணுகியிருக்கிறாரா, கேட்டிருக்கிறாரா? ஒன்றுமில்லாமல் வெறுமனே மூவாயிரம் கோடி ரூபாய் நிதி வேண்டுமென்று கேட்டால், எந்தத் தலைப்பிலே எதற்காக கேட்டிருக்கிறார்கள், அதனால் எந்தத் திட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது, நிதியாதாரம் இல்லையென்று சுட்டிக்காட்ட வேண்டாமா என்பதோடு, அப்படி நீங்கள் சுட்டிக்காட்டி, உங்கள் சிறப்புத் தூதர் போய் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர்களைப் பார்ப்பாரேயானால், அதைப் பெறுவதற்குரிய வாய்ப்புகள் இருக்கும் என்பதையும், அதைவிட்டு இங்கே பேசிக்கொண்டு இருப்பதாலே என்றும் கிடைக்காது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரே ஒரு நிமிஷம். 500-க்குமேல் மக்கள் தொகை கொண்ட எல்லா குடியிருப்புகளுக்கும் எல்லா பருவகாலங்களுக்கும் ஏற்ற சாலை 2004-க்குள் போட இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது என்ன எல்லாப் பருவத்திற்கும் ஏற்ற சாலை? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அமைத்த கான்கிரீட் சாலை என்று சொல்வதற்குப் பதிலாக, எல்லா பருவ காலத்திற்கும் ஏற்ற சாலையென்று சொன்னால், வேறெந்த சாலை எல்லா பருவ காலத்திற்கும் ஏற்றதாக இருக்கும்? இருக்க முடியாது.



எனவேதான் அது கான்கிரீட் சாலையாகத்தான் இருக்கமுடியும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது அடுக்கடுக்காக புள்ளிவிவரங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். அதெல்லாம் திருப்புவதாக இருக்கிறது; சரியான முறை கிடையாது. உதாரணத்துக்கு சொன்னால், சாலையைப் பற்றிப் பேசுகிறார். இப்போது எந்தச் சாலையைப்பற்றி பேசுகிறார் அவர்? தி.மு.க. ஆட்சியிலே போடப்பட்டுள்ள இந்த கான்கிரீட் சாலையைப் பார்த்தால், கான்கிரீட் சாலையில் ஜெல்லிதான் இருக்கிறது. எல்லாம் பெயர்ந்துபோய் இருக்கிறது. அப்படித்தான் மிக்ஸ் பண்ணியிருக்கிறார்கள். இந்த மாதிரி சாலை வேண்டாம். இது நீங்கள் நினைக்கிறதுபோல நீங்கள் எல்லா பருவத்திற்கும் ஏற்ற சாலை அமைத்துவிட்டது போலவும், நாங்கள் சொல்வது ஏதோ புது சாலை, புதுத் திட்டம் என்பதல்ல நீங்கள் போட்ட சாலை ஏதோ உதவாத சாலை; ஆகவே உதவுகின்ற நல்ல சாலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிடம் ஏதோ பணம் கேட்டதாகச் சொன்னார். மத்திய அரசிடம் கேட்பது என்பது--இவர்கள் ஆட்சிக் காலத்திலே பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது, ஆங்காங்கே பல பிரச்சினைகளை உருவாக்கிச் செய்திருக்கிறார்கள். ஆகவே கடன் சுமை அதிகம் இருக்கிறது. அவற்றை சீர் செய்ய வேண்டுமென்றால், மத்திய அரசு உதவி தேவைப்படுகிறது. எந்த ஹெட்டிலே கேட்டால் என்ன? இப்படித்தான் திட்டத்திலே கேட்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. ஆகவே கடன் நிவாரணம் இருக்கிறது, அந்தக் கடனை, நாட்டின் வளர்ச்சிக்காக நாங்கள் கேட்டிருக்கிறோம். ஆகவே, திட்டங்களை வைத்துக்கொண்டுதான் இருக்கிறோம் - ஒன்று.

அடுத்ததாக, மத்திய அரசினுடைய திட்டங்கள். இவர்கள் இருக்கும்போது பல்வேறு மானியங்கள் கிடைத்தன. அண்ணா தி.மு.க. ஆட்சியிலே என்ன செய்தார்கள் என்று கேட்டார்கள். நான் மத்திய அமைச்சராக இருக்கும்போது 1,200 கிலோ மீட்டர் சாலைக்கு நீங்கள் ஆட்சியிலே இருக்கும்போது வாங்கிக் கொடுத்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு நான் பூந்தமல்லி சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்காக 70 கோடி ரூபாய் அப்போது ஒதுக்கிக் கொடுத்தேன். இதுவரை நீங்கள் ஏதாவது ஐந்து வருட ஆட்சியிலே செய்தீர்களா

பூந்தமல்லி ரோடிலே? கார்ப்பரேஷன் பற்றித்தானே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? அம்பேத்கர் சிலையிலிருந்து பூந்தமல்லி சாலை விரிவாக்கப்படுவதற்கு, எப்படி, இப்போது திருச்சி சாலை இங்கே அமைந்திருக்கிறதோ அதைப்போல பெங்களூருக்குச் செல்கிற சாலை நன்றாக இருக்க வேண்டுமென்று 70 கோடி ரூபாய் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. மத்தியிலே இருக்கும்போது தி.மு.க. ஆட்சி இங்கே செயல்படுத்துவதற்காக பணத்தை ஒதுக்கிக் கொடுத்தோம். ஒன்றும் வேலை செய்யவில்லை. இரண்டு குடிசைகளைத் தட்டுகிற மாதிரி தட்டினார்கள். அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பணத்தைப் பயன்படுத்தவில்லை. இவர் ஏதோ டி.ஆர். பாலு வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார், மற்றவர்கள் எல்லாம், நாங்கள் எல்லாம் ஒன்றும் செய்யவில்லை என்கிற மாதிரியும் பேசுகிறார். டி.ஆர். பாலு ஏன் பணம் வாங்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்? சைதாப்பேட்டையில் பார்த்தீர்களானால், பெரிய போர்டு எழுதி வைத்திருக்கிறார் பஸ் ஸ்டாண்டிலே. (மேசையைத் தட்டும் ஒலி) M.P. Fund என்று சொல்லிவிட்டு போர்டும் இருக்கிறது. அங்கே பஸ் நிற்பதற்கு இல்லை என்பது ஒரு பக்கம் இருந்தாலும்—இவர்கள் விளம்பரம்தான் பெரிதாக இருக்கிறது; அங்கே ஒன்றும் கிடையாது. ஆகவே, அந்தப் பணத்திலேகூட, டி.ஆர். பாலுவோடு நிறுத்திக்கொள்ளவில்லை; அவரோடு சேர்ந்த, கட்சியிலுள்ள அத்தனை பேர் பெயரையும் எழுதி வைத்துக்கொண்டார்கள். இவர்கள் எல்லாம் ஏதோ பணம் கொடுத்த மாதிரியும், அது இருக்கிற மாதிரியும். ஏனென்றால் தேர்தல் வேறே வருகிறது இல்லையா? அதில் நிற்பதற்கு இவர் செய்யவேண்டியது இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம் முடிக்கட்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. பரிதி, உட்காருங்கள். வைதியலிங்கம் பதில் சொல்வார்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு கல்வியமைச்சர் எதற்காக இவ்வளவு எரிச்சல்படுகிறார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய பலவீனத்தை அது காட்டுகிறது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் நான் தேசிய நதிநீர்த் திட்டத்தில் உங்கள் ஆட்சியிலே வாங்கியதைத்தான் சுட்டிக்காட்டினேன். பேரவைத் தலைவர் அவகாசம் தருவதாக இருந்தால் நீங்கள் சொல்லிய அனைத்துக்கும் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நான்



எல்லாம் தெரிந்தவன் இல்லை. ஆனால் தெரிந்ததிலே தெளிவு வேண்டும் என்று விரும்புபவன். மாண்புமிகு அமைச்சர் முடிந்தால், டி.ஆர். பாலு வாங்கிக் கொடுத்ததை இல்லை என்று மறுக்க முடியுமா என்று நான் இங்கே ஆணித்தரமாகக் கேட்க விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

அந்தத் தலைப்பின்கீழ், தேசிய நதிநீர்த் திட்டத்தின்கீழ் மாண்புமிகு அமைச்சர் டி.ஆர். பாலு பெற்றுக் கொடுத்ததை இல்லை என்று அமைச்சர் மறுக்கிறாரா? ஏன் அவர் உணர்ச்சிவசப்படுகிறார்? என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால் நான் சாதாரணமாகத்தான் பேசினேன். திட்டங்களைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஊராட்சி மகளிர் தலைவர்கள், நமது உள்ளாட்சியிலே மகளிர்களுக்கு 30 சதவிகிதம் இடம் வழங்கியிருக்கிறோம், 37 சதவிகிதத்திலே. அந்த மகளிர்கள் கோரிக்கைகளை நிரம்ப வைக்கிறார்கள். அந்தத் தலைவர்கள் கிராமப் பகுதியிலே இருக்கிற கனிம வளங்களை நிர்வகிக்கும் உரிமை வேண்டும் என்று கேட்கிறார்கள். அதன்மூலம் வரும் வருவாய் கருவூலங்களுக்குச் செல்லாமல் நேராக ஊராட்சியினுடைய கணக்கிலே வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அரசு எடுக்கும் எந்த முடிவினையும் பெண் தலைவர்களைக் கலந்து ஆலோசித்துச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், உரையை முடித்துவிடுங்கள். 20 மணித்துளிகளுக்கு மேல் ஆகிவிட்டது. (குறுக்கீடு) முடித்துவிடுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** ஜாதிச் சான்றிதழ், வருவாய்ச் சான்றிதழ் அளிக்கும் உரிமை தங்களுக்கு வேண்டும் என்று கோருகிறார்கள். சுகாதாரம், கல்வி, சொத்து உரிமை, பொது விநியோகம் போன்றவை தங்கள் கட்டுப்பாட்டில் வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். குறிப்பாக காவல் துறையிலே பெண்கள் சென்றால் மதிப்பதே இல்லை என்ற நிலை இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர்கள், பெண் தலைவர்கள் சென்றால் மதிப்பது இல்லை என்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் அரசு உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டு நிதியிலே 12 இலட்சம் ரூபாய் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு....(மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே. உமாதேவன்.

***திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல் பாரி மன்னன் ஆண்ட மண், கவியரசர் கண்ணதாசன் பிறந்த மண், இத்தனைப் புகழ் வாய்ந்த திருப்பத்தூர் தொகுதியில் கொடி பிடித்து கூத்தக்குடி என்ற குக்கிராமத்தில் கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய என்னை மாவட்ட கழக இணைச் செயலாளராக, மாவட்ட கழக அவைத் தலைவராக, மாவட்ட கழகச் செயலாளராக அறிவித்து, இன்றைக்கு நான் கோட்டையிலே இருக்கிறேன் என்று சொன்னால்--2001-ல் புரட்சித் தலைவி அவர்கள் என்னை வேட்பாளராக அறிவித்து, கோட்டையிலே அமரவைத்து இன்றைக்கு அழகு பார்த்துக் கொண்டிருக்கிறார். என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய, பாரதியின் புதுமைப்பெண், பாவேந்தரின் புரட்சிப் பெண் என் அன்னை, எங்கள் அன்னை, வேதா நிலையத்தின் மாதா, சமூகநீதி காத்த வீராங்கனை, அரசியல் என்னும் நெருப்பாற்றில் நீந்தி எழுந்து, அழிக்க நினைத்த தீயசக்திகளை சுட்டெரித்து, சாம்பலாக்கி மீண்டும் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று, நூற்றுக்கணக்கான சாதனைகளைப் படைத்துவரும், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி என் கன்னிப்பேச்சினைத் தொடங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முந்தைய தி.மு.க. ஆட்சியாளர்கள் சூழ்ச்சியால், தேர்தலில் நிற்கவிடாமல் தடை செய்த நேரத்தில், அன்றைக்கு 24-4-2001-ல் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தலில் நின்றுவிடாமல் தடை செய்த நேரத்தில் கம்பீரமாக வேனைவிட்டு இறங்கி திறந்த ஜீப்பிலே நின்று நான் வெற்றிபெற வைத்திட்ட தாயை, எங்களையெல்லாம் வெற்றிபெற வைத்திட்ட தாயை வணங்குகிறேன். சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு, பண பலம், படை பலம் எல்லாவற்றிற்கும் மேலாக அம்மா அவர்களின் ஆட்சி மலர வேண்டும் என்பதற்காக, எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்து, இம்மாமன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்த திருப்பத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கல் பற்றிய



மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தந்த அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை தந்த மாண்புமிகு முதல்வர் வேலுநாச்சியாரின் மறுபிறப்பு எங்கள் அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி, என்னுடைய இந்தக் கருத்துகளை இப்பேரவைமுன் வைக்க விழைகிறேன்.

கிராம இராஜ்யம் இராம இராஜ்யம் என்றார் அண்ணல் காந்தி அவர்கள். கிராமங்களின் முன்னேற்றம் நாட்டின் வளர்ச்சி என்பதை அடிப்படையாகக் கொண்டு கிராமப்புற மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதை இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் உணர முடிகிறது.

விவசாயிகள் இந்நாட்டின் முதுகெலும்பு. விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான் நாட்டில் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்கிற வகையில் விவசாயப் பயிர்களை நமபி வாழும் விவசாயிகள் கதிரடிக்கும் இடவசதியின்மையால் அறுவடைக் காலங்களில் ஏற்படும் சிரமங்களை உணர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள் கதிரடிக்கும் களம் அனைத்து ஊராட்சிகளுக்கும் அமைத்திட 39 கோடியே 50 இலட்சம் ரூபாயை அனுமதித்துள்ளது விவசாயிகளின் வாழ்வில் ஒரு வசந்தத்தை ஏற்படுத்தும் திட்டமாகும். குடிநீர், கால்நடை மற்றும் விவசாயத் தேவைகளுக்கு கிராமப்புறக் குளங்களில் நீர் ஆதாரத்தை பெருக்கும் வகையில் பல ஆண்டுகளாக மராமத்து செய்யாமல் தூர்ந்துபோய் கிடந்த குளங்களைச் சீரமைக்க, ஒரு ஊராட்சிக்கு ஒரு குளம் என்ற அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரூ.63.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இருப்பது கிராமப்புற விவசாயப் பெருமக்களுக்கு வரப்பிரசாதமான திட்டமாகும்.

பிற்பகல் 12-05

பெண்களின் பொருளாதார, சமூக மேம்பாட்டு நிலைகளை உயர்த்த 30,000 பெண்களுக்கு ரூ.155 இலட்சம் மதிப்பீட்டில் பெண்கள் சுய உதவி குழுக்களுக்கான தொழில் முனைவோர் பயிற்சித் திட்டமும், மற்றும் ஒவ்வொரு ஊராட்சியிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் கட்டிட ரூ.47 கோடியே 32 இலட்சத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டமும் மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சிய வேட்கையின் வெளிப்பாடு என்பதை இத்திட்டத்தின் மூலம்

பயன்பெறும் மகளிர் மட்டுமல்லாமல், நாடே "பெண் குலத்தின் பொன் விளக்கு" என மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கும், வணிகர்களுக்கும் இடையே, இடைத்தரகர்களின் குறுக்கீடு ஏதுமில்லாமல் ஒரு சுமூகமான சூழ்நிலையை உருவாக்கவும், ஏற்கெனவே இருந்த தி.மு.க. அரசு சீர்குலைத்துவிட்டுப்போன உள்ளாட்சி அமைப்புகளின் வருமான இலக்கை சரிசெய்து வருமானத்தைப் பெருக்கவும், கிராமப்புற மக்கள் விளைபொருட்களை விற்பதை எளிதாக்கவும் ரூ.19 கோடியே 84 இலட்சம் மதிப்பீட்டில் துவக்கப்பட்டுள்ள "கிராமச் சந்தை மேம்பாட்டுத் திட்டம்" ஊரக வளர்ச்சித் துறையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ளது என்பதைத் தெளிவாக்கும் திட்டமாகும்.

சமுதாயத்தில் நலிவுற்ற பெண்கள், குழந்தைகள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களை கிராமப்புறங்களில் கட்ட ரூ. 110 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், இத்திட்டத்தை விரிவாக்கும் பொருட்டு பேரூராட்சிகளிலும் 720 கழிப்பறைகள் கட்டிட ரூபாய் 18 கோடியே 72 இலட்சம் ஒதுக்கீடு செய்திருப்பது மகளிர் நலனிலும், குழந்தைகளின் நலனிலும் அக்கறை கொண்டுள்ளதை படம் பிடித்து காட்டுகிறது.

'நீரின்றி அமையாது உலகு' என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். ஒரு மாநிலத்தின் நீர்வளம்தான் அம்மாநிலத்தின் செழுமையையும், உயர்வையும் வெளிப்படுத்தும். மக்களின் அன்றாட குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க மாண்புமிகு அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதைத் தொடர்ந்து பார்த்து வருகிறோம். சென்னை நகரைச் சிங்காரச் சென்னை ஆக்குவதாகச் சொல்லி சீரழித்து, கிருஷ்ணா நதிநீர் வழங்குவதைப்போல நாடகமாடி, சென்னை நகர் மக்களை முந்தைய தி.மு.க. அரசு ஏமாற்றியதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால், சென்னை மக்கள் குடிநீருக்காக அல்லல்பட்ட நேரத்தில் நெய்வேலி, மேட்டூர், ஈரோடு போன்ற பகுதிகளிலிருந்து லாரிகள் மூலம் குடிநீர் கொண்டுவந்து போர்க்கால அடிப்படையில் சென்னை மாநகர் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கி, சென்னை மாநகர மக்களைக் காக்கும் கருணை தெய்வமாக மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள்.



கிராமப்புற மக்களுக்கு கைப்பம்பு மூலம், நீர் இறைப்பதில் ஏற்படும் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு, சிறு மின்விசைத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த ஆண்டும் தொடர்ந்து 10,000 மின் இறைப்பான்களை உருவாக்கிட திட்டமிட்டு, ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்து, இவற்றில் 4,000 மின் இறைப்பான்களை ஆதிதிராவிட குடியிருப்புகளில் உள்ள அடி குழாய்களுக்கு செயல்படுத்திட திட்டமிட்டிருப்பது கிராமப்புற மகளிர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை களைந்திடும் அற்புத செயல் திட்டமாகும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதிக்குழு வழங்கும் மானியத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒவ்வொரு மாதமும் வழங்கிட உருவாக்கியுள்ள திட்டம் உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்திட கிடைத்த செழிப்பான திட்டமாகும்.

தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் குடிநீர் வசதியை இந்த நிதியாண்டுக்குள் செயல்படுத்திடவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொண்டு வந்துள்ள திட்டங்கள் பள்ளி மாணவர்கள் மற்றும் மருத்துவமனை நோயாளிகள் ஆகியோரின் குடிநீர்த் தேவையைத் தீர்க்கும் பொன்னான திட்டமாகும்.

கிராமப்புறங்களில் குடியிருப்போருக்கு குடிதண்ணீர் இணைப்பு வசதி செய்து கொடுக்க வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு முன்வைப்பு தொகையாக ரூ.1,000 என்பதை இன்றைக்கு ரூ.500 ஆக குறைத்து அதை வருடத்தில் இரண்டு தவணையாக ஊராட்சிகளுக்கு செலுத்தவும், மற்றவர்கள் ரூ.1,000 முன்வைப்புத் தொகையை, வருடத்தில் இரண்டு தவணைகளில் செலுத்திடவும், அதன்மூலம் ஊராட்சிகளுக்கு வருவாய் கிடைத்திடும் வகையிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொண்டு வந்துள்ள திட்டம் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் நலனில் அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது.

இப்படி பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தாலும்கூட, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சித் துறை எவ்வாறு மெத்தனமாக செயல்பட்டது என்பதை இம்மாமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற தி.மு.க. ஆட்சியில் நகர்ப்புற குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியம் சில

நகராட்சிகளுக்கு, திட்டங்களுக்காக தேவை ஏற்படும் முன்னரே தேவையில்லாமல் முன்கூட்டியே கடன்பெற்ற காரணத்தினாலே உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் இழப்பு ஏற்பட்டது என்று இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கை தெரிவிக்கிறது. இது அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சருக்குத் தெரிந்துதான் நடந்ததா, இல்லையா என்பது தெரியவில்லை. இதுமட்டுமல்ல, சென்ற தி.மு.க. ஆட்சியில், பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி சுயவேலை வாய்ப்புக்காக 12 கோடியே 63 இலட்சம் மொத்த ரூபாயில் வெறும் 80 இலட்சம் ரூபாய் மட்டுமே பயன்படுத்தியது.

நகர மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 2 கோடியே 52 இலட்சத்தில் வெறும் ரூபாய் 11 இலட்சம் மட்டுமே பயன்படுத்தியுள்ளார்கள். பயிற்சி அளிக்க வேண்டிய திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 2 கோடியே 38 இலட்சத்தில் இதில் வெறும் 50 இலட்சம் ரூபாயை மட்டுமே பயன்படுத்தியுள்ளார்கள். மேலும், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் உண்மை நிலவரங்களை ஆராயாமல் வருவாய் வசூலிக்கும் பணியை ஒரு வங்கிக்கு ஒப்படைத்ததால், 1996 ஆம் ஆண்டு முதல் 2000 வரையிலான ஆண்டு காலகட்டத்தில் ரூபாய் 4 கோடியே 17 இலட்சம் வருவாய் வசூலிப்பதற்கு பதிலாக ரூபாய் 2 கோடியே 7 இலட்சம் வசூல் செய்த வகையில் வாரியம் வருவாய் இழக்க நேரிட்டது. இப்படிப்பட்ட செயல்பாடுகளால்தான் இன்று எங்கள் அன்னையின் ஆட்சியில் நிதிப் பற்றாக்குறை நிலவுவதை எதிர்க்கட்சியினர் உணர வேண்டும்.

பிற்பகல் 12-10

மேலும் கடந்த தி.மு.க. ஆட்சியில் மாநிலம் முழுவதும் 3,850 விளையாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டு மையங்களில் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூபாய் 2,000 அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த விளையாட்டு மையங்கள் அமைக்கப்பட்ட ஊராட்சிகளில் ரூபாய் 15,000-லிருந்து ரூபாய் 25 ஆயிரம் வரை பெறப்பட்டுள்ளது. இதனை யார் ஆர்டர் செய்தது? இந்தக் கூடுதல் பணம் யாருக்குச் சென்றது என்பதை உண்மையிலேயே விசாரணை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



உள்ளாட்சி அமைப்புக்கள் வலுவோடு செயல்பட்டால் அது நல்லாட்சிக்கு அடையாளம் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லாசியோடு சமர்ப்பிக்கப்பட்ட மானியக் கோரிக்கை அறிக்கை புலப்படுத்துகிறது. எனக்கு வாக்களித்த என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் ஒரு சில கோரிக்கைகளை பேரவை முன் வைக்க விரும்புகிறேன்.

திருப்பத்தூர் சாம்பா ஊருணி விபத்து ஏற்படும் சாலை என்று தெரிந்து 1991-ல் இருந்து 1995 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் அதற்காக 1995-ஆம் ஆண்டு ஒரு டெண்டர் விடப்பட்டது. அன்றைக்கு அந்த டெண்டர் விடப்பட்ட நேரத்தில் 2½ இலட்சம் ரூபாயில் அந்த வேலை தொடங்கப்படுகின்ற நிலை இருந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன், அது புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்த வேலை என்ற காரணத்தினாலே, அந்த வேலையை இரத்து செய்து, கடந்த 5 ஆண்டு காலத்தில், இன்று வரை அந்தப் பணி நடைபெறாமல் இருக்கிறது. இன்றைக்கு அந்தப் பணி தொடங்க வேண்டுமென்று சொன்னால், 10 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இந்த ஐந்தாண்டு காலத்தில் கிட்டத்தட்ட 15-க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி கொடுத்திருக்கின்ற இடம். இந்த இடத்தில் ஒரு சாலை அமைக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் தொகுதியில், அந்த திருப்பத்தூர் மண்ணில் திறந்த ஜீப்பிலே பேசுகின்ற அந்த இடத்தில்தான் பஸ் ஸ்டாண்டு இருக்கிறது. இன்றைக்கு வரை அதற்கு பேருந்து நிலையம் இல்லை. அதை உருவாக்கித் தருமாறு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 5, 6, 7 என்ற கால்வாய்கள் இருக்கின்றன. அந்தக் கால்வாய்கள் இருபது ஆண்டு காலத்திற்கு முன்பாக கட்டப்பட்டன. ஆனால் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த நேரத்தில்தான், தண்ணீர் இல்லாது பயிர்கள் வாடிய நேரத்தில் புரட்சி தலைவியை விவசாயிகள் எல்லாம் கேட்ட நேரத்தில், அன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் திறந்துவிடச் செய்தார்கள். ஆனால் கடந்த 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் அந்தக் கால்வாயில் தண்ணீரே திறந்துவிடப்படவில்லை. அந்தக் கால்வாயில் ஒரு போக விளைச்சலுக்கு நிரந்தரமாக 5, 6, 7 என்கின்ற அந்தப் பெரியாறு மேம்பாட்டுக

கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி ஆற்றிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தண்ணீர் வருகின்றபோது திருப்பத்தூர் குடிநீர்த் திட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றி அந்த மக்களுக்கு தண்ணீரை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் - சிங்கம்புணரி ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, புரட்சித் தலைவி காலத்தில்தான் எஸ்.புதூர் ஒன்றியம் என்று உருவாக்கப்பட்டது. அதைபோல திருப்பத்தூர் தாலுகா மிகப் பெரிய தாலுகா. அந்த தாலுகாவில் நிதி நிலைமை சீரடைந்த பிறகாவது சிங்கம்புணரியைத் தனி தாலுகாவாக உருவாக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிங்கம்புணரியில் கயிறு திரிக்கின்ற கைத்தொழிலில் கிட்டத்தட்ட பத்தாயிரம் மகளிர்கள் அந்தப் பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கயிறுகளை இன்றைக்கு விற்க முடியாமல் இருக்கின்றார்கள். அரசின் சார்பில் ஒரு கொள்முதல் நிலையத்தை உருவாக்க வேண்டுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல திருப்பத்தூர்-சிங்கம்புணரியில் அரசு மருத்துவமனை இருக்கிறது. அங்கே ஒரு ஆம்புலன்ஸ் இல்லை. சுற்றுச்சுவர் இல்லை. அவற்றையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமாறு பணிவன்போடு கேட்டு,

'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்.
இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்'

என்று சொல்லுக்கு ஏற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி உள்ளாட்சித் துறையில் புதுமைகளையும், புரட்சிகளையும் வித்திட்டு, பீடுநடை போடுகிறது என்பதைப் பெருமையுடன் கூறி, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு நல்வாய்ப்பு தந்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நன்றி கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.



# 5. உரிமைப் பிரச்சினை

## மாண்புமிகு முதலமைச்சர் மீது—தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15-3-2002 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிறுவனங்களில் நிதி இழப்பு குறித்து பேசும்பொழுது குறிப்பிட்ட சில புள்ளி விவரங்கள் தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்து அளிக்கப்பட்ட வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்ட விவரங்களுக்கு முரண்பாடாக இருப்பதாக தெரிவித்து, திருவாளர்கள் க. பொன்முடி, இ. புகழேந்தி, பரிதி இளம்வழுதி மற்றும் கு. பிச்சாண்டி ஆகியோர் 10-4-2002 ஆம் நாளிட்ட கடிதத்தில் அவை உரிமை மீறல் பிரச்சினை அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

பிற்பகல் 12-15

வழக்கமாக உறுப்பினர்கள் நிகழ்த்திய உரைகளில் சொல், இலக்கணப், புள்ளி விவரங்கள், மேற்கோள்கள் ஆகியவற்றில் பிழை இருந்தால் அவற்றைத் திருத்துவதற்காக அவ்வுரைகளின் நகல்கள் உரை நிகழ்த்திய உறுப்பினர்களுக்கு நிகழ்த்தியவாறே சட்டமன்றச் செயலகத்தில் உள்ள நிருபர்கள் பிரிவிலிருந்து அனுப்பப் பெறுகிறது. அவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்திற்கும் அவரது உரை அனுப்பப்பட்டு, ஏற்கெனவே நிருபர்கள் பிரிவில் பெறப்பட்டுள்ளது. சாதாரணமாக இத்திருத்தங்கள் என்னுடைய கவனத்திற்கு வராது. ஆனால், உறுப்பினர்கள் கொடுத்த உரிமை மீறல் அறிவிப்பினையொட்டி நானும் நிருபர்கள் பிரிவிலிருந்து இந்த நடவடிக்கைக் குறிப்பினை வாங்கிப் பார்வையிட்டேன்.

அவ்வாறு பார்வையிட்டபோது, 1996 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின் accumulated loss திரண்ட இழப்பு ஏறத்தாழ 368.85 கோடி ரூபாய் என்ற புள்ளி விவரத்தினை 533 கோடி ரூபாய் எனவும், ஐந்து ஆண்டுகளும் சேர்த்து 1996 வரை ஏற்பட்ட இழப்பு ரூ.204.66 கோடி என்ற புள்ளி விவரத்தினை ரூ.368.81 கோடி என இரு இடங்களில் திருத்தம் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் திருத்தப்பட்ட நகல்கள்தான் ஏற்கப்பட்ட சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளாக சட்டமன்றப் பேரவைச் செயலகத்தினால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது. நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள நகல்கள் திருத்தப்படாத நகல்களாகும்.

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 16

பேரவை விதி 220(1)-ன்படி உரிமை மீறல் உள்ளதாகக் கூறப்பெறும் செயல் மிகவும் அண்மையில் நடந்த நிகழ்ச்சியை குறித்ததாக இருக்கவேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் 10-4-2002 ஆம் தேதியில் கொடுத்த பிரச்சினை, சட்டமன்றப் பேரவையில் 15-3-2002 அன்று தெரிவித்த தகவலையொட்டியதாகும். இது மிகவும் காலம் கடந்த ஒன்றாகும்.

எனவே, அனைத்தையும் பரிசீலித்ததில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையில் வேண்டுமென்றே தவறான தகவல் தரவேண்டும் என்ற எண்ணமோ அல்லது எவ்வித உள்நோக்கமோ இல்லை எனக் கருதி, இதுகுறித்து எவ்வித உரிமை மீறல் பிரச்சினையும் இல்லை என என்னுடைய தீர்ப்பினைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு explanation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, தங்களுக்கு விதிமுறைகள் தெரியும். சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்கிற அதேவேளையிலே, இது புத்தகமாகவே வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழக அரசு வெளியிடுகிற புத்தகத்திலேயே இந்தக் குறை அப்படியே இருக்கிறது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு... (குறுக்கீடு) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** யாராக இருந்தாலும், நான்கூட தவறிச் சொல்லலாம், அமைச்சர்கள் சொல்லலாம். ஆனால், அந்த correction-ஐ நாங்களே பார்த்துக் கொடுத்துவிட்டோம் என்றால் சபைக்குத் தெரியாது. சபையிலே என்ன சொன்னாலும் தெரியும். இப்படிப்பட்ட நிலை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 ஏப்ரல் 16] [திரு. துரைமுருகன்]

வருகிறபோது, நேற்றைக்குச் சொன்ன ஒன்று தவறாகி விட்டது என்ற correction-ஐ சபையிலே சொல்லிவிட்டால் இந்தப் பிரச்சினை வராது. அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில்... (குறுக்கீடு) புத்தகத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. சட்டசபை நடவடிக்கைக் குறிப்புதான் சட்டசபையோடு சம்பந்தப்பட்டது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இதற்கு மேலே பேச அனுமதிக்க முடியாது, விட்டுவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** **

## 6. அறிவிப்பு

### அரசினர் தனித் தீர்மானம் திருத்தப்பட்டவாறு அவைக் குறிப்பில் இடம் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில் பல முக்கியமான விவரங்கள் அடங்கி உள்ளதால், இன்று நிறைவேற்றப்பட்ட திருத்தப்பட்ட தீர்மானத்தின் முதல் பத்திக்குப் பிறகு ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானம் முழுவதையும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பேரவை ஏற்பளிப்புடன் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானம் முழுவதும் திருத்தப்பட்ட தீர்மானத்தின் முதல் பத்திக்குப் பிறகு அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை பேரவைக்கு அறிவிக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 ஏப்ரல் 16

## 5. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

### மாண்புமிகு முதலமைச்சர் மீது தீர்ப்பு—தொடர்ச்சி

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்ப்பின் மேலே பேசுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை. (குறுக்கீடு) பொன்முடி, இந்தத் தீர்ப்பின் மேலே பேசுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை. அதற்குப் பிறகு நீங்கள் சொன்ன கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன திரு. விநாயகமூர்த்தி.

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புத்தகம் என்பது தமிழக அரசு சார்பாக வெளியிட்ட புத்தகத்தைச் சொல்கிறார். அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

**டாக்டர் க. பொன்முடி:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், என்னுடைய தீர்ப்பின் மீது இதற்குப் பிறகு விவாதம் நடைபெறுவதற்கு நான் அனுமதிப்பதற்கு இல்லை. சட்டமன்ற விதிகளுக்கு அது புறம்பானது.

**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விநாயகமூர்த்தி, பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 ஏப்ரல் 16]

**டாக்டர் க. பொன்முடி:** **

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், என்னுடைய தீர்ப்பின் மேலே அதற்குப் பிறகு விவாதத்திற்கு அனுமதிப்பது என்பது விதிகளுக்குப் புறம்பானது, முரணானது. ஆகவே நான் வழங்கிய தீர்ப்பிலே முழுமையாக அந்த கருத்துகளை யெல்லாம் பரிசீலித்துதான் தீர்ப்பை வழங்கியிருக்கிறேன். அதற்கு மேலே விவாதத்தை அனுமதிப்பதற்கில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** **

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பிலே நான் தலையிட விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்து என்னவென்றால், அது தவறு என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருத்தி அனுப்பியிருக்கிறார்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி விவாதிப்பதற்கு இடமில்லை.

**திரு. துரைமுருகன்:** அதில் பிரச்சினை இல்லை. ஆனால் அந்தத் தவறான புள்ளிவிவரமே தமிழக அரசினுடைய சார்பிலே போடப்பட்ட ஒரு புத்தகத்திலே வந்திருக்கிறதே, அதைப்பற்றி என்னவென்று கேட்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத் தனியாக எழுதிக் கொடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 ஏப்ரல் 16

## 4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 33—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை—தொடர்ச்சி

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைமீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பை அளித்த தங்களுக்கு நெஞ்சார நன்றி செலுத்துகின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

சில தினங்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். அமைதி காக்கவேண்டும்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** புத்தாண்டு நற்செய்தியாக சென்னை மாநகர மக்களுக்கு இந்த அவையிலே ஓர் அறிவிப்பினைக் கொடுத்தார்கள். முன் எப்போதும் இல்லாத அளவுக்கு கோடை காலத்தில் தினமும் 400 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பெறும் என்ற அறிவிப்பைக் கொடுத்ததுடன், அதைச் செயல்படுத்தியும் காட்டியிருப்பது, புத்தாண்டினுடைய நல்ல தொடக்கமாக எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும் சென்னை மாநகர மக்களின் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்ற ஆண்டு இதே காலத்தில் ஒவ்வொரு பகுதியிலும் பிளாஸ்டிக் குடங்களை க்யூ வரிசையில் நிறுத்தி வைத்து, தாய்மார்கள் குடிநீர் லாரிகள் எப்போது வரும் என்று இரவு பகலாக கண் விழித்துத் தவித்து நின்ற காட்சிகளை நான் நினைத்துப் பார்க்கிறேன். இரயில் மூலமாகவும், லாரிகள் மூலமாகவும், எங்கெங்கோ இருந்தெல்லாம் தண்ணீரைக் கொண்டு வந்து, மீண்டும் லாரிகள் மூலமாக அனைத்துப் பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று, 24 மணி நேரமும் இரவெல்லாம் கண் விழித்து குடிநீர் விநியோகம் செய்திட்ட குடிநீர் இலாகாவின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரின் சேவையை சென்னை மாநகர மக்களின் சார்பாக



2002 ஏப்ரல் 16] [திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி]

நன்றியுணர்வுடன் நான் பாராட்டுகிறேன். சென்ற ஆண்டு இருந்த இந்த நெருக்கடி நிலையை அரசாங்கம் ஓர் எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு, நிரந்தரமான தீர்வைக் காண்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனி அக்கறையுடன் எடுத்து வரும் சிறப்பு நடவடிக்கைகளை நான் வரவேற்கின்றேன்.

கிருஷ்ணா நதிநீர் கண்டலேறுவிலிருந்து இனிமேல் ஆண்டுதோறும் தங்குதடையின்றி வரும் என்கின்ற நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சென்னைக்கு அருகிலுள்ள ஏரிகள் போரூர், அம்பத்தூர் மற்றும் இரட்டை ஏரி ஆகியவற்றை தூர் வாரி, ஆழப்படுத்தி, புதுப்பித்து, அவற்றின் கொள்ளளவை உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக புதிய வீராணம் திட்டத்தை 720 கோடி ரூபாய் செலவில் பதினெட்டே மாதங்களில் நிறைவேற்றிட முனைப்புடன் செயல்படுவது பாராட்டுக்குரிய செயலாகும். 18 மாதங்களிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், இந்த அரசாங்கத்தினுடைய மகத்தான சாதனையாக அது இருக்கும் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இவைமட்டுமல்லாமல், கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, தொழிற்சாலைகளுக்குக் கொடுப்பது, உவர் நீரை சவ்வூடு முறையில் சுத்தப்படுத்தி குடிநீராக்குவது, பயன்படுத்த முடியாமல் வீணாகக் கடலுக்குச் சென்று வீணாகும் மழை நீரைச் சேமிப்பது போன்ற அறிவார்ந்த திட்டங்களை தொலைநோக்குடன் அரசு மேற்கொண்டு வரும் இந்த நேரத்தில்தான், மழை பெய்யும் என்ற மூடநம்பிக்கையில் நாமக்கல் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் கழுதைகளுக்குத் திருமணம் என்ற பெயரால் நடந்திருக்கும் பைத்தியக்காரச் செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். நிகழ்ச்சிக்கு முன்பாக ஒரு வசூல், மொய் என்ற பெயரால் மீண்டும் ஒரு வசூல் என்று மக்களின் மூட நம்பிக்கையை காசாக்கும் வீணர்களுடைய கூட்டத்தின்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

சென்னை குடிநீருக்காகப் பயன்பட்டு வரும் போரூர் ஏரியில் மீன்கள் பெருமளவிலே செத்துக் கிடப்பதாக கடந்த ஒரு வாரமாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. தொலைக்காட்சியிலும் அது காட்டப்படுகிறது. இதை ஒரு சாதாரண நிகழ்வாக குடிநீர் இலாகா எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதை...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல சென்னையை அடுத்த போரூர் ஏரியில் 12-4-2002 முதல் கொஞ்சம், கொஞ்சமாக மீன்கள் செத்து மிதக்கின்றன என்ற தகவல் வந்தது. தற்போது மீன்கள் சாகவில்லை. செத்த மீன்கள் மொத்தம் 30 கிலோவிற்குள்தான் இருக்கும். இது குடிநீர் வழங்கும் ஏரி; ஆகையால் செத்த மீன்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டன. இன்று காலை மீன்வளத் துறை ஆய்வாளர் மற்றும் மீன்வளத் துறை உதவி இயக்குநர் நேரில் சென்று அதை ஆய்வு செய்ததில், கூடுதல் வெப்பத்தாலும், மீன்களுக்கு வேண்டிய பிராண வாயு குறைவதாலும்தான் மீன்கள் செத்தன என்று தகவல் அளித்துள்ளனர். இறந்த மீன்கள் அனைத்தும் இயற்கையாக வளரும் ஜிலேபியா மீன்களாகும். செயற் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம் தண்ணீரை ஆய்வு செய்ததில் தண்ணீருக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று தெரிவித்துள்ளதை இந்தச் சபைக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விஷயம் மீன்வளத் துறையைச் சார்ந்ததாக நான் கருதவில்லை. இந்த விஷயத்திற்கு, பொதுப் பணித் துறையும், உள்ளாட்சித் துறை அமைச்சரும்தான் பொறுப்பாக பதில் அளிக்க வேண்டும். சென்னைக்குப் பயன்படுத்தக்கூடிய குடிநீர் போரூர் ஏரியிலே இருந்து வருகிறது. அந்த ஏரியிலே கணக்கு வழக்கில்லாமல் மீன்கள் செத்துக் கிடந்தன. நீர் துர்நாற்றம் வீசுகிறது என்ற அளவிலே செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. மீன் ஏன் செத்தது என்ற பிரச்சினைக்கு நான் போகவில்லை. குடிநீர் ஏன் அசுத்தமாகியது என்ற பிரச்சினைக்குத்தான் வந்திருக்கிறேன். அந்த நீரை சென்னை நகர மக்களுக்கு விநியோகம் செய்தால் அதன் மூலம் பல பிரச்சினைகள் எழக்கூடும் என்பதற்காகக் குடிநீர் இலாகா அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத்தான் இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் எடுத்துச்சொல்ல விரும்புகின்றேன்.

மற்றும் ஒன்று, சென்னைக்கு குடிநீர் ஆதாரங்களில் ஒன்றாக இருக்கும் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு ஒரு வரலாறு இருக்கிறது. இந்தச் சென்னை மாநகராட்சியினுடைய மேயராக இருந்த தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் 1939-1940 ஆம் ஆண்டுகளில் ஒரு வருடம்தான் அவர் மேயராக இருந்தார். அந்த ஒரு வருட காலத்திலே சென்னை மாநகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தப் பூண்டி





நீர்த் தேக்கத்திற்கு கரு உருவாக்கப்பட்டு அவருடைய காலத்திலேயே அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு துவக்கப்பட்டது.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போரூர் ஏரியில் மாசு ஏற்பட்டதனால், அங்கு வெகுவாக மீன்கள் இறந்தன என்று சொன்னார்கள். போரூர் ஏரியில் மாசு எந்த வகையில் ஏற்பட்டது என்பதை அறிய துரித நடவடிக்கை எடுத்து, அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி. இந்தப் பூண்டி நீர்த்தேக்கம் என்பது தீரர் சத்தியமூர்த்தியினாலே உருவாக்கப்பட்டு, அவருடைய காலத்திலேயே அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றைக்கு இருந்த அரசாங்கம், விடுதலைக்கு முன்பாக இருந்த அரசாங்கம், வெள்ளையர் அரசாங்கம் அவருடைய சேவையைப் பாராட்டி, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு சத்தியமூர்த்தி சாகரம் என்ற பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ, நம்முடைய பொதுப் பணித் துறையும், குடிநீர் இலாகாவும், அவர்களுடைய ஆவணங்கள் அத்தனையிலேயும் இன்று வரையிலே பூண்டி நீர்த்தேக்கம் என்றே குறிப்பிட்டு வருகிறார்களே ஒழிய, சரித்திர மாற்றத்தினால் ஏற்பட்ட பெயரை அவர்கள் சொல்வதே இல்லை. இதை இந்த அவையிலே சொல்வதன் மூலமாக இனிமேலாகிலும் முதல்வர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அந்தப் பூண்டி நீர்த்தேக்கத்தை சத்தியமூர்த்தி சாகரம் என்றே எல்லா ஆவணங்களிலும் குறிப்பிட ஆணையிட வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-30

தற்போது குடிநீர் இலாகாவினுடைய பராமரிப்பிலே, குடிநீர்க் குழாய்கள் பராமரிப்பு, கழிவுநீர்க் குழாய்கள் பராமரிப்பு, இந்த இரண்டும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால், மழைநீர் வடிகால்களுடைய பராமரிப்பு, சென்னை மாநகராட்சியிலே இருந்துகொண்டிருக்கிறது. பூமிக்கு அடியிலே இருக்கின்ற இந்த மூன்றும் ஒரே அமைப்பின்கீழாக இருந்தால்தான் நிர்வாகத்திற்குச் சௌகரியமாக இருக்க முடியும். 1991 ஆம் ஆண்டே இதனை உணர்ந்து, அரசு ஓர் ஆணையிட்டிருப்பதாக நான் கேள்விப்படுகின்றேன். ஆனால், இந்த நேரம் வரையிலே அது

[திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி] [2002 ஏப்ரல் 16

அமல் நடத்த முடியாமல் இருந்துகொண்டிருப்பது சில சங்கடங்களை விளைவிப்பதாக நான் நினைக்கின்றேன். வரக்கூடிய காலத்திலேயாகிலும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு தனி ஆணையம் அமைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் இலாகாவின்மீது எனக்கு இருக்கின்ற திருப்தி சென்னை மாநகராட்சியின்மீது நிச்சயமாக இல்லை. கட்டுக்கோப்பு தளர்ந்து, நிர்வாகம் சீர்குலைந்து, அலங்கோலமாக காட்சி அளிப்பதாக நான் கருதுகின்றேன். எந்தத் துறையிலும் பணிகள் ஒழுங்குமுறையோடு நடைபெறவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். சொல்லப்போனால், சட்டப்படி நடக்க வேண்டிய பணிகள் statutory obligations கூட (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஆரம்பிக்கவேயில்லை. அந்த statutory obligations-கூட முடங்கிக் கிடப்பதாக நான் அறிகின்றேன். மாநகராட்சி சட்டத்தினுடைய 39-வது செக்ஷன்படி ஒவ்வோரா ஆண்டும் முந்தைய ஆண்டின் செயல்பாடுகள் குறித்த நிர்வாக அறிக்கை Administration Report தயார் செய்து, அதை மன்றக் கூட்டத்திலே வைத்து, உறுப்பினர்களுடைய விவாதத்திற்குப் பின்னாலே இந்த அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று விதி, ஒரு mandatory உத்தரவு இருப்பதை நான் உணர்கின்றேன். ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் அமைந்த பின்னாலும்கூட, இது இன்றைய வரையிலே கடைபிடிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மாநகராட்சி ஆணையாளர் அவர்களோ அல்லது மாநகராட்சி மேயர் அவர்களோ இந்த செக்ஷன் ஒன்று இருப்பதை கண்டுகொண்டதாகவே எனக்குத் தெரியவில்லை.

அதைப்போலவே, தேர்தல் நடந்து முடிந்து 7 மாதங்களுக்கு மேலாக ஆகிறது. இன்றைய தேதி வரையிலே நிலைக் குழுக்கள் Standing Committees அமைக்கப்பெறாத ஒரு சூழ்நிலை மாநகராட்சியிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை நம்முடைய வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக இல்லை என்பதைச் சொல்ல விரும்புகின்றேன். இதற்கெல்லாம் காரணம் 1973 முதல் 1996 வரை சுமார் 23 ஆண்டுகள் சிறப்பு அதிகாரிகளின் பொறுப்பில் மாநகராட்சி இருந்தது. அப்போதுதான் தேவையற்ற மாற்றங்களும், அவசியமில்லாமலே அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலை வளர்ச்சிப் பணிகளுக்கு வேகத்தைக் கொடுக்காமல், உண்மையிலேயே வேகத் தடைகளாகவே இருந்து வந்திருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



2002 ஏப்ரல் 16] [திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி]

குப்பைகளைச் சுத்தமாக அகற்றுவது, கொசுத் தொல்லையை அடியோடு போக்குவது, சாலைகளை குண்டும், குழியுமாக இல்லாமல் செப்பனிடுவது, தெரு விளக்குகளைச் சரிவர எரியச் செய்வது, கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் அனைத்தும் புகாருக்கு இடமின்றி செயல்படுவது, வரி வசூல் ஒழுங்காக செம்மையாக நடப்பது போன்ற செயல்கள் யாவும் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் நிர்வாகத்தில் மிகப் பெரிய அளவில் மாற்றங்கள் தேவை என்பதை அனுபவ ரீதியாக நான் வலியுறுத்துகின்றேன். சென்னை மாநகராட்சி ஆணையாளர்களாக இருந்து, மிகச் சிறப்பாகப் பணியாற்றிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர் இன்றைக்கு இருக்கின்றனர். அவர்களில் சில பேரைத் தேர்வு செய்து, நிர்வாகச் சீர்திருத்தக் குழு Administrative Reforms Committee ஒன்றினை அமைத்திட அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அப்படிப்பட்ட குழுவிற்கு எனது நீண்ட கால அனுபவங்களைப் பங்களிப்பாகக் கொடுத்து உதவுவேன் என்பதையும் உறுதியோடு இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-35

மற்றுமொன்று, சென்னை மாநகராட்சியினுடைய நிர்வாகம் தமிழக அரசைச் சார்ந்தே இருக்க வேண்டும். சிங்காரச் சென்னை என்ற இலட்சியம் உண்மையிலே உருப்பெற்று உயர்ந்திட தமிழக அரசுக்கும், மாநகராட்சிக்கும் உள்ள உறவு சுமூகமான அனுசரணையுடன் இருக்க வேண்டும். இதற்குப் பாலமாக இருந்து, உறவை வளர்ப்பதும், வலுப்படுத்துவதும் மேயருடைய தலையாய கடமை. துரதிர்ஷ்டவசமாக இந்த உறவில் விரிசலும், அவசியமற்ற மோதல் போக்கும் நிலவியிருப்பதைக் கண்டு நான் கவலைப்படுகின்றேன். தி.மு.க.-வினுடைய இளைஞர் அணி பொறுப்பிலிருந்து அல்லது ஆயிரம் விளக்குத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று கருத்து சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை. ஆனால், மேயர், இந்த மாநகரத்தினுடைய தந்தை என்ற பொறுப்பில், அவரிடம் எனக்கு முறையான எதிர்பார்ப்பு உண்டு. மாநில அரசுடன் அவருக்கு இருக்கும் மோதல் போக்கினைத் தவிர்க்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னை மாநகர நிர்வாகம் என்பது சின்ன விஷயம் அல்ல. (குறுக்கீடு) நகரத்தின் மக்கள் தொகை...

சென்னை-600 008

[2002 ஏப்ரல் 16

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல அறிவுரையைச் சொல்கிறார். ஆனால், அந்த அறிவுரை ஒரு வழிப்பாதையாக இருக்கக்கூடாது. இரண்டு பக்கமும் சேர்த்து சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** நான் ஒப்புக்கொள்கின்றேன், only in the absence of the Mayor.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நல்ல அறிவுரை, சின்ன அறிவுரையாகச் சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** இதையெல்லாம் சரி, டைம் ஆகிவிட்டது. சென்னை மாநகர நிர்வாகம் என்பது சின்ன விஷயம் அல்ல. நகரின் மக்கள் தொகை இன்றைய கணக்குப்படி 42 இலட்சம். தினமும் வந்து போகின்ற மக்களின் எண்ணிக்கையைச் சேர்த்துப் பார்த்தால் 50 இலட்சத்திற்கு மேலாக இருக்கும். இதை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் நமக்குப் புரியாது. கோவாவைப் போல 4 மடங்கு; அருணாசலப் பிரதேசத்தைப் போல 5 மடங்கு; பாண்டிச்சேரியைப் போல 5 மடங்கு மக்கள் தொகை கொண்டது இந்த சென்னை மாநகரம். இந்தியாவின் நான்காவது பெரிய நகரமான சென்னையில் வாழும் 50 இலட்சம் மக்களுடைய அடிப்படைத் தேவைகளைத் திறம்படச் செய்து முடிப்பதற்கும், எழில்மிகு சென்னை என்கிற இலட்சியத்தை விரைந்து காண்பதற்கும் மாநில அரசினைச் சார்ந்தே செயல்படவேண்டிய சென்னை மாநகராட்சி, தமிழக அரசுடன் அர்த்தம் நிறைந்த, ஆழமான உறவை வளர்த்துக்கொள்வதில் புதிய அத்தியாயம் தொடங்கிட மேயர் அவர்கள் முன்வரவேண்டும் என்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். சென்ற சில தினங்களுக்கு முன்னாலே இந்த அவையிலே முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்...

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விநாயகமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, ஆயிரம் விளக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் நல்ல அணுகுமுறையிலே நடக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். தமிழக அரசோடு நல்ல உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நல்ல யோசனையைச் சொன்னார். அவர் சொல்லுகிறபோது, எதிர்த்துப்



2002 ஏப்ரல் 16] [திருமதி பா. வளர்மதி]

பதிலளித்த இளம்வழுதி அவர்கள் அதை மறுத்து சொன்னார். சற்று நேரத்திற்கு முன்னால் தாம்பரம் தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் இங்கே பேசுகிறபோது மத்திய அமைச்சர் டி.ஆர். பாலுவை தமிழக அரசினுடைய தூதுக் குழுவைச் சார்ந்தவர்கள் சந்திக்க வேண்டும் என்று சொன்னார். ஆக, இதைப் பேசுகிறபோது எதிர்த்தவர்கள், அதைப் பேசுகிறபோது நாங்கள் எதிர்க்கிறபோது அவர்கள் வருத்தப்படுகிறார்களே? இது என்ன என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசுங்கள், இரண்டு நிமிடத்திலே பேச்சை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகின்றேன். சில தினங்களுக்கு முன்பாக இந்த அவையிலே முதல்வர் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். மேயர் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடாது என்கிற அளவிலே ஒரு சட்டம் வர இருக்கிறது என்பதை one man, one post என்கின்ற அளவிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தையொட்டியே அந்தச் சட்டம் வருவதற்கு முன்னாலே, சில கருத்துகளை இங்கே பதிய வைக்க நான் ஆசைப்படுகின்றேன்.

பிற்பகல் 12-40

Madras City Municipal Corporation Act, Section 30-ன்படி இருக்கின்ற வாசகத்தை நான் படிக்கின்றேன் :

"An outgoing Mayor or Deputy Mayor shall not be eligible for re-election as Mayor or Deputy Mayor, as the case may be, during the period up to the next ordinary election and in the case of extension of term of Office of the Councillors by any law, for the time being in force during the remainder of the period of such extension"

இந்த செக்ஷனிலே ஒரு நெருடல் இருப்பதாக நான் நினைக்கின்றேன். முதல் பாதி சரியாக இருக்கிறது. அடுத்த பாதிக்கு சரியான விளக்கம் தர முடியவில்லை. 1975 ஆம் வருடம் வரையிலே அந்த செக்ஷன் எப்படி இருந்தது என்று சொன்னால் "A Mayor or Deputy Mayor is re-eligible for re-election" என்கின்ற அளவிலேதான் சட்டம் இருந்தது. 1975 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆட்சிப்

[திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி] [2002 ஏப்ரல் 16

பொறுப்பிலே இருந்தபோது சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரியினுடைய நிர்வாகத்திலே ஆட்சி இருந்தபோது, இந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. இது தெளிவாகத் திருத்தப்பட்டிருந்தால் இந்த விஷயத்தை நான் அவைக்குக் கொண்டுவர வேண்டிய நிலை இல்லை. ஆனால் இதிலே இருக்கின்ற நெருடல் என்ன என்பதை இனி வரக்கூடிய காலத்திலே சட்டம் கொண்டுவரப்படுகிற போதாகிலும் சரியாகச் செய்ய வேண்டுமென்று நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இந்த செக்ஷனுடைய அடிப்படையிலே சென்னை நீதிமன்றத்திலே ஒரு ரிட் வழக்கு இருந்துகொண்டிருக்கிறது. இந்த செக்ஷன் 30-ன்படி மேயர் தேர்தல் செல்லாது என்று 7 மாதங்களுக்கு முன்னாலே ஒரு வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு இதுவரையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதனாலே அதற்குள்ளாக நீண்ட விவாதத்திற்கு நான் செல்ல விரும்பவில்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தேதி வரையிலே— the Respondent—அது யாராக இருந்தாலும், Counter Petition போடவில்லை என்று எனக்கு செய்தி சொல்லப்படுகின்றது. ஏன் இந்த மெத்தனம் என்பதை இந்த அவைக்குக் கொண்டு வருவதோடு, அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருகிறபோது இதையும் கவனத்திலே கொண்டு திருத்தம் வரவேண்டுமென்று நான் அன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1975 ஆம் ஆண்டு கொண்டு வந்த சட்டத்தைக் குறித்து இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறார். அன்றைக்கு அந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டபோது, இங்கே இருந்த அவருடைய கட்சிக்காரர்கள், அவர்களுடைய கருத்தை வேறு விதமாகவும் சொல்லியிருக்கலாம். அப்போது என்ன செய்தார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. மேலும் நீதிமன்றத்திலே Respondent Petition போடவில்லை என்று எல்லாம், ஒரு பொத்தாம் பொதுவாக, இங்கே ஏதோ ஒரு பெரிய குற்றச்சாட்டை சொல்ல வேண்டுமென்பதற்காக சொல்வதாகத் தெரிகிறதே தவிர, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் உரிய வகையிலே ஆதாரங்களோடு இருந்தால்தான் சொல்லப்பட வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.



2002 ஏப்ரல் 16]

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** இதையெல்லாம் சொல்வதாக இருந்தால், இதை நிரூபிக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் அதை சவாலாக ஏற்றுக்கொள்ளக்கூட நான் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** சவாலாக ஏற்றுக்கொள்வதல்ல. சரியாக நாட வேண்டும். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறபோது இங்கே சட்டமன்றத்திலே பேசிக் கொண்டிருப்பது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்டம் வரும்போது பேசுங்கள், உட்காருங்கள். உறுப்பினர் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** இதை யாரையும் குற்றச்சாட்டாக வைத்து நான் சொல்லவில்லை. வரக்கூடிய சட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஓர் அடிப்படையை உருவாக்கிக் கொடுக்கிறேன். இன்னும் ஒன்றைச் சொல்லுவேன். 5 வருட காலம் மேயருக்குப் பதவி தேவையில்லை. இது என்னுடைய கருத்து. மேயர் பொறுப்பு என்பது ஒரு Highly dignified ornamental post, மிகவும் கௌரவமான, அலங்காரப் பதவியே தவிர அதற்கு வேறு எந்த அந்தஸ்தும் கிடையாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்ராயம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், இடையில் நீங்கள் பேசினால் அவர் உரையை எப்படி முடிப்பது?

**திரு. பரிதி இளம்வழுதி:** அதாவது, 5 ஆண்டு காலம் தேவையில்லை என்று இப்போது சொல்லுகின்றவர், அப்போது எங்கள் கூட்டணியிலே இருந்து சீட்டுகளைப் பெற்றுக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது சொல்லியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** இதைச் சொல்வதற்கு ஒரு காரணம்கூட உண்டு. ஒரு சுழற்சி முறையிலே இந்த மேயர் பதவி வரவேண்டுமென்பது. முன்பு இருந்த சுழற்சி முறை என்பது வேறு. இப்போது நகர்பாலிகா சட்டம் வந்த பிறகு எல்லோருடைய கவனத்திலேயும் இருப்பது, பொதுவானது, அடுத்து பெண்கள், அடுத்து தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்கின்ற ரீதியிலே வரவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி வருகின்றபோது இன்னொன்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை வைக்கிறேன். பொது, அடுத்தது பெண்கள்,

[திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி] [2002 ஏப்ரல் 16

அடுத்து தாழ்த்தப்பட்ட வகுப்பினர், அடுத்து சிறுபான்மையினர் என்ற ஒன்றையும் சேர்த்துக்கொண்டு, ஆளுக்கு ஒரு வருடம் வருகின்ற வகையிலே இங்கே சட்டத் திருத்தம் வருமானால் அது எல்லோருக்கும் மனத்திருப்தியாக அமையும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். ஆக, நல்லவை நடக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய சின்னத்தின், கோபுரச் சின்னத்தின் அடியிலே ஒரு வாசகம் இருக்கின்றது. "வாய்மையே வெல்லும்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த அரசினுடைய வாய்மை வெல்ல வேண்டுமென்று வாழ்த்துகின்றேன், பிரார்த்தனை செய்கின்றேன். நன்றி.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே. சிவசாமி, அருப்புக்கோட்டை தொகுதி.

***திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வணக்கம். கண்கண்ட தெய்வமாய் காட்சிதரும் கருணைத் தாயே,

'உலகம் ஆயிரம் சொல்லட்டுமே,
உனக்கு நீதான் நீதிபதி'

என்ற உண்மையை விளக்காக ஏற்றி ஒளிகாட்டும் ஒளிவிளக்கே, சட்டத்தின் பின்னால் நிற்கும் சதிகாரக் கூட்டம், வட்டமடிக்கும் வல்லூறுகளாய்ப் பறந்தாலும், நிலை குலையாத இமயமே, சிக்கல்கள் உருவாக்கப் பிறந்த சிலரால் நல்லாட்சியைச் சீர்குலைக்க முடியாது; சீரழிக்க முடியாது. சுற்றி வந்த பகைவர்தனை புழுதிக் காற்றாய் ஓட விரட்டிய புரட்சித் தாயே, மக்கள் உங்கள் பக்கம், மாசற்ற மனங்கள் உங்கள் பக்கம். எங்கள் தங்கமே, ஏழைகளின் இதயமே, தங்கள் பொற்பாதங்களுக்கும், பாத தூசிகளுக்கும் வணக்கம் கூறி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இக்கண்ணியம் மிகுந்த சபையில் கடமையாற்றவும், கலந்துகொண்டு சிறப்புச் செய்யவும் சாமானியனான என்னை காரியாப்பட்டி ஒன்றியக் கழகச் செயலாளராக்கி, பின் அருப்புக்கோட்டை தொகுதி வேட்பாளராகவும் ஆக்கி வெற்றிபெற வைத்த என் அன்னையை, புரட்சித் தாயை நெஞ்சில் நிறுத்தி மாபெரும் சபையை வணங்குகிறேன். அம்மா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க என்னை வெற்றிபெற வைத்த



2002 ஏப்ரல் 16] [திரு. கே.கே. சிவசாமி]

அருப்புக்கோட்டை தொகுதி மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2002-2003 ஆம் ஆண்டு உள்ளாட்சி மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைக் காணிக்கையாக்கி ஒருசில கருத்துகளை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய திட்டமான தொடர் பசுமைப் புரட்சித் திட்டத்தின்கீழ் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் திட்டத்தினால், தரிசு நிலங்களை அதிகமாக உள்ளடக்கிய எனது தொகுதி மிகுந்த பயனடையும் என்று தெரிவித்துக்கொள்வதோடு, எனது தொகுதி மக்களின் சார்பாகவும், இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகளிர் முன்னேற்றத்திலும், நல்வாழ்விலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு சீரிய திட்டங்களை வகுத்து, நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழ் மாநிலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

'நிர்வாக வசதியை மக்களின் வாழ்விடங்களுக்கே கொண்டு செல்லுதல்' என்பதே இவ்வரசின் முழக்கமாகும். அதற்கேற்ப கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ரூபாய் 9.90 கோடி செலவிலே நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்பட உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிரர்விட, பழங்குடியின மக்களுக்கு புதிதாக 39,000 வீடுகள் கட்டும் திட்டம் புரட்சித் தலைவி அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ளது.

விவசாயிகள் மற்றும் சிறு விவசாயிகள் பயன் பெற பச்சைக் காய்கறிகளுக்கு வரி விலக்கு கொடுத்துள்ளார்கள். மேலும், 10,000 கைப் பம்புகள் சிறு மின் விசைப் பம்புகளாக மாற்றவும், 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் திட்டம், இத்தகைய பல திட்டங்களை வழங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே.கே. சிவசாமி] [2002 ஏப்ரல் 16

மேலும், புரட்சித் தலைவி மாண்புமிகு நமது இதய தெய்வம் அம்மா அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் நீர்வளப் பாதுகாப்பு என்பது முக்கியமானதொரு அங்கமாகும். பொதுமக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது அரசின் முன்னுரிமையாக இருக்கின்றது. இதை புரட்சித் தலைவி அவர்கள் மிகுந்த கவனத்தோடு ஆராய்ந்து மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களைக் கொடுத்துக் கொண்டிருககிறார்கள்.

மேலும். 2002-2003ஆம் நிதியாண்டில். 80,421 குடியிருப்புகளுக்கு முழுமையான குடிநீர் வசதி அளிக்க இருக்கின்றார்கள். நடப்பு நிதியாண்டில் 6,500 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 1,170 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தற்போது செயலாக்கத்தில் உள்ள 89 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர முன்னுரிமை கொடுக்கப்பட உள்ளது.

பிற்பகல். 12-50

மேலும். கைப்பம்புகளிலிருந்து குடிநீர் பெறுவதில் கிராமப் பெண்கள் படும் சிரமங்களை நீக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ள சிறு மின்விசைத் திட்டங்கள் பொதுமக்களின், குறிப்பாக ஊரகப் பகுதி மகளிரின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளது. ஆகவே. நடப்பு நிதியாண்டில் 10,000 அடிக்குழாய்களுக்கு இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது என்று குறிப்பிட்டு. அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்து உள்ளார்கள். இத் திட்டம் ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். கிராமப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு நகர்புறத்தைப் போன்றே பல்வேறு குடிநீர் வசதிகளைச் செய்து கொடுக்க அம்மா அவர்களின் அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, கிராமப்புற குடியிருப்புகளில் குடிநீர் வீட்டு இணைப்பு பெறுவது ஊக்குவிக்கப்படும். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு வீட்டு இணைப்புப் பெறுவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ரூ. 1,000 முன்வைப்புத் தொகையினை ரூ. 500 ஆக குறைத்து. அத்தொகையையும் இரண்டு அரையாண்டுத் தவணைகளில் செலுத்த அனுமதிக்கப்படும். மற்றவர்களுக்கு ரூ. 1,000-ஐ இரண்டு அரையாண்டுத் தவணைகளில் செலுத்துவதற்கு அனுமதித்துள்ளார்கள். இவ்வாறு அனுமதிப்பதால். ஊரகப் பகுதிகளில் வீட்டு இணைப்புகள்



2002 ஏப்ரல் 16] [திரு. கே.கே. சிவசாமி]

விரைவாக அளிக்கலாம். முக்கியமாக வீட்டு இணைப்பின் வழியாக வழங்கப்படும் குடிநீருக்கான தொகையினை வசூலிப்பதன் மூலம் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பு மற்றும் மின் உபயோகத்திற்கான தொகையினை செலுத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு பல்வேறு வசதிகளை செய்து அளிக்கவுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்புத் திட்டமாக மழைநீர் சேகரித்தல். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் சிறப்பான திட்டம் மழைநீர் சேகரிப்புத் திட்டம் பற்றி கிராம மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டங்கள், கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த அம்மா அவர்கள் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரியம் முதலியவற்றுடன் சேர்ந்து சிறந்ததொரு பயிற்சி அளிக்க உள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்து, எனது தொகுதி சார்பாக இங்கே சில கோரிக்கைகளை வைக்க இருக்கின்றேன்.

அருப்புக்கோட்டை தொகுதி என்று பெயர்தானே தவிர, அருப்புக்கோட்டை நகரமோ, அருப்புக்கோட்டை ஒன்றியமோ எந்தப் பகுதியும் அருப்புக்கோட்டை தொகுதியில் கிடையாது. காரியாப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி ஆகிய ஒன்றியங்கள் அடங்கிய முற்றிலும் கிராமங்கள் நிறைந்த அருப்புக்கோட்டை தொகுதி என்பதை முன்பு காரியாப்பட்டி தொகுதி என்று இருந்ததுபோல் காரியாப்பட்டி தொகுதி என பெயர் மாற்றம் செய்ய புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அருப்புக்கோட்டை தொகுதியில் எவ்வித கல்லூரிகளும் இல்லை. எனவே, காரியாப்பட்டியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நலிவுற்ற பகுதியான நரிக்குடியில் தொழில் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க உதவி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். நரிக்குடி பகுதியில் வறண்ட நிலங்களுக்கு வளம் சேர்க்கும், நீண்டகாலமாய் கிடப்பில் இருக்கும் கிருதுமால் நதித் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி நிறைவேற்றி சுமார் 50,000 விவசாயக் குடும்பங்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சுழி மற்றும் காரியாப்பட்டியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே.கே. சிவசாமி] [2002 ஏப்ரல் 16

காரியாப்பட்டி தாலூகா, முடுக்கன்குளம் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து தொகுதியின் கிழக்குப் பகுதி மக்களுக்கு பயன்படுமாறு உதவிட புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

காரியாப்பட்டி பேரூராட்சி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சி பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தி தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க அருள்பாலிக்குமாறு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்கள்தோறும் நீர்வளம் குன்றி வருகிறது. கிணறுகளும், ஆழ்குழாய் கிணறுகளும் வறண்டு போய்விட்டன. ஏற்கெனவே உள்ள ஊருணிகள், கண்மாய்கள் தூர் வாரப்பட்டு நீர்நிலைகளில் தண்ணீர் சேமித்தால்தான் பின்வரும் காலங்களில் வறட்சியைத் தாங்கவும், நீர் வளம் காக்கவும் முடியும். எனவே, காரியாப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி ஒன்றியங்களில் நீர்நிலைகளை ஆழப்படுத்தி தண்ணீரைச் சேமித்து வறட்சியைப் போக்கிட வேண்டுமாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நீண்டகால கோரிக்கையான நிலையூர்-கம்பிக்குடி கால்வாய்த் திட்டம் நிதியொதுக்கீடு இல்லாமல் நிலுவையில் உள்ளது. மேற்படி திட்டத்திற்கு நிதியொதுக்கி எனது தொகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன். மேலும் எத்தனை எத்தர்கள் எழுதினாலும், பேசினாலும், வாயையும், மையையும் முதலீடாக வைத்து, பொய்வாதம் செய்து வரும் நாட்டை ஏமாற்றிய கூட்டத்தை மக்கள் அடையாளம் கண்டு கொண்டார்கள். ஆனால், இறுதியில் அம்மாவின் வாய்மையே வெல்லும், வெல்லும் எனக்கூறி, நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் சுந்தரத் தெலுங்கிலே செப்புங்கள்.

பிற்பகல் 12-55

***திரு. கே. கோபிநாத்:** (தெலுங்கில் பேசினார்.) †மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மானியக் கோரிக்கைமீது நடைபெறும் விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

† உறுப்பினரின் தெலுங்கு உரையின் தமிழாக்கம்.



2002 ஏப்ரல் 16] [திரு. கே. கோபிநாத்]

கடந்த மார்ச் 9-ந் தேதி இந்த அவையில் மேதகு ஆளுநர் உரையில் எனது ஓசூர் தொகுதியில் cutflower--மலர்கள் ஏற்றுமதிக்காக தமிழகத்தில் முதன் முதலாக மலர்கள் ஏற்றுமதி வர்த்தக மண்டலம் உருவாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக எனது சார்பிலும், எங்கள் தொகுதி விவசாயிகள், பொது மக்கள் சார்பிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே கிராமக் குளங்களைச் சீரமைக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். முன் எப்போதையும்விட கடுமையான குடிநீர்ப் பிரச்சினையை நாம் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். தமிழக அரசு மழை நீரைச் சேகரிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி மக்களுக்குப் பல திட்டங்களின் மூலம் விளக்கி வருகின்றது. அதனையும் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இயற்கையாகவே மழை நீர் சேகரிக்கப்படும் இடமாக விளங்கி வந்த ஏரிகள் குளங்களின் தற்போதைய நிலை என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டும். கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஏரிகளும், குளங்களும் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தன. அதனால் அவைகளில் நீர் நிரம்பி பொது மக்களுக்குக் குடிநீராகவும், விவசாயத்திற்கும் பயன்பட்டது. ஆனால் காலப்போக்கில் ஏரிகளை அரசாங்கத் திட்டங்களுக்கு, அதாவது பஸ் நிலையங்கள், ஸ்டேடியங்கள், வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்ட எடுத்துக் கொண்டதன் விளைவாகவும், நில ஆக்கிரமிப்பாளர்களால் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு விற்கப்பட்ட காரணங்களாலும், ஏரி, குளங்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைந்துவிட்டது. மிகப் பெரும் நீர் ஆதாரமாக விளங்கிய ஏரிகளும், குளங்களும் பாதுக்காக்கப்பட வேண்டும். ஆக்கிரமிப்பாளர்களை அகற்றிட தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காகப் புதிய சட்டம்கூட போடலாம். குறிப்பாக, எனது ஓசூர் தொகுதியில் மிகப் பெரிய ஏரிகள் பல உள்ளன. இவற்றில் தூர் எடுத்து குறைந்தது 25, 30 வருடங்கள் இருக்கும். பேரிகை, காளிங்கவரம், காருகனபள்ளி ஆகிய ஊர்களில் உள்ள மிகப் பெரும் ஏரிகளின் கரைகள் உடைந்து பல மாதங்களாகின்றன. ஆனால் இதுநாள் வரை அவை சீரமைக்கப்படவில்லை. இவற்றை உடனடியாகச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

[திரு. கே. கோபிநாத்] [2002 ஏப்ரல் 16

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதிய உத்வேகத்தைப் பெறும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பல திட்டங்களை அறிவித்துள்ளதை நான் வரவேற்கிறேன். ஊரக வளர்ச்சியிலும் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மகளிரின் பங்கு மகத்தானது என்பதை உணர்ந்து அவர்களின் மேம்பாட்டிற்காக அவர்கள் பயிற்சி பெறுவதற்காகக் கட்டடங்கள் கட்டும் திட்டத்தை வரவேற்கிறேன்.

இயல்பாகவே பெண்கள் சுயமுனைப்பு உள்ளவர்கள். தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகப் பெண்கள் எந்தவித சுய கௌரவத்தையும் பாராது உழைப்பது நம்து நாட்டில் தொன்றுதொட்டு வரும் பழக்கம். உதாரணமாக, தெருக்களில் இட்லி கடை, காய்கறிக் கடை, அதேபோல் பால், தயிர், காய்கறிகள் என்று பல வியாபாரங்கள் பெண்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இவையெல்லாம் யாரும் சொல்லிக் கொடுத்து அவர்கள் செய்வதில்லை. அப்படிப்பட்ட பொறுப்பும் திறமையும் உழைப்பும் வாய்ந்த பெண்களுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் முறையான பயிற்சி கொடுக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டால், அவர்களால் பல சாதனைகள் செய்ய முடியும். குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைந்துள்ள அந்தந்தப் பகுதிகளில் என்னென்ன விளைபொருட்கள் உற்பத்தியாகின்றனவோ, மூலப்பொருட்கள் கிடைக்கின்றனவோ அவற்றை அடிப்படையாக வைத்து செய்யப்படும் தொழில்களை ஊக்குவிக்க வேண்டும். அதற்குத் தேவையான பயிற்சி, பொருளாதார வசதி, விற்பனை வசதிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும். குறிப்பாக, காய்கறிகள், பழங்கள் மற்றும் அழுகு பொருட்களை உற்பத்தி செய்யும்போது, அவற்றைக் கெடாமல் பாதுகாக்க cold storage-குளிரூட்டும் வசதி செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அவற்றின் உள்நாட்டு விற்பனை, ஏற்றுமதி மூலம் விற்பனை ஆகிய அம்சங்கள் தினம் பிரிக்கப்பட்டு அவற்றுக்கான திட்டங்கள் செயல்படுத்த வேண்டும். விற்பனை, உற்பத்திகளைப் பற்றிய பயிற்சி, ஏற்றுமதி பற்றிய பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இணைய தள சேவையை விரிவுபடுத்துவதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.77.00 இலட்சத்திலிருந்து ரூ.82.00 இலட்சமாக உயர்த்தியதை நான்



2002 ஏப்ரல் 16] [திரு. கே. கோபிநாத்]

வரவேற்கின்றேன். அதனை ரூ.1 கோடியாக உயர்த்தினால் இன்னும் தொகுதி மக்களுக்குச் சிறப்பான முறையில் சேவை செய்ய ஏதுவாக இருக்கும்.

சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு குறிப்பி[illegible] தொகையை Trauma care அதாவது விபத்தில் பாதிக்கப்பட்டவர்[illegible] உடனடியாகச் சிகிச்சை அளிக்கும் வகையில் தேவையான ச[illegible] பொருந்திய ஆம்புலன்ஸ் ஒன்று இயங்க ஒதுக்க வேண்டும். அதில் முதலுதவி சிகிச்சை அவசர சிகிச்சையில் தேர்ச்சி பெற்ற ஒருவரைப் பணியமர்த்த வேண்டும். இந்த ஆம்புலன்ஸ் உதவியை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் செயல்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** (தெலுங்கில் பேசினார்) இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** (தெலுங்கில் பேசினார்.) †மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இன்னும்கூட பெண்கள் போதுமான துப்புரவு, கழிப்பிட வசதிகள் இல்லாமையால் மிகவும் அவதிப்படுகின்றனர். இவர்களின் பொதுச் சுகாதாரம், குடும்ப நலம் மேம்படும் வகையில், ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டும் திட்டத்தை வரவேற்கிறேன். அதேபோல, தமிழக அரசு இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டப் பணிகளை மிகச் சிறப்பாக செயல்படுத்தியதன் விளைவாக சாதாரணமாக வரவேண்டிய ஒதுக்கீட்டைக் காட்டிலும் கூடுதலாக ரூ.11.16 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது மிக மகிழ்ச்சி அளிக்கிறது. அன்னை இந்திராவின் பெயரில் அமைந்துள்ள இத்திட்டத்தினை இந்த அரசு இன்னும் முனைப்பாகச் செயல்படுத்தி, இன்னும் கூடுதலாக மத்திய அரசின் ஒதுக்கீட்டைப் பெற ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதியில் படித்து வேலையில்லாத இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டம் அமலாக்கப்படும் என்பதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் எனது ஓசூர் தொகுதியில் பல பெரிய, நடுத்தர, சிறிய தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில்

† உறுப்பினரின் தெலுங்கு உரையின் தமிழாக்கம்

[திரு. கே. கோபிநாத்] [2002 ஏப்ரல் 16

பணியாற்றும் பெரும்பாலோர் வெளி மாவட்டங்களை, வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களே. இங்கு அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் தொழில் நுட்பப் பணியாளர்களை இப்பகுதி இளைஞர்களிடமிருந்தே உருவாக்க பயிற்சி மையங்களை ஏற்படுத்த இந்த அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

ஓசூர் வளர்ந்து வருகின்ற பகுதி. எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கை குடிநீர் வசதி. எங்கள் பகுதிக்குத் தேவையான குடிநீரை ஓசூரிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ள அத்திப்பள்ளியிலிருந்து காவிரி குடிநீரைப் பெறும் திட்டத்தினை உடனடியாகச் செயல்படுத்தவேண்டும்.

ஒகேனக்கல்லிலிருந்து காவேரி குடிநீர்த் திட்டம் ஓசூர் நகருக்குச் செயல்படுத்த தொகையும், காலமும் மிக அதிகமாகும். அதனால் அத்திப்பள்ளி வரை செயல்படுத்தப்படும் கர்நாடக அரசின் காவிரி குடிநீர்த் திட்டத்தை ஓசூருக்குக் கொண்டுவர கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுகிறேன்.

ஓசூரில் செயல்பட்டு வரும் நகரசபை ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்த நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அமரர் ராஜீவ் காந்தி அவர்களால் பெரிதும் வலியுறுத்தப்பட்ட பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின்படி இன்னும் பல துறைகளிலும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டுகிறேன். எனது தொகுதியில் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளைச் சீரமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். ஓசூர் சிப்காட் பகுதியில் ஜீஜ்வாடி, முக்கண்டபள்ளி ஆகிய இரண்டு ஊராட்சிகளின் தகுதியினை உயர்த்த வேண்டுகிறேன். இதுபோன்று நிர்வாகச் சீர்கேடு மிகுந்துள்ள ஓசூர் நகரசபையினை கண்காணித்துச் சீரமைக்க வேண்டுகிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள ஏரிகள், குளங்கள் மூலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு வருவாயைத் தரும் மீன்வளர்ப்புத் திட்டங்கள் தற்போது Fisheries Department கட்டுப்பாட்டில் உள்ளது. பல இடங்களில் மீன்வளத் துறையினர் ஒரு சிலருக்கு மட்டும் பயிற்சி கொடுத்து, அவர்கள் மூலம் ஏரி குளங்களில் மீன் வளர்த்து, அதனை அவர்களே குறைந்த தொகைக்கு ஏலம் விடுகின்ற போக்கு தற்போது



2002 ஏப்ரல் 16] [திரு. கே. கோபிநாத்]

காணப்படுகிறது. இம்முறையைக் கட்டுப்படுத்தி உள்ளாட்சி மன்றங்களே மீன் பிடிக்க ஏலம் விடும் உரிமைகளை வழங்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

Hosur New Town Development Scheme சுமார் 6.00 கோடி ரூபாயில் செயல்படவுள்ளது. அதனைச் சீராகவும், சிறப்பாகவும் செயல்படுத்தவும், நகர வளர்ச்சியும், பொது மக்களுக்கு வசதியும் உடனடியாகக் கிடைத்திடவும் தகுந்த திறமை வாய்ந்த தனி அதிகாரியை நியமித்து இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் சட்டமன்றத் தொகுதியில் இருக்கும் பேரிகை கிராமம் இப்போது நகரச் சூழ்நிலைக்கு வந்துள்ளது. சுமார் 35,000 மக்கள் தொகை கொண்ட இந்நகரத்தில் பெண்கள் மிகவும் அதிகமாக உள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் பேரிகை நகரத்தின் மருத்துவ மனையில் பெண் மருத்துவர் ஒருவர்கூட இல்லை. எனவே, பெண்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளதால், பெண்களுக்காக மருத்துவம் செய்ய ஒரு பெண் மருத்துவரை பணியில் நியமிக்க உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகிறேன்.

மேலும் தகவல் தொழில்நுட்பம் நமது அண்டை மாநிலமான பெங்களூரில் மிகவும் பிரபலமாக உள்ளது. அதே சூழ்நிலையைக் கொண்ட நமது தமிழகத்தில் உள்ள ஓசூர் மாநகரில் ஒரு தகவல் தொழில் நுட்ப மையத்திற்கு ஏற்பாடு செய்தால் நமது மாநிலத்திற்கும், மக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் எனத் தெரிவித்து ஓசூர் மாநகருக்கு ஒரு தகவல் தொழில் நுட்ப மையம் ஏற்பாடு செய்து தர வேண்டுகிறேன்.

எனவே, இந்த அவையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது கோரிக்கைகளை ஏற்று, எனது தொகுதி மேம்பாட்டிற்கு உதவிடுமாறு தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, எனது சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும், அவருக்கு மீண்டும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) திரு. பரிதி, இதிலே என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர்?

## 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) ஓர் உறுப்பினரது தெலுங்கு உரைக்கு மொழிபெயர்ப்பு வழங்கக் கோரியது

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுந்தரத் தெலுங்கில் உரையாற்றினார். அது அவருடைய உரிமை. நன்றாக, அருமையாகப் பேசினார். நீங்கள்கூட மணியடித்து ஏதோ சொன்னீர்கள். ஆனால் எங்களுக்குப் புரியவில்லை. எனவே, இதுமாதிரி பேசும்போது மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5 ஆண்டு காலம் துணை சபாநாயகராக இருந்திருக்கிறீர்கள். நம்முடைய சட்டமன்ற விதிகளைப் பாருங்கள். சட்டமன்ற விதிகளிலே, ஒருவர் தெரிந்த மொழியிலே பேசலாம் என்றிருக்கிறது. அதனால் ஒன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் செல்வி க. பாலபாரதி. (குறுக்கீடு) ஸ்கிரிப்ட்டை கொடுத்து விட்டுத்தான் பேசுகிறார்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2002-2003 விவாதமும் வாக்கெடுப்பும்-*தொடர்ச்சி*

### கோரிக்கை எண் 33-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை.

### கோரிக்கை எண். 40- ஊரக வளர்ச்சித் துறை—*தொடர்ச்சி*

**செல்வி க. பாலபாரதி;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துகளை இந்த மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். சென்னையில் கடந்த காலங்களில் கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பது நிலவியது. இங்கே இருக்கக்கூடிய மக்கள் கடிதம் எழுதுகிறபோது, நலம், நலமா என்று எழுதுவதற்குப் பதிலாக, ஜலம், ஜலமா என்று எழுதக்கூடிய அளவிற்கு பத்திரிகைகள், எல்லாம் துணுக்குகள் எழுதிக் கொண்டிருந்த நிலையை மாற்றி, இன்றைக்குக் குடிநீருக்கான சில அறிவிப்புகளை இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.



பிற்பகல் 1-05

ஆண்டிப்பட்டியைக்கூட அதிர்ஷ்டக்காரத் தொகுதி என்று புகழக்கூடிய அளவிற்கு அல்லது இதரத் தொகுதி மக்கள் ஓர் ஏக்கம் அடையக்கூடிய அளவிற்கு குடிநீர்ப் பிரச்சினையிலே ஒரு நல்ல நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது. ஆனால் அதேசமயத்தில், திண்டுக்கல் போன்ற பகுதிகளில் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை என்பது நிலவிக் கொண்டிருக்கிறது என்பதனை நமது உள்ளாட்சித் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. கடந்த 100 ஆண்டுகாலமாக தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீரால் பாதிக்கப்பட்டு, நிலத்தடி நீர் என்பது இன்றைக்கு விஷமுள்ள ஒரு தன்மையோடு மாறிக் கொண்டிருக்கிறது. விவசாய விளை நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் காமராஜர் அணையிலே குடிப்பதற்கான தண்ணீர் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நகராட்சித் தலைவரும், அந்த ஆணையாளர் அவர்களும், ஆதிபராசக்தி மகளிர் மன்றத்தை அழைத்துக் கொண்டு சென்று, யாகம் நடத்தக்கூடிய அளவிற்கு அந்த அணையிலே தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது என்று பத்திரிகைகளிலே செய்திகள் வருகின்றன. ஆகவே, அந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை என்பது, 14 நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் வருகிறது. இத்தகைய நிலையில், காவிரி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக குடிநீர் வடிகால் வாரியம் கடந்த காலங்களிலே ஆய்வினை மேற்கொண்டது. ஆனால், அந்த ஆய்வு என்பது நிறைவு செய்யப்பட்டதா, இல்லையா என்பதுகூட இன்றைக்கும் அரசுக்குத் தெரியவில்லை. ஆகவே, காலத்தில் செய்யப்பட வேண்டிய ஒரு வேலையில் இதுபோன்று கவனக் குறை என்பது நீடித்துக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, வைகை அணையிலிருந்து நேரடியாகத் தண்ணீர் கொண்டு வருவது, திண்டுக்கல் பகுதி மக்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். ஆகவே, இந்தக் காவிரி குடிநீர்த் திட்டத்தையும், வைகை குடிநீர்த் திட்டத்தையும் இந்த அரசாங்கம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்றுதான், உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது நிறைவேற்றப்படக்கூடிய, இயக்கிப் பராமரிக்கும் பணிகளைத் தனியார் மயமாக்குகிறோம் என்ற வரிகள் இதிலே குறிக்கப்பட்டிருக்கின்றன. குடிநீர் விநியோகப் பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

இன்றைக்குத் தனியாருக்கு விடக்கூடிய நிலைமை என்பதும் இருக்கிறது. இது எதிர்காலத்தில், குடிநீரை வியாபாரப் பொருளாக மாற்றிவிடக்கூடிய தன்மையோடு இணைந்தது என்பதனால், அத்தகைய காரியத்தை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், மகாராஷ்டிரா மாநிலத்தில், ஏரிகளையும் குளங்களையும் தனியாருக்குக் குத்தகைக்கு விட்டு, இன்றைக்கு தனியார் நிறுவனங்கள் தண்ணீரை விற்றுக் கொண்டிருக்கின்றன. இதுகூட, உலகமயமாதலினுடைய கொள்கையினுடைய விளைவுதான். ஆகவே, குடிநீரை வியாபாரப் பொருளாக மாற்றுவதைத் தடுக்கக்கூடிய விதமாக, குடிநீர் வடிகால் வாரியம் என்பதைத் தனியாருக்குக் கொடுக்காமல், அந்தப் பணியைச் சிறந்த முறையிலே அரசு மேற்கொள்ள முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்றுதான் 10,000 மணி நேரம் ஓடியிருக்கக்கூடிய, 10 ஆண்டுகள் இயங்கியிருக்கக்கூடிய ஆழ்துளைக் கருவிகளை 'condemn' செய்து, இன்றைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உத்தரவிட்டு இருக்கிறது. ஆனால், கடுமையான வறட்சி ஏற்பட்டு இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், புதிய ஆழ்துளைக் கருவிகளை வாங்குவதற்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா அல்லது பழைய கருவிகளைப் பயன்படுத்துவதற்கான திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பது பற்றி தெரியப்படுத்தவில்லை. ஆகவே, ஒரு வறட்சியான சூழ்நிலையில் இதுபோன்ற பணிகளைக் கவனிப்பது குறித்து, இந்தக் கோரிக்கை நூல் குறிப்பில் எதுவும் குறிப்பிடப்படாதது கவலை அளிக்கின்றது என்பதனை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று உள்ளாட்சி அமைப்புகளில் மின் கட்டணப் பாக்கி, கிட்டத்தட்ட பல உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்த முடியவில்லை. கடந்த காலத்தில் அவர்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கப்படாததன் காரணமாக தெருக்களில் இன்றைக்கு மின் விளக்குகள் எரியாமல், மின் கட்டணம் செலுத்த முடியவில்லை என்று குக்கிராமத்து பஞ்சாயத்து நிர்வாகங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கான நிதியை உடனடியாக அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோன்று குடிநீர் விநியோகப் பணியாளர்களுக்கு ஊதியம் கிடைக்காததனால், தண்ணீர் எடுத்து விடக்கூடிய சாதாரணப் பணியாளர்கள் வீட்டிற்கு மூன்று ரூபாய் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றுகூட உள்ளாட்சி



அமைப்புகளுடைய பிரதிநிதிகள் புகார் தெரிவிக்கிறார்கள். அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 1-10

12 கிராமங்கள் பஞ்சாயத்துக்களில் இருந்தால் 4 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே இருக்கிறார்கள். எப்படி கிராமப்புறங்களைத் துப்புரவு செய்ய முடியும்? ஆகவே, துப்புரவுப் பணியாளர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியிலான முடிவினை மேற்கொள்ள வேண்டும். அதோடு, துப்புரவுப் பணியாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியோடு அதிகாரமும் சேர்ந்து வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து குடிநீருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இந்த ஆண்டு 2002-2003 ஆம் ஆண்டிலாவது அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான கட்டடங்கள் சில இடங்களில் தேவைப்படவில்லை. தன்னிறைவு பெற்றிருக்கின்றது. துப்புரவு வளாகங்கள்கூட சில இடங்களிலே தன்னிறைவுப் பெற்றிருக்கின்றன. மீண்டும் மீண்டும் மக்களுக்குத் தேவை இல்லாத அல்லது தன்னிறைவு அடைந்த காரியங்களுக்கு அரசினுடைய பணத்தை, நிதியை நாம் வீண் விரயம் செய்ய வேண்டியதில்லை. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக, இந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தால், இதரப் பணிகளுக்கும், குறிப்பாக குடிநீருக்கு முன்னுரிமை கொடுங்கள் என்ற ஒரு திருத்தத்தை நீங்கள் கொண்டு வருவது உதவி சேர்க்கும் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்றுதான் நம்முடைய உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களுடைய பணிகளிலே Contract System என்பது இருக்கிறது. இது Contract Systemமா, Commission Systemமா என்றே தெரியவில்லை. இவ்வளவு நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் இன்றைக்கு பல இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் முறையாக அந்தப் பணிகளிலே ஈடுபடுத்துவதற்கு ஒரு

[செல்வி க. பாலபாரதி] [2002 ஏப்ரல் 16

கண்காணிப்புக் குழு என்பது தேவைப்படுகிறது. நான் மீண்டும் மேற்கு வங்க மாநிலத்தை நல்ல உதாரணமாக இருப்பதனால் நான் சுட்டிக்காட்டுகிறேன். வேறு நோக்கமல்ல.

மேற்கு வங்க மாநிலத்தில் 20 இலட்சம் ரூபாய்க்குச் சாலைப் போட வேண்டுமென்று திட்டம் தீட்டி, அதனைக் கிராமப்புற மக்களின் பங்கேற்போடு 10 இலட்சம் ரூபாய்க்கு முடித்து விடுகிறார்கள். 6 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்கு தமிழகத்திலே ஆகிறது. ஆனால், மேற்கு வங்க மாநிலத்தில் 3 இலட்சத்திலே முடிக்கிறார்கள். ஆகவே, அரசினுடைய நிதி என்பது ஒரு நேர்மையான முறையிலே, மக்களுடைய பங்கேற்போடு செயல்படுத்தினால், அந்தத் திட்டங்கள் மக்களுக்கு நேர்மையான முறையிலே சென்று சேரும். ஆகவே, இந்தப் பணிகளின்மீது கண்காணிப்புக் குழுக்களை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 6 கோடி ரூபாயை அவர்களுடைய பணிகளுக்குக் கொடுப்பதற்கு ஏற்கெனவே அரசாங்கம் வாக்குறுதி கொடுத்திருந்தது. ஆனால், அந்த 6 கோடி ரூபாய் இதுவரை தரப்படவில்லை. அந்த 6 கோடி ரூபாயை வழங்கவேண்டும். குடிநீருக்காகக் கட்டப்பட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்ற கோரிக்கையையும் இணைத்து நான் சொல்லிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, கோவை மாநகராட்சியில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முன்வர வேண்டும். 25 சதவிகிதம் அபிவிருத்திக் கட்டணம் கட்டினால், அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும். 10 சதவிகித பொது ஒதுக்கீட்டிற்கான தொகையை முற்றிலுமாக இரத்து செய்யப்பட முன்வரவேண்டும்.

1993ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி அபிவிருத்திக் கட்டணம் கட்ட கால நீட்டிப்பை 2002 டிசம்பர் வரை நீட்டித்துத் தரவேண்டும். 5 ஆயிரம் ரூபாய் கட்டணம் செலுத்தும் அனைத்துக் குடியிருப்பு மனைகளுக்கும் குடிநீர் இணைப்புக் கொடுக்க முன்வரவேண்டும். உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கு மீண்டும் ஒரு முறை கூடுதல் அதிகாரங்கள் வழங்குவதற்கும், நிதிஆதாரத்தை அதிகரிப்பதற்கும் முன்வரவேண்டும்.



2002 ஏப்ரல் 16] [செல்வி க. பாலபாரதி]

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி பிற நகராட்சிகளைக் காட்டிலும் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. அங்கே குடிநீர் உள்ளிட்ட அடிப்படைப் பணிகளுக்காக இன்னமும் தமிழக அரசாங்கத்திடம் நிதி கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நிதியை வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த மானியக் கோரிக்கை மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் குடிநீர்ப் பிரச்சினைக்கு அரசு போதிய முக்கியத்துவம் செலுத்தவேண்டும். கடந்த காலங்களில் காங்கிரஸ் ஆட்சியின்போது காமராஜர் அணைத் திட்டமும், கடந்த காலத்திலேயிருந்த அ.தி.மு.க. ஆட்சியின்போது பேரணைத் திட்டமும், இரண்டு திட்டங்கள் மட்டுமே நிறைவேற்றப்பட்டன. அதற்கு பின்னால் இருந்த ஆட்சியில் (மணியடிக்கப்பெற்றது) அந்தக் குடிநீர்த் திட்டம் என்பது நிறைவேற்றப்படாமல் ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக உருவாகிக் கொண்டிருப்பதனால்தான் மீண்டும் இந்தக் குடிநீரை வழங்குவதற்கான முயற்சியில் காவிரி குடிநீர்த் திட்டத்தையும், வைகை குடிநீர்த் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. த. ஆறுமுகம்.

***திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு"

என்ற வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப, அன்பு அறிவு, செயலாற்றும் திறன், ஏழையெளியவர்களுக்கு உதவும் குணம் ஆகிய நான்கு பண்புகளையும் நிலையாகப் பெற்றிருக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையின்கீழ் அமைந்த இந்தப் பொற்கால ஆட்சியின் 2002-2003 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கை ஆன்றோரும், சான்றோரும், கற்றோரும் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களும் போற்றுகின்ற வகையிலே அமையப் பெற்றமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. த. ஆறுமுகம்] [2002 ஏப்ரல் 16

பிற்பகல் 1-15

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீ நிற்கும் உலகு"

என்ற குறளுக்கேற்ப குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றுகின்ற வகையில் வரலாற்றிற்கு ஒரு திருப்பம் தருகின்ற வல்லமையோடு ஆட்சி நடத்துகின்ற இந்தியப் பெண்மையின் எழுச்சி வடிவமாம் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் இம்மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டினுடைய முதுகெலும்பாகத் திகழும் கிராமங்களில் வாழும் மக்களுக்கும் நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்கும் நிர்வாகத்திற்கும் நேரடித் தொடர்பை ஏற்படுத்துவது உள்ளாட்சித் துறை. இந்த உள்ளாட்சித் துறை அமைப்புகள் மூலம் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுடைய தேவையையும் தமிழக அரசு நிறைவேற்றி வருகின்றது. மேலும், தமிழகத்தில் உள்ள 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள், 611 பேரூராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகள் மக்களுடைய அடிப்படைத் தேவைகளான சுகாதாரம், கல்வி, குடிநீர் போன்ற பல்வேறு தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் பணிகளைச் செய்து வருகின்றன. நிதி ஆதாரப் பகிர்வு 58:42 என்ற வகையில் பிரித்தும், இந்த நிதி ஆதாரப் பகிர்வு நகர்ப்புறங்களில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் என்ற அடிப்படையிலே 31:34:35 என்ற அடிப்படையில் பிரித்து, அதன் மூலமாக கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகள் முறையே 47:45:8 என்ற விகிதத்திலும் உள்ளது. இவை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்தத் திட்டத்திற்கு எவ்விதமான குளறுபடி இல்லாமல் சிறப்பாக அமையப் பெறுவதற்கான சூழ்நிலையை வகுத்தது.

அது மட்டுமல்லாமல், தமிழகம் சிறந்து விளங்க வேண்டும் என்ற அடிப்படையில், இந்திய அரசியலுக்கு புது வடிவம் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில், சபதம் கொண்டு அஞ்சா நெஞ்சுடன், எதிர்நீச்சல் போட்டு, வெற்றிமாலை சூடி, தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் ஒப்புதல் கையெழுத்திட்ட முதல் கோப்பு ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக ஏழை எளிய மக்கள் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் பயன் அடைகின்ற வகையிலே



2002 ஏப்ரல் 16] [திரு. த. ஆறுமுகம்]

அமையப் பெற்றதாகும். இத்திட்டத்தின் மூலமாக தமிழகத்திலுள்ள ஊரகப் பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். குடிநீர் வடிகால் வாரியம் உடனே இதனைச் செயல்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மத்திய அரசு நிறுவனமான ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து 158 கோடி ரூபாய் கடனாகப் பெற்று செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 98 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ள சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டமும் அடங்கும்.

மேலும் ஒவ்வொரு மழைத் துளியும் சேமிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதைத் தலையாய கடமையாக கருத்தில் கொண்டு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முழு மூச்சாக இத்திட்டத்தை செயல்படுத்த முனைந்துள்ளது. அதற்காக தமிழகத்தில் கட்டட உரிமம் பெறுவதற்கு மழைநீர் சேகரிக்கும் அமைப்புகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து அரசு கட்டடங்களிலேயும் மழை நீர் சேகரிக்க திட்டங்களை நிறைவேற்றி ஆணை பிறப்பித்தது.

அது மட்டுமல்லாமல் தமிழகத்தில் வீட்டு பயனுக்காகவும் தொழிற்சாலைகள் மற்றும் வேளாண்மைக்காகவும், நீர்ப்பற்றாக்குறை உள்ள ஊரகப் பகுதிகளில் 2001-2002 ஆம் ஆண்டில் நிலமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய 4,389 சிறு விசைப் பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. இதற்காக மகளிர் அளித்த உற்சாகமான வரவேற்பைக் கருத்தில் கொண்டு, அடுத்த நிதியாண்டில் 8,000 கைப்பம்புகளை விசைப் பம்புகளாக மாற்றவும், 6,500 ஊரக குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி இருக்கின்றார்கள்.

மேலும், சென்னை பெருநகரின் ஒட்டுமொத்த நலனுக்காக குடிநீர் நிலைமை சீரடைய நாள் ஒன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் நீரைச் சுத்திகரிப்பதற்காக செம்பரம்பாக்கத்தில் நிலையம் உருவாக்கப்பட இருக்கிறது.

மேலும் 270 கோடி ரூபாய் செலவில் வகுக்கப்பட்டுள்ள அவினாசி-அத்திக்கடவு குடிநீர் வழங்கல் திட்டம் படிப்படியாக நிறைவேறுவதற்கான நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-20

மேலும் சென்னைப் பகுதியை ஒட்டியிருக்கின்ற திருவொற்றியூர் பகுதியில் இருக்கின்ற அனைத்து மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் தொழிற்சாலைகள் நிறைந்து இருக்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கின்ற அனைத்து மக்களுடைய பிரச்சினைகளில் குடிநீர்ப் பிரச்சினை தலையாய பிரச்சினையாக இருக்கிறது. தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள பகுதியாக இருப்பதால், MRF, MFL, TPL, EID Parry, Ashok Leyland, Ennore Foundries போன்ற பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் மூலமாக அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் முழுமையாக பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக் கழிவுகள் அனைத்தும் பூமியில் படிந்து அந்தப் பகுதியில் உள்ள ஏழை, அடித்தள மக்கள் மிகவும் பாதிக்கப்படுக்கின்ற வகையில் நிலைமை இருக்கிறது. 30, 35 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் பற்களில் மஞ்சள் கரை படிந்தும், அதற்கும் மேலாக அவர்களுக்கு எலும்புருக்கி நோய் ஏற்பட்டு, பாதிக்கின்ற வகையில். கை, கால் ஊனமுற்று இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இவற்றைத் தவிர்க்கும்பொருட்டு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே சுற்றுச்சூழலால் மக்கள் பாதிக்கப்படாத வகையில் நிலைமையை மாற்றி, ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்றார் திருவள்ளுவர். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழிக்கேற்ப, தமிழக மக்கள் யாவரும் நோயற்று வாழவும், ஏழைகள் மற்றும் வசதி வாய்ப்பற்றோர் நலனில் சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில், எளிதில் பெறத்தக்கதும், முழுமையானதுமான சுகாதாரப் பாதுகாப்பை, இந்திய மருத்துவ முறையின்மூலம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு தந்த டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் வழியில் நடக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் இரண்டாவது கையொப்பம் இட்ட மகத்தான திட்டம் என்னவென்றால், தமிழகத்திலே ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் ஊட்டசத்து அளிக்கும் திட்டம் குறித்ததாகும். இதனால் அடுத்த நான்காண்டுகளில் அனைத்துக்



குழந்தைகளும் ஊட்டச் சத்தைப் பெற்று நிறைவடைகிற வகையில் மாற்றி, தமிழகத்தை ஊட்டச் சத்துக் குறைவற்ற மாநிலம் என்ற இலக்கை அடையச் செய்வது என்பதுதான் எங்கள் அம்மா அவர்களின் பொற்கால அரசின் தலையாய திட்டமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஊரகப் பகுதிகளில் ஏற்படும் சுகாதாரக் கேடுகளை நீக்க பல திட்டங்களைத் தீட்டுவது மட்டுமல்லாமல், அதனைச் செயல் படுத்தும் வழிமுறைகளையும் தரமான சுகாதாரப் பாதுகாப்பை அரசு வகுத்துக் காட்டியுள்ளது. எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கூறுகின்ற பெருமை என்னவென்றால், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிக்குள், 1000--க்கு 19.3 என்ற அளவிலுள்ள பிறப்பு வீதத்தை 1000-க்கு 15 என்றும், 1000-க்கு 52 என்ற அளவிலும் சிசு இறப்பு வீதத்தை 1000-க்கு 28 என்ற அளவிலும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறைக்க உள்ளார்கள். ஒரு இலட்சம் பிறப்பிற்கு 140 இறப்பு என்ற அளவிலுள்ள பேறுகால இறப்பு வீதத்தை ஒரு இலட்சத்திற்கு 100க்கு குறைவாகவும், 1000--க்கு 8 என்ற அளவிலுள்ள இறப்பு வீதத்தை 1000-க்கு 6 என்றும் குறைக்க டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இலக்கினை நிர்ணயித்து இருக்கிறார்கள்.

எங்களுடைய திருவொற்றியூர் தொகுதியைச் சேர்ந்த எண்ணூர் பகுதியில் இருக்கின்ற அனைத்து கிராம மக்களுக்கும் சுமார் 50,000-க்கு மேற்பட்ட மக்களுக்கும் அடிப்படைத் தேவையாக இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக—முழுமையாகச் சொல்லப்போனால் அந்தப் பகுதி மக்களுடைய தலையாய பிரச்சினையாக இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 25 இலட்சம் லிட்டர் நீரை குடிநீருக்காக கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையின்போதுகூட நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் திருவொற்றியூர் நகரம், எண்ணூர், கத்திவாக்கம், மாதவரம் ஆகிய நகரங்களுக்கு அதிகப்படியான குடிநீரை வழங்குவதாக அறிவித்தார்கள். ஆனால் இதுவரையிலும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. த. ஆறுமுகம்] [2002 ஏப்ரல் 16

மேலும் மாற்று— புதுமைக் கல்வித் திட்டம் என்ற அடிப்படையில், வானம் பார்த்து வாடுகின்ற பயிர்களுக்கு வசந்தமே வந்ததுபோன்று திட்டங்கள் இருக்கின்றன. இன்றைய குழந்தைகளே நாளை நாட்டை ஆளும் தூண்கள். அந்தத் தூண்கள் வலிவுடனும் அறிவுடனும் திகழ அம்மா அவர்கள் ஏற்படுத்திய இந்தத் திட்டத்திற்கு நிகரேதும் நிச்சயம் இல்லை என்று கூறி பெருமைப்படுகிறேன். இதன் மூலம் 61,305 குழந்தைகள் பயன் அடைவர். மேலும் ஊரக மற்றும் நகர்ப்புற மாணவ மாணவியரின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டிய உயர்ந்த நோக்கத்துடன் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் கணிப்பொறி மயமாக்கல் மற்றும் கணிப்பொறி மூலம் கல்வி புகட்ட போன்ற மகத்தான திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஊரக மற்றும் நகர்ப்புற ஆரம்பப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளான கட்டடங்கள் அமைத்தல், ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல், பயிற்சி மையங்கள் அமைத்தல், குடிநீர் வசதி அமைத்துத் தருதல், சுகாதார அமைப்புகளுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகியவை சிறப்பான திட்டங்களாகும். இவையெல்லாம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணத்தில் உதித்த முத்துக்களாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 1-25

அடுத்து, சிறுதொழில்கள். கிராம மக்களுடைய அடிப்படை தேவைகளான ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சிறுதொழில் என்ற அடிப்படையில் ரூ.1 கோடி செலவில் திட்டத்தை வகுத்துத் தந்திருக்கிறார்கள். கிராமம் முதல் நகரம் வரை, கற்றவர் முதல் கல்லாதவர் வரை, குடிசை முதல் கோபுரம் வரை, 'உழைத்து வாழ வேண்டும், பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே' என்ற டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தை வலியுறுத்தும் வகையில், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆங்காங்கே சிறுதொழில் பயிற்சி மையங்களை நிறுவியும், அச்சிறுதொழில்கள் புத்துயிர் பெறும் வகையில், அதனைப் பதிவு செய்ய இணையதளம் வழியாக சான்றிதழ் வழங்கியும், இந்தியாவிலேயே முதன்முறையாக அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அறிமுகப்படுத்தியுள்ளதை எண்ணி உளம் மகிழ்கின்றேன்.

மேலும், தமிழகத்தில், ஊரகப் பகுதிகளில் நிலவி வரும் வறுமையை அகற்றவும், அதன் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், ஊரக மக்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும்,



2002 ஏப்ரல் 16] [திரு. த. ஆறுமுகம்]

அவர்கள் சுய வேலைவாய்ப்புகளை தாமே உருவாக்கிக் கொள்ளவும், அனைத்து உதவிகளையும் செய்வதே அரசின் தலையாய கொள்கையாகும். அதற்காக, தமிழகத்திலுள்ள 385 ஒன்றியங்களில் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் ஒரு கோடி முதலீட்டில், தொழிற்சாலை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஏழை மக்கள் மற்றும் நடுத்தர மக்கள், ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர்கள், பழங்குடியைச் சார்ந்தவர்கள், அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில், இந்தத் திட்டம் சிறப்புப் பெற இருக்கிறது.

மேலும், 'கொடுத்துச் சிவந்த கொடை வள்ளலாம் என் அன்னையின் கரங்கள்; அதில் பயனடைந்து மகிழ்ந்தன, உலகின் உயிரூட்டமாம் உழவர் மனங்கள், என்று சொன்னால் மிகையாகாது.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும்
உழவே தலை"

என்பதற்கு ஏற்ப, உழவர்களுடைய வேளாண் துறை வளர்ச்சி, தோட்டக் கலை வளர்ச்சி, பலரும் போற்றுகின்ற வகையிலே அமையப் பெற்றிருக்கிறது. மேலும், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் சேமிப்பில் கவனம் ஆகிய முத்தான திட்டங்களைச் செயல்படுத்தும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டாத விவசாயிகளே இருக்க முடியாது. மேலும், தமிழ்நாடு, நெல் உற்பத்தி செய்யும் மாநிலங்களிலே ஒரு முக்கியமான மாநிலமாக இருப்பினும், கதிர் அடிக்கும் களங்கள் வசதி போதுமானதாக இல்லாததால், மக்கள் நெடுஞ்சாலைகளை கதிர் அடிக்கும் களமாகவும், தானியங்களை உலர்த்தும் களமாகவும் பயன்படுத்துகின்றனர். விவசாயிகளுக்கான இந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக, மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலேயும், ஊராட்சிக்கு ஒன்று வீதம் கதிர் அடிக்கும் களம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது; இது புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்தில் உதித்த முத்தாகும். முதற்கட்டமாக, 2002-2003 ஆம் ஆண்டில் (மணியடிக்க பெற்றது), 6,309 கதிர் அடிக்கும் களங்கள் ரூ. 39.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட இருப்பது சிறப்பு அம்சமாகும்.

மேலும், திருவொற்றியூர் தொகுதியில் இருக்கின்ற 358 மீனவர்களுக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சியிலே, மின் வாரியத்தில் வேலை 1995-லே வழங்கப்பட்டது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அந்த 358 பேர்களுடைய வேலைகளை

நிறுத்திவிட்டது. ஆனால், அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகிற வகையில் தீர்ப்பைப் பெற்றார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இப்போது வேலைவாய்ப்பு நிரந்தரமாக அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படாத சூழ்நிலையில், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீனவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அந்த 358 குடும்பங்களையும் காப்பாற்றும் சூழ்நிலையை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.(மணியடிக்கப்பெற்றது)

அதற்கு மேலாக, எண்ணூர் அனல் மின்நிலையத்தில் 647 மின் வாரியத் தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தார்கள். ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அவர்கள் வேலைவாய்ப்பை இழக்க நேரிட்டது. நிரந்தரத் தொழிலாளர்களாக பணிபுரிந்த அவர்களை இடையிலே 6 மாதம் இடைநீக்கம் செய்துவிட்டார்கள். அவர்கள் குடும்பங்கள் இன்று நடுத்தெருவில் நிற்கின்றன. பசி பட்டினியோடு வாழ்கிறார்கள். மேலும், அவர்களில் 12 பேர் உயிர் நீத்திருக்கிறார்கள். அதுபோன்று நிலைமை மேலும் வராமல், அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற வகையில், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த 647 மின் வாரியத் தொழிலாளர்களையும் மீண்டும், மின்சார வாரியத்தில் பணியமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடல் அரிப்பு; டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 2001-2002 நிதிநிலை அறிக்கைக்கு முன்பாகவே, ஒரு கோடியே 83 இலட்சம் ரூபாய், வட சென்னை பகுதியிலே இருக்கின்ற மீனவ மக்கள் மற்றும் அனைத்து பொது மக்களையும் பாதுகாக்கின்ற வகையில் கடலரிப்பிலிருந்து திருவொற்றியூர் மற்றும் எண்ணூர் பகுதியைப் பாதுகாக்கும் பொருட்டு உடனுக்குடன் வழங்கினார்கள். அந்தத் திட்டம் இன்று நிறைவுபெறுகின்ற வகையில் இருக்கிறது. மேலும், அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையான தடுப்புச் சுவரை எழுப்பி, வட சென்னையிலுள்ள திருவொற்றியூர் எண்ணூர் பகுதிகளை கடல் அரிப்பிலிருந்து தடுத்து, சாலைகளை கடல் அரிப்பிலிருந்து பாதுகாக்க வேண்டிய சூழ்நிலையை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நீண்ட பெரிய திட்டத்தை



நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் தாழங்குப்பம் பகுதியிலே அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்க டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு கையெழுத்து இட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது). ஆனால் இதுவரையிலும் வேலை தொடங்கவில்லை. தொடங்குவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

112. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைய விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் துறையின் 20-4-2001ஆம் நாளிட்ட 417 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைய சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1987) 30(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

109. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 9-8-1979ஆம் நாளிட்ட II (1)/வ.வ. & அ.நி./570/79 ஆம் எண் அறிவிக்கை மற்றும் 7-10-1988 ஆம் நாளிட்ட II(1)/வ.வ. & அ.நி./144 (n)/88 ஆம் எண் அறிவிக்கை ஆகிய அறிவிக்கைகள் ரத்து செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 8-2-2002 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

110. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை. (2001-2002)

[2002 ஏப்ரல் 16

111. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து ஏழாவது அறிக்கை. (2001-2002)

112. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து எட்டாவது அறிக்கை. (2001-2002)

113. கிராம வேலைவாய்ப்பு-கிராமத் தொழில்கள் பற்றிய புத்தகம் (தமிழ்)

114. மானியக் கோரிக்கை எண் 33 - நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம் - மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

115. மானியக் கோரிக்கை எண் 33 - நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம் - மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் செயல்திறன் பற்றிய குறிப்பு, 2001-2002 (தமிழ், ஆங்கிலம்)

116. மானியக் கோரிக்கை எண் 33 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் விரிவான மானிய கோரிக்கை.

117. மானியக் கோரிக்கை எண் 40 - ஊரக வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003, (தமிழ், ஆங்கிலம்).

118. மானியக் கோரிக்கை எண் 40-2002-2003 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சித் துறையின் விரிவான மானியக் கோரிக்கை.

119. ஊரக வளர்ச்சித் துறை பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 2002-2003 (தமிழ், ஆங்கிலம்).

120. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் "ஒவ்வொரு மழைத்துளியையும் சேகரித்தல்" என்ற புத்தகம் (தமிழ்)



2002 ஏப்ரல் 16]

## இணைப்பு-I

(71 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 33 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

**முகவுரை:**

கிராம, நகர்ப்புறப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் "குடிநீர் பாதுகாப்பு திட்டங்கள்" ஆகியவற்றை நிறைவேற்றுதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள 15 அம்ச திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

நகர்ப்புறப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு தேவையான அடிப்படையான குடிமைப் பணிகளை நிறைவேற்றுதல் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் குடிநீர் வழங்குதலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பணிகளாகும்.

#### I. நகராட்சி நிர்வாகம்

1. உள்ளாட்சி அமைப்புகள் நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்கும் நிர்வாகத்திற்கும் நேரடி தொடர்பை ஏற்படுத்துகின்றன. 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 611 பேரூராட்சிகள் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிகமான நகர்ப்பகுதிகளைக் கொண்ட மாநிலம் என்பதால், இத்துறை அடிப்படை வசதிகளை செய்தல், உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துதல் மற்றும் 79,323 நிர்வாக பணியாளர்களை நிர்வாகம் செய்தல் போன்ற பல்வேறு பணிகளை செய்து வருகிறது. உள்ளாட்சி அமைப்புகள், சுகாதாரம், கல்வி, குடிநீர் உள்ளிட்ட 15 முக்கியமான பணிகளை செய்து வருகின்றன.

**மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்**

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாகத்தின் கீழ் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய 5

[2002 ஏப்ரல் 16

மாநகராட்சிகளும், 102 நகராட்சிகளும் உள்ளன. இவை இம்மாநிலத்தில் 1.20 கோடி மக்களுக்கு பணி செய்து வருகின்றன.

3. 2001-2002-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மற்றும் 2002-2003-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள வரவு செலவு கீழ்கண்டவாறு உள்ளது:

| உள்ளாட்சி அமைப்பின் வகைப்பாடு | 2001-2002 | | 2002-2003 | |
|---|---|---|---|---|
| | வரவு (ரூபாய் கோடியில்) | செலவு | வரவு (ரூபாய் கோடியில்) | செலவு |
| 5 மாநகராட்சிகள் | 412.04 | 436.70 | 424.50 | 448.90 |
| நகராட்சிகள் | 535.02 | 531.18 | 548.00 | 537.00 |

4. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வருவாயில் சொத்து வரிமுக்கியமான பங்கு வகிக்கிறது. மொத்த வருவாயில் இது 33.10 விழுக்காடாகும். மாநில நிதிக் குழு பரிந்துரைகளின்படி, நகராட்சிகள் மாநகராட்சிகளுக்கு, 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ. 327.60 கோடி நிதிப் பகிர்வாக மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 481.90 கோடியாக இருக்கும். மத்திய அரசு 2002-2003 ஆம் ஆண்டிற்கு பதினோராவது நிதிக்குழுவின் மானியமாக ரூ. 25.53 கோடி வழங்க உறுதி அளித்துள்ளது.

5. சென்னை உட்பட அனைத்து மாநகராட்சிகளுக்கும் மற்றும் 102 நகராட்சிகளுக்கும் அக்டோபர் 2001-ல் தேர்தல் நடத்தப்பட்டு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றங்கள் 25-10-2001-ல் பொறுப்பேற்றுக் கொண்டன. ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் பெண்களில் நலிவடைந்த பிரிவினருக்கு நகர்மன்றங்களில் அமைப்பு முறை கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது:-



2002 ஏப்ரல் 16]

**அமைப்பு முறை**

| | ஆதி திராவிடர்/ பழங்-குடியினர் | ஆதி திராவிடர் பழங்குடி யினர் பெண்கள். | பெண்கள் | பொது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **மாநகராட்சிகள் 6** மேயர் | 0 | 1 | 1 | 4 | 6 |
| நகர் மன்ற உறுப்பினர் | 46 | 26 | 185 | 372 | 629 |
| **நகராட்சிகள் 102** தலைவர் | 6 | 4 | 31 | 61 | 102 |
| நகர் மன்ற உறுப்பினர் | 228 | 161 | 972 | 2,031 | 3,392 |

6. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு ரூ. 35.50 இலட்சம் செலவில் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிலையத்தின் மூலம் நகராட்சிகள் சம்பந்தப்பட்ட சட்டங்கள், நிதி நிலைமை, மன்ற கூட்டம் நடத்துதல் போன்றவை குறித்த பயிற்சி அளிக்கப்படும். குறிப்பாக மகளிர்க்கு அதிகாரம் அளித்தல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் குறித்து இப்பயிற்சியில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். தேசிய மற்றும் சர்வதேச அளவிலான நிகழ்வுகள் பற்றிய பயிற்சியும் அளிக்கப்படும்.

## திடக் கழிவு மேலாண்மை

7. மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்ச திட்டத்தின் 8-வது அம்சத்தில் வலியுறுத்தியவாறு இந்த அரசு நகர்ப்புற மக்களுக்கு சுத்தமான, சுகாதாரமான சுற்றுப்புற சூழ்நிலை அமைத்துக் கொடுக்க அதிகக் கவனம் கொண்டுள்ளது. நகர்ப்புறங்களில் ஏற்படும் கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே மக்கும் மற்றும் மக்காத பொருட்களாக பிரிக்கவும், மக்கும் பொருட்களிலிருந்து கலவை உரம் தயாரித்தல், மக்காத கழிவுகளை கொண்டு மீண்டும் பயன்படுத்தும் பொருள்களாக மாற்றுவதற்கும் கவனம் செலுத்தப்படும். மழைநீர் சேகரிப்பிற்கு பயன்படுத்தத் தேவையான நீர்நிலைகள், தாழ்வான பகுதிகள் ஆகியவை குப்பைகள் மற்றும் கழிவுகள் கொட்டுவதற்கு பயன்படுத்தப்படமாட்டது. மத்திய அரசு வெளியிட்டுள்ள திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) சட்ட விதிகளின் அடிப்படையில் இது பற்றிய குறிப்பான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நீர் நிலைகள்

[2002 ஏப்ரல் 16

மற்றும் தாழ்வான பகுதிகளில் கழிவுப் பொருட்களை கொட்டுவதும் கழிவுகளை தீயிட்டு எரித்தலும் தடை செய்யப்பட்டுள்ளது.

**நிதி ஆதாரம் திரட்டுதல்**

8. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், அதன் மொத்த வருவாயில் 72 விழுக்காடு அவற்றின் சொந்த வருவாயாகும். முக்கிய வருவாயான சொத்து வரி மிகவும் குறைவாகவே கணக்கிடப்பட்டுள்ளது. அதிகரித்துவரும் சொத்துக்களின் மதிப்பிற்கு ஏற்றவாறு சொத்துவரி விதிப்பு சீராக, ஒரே மாதிரியாக, பொதுவானதாக விதிக்க மாற்றங்கள் கொண்டு வரப்படும். வசூல் வருவாயைப் பெருக்க கேட்புப் பதிவேடு, பற்றுச்சீட்டு அளித்தல் போன்ற பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டு இன்றைய நிலைக்கு ஏற்ப தானாகவே பதிவு செய்யும் முறையில் நடைமுறைப்படுத்தப்படும். சிறப்பாக செயல்படும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி வழங்கப்படும் நிதியிலிருந்து ஊக்கத் தொகை ஈடான மானியமாக வழங்கப்படும். விளம்பர வரி, கேபிள் டி.வி. வரி போன்றவற்றிலிருந்து வரும் வருவாயை கண்காணித்து பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதே சமயம் நிர்வாகச் செலவுகளைக் குறைத்தல், உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது நிறைவேற்றப்படும் இயக்கி பராமரிக்கும் பணிகளை தனியார்மயமாக்குதல், குடிநீர் விநியோகத்தில் மின் உபயோகத்தை திறனாய்வு செய்தல் ஆகிய பணிகளும் மேலாண்மை மூலமாக செலவுகள் படிப்படியாக குறைக்கப்படும்.

**மழைநீர் சேகரிப்பு**

9. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மழை நீரைச் சேகரித்தல் என்ற தொழில்நுட்பம் மூலம் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 15 அம்ச திட்டத்தில் அம்சம் 1 மற்றும் 7-ல் "ஒவ்வொரு மழைத்துளியும் சேமிக்கப்பட வேண்டும் என்றும் மழைநீர் சேமித்தல் ஒவ்வொருவரின் தலையாய கடமை" என்றும் அறிவுறுத்தியபடி பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொழிற்சாலைகள் உட்பட அனைவற்றுக்கும் அளிப்பதன் மீது உரிய கவனம் செலுத்தப்படும். அனைத்து நகரங்களிலும் மழைநீர் சேகரிப்பது குறித்து விழிப்புணர்வு முகாம்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நகராட்சி கட்டடங்கள், பள்ளிகள், கோயில் குளங்கள், ஏரிகள், குட்டைகள், ஊருணிகள் போன்றவற்றில் மழைநீர் சேகரிக்கும் அமைப்புகள் நிறுவப்பட உள்ளன. பொது மக்கள்



2002 ஏப்ரல் 16]

தங்களுடைய சொந்த வீடுகளிலும் மழைநீர் சேகரிக்கும் அமைப்புகள் ஏற்படுத்த ஊக்குவிக்கப்படுவர். புதிய கட்டடங்கள் கட்ட அனுமதி அளித்தல், வரி விதிப்பு செய்தல், குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் இணைப்பு வழங்குதல் போன்றவைகளுக்கு அனுமதி வழங்கும் பொழுது மழைநீர் சேகரிப்பு அமைப்பு இருந்தால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 2,376 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நகரங்களில் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன:-

| மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு | மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் |
|---|---|
| மாநகராட்சி கட்டடங்கள் | 23 |
| நகராட்சி கட்டடங்கள் | 594 |
| பள்ளிக்கூடம், பூங்கா, வடிகால் இன்னபிற | 612 |
| தனியார் கட்டடங்கள் | 1,147 |
| மொத்தம் | **2,376** |

2002-2003 ஆம் ஆண்டிலும் மேலும் அதிகமான கட்டடங்கள் மற்றும் குடிநீர் ஆதாரங்களிலும் இந்த அமைப்பை ஏற்படுத்த இத்திட்டம் தொடரப்படும்.

**குடிநீர் விநியோகத் திட்டம்**

10. மாண்புமிகு தமிழக முதல்வரின் 15 அம்ச திட்டத்தின் 4-வது அம்சத்தில் 2006-க்கு முன்பாக அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறிக்கோளாக அரசு கொண்டுள்ளது என்பதற்கிணங்க 2001-2002 ஆம் ஆண்டில் 2 மாநகராட்சிகள் மற்றும் 33 நகராட்சிகளில் குடிநீர் விநியோக திட்டம் செயல்பட்டு வந்தது. புதிய திட்டங்கள் 8 நகராட்சிகளில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 2001-2002-ல் 5 நகராட்சிகளில் நிறைவேற்றப்பட்டன. 2002-2003-ல் 30 நகராட்சிகளில் இது முடிக்கப்படும்.

நடப்பாண்டில் ரூ. 12.50 கோடி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி உதவியுடன் 21 நகராட்சிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர்த் திட்டங்களை புனரமைப்பு செய்வதற்கும் ஆற்றல் தணிக்கை மற்றும் கணக்கில் வராத நீர் ஆதாரங்களை மீட்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2002 ஏப்ரல் 16

**பாதாள சாக்கடைத் திட்டம்**

11. 4 மாநகராட்சிகள் மற்றும் 11 நகராட்சிகள் உள்ளடக்கிய 15 நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த நகரங்களிலும் முழு அளவில் இல்லாமல் நகரின் ஒரு பகுதியில்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அனைத்து நகராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு ஒரு பெரும் திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டு வருகிறது. இவை 2002-2003 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

12. காவிரி நீர் மாசுபடுதலைத் தடுக்க மாற்றுப்பாதையில் திருப்பி விடுதல், கழிவு நீரை சுத்திகரித்தல், தடுத்தல் ஆகிய பணிகள் "தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்" கீழ் ஈரோடு, பவானி, குமாரபாளையம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பாண்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு நகரங்களில் இப்பணி முடிக்கப்படும். 2003-2004 ஆம் ஆண்டில் பவானி மற்றும் குமாரபாளையம் நகரங்களில் இப்பணி முடிக்கப்படும்.

13. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கரூர், கும்பகோணம், தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருச்செந்தூர், இராமேஸ்வரம் மற்றும் இனாம்கரூர் ஆகிய நகரங்களில் தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக ரூ. 592.50 கோடி செலவில் புதிய பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் மத்திய அரசின் உதவி ரூ. 291.60 கோடியாகும். ஏற்கனவே மதுரை மற்றும் கும்பகோணம் நகரங்களில் பணி துவக்கப்பட்டுள்ளது. மற்ற நகரங்களில் 2002-2003 ஆம் ஆண்டில் துவக்கப்படும். அனைத்து பணிகளும் மூன்றாண்டுகளுக்குள் முடிவடையும்.

**அடிப்படை வசதி திட்டம்**

14. இத்திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் அபிவிருத்தி செய்ய, சாலைகள் அமைக்க, மன்றக் கூடங்கள் கட்ட, சந்தைகள் மற்றும் இறைச்சிக் கொட்டில் மேம்பாடு செய்ய, குடிநீர் விநியோகம் செய்ய மற்றும் தெரு விளக்குகள் அமைக்க, அரசு மானியம் வழங்குகிறது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ. 5.50 கோடி மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.00 கோடி இதற்காக ஒதுக்கீடு செய்யப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 15 அம்ச திட்டத்தில் பத்தாவது



2002 ஏப்ரல் 16]

அம்சமாக நகர்ப்பகுதிகளில் அனைவருக்கும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது என்ற நோக்கத்தை இது பூர்த்தி செய்யும்.

**மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையம் மேம்படுத்துதல்**

15. முத்திட்டத்தின் கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கு 8 நகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு நகராட்சிகளிலுள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்களை மேம்படுத்துவதற்கு ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான கழிப்பறைகள்**

16. நகர்ப்புறத்தில் ஏழைகள் வசிக்கும் பகுதிகளில் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் அமைக்க ஒரு பெரும் திட்டத்தினை செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்காக ரூ. 52.50 கோடி செலவில் சென்னை நீங்கலாக 5 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 525 கழிப்பறைகள் கட்டப்படும்.

இத்திட்டத்திற்கான நிதியுதவி கீழ்க்கண்டவாறு இருக்கும்:-

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2 | 29.00 |
| வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா திட்டம் (மத்திய அரசு) | 16.80 |
| உள்ளாட்சிகளின் நிதி | 6.70 |
| மொத்தம் .. | **52.50** |

17. மேற்குறிப்பிட்ட திட்டத்திற்காக மைய அரசு ரூ. 1 கோடி விடுவித்துள்ளது. இதுவரை 41 கழிப்பறைகள் கட்டப்பட்டு பராமரிப்பிற்காக சமுதாய அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் 34 கட்டப்பட்டு எதிர்வரும் காலங்களில் ஒப்படைக்கப்படும். மீதியுள்ளவை நிதி கிடைத்தவுடன் 31-03-2003-க்குள் கட்டி முடிக்கப்படும்.

18. ரூ. 8.59 கோடி செலவில் நகர உள்ளாட்சி அமைப்புகளில் தற்பொழுது செயல்பாட்டில் இல்லாத கழிப்பிடங்கள்

பழுதுபார்க்கப்படும். இக்கழிப்பிடங்கள் பராமரிப்பதை பெண்கள் குழுக்களிடம் ஒப்படைக்கப்படும். இவற்றின் அன்றாட பராமரிப்பு மற்றும் பாதுகாப்பினை இக்குழு மேற்கொள்ளும். நகர்ப்புறங்களில் திறந்த வெளியைக் கழிப்பிடங்களாகப் பயன்படுத்துவதை எதிர்த்து விழிப்புணர்வு பிரச்சாரம் ரூ. 2.50 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

### பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம்

19. வறிய மக்கள் சுயவேலை தொடங்க வாய்ப்பளிக்க பயிற்சி திறன் இல்லாதவர்களுக்கு பயிற்சி அளித்து பயிற்சி திறன் பெற்றவர்களாக மாற்றப்பட வேண்டுமெனவும் இது படிப்படியாக செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் வறுமை கோட்டின்கீழ் வசிக்கும் 10,000 பயனாளிகளுக்கு பயன்தர தக்க வேலைவாய்ப்பு வழங்கப்படும். இதில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 5,000 பெண் பயனாளிகள் ஆவர். பயிற்சி பெறும் ஒரு பயிற்சியாளருக்கு ரூ. 2,000/- செலவில் திறன் மேம்படுத்த பயிற்சி திட்டங்கள் ஏற்படுத்தப்படும். சமுதாய பணி சம்பந்தப்பட்ட கல்வியறிவு, துப்புரவு, சமுதாய பணிகளுக்கான உள்ளமைப்பு ஆகிய திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு வடிகால்கள், தடுப்புச் சுவர்கள், மதிய உணவு திட்டக் கூடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களை பழுது பார்த்தல்; சிறு சாலைகள், பொது சாலைகள் அமைத்தல், குறைந்த செலவின கழிப்பிடங்கள், சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல், சமுதாய பூங்காக்கள் அமைத்தல், குறைந்த செலவில் குடிநீர் விநியோகம் செய்தல், மழைநீர் சேகரிப்பு திட்டம் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுவதன் மூலம் 3.79 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்படும். இந்த இரண்டு திட்டங்களின்கீழ் அதன் செயல்பாட்டை மேம்படுத்தும் வகையில் திறனாய்வு ஒன்று மேற்கொள்ளப்படும். மாநில அளவிலான நகர்ப்புற வளர்ச்சி முகமை இந்த ஆண்டில் விரைவில் அமைக்கப்படும். எவ்வகையிலான பயிற்சி பயனளிக்கும் என்பதை கண்டறிந்து மாதிரி பயிற்சி திட்டத்தை உருவாக்கிய தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திற்கு மேம்பட்ட முறையான பயிற்சி வழங்க கூடுதல் நிதி அளிக்கப்படும்.



### தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

20. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 1,486 குடிசைப் பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு 60.09 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் அவற்றிற்கு அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், வடிகால் கட்டுதல், தெரு விளக்கு அமைத்தல், குடிநீர் விநியோகம் செய்தல், சமுதாய கழிப்பிடம் கட்டுதல், ஒருங்கிணைக்கப்பட்ட துப்புரவு பணி செய்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை செயல்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தற்சமயம் இருக்கின்ற குடியிருப்பினை மேம்படுத்தவும் புதிய குடியிருப்புகள் கட்டி கொடுக்கவும் ரூ.271.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 1,510 குடும்பங்கள் பயனடைவர்.

### நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மின்னணு ஆளுமை

21. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அதிக அளவு கணினி இயக்குபவர்கள் கணினிகளுடன் இணைய தள இணைப்பு ஆகியவற்றை அதிகம் கொண்டது தமிழ்நாடு என்பதில் பெருமிதம் கொள்ளலாம்.

அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கணினிகள் பொருத்தப்பட்டு கணினி இயக்குபவர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். பிறப்பு இறப்பு பதிவு, குடிநீர் கட்டணம், சொத்து வரி, நகராட்சிகளின் நிதி கணக்கு ஆகிய பணிகள் கணினி மென்பொருள் மூலம் அனைத்து நகராட்சிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தொழில் வரி, கட்டட வரைவு ஒப்புதல், பணியாளர் மேலாண்மை, உணவு கலப்படை தடுப்புச் சட்டம் ஆகியவற்றிற்கு உரிமம் வழங்குதல், அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் விவரம், வரியில்லா இனம் ஆகிய பணிகளில் கணினி மென்பொருள், 2002-2003 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இணைய தளம் மூலம் நகராட்சிகளின் வரி மற்றும் கட்டணங்களை செலுத்துதல், மேலும் நகராட்சிகளின் சேவைகளை உபயோகப்படுத்திக் கொள்வதற்கான பணிகள் நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்பட உள்ளன.

## II. சென்னை மாநகராட்சி

1. சென்னை மாநகராட்சி சட்டம், 1919-ன்படி சென்னை மாநகராட்சி தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

[2002 ஏப்ரல் 16

வழங்கல் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. சென்னை மாநகராட்சியின் எல்லை 174 சதுர கிலோ மீட்டர் அளவில் பரந்து விரிந்துள்ளது. 2001 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் மக்கட்தொகை 42.16 இலட்சமாகும்.

*மூலதனப் பணிகள்*

2. 2002-2003-ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி, ரூ.109.75 கோடி அளவில் மூலதனப் பணிகளுக்கான திட்டங்களைத் தீட்டியுள்ளது.

*சாலைகள்*

3. சென்னை மாநகராட்சி 302 கி.மீ. பேருந்து வழி தடச் சாலைகளையும், 1900 கி.மீ. உட்புறச் சாலைகளையும் பராமரித்து வருகிறது. 2002-2003-ல் சாலைப் பணிகளுக்காக ரூ.76 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*மழைநீர் சேகரிப்போடு கூடிய மழைநீர் வடிகால்கள்*

4. மழைக் காலங்களில் சாலைகளில், குறிப்பாக தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும், சாலைகளைப் பாதுகாக்கவும், சென்னை மாநகராட்சி சுமார் 797 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்களைப் பராமரித்து வருகிறது. தற்போதுள்ள அமைப்பினை பெருக்கவும், நிலை நிறுத்தவும் நடப்பு நிதியாண்டு 2002-2003-இல் ரூ.2.50 கோடி செலவில் மழைநீர் வடிகால்களை அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் முதல் அனைத்து மழை நீர் வடிகால்களும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளோடு இணைக்கப்பட்டு பூமியில் மழை நீர் செல்லும்படியாகவும், சாலைகளில் நீர் தேங்காவண்ணமும் அமைக்கப்படும்.

*தெரு விளக்குகள்*

5. சென்னை நகரில் மொத்தம் 1,06,721 தெரு விளக்குகள் உள்ளன. 500 புதிய சோடியம் ஆவி விளக்குகள் ரூ.50 இலட்சம் செலவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. 100 கி.மீ. நீளமுள்ள பழைய கம்பிவடம் ரூ.100 இலட்சம் செலவில் மாற்றி புதிய கம்பிவடம் அமைக்கவும்



2002 ஏப்ரல் 16]

உத்தேசிக்கப்பட்டுள்ளது. தெரு விளக்குகளை மேலும் சிறப்பாகப் பராமரிக்க தானியங்கி ஏணிகள் பொருத்திய 5 வாகனங்கள் ரூ.50 இலட்சம் செலவில் வாங்கப்படும். 2002-2003ஆம் நிதியாண்டில் மொத்தமாக ரூ.3 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாநகராட்சியின் செயல்கள் கணிப்பொறிமயமாக்கல்**

6. சென்னை மாநகராட்சியின் பல துறைகளில் கணிப்பொறி மயமாக்கம் பல்லாண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இது அந்தந்தத் துறைகளின் தேவைக்கேற்ப நிறைவேற்றப்பட்டு வருகின்றது. எனினும், இவற்றின் செயல்பாடுகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்படவில்லை. பணியாளர் நிர்வாகம், திட்டம்/ செயல்பாடு, பண்டகசாலை பராமரிப்பு, சொத்து பராமரிப்பு மற்றும் நிதி, கணக்கு மற்றும் வருவாய் ஆகிய இனங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கணிப்பொறிமயமாக்கல் இந்த ஆண்டிலிருந்து இயக்கப்படும்.


7. பொது மக்கள் பயன் அடையும்படியாக, கணினி மூலம் சொத்து வரி விவரம், அதனை மாநகராட்சிக்குச் செலுத்துதல், சொத்துவரி நிர்ணயிக்கப்பட்டதன் விவரம், புகார் புத்தகம், பிறப்பு இறப்புப் பதிவு முதலான விவரங்கள் அடங்கிய மின் வலைப் பின்னல் (Web site) ஒன்று தொடங்கப்படும்.

**மழைநீர் சேகரிப்பு**

8. மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் வறட்சிக் காலங்களில், நிலத்தடி நீர் குறையாவண்ணம் பாதுகாப்பதோடு, வெள்ளக் காலங்களில் மழைநீர் தேங்குவது வெகுவாகக் குறைக்கப்படுவதால், வெள்ள நிவாரண அமைப்பாகவும் பயன்படுகின்றன. வரும் காலங்களில், மழைநீர் வடிகால் அமைக்கும்பொழுது, மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மூலம் நீர் சேகரிப்பதற்கு ஏதுவாக அமைக்கப்படும். மழைநீர் சேகரிப்பு அமைப்புகளோடு கூடிய கட்டட வரைபடங்களுக்குத்தான் இனி அனுமதி வழங்கப்படும். கட்டி முடித்த கட்டடங்களைப் பொருத்த அளவில், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் இருந்தால்தான் வீட்டு வரி நிர்ணயம் செய்யப்படும்.

[2002 ஏப்ரல் 16

மாநகராட்சியில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள்











2002 ஏப்ரல் 16]





[2002 ஏப்ரல் 16

### குழாய், கம்பிவடம் பதிக்க சாலை வெட்டில்லா தொழில் நுட்பம்

9. ஒவ்வோர் ஆண்டும், சென்னை மாநகராட்சி, சாலைகளைச் சீரமைக்க, அதிக நிதி செலவிடுகிறது. ஆனால், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், மின்சார வாரியம், தொலைபேசித் துறை மற்றும் வெளிநாட்டுத் தகவல் தொடர்பு நிறுவனம் போன்ற பல்வேறு அரசு சேவை நிறுவனங்கள், தொடர்ந்து தோண்டப்படும் பள்ளங்கள் காரணமாக நன்கு சீரமைக்கப்பட்ட மாநகராட்சி சாலைகள் சேதப்படுத்தப்படுகின்றன.

சாலை வெட்டுக்களைத் தவிர்க்கும் நோக்குடன், புதிய பணிகளில், இத்தொழில் நுட்பத்தை பயன்படுத்த அனைத்துச் சேவைத் துறையினரும், அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சேவை நிறுவனங்கள் இனி வரும் காலங்களில், இப்பணிகளைத் தொடங்குவதற்கு முன்பாக ராடார் கருவி மூலம் தரையில் வேறு துறைகளது குழாய்கள், மின் கம்பி வடம் போன்ற அமைப்புகள் உள்ளனவா என்று ஆய்ந்த பின்னரே, அவற்றிற்கான அனுமதி அளிக்கப்படும். இச்செயலால் வேறு துறைகளது குழாய்கள், மின் கம்பி வடம் போன்ற அமைப்புகள் அழியாமல் காப்பாற்றப்படும்.





2002 ஏப்ரல் 16]

Ground Probing Radar Image

Etamble Record Showing Signs of two pipes side by side

CHAINAGE (IN METER)




RADAR SCANNED PICTURE

### திடக்கழிவு மேலாண்மை—குப்பையில்லா திட்டம்

10. சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, வார்டு எண் 108-ல் தொண்டு நிறுவனம் மற்றும் அப்பகுதியில் உள்ள மக்களின் ஈடுபாட்டுடன் சோதனைத் திட்டமாகத் தொடங்கப்பட்ட இத்திட்டம், பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். கழிவுப் பொருட்களை தரம் பிரித்து அவற்றை அறிவியல்பூர்வமாக அகற்றவும், மக்கக்கூடிய கழிவுகளை கலவை உரமாக மாற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### பள்ளிகளில் கல்வி

11. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் ஒன்றான கல்வி மற்றும் தொழில் நுட்பத்திட்டத்தின்கீழ், மாநகராட்சிப் பள்ளிகளில் கணிப்பொறிமயமாக்கல் மற்றும் கணிப்பொறி மூலம் கல்வி புகட்டல் போன்ற பணிகள், தொழில் நுட்ப வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட மென்பொருள் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

### சர்வ சிக்ஷா அபியன்

12. இத்திட்டம், பள்ளிகளின் அடிப்படை வசதிகளான கட்டடங்கள் அமைத்தல், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல், பயிற்சி மையம்

[2002 ஏப்ரல் 16

அமைத்தல், குடிநீர் வசதி அமைத்தல் மற்றும் சுகாதார அமைப்புகள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கிறது. மைய அரசால் தொடங்கப்பட்ட இத்திட்டத்திற்கு வரும் நிதியாண்டிற்கு ரூ.10 கோடிக்கு மேலாக நிதி உதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம்

13. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின் கீழ், சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தில் குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்கு நீரிழிவு நோய், புற்று நோய், கண் மற்றும் இருதய சம்பந்தப்பட்ட நோய்கள் கண்டறியப்பட நலத் திட்டங்கள் தீட்டவும், பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குப் பல் சம்மந்தப்பட்ட மற்றும் கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைக் கண்டறிந்து, அவைகளுக்கான சிகிச்சை அளிக்கப்படவும் பணிகள் மேற்கொள்ளப்படும். சுற்றுப்புறச் சூழல் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு மாணவர்களிடையே ஏற்படுத்தப்படும்.

தொற்று நோய் மருத்துவமனை

14. மலேரியா, டெங்கு மற்றும் நுரையீரல் சம்பந்தமான நோய்களைக் கண்டறியும் வகையில் தற்போது உள்ள பகுப்பாய்வுக் கூடம் பலப்படுத்தப்படும். இம்மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் நோய் இருப்பதாக அறியப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு மருத்துவம் செய்யும் வசதியும் பலப்படுத்தப்பட உள்ளது. மேலும் இங்கு தன்னார்வ அறிவுரை மற்றும் பரிசோதனை மையம் ஒன்றும் தொடங்கப்பட உள்ளது.

தெருநாய்களை கட்டுப்படுத்துதலும் மற்றும் விலங்கினப் பெருக்கம் கட்டுப்பாட்டுத் திட்டம்

15. தெருவில் திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டு, அரசு சாரா தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும். இந்நிறுவனங்கள் மூலம் இவைகளுக்கு இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்து, வெறி நாய் தடுப்பு ஊசி போடப்பட்டு மீண்டும் பிடித்த இடத்திலேயே விடப்படும்.



2002 ஏப்ரல் 16]

வறுமை கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு சுகாதார வளாகங்கள்/ பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்

16. சென்னை மாநகரத்தில் குடிசைப் பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்குத் தேவையான கழிப்பிடங்கள் இல்லை. எனவே, அவர்கள் திறந்த வெளியிடங்களை பயன்படுத்துகின்றனர். இதனைத் தவிர்க்க, 200 சுகாதார வளாகங்கள்/ பொதுக் கழிப்பிடங்கள் அண்ணா சாலை மற்றும் பெருவழிச் சாலைகளில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.192 இலட்சம் செலவில் கட்டப்படவுள்ள 96 மகளிர் பொதுக் கழிப்பிடங்களும் அடங்கும். அனைத்து கழிப்பிடங்களுக்குத் தேவையான தண்ணீர் வசதி, கழிவுநீர் வசதி, மின்சார வசதி ஆகியவைகளோடு அன்றாட பராமரிப்பும் மேற்கொள்ளப்படும். பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல் மற்றும் சுகாதார வசதிகள் செய்வதற்கு முன்வரும் அரசு சாரா, தனியார் மற்றும் பொதுத் தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

## III. மதுரை மாநகராட்சி

1. மதுரை மாநகராட்சி 51.85 சதுர கி.மீட்டர் பரப்பளவு 2001-ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி, 9.23 இலட்சம் மக்கட் தொகை கொண்டுள்ளது.

சாலைகள்

2. இம் மாநகராட்சி, 534.20 கி.மீ. நீளச் சாலைகளைப் பராமரிக்கிறது. 2002-2003 ஆம் ஆண்டில், சாலைப் பணிகளுக்காக ரூ.3 கோடி செலவிடப்படும்.

குடிநீர் விநியோகம்

3. இம்மாநகராட்சியில், 1,26,590 குழாய் இணைப்புகள் உள்ளன. வைகை அணையிலிருந்து நேரடி குழாய் இணைப்புகள் மூலம் நகரின் தெற்குப் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது வடக்குப் பகுதிக்கும் விரிவாக்கப்பட உள்ளது. 2002-2003-ஆம் ஆண்டில் புதிய குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் பதிக்கவும், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும் ரூ.50 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

[2002 ஏப்ரல் 16

### தெரு விளக்குகள்

4. இம் மாநகராட்சி 20,522 தெரு விளக்குகளைப் பராமரித்து வருகிறது. விரிவாக்கப்பட்ட பகுதிகளில் புதிய தெரு விளக்குகள் அமைக்கவும், முக்கிய சாலைகளிலும் மற்றும் பேருந்து வழித்தட சாலைகளிலும் உள்ள குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றவும் ரூ.50 இலட்சம் செலவிடப்படும்.

### திடக்கழிவு மேலாண்மை

5. வீடு வீடாகச் சென்று குப்பைகளைச் சேகரிக்கும் முறையை இம் மாநகராட்சி நவீனப்படுத்த உள்ளது. இதற்காக ரூ.1 கோடி செலவில், 353 டம்பர் தொட்டிகளும், ரூ.1.50 கோடி செலவில் 20 டம்பர் ப்லேசர்களும் வாங்கப்படும்.

### பாதாளச் சாக்கடைத் திட்டம்

6. ரூ.150 கோடி செலவில் தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது இரண்டு பகுதிகளாகச் செயல்படுத்தப்பட உள்ளது. முதல் பகுதி இவ்வாண்டும், இரண்டாம் பகுதி மூன்று ஆண்டுகளிலும் முடிக்கப்படும்.

## IV. கோயம்புத்தூர் மாநகராட்சி

1. கோயம்புத்தூர் மாநகராட்சி, 105.60 கி.மீட்டர் பரப்பளவும் 2001-ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்புப்படி, 9.23 இலட்சம் மக்கட் தொகையும் கொண்டுள்ளது.

### சாலைகள்

2. மாநகராட்சி, 684 கி.மீட்டர் சாலைகளைப் பராமரிக்கிறது. ரூ.12 கோடி மதிப்பீட்டில் தார்ச்சாலைகள், ரூ.2 கோடி மதிப்பீட்டில் சிமென்ட் கான்கிரீட் சாலைகள் ஆகியவற்றை 2002-2003-ல் புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதாரப்பணித் திட்டம்

3. இத் திட்டத்தின்கீழ், 5 சுகாதார வளாகங்கள் ரூ.50.80 இலட்சம் செலவில் 2001-2002-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டன. ரூ.1.20 கோடி மதிப்பீட்டில், 12 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் 2002-2003-ல் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை கட்டிக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 16]

### பேருந்து நிலையம்

4. மேட்டுப்பாளையம், குன்னூர், ஊட்டி ஆகிய பகுதிகளிலிருந்து வரும் பேருந்துகளுக்காக மேட்டுப்பாளையம் சாலையில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பேருந்து நிலையம் கட்டப்பட உள்ளது.

### மின் தகனமேடை

5. பீளமேடு, சிங்காநல்லூர் ஆகிய இடங்களில், 2 மின் தகன மேடைகள், ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.

## V. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 146.90 சதுர கி.மீட்டர் பரப்பளவும் 2001-ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 7.46 இலட்சம் மக்கட் தொகையும் கொண்டதாகும்.

### அடிப்படை வசதிகள்

2. 2002-2003 ஆம் ஆண்டில் சாலைகள், வடிகால், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை மேம்பாடு ஆகியவற்றுக்காக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

3. இத் திட்டத்தின்கீழ், சாலை சீரமைப்பு, வடிகால், தெரு விளக்கு, குடிநீர் விநியோகம் ஆகிய பணிகள் ரூ.55 இலட்சம் செலவில் 4 குடிசைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ளது.

### பாதாள சாக்கடைத் திட்டம்

4. புதிதாகச் சேர்க்கப்பட்ட நகராட்சிப் பகுதிகளான பொன்மலை, திருவரங்கம் ஆகிய பகுதிகளில், ரூ.132 கோடி செலவில் தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

### சுகாதாரம்

5. 2002-2003 ஆம் ஆண்டில், நகரத்தின் பல பகுதிகளில் 1[illegible] வளாகங்கள் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

[2002 ஏப்ரல் 16

## VI. சேலம் மாநகராட்சி

1. சேலம் மாநகராட்சி, 91.34 சதுர கி.மீட்டர் பரப்பளவும் 2001 ஆம் ஆண்டின் மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 6.93 இலட்சம மக்கட் தொகையும் கொண்டுள்ளது.

### சாலைகள்

2. இம் மாநகராட்சி, 623.58 கி.மீட்டர் சாலைகளைப் பராமரிக்கிறது. ரூ.4.10 கோடி மதிப்பீட்டில் 144 சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### குடிநீர் வழங்கல்

3. தற்போது நகரத்தில் 66,422 இணைப்புகள் உள்ளன. ரூ.24.84 கோடி செலவில் 18 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### தெரு விளக்குகள்

4. தற்போது 19,517 தெரு விளக்குகள் உள்ளன. 2 பகுதிகளில் தெரு விளக்குகள் பராமரிக்கும் பணி தனியாரிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

### துப்புரவு

5. 2002-2003-ல் ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில், டம்பர் பிலேசர்கள் வாங்கப்பட உள்ளன.

### சுகாதாரம்

6. 2002-2003 ஆம் ஆண்டில், ரூ.1.80 கோடி மதிப்பீட்டில், 18 சுகாதார வளாகங்கள் கட்டப்பட உள்ளன.

### தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

7. 4 குடிசைப் பகுதிகளில், ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில், சாலைகள் அமைத்தல், வடிகால், தெரு விளக்குகள் ஆகிய மேம்பாட்டுப் பணிகள் எடுக்கப்பட உள்ளன.



2002 ஏப்ரல் 16]

## VII. திருநெல்வேலி மாநகராட்சி

1. திருநெல்வேலி மாநகராட்சி, 108.65 சதுர கி.மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். 2001-ன் மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 4.11 இலட்சம் மக்கட் தொகையைக் கொண்டதாக உள்ளது.

### கிராம தன்னிறைவுத் திட்டம்

2. இத் திட்டத்தின்கீழ் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்யப்பட உள்ளன. மக்களிடமிருந்து பங்களிப்பு பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

### 11-வது நிதிக் குழு

3. ரூ 1.80 கோடி மதிப்பீட்டில் 60 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

### ஒருங்கிணைந்த சுகாதார மேம்பாட்டுத் திட்டம்

4. இத் திட்டம் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

### அடிப்படை வசதிகள்

5. ரூ.6.60 கோடி மதிப்பீட்டில் 83 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

### பாதாள சாக்கடைத் திட்டம்

6. தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ரூ.66 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## VIII. பேரூராட்சிகள்

1. தமிழ்நாட்டில் 611 பேரூராட்சிகள் உள்ளன. அவை பேரூராட்சிகள் இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளன. நிர்வாக நலன் கருதி, இம் மாநிலம் 16 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஓர் உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத் துறை சுமார் ஒரு கோடி பொதுமக்களுக்காக பணியாற்றி வருகிறது. இத் துறை, பல்வேறு தரப்பட்ட அடிப்படை வசதிப் பணிகள் செய்து கொடுத்தல், உள்ளாட்சி அமைப்புகளின்

[2002 ஏப்ரல் 16

அத்தியாவசியப் பணிகளான குடிநீர் வழங்கல், மழைநீர் வடிகால், பொது சுகாதாரம், சாலைகள் மற்றும் தெரு விளக்குகள் போன்ற பணிகளைக் கவனித்து வருகிறது.

2. 2001-2002 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளின் மொத்த வருவாய் ரூ.531.62 கோடி மற்றும் செலவினம் ரூ.522.95 கோடியாகும். 2002-2003ஆம் ஆண்டில், இவை ரூ.540.00 கோடி மற்றும் ரூ.530.00 கோடியாக இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

3. பேரூராட்சிகளுக்கு மாநில நிதிக் குழு பரிந்துரையின்படி, நிதிப் பகிர்வாக 2001-2002 ஆம் ஆண்டில், ரூ.112.09 கோடி ஒதுக்கப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில், ரூ.219.91 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். மத்திய அரசு, பதினோராவது நிதிக் குழு பரிந்துரையின்படி, 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.13.14 கோடி மானியம் வழங்க உறுதியளித்துள்ளது.

## பேரூராட்சிகளுக்குத் தேர்தல்

4. அக்டோபர் 2001-ல், 608 பேரூராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு, புதிய உறுப்பினர்கள் 25-10-2001-ல் பதவி ஏற்றுக்கொண்டனர். சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரான ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மகளிர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் கீழ்க்கண்டவாறு உள்ளனர் :

| | ஆதி திராவிடர்/ பழங்குடியினர் | ஆதி திராவிடர்/ பழங்குடியினர் மகளிர் | மகளிர் | ஒதுக்கப்படாதவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தலைவர் | 68 | 35 | 169 | 336 | 608 |
| உறுப்பினர்கள் | 863 | 816 | 2,435 | 5,639 | 9,753 |

குற்றாலம் மற்றும் பவானிசாகர் பேரூராட்சிகளுக்குத் தேர்தல், ஜூன் 2003-ல் நடைபெறவுள்ளது. சோளிங்கர் பேரூராட்சித் தேர்தல், ஏப்ரல் 2002-ல் நடத்தி முடிக்கப்பட்டது.

## நிதி வாய்ப்புகள் பெருக்குதல்

5. பேரூராட்சிகளில் உள்ள மொத்த வருவாயில் சொந்த வருவாய் 38.37 விழுக்காடு ஆகும். முக்கிய வருவாயான சொத்து வரி, பொதுவாக,



2002 ஏப்ரல் 16]

சரியான தொகைக்கும் குறைவாக விதிக்கப்படுகிறது. சொத்துகளின் மதிப்பின் வளர்ச்சிக்கேற்ப பரந்த நோக்குடன், ஒரே மாதிரியாக, சமநிலையில் வரி நிர்ணயம் செய்யப்படுதல் வேண்டும். கேட்புப் பதிவேட்டை கணினிமயமாக்குதல், வரவு பற்றுச்சீட்டு பதிவேடுகளைப் புதுப்பித்தல், பொதுத் தகவல் தொழில்நுட்ப முறைகளைக் கையாளுதல் ஆகியவை மூலம் வசூலைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வரிவசூல் சாதனையில் முன்னேற்றம் காண்பிக்கும் பேரூராட்சிகளுக்கு மாநில நிதி ஆணையத்தின் ஊக்கத் தொகையிலிருந்து ஈட்டு மானியம் வழங்கப்படும். விளம்பரக் கட்டணம், கேபிள் தொலைக்காட்சி கட்டணம் வசூலித்தல் ஆகியவை மூலம் கிடைக்கும் வருவாய் மீது கவனம் செலுத்தப்படும். பேரூராட்சி நிர்வாகத்தில் பணியாளர்களை திறம்பட நிர்வகித்தல் மற்றும் நிர்வாகச் செலவினத்தைக் குறைத்தல், குடிநீர் திட்டத் தலைமைப் பணிப் பராமரிப்பு போன்ற சில இனங்களில் தனியார்மயமாக்கல் ஆகியவை உடனிகழ்வாகச் செயல்படுத்தப்படும்.

## மழைநீர் சேகரிப்பு

6. பேரூராட்சிகளில், மழைநீர் சேகரிப்புத் திட்டக் கட்டமைப்பு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| பேரூராட்சிகளின் கட்டடங்கள் | 611 |
| பள்ளிகள், பூங்காக்கள், வடிகால் இன்னபிற | 2,230 |
| பொது கட்டமைப்பு | 1,899 |
| தனியார் கட்டடங்கள் | 2,541 |
| **மொத்தம்** | **7,281** |

இத் திட்டம் 2002-2003-லும் கூடுதலான கட்டடங்கள் மற்றும் நீர்நிலை ஆதாரங்களைக் கொண்டு வரும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## சாலைகள்

7. பேரூராட்சிகளில் 15,548 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் 3,991 கி.மீ. மண் சாலையினைத் தார்ச் சாலையாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம், நிதிநிலைக்கேற்ப செயல்படுத்தப்படும்.

### தெரு விளக்குகள்

8. பேரூராட்சிகளில் 2,98,772 எண்ணிக்கை கொண்ட தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. 2002-2003 ஆம் ஆண்டில், 10,000 எண்ணிக்கை குழல் விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### குடிநீர் திட்டப் பணி

| 9. ஒரு நாளில் தனிநபர் குடிநீர் அளவு (லிட்டரில்) | பேரூராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 20 லிட்டருக்குக்கீழ் | 32 |
| 20—39 லிட்டர் | 166 |
| 40—69 லிட்டர் | 289 |
| 70 லிட்டருக்கு மேல் | 124 |

1999-2000 மற்றும் 2000-2001-ல் 117 பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட குடிநீர் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவற்றில், 2001-2002-ல் 39 பேரூராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 78-ம் 2002-2003-ல் முடிக்கப்படும். 2001-2002-ல் 37 பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட புதிய திட்டங்களும் 2002-2003-ல் முடிக்கப்படும்.

### பாதாள சாக்கடைத் திட்டம்

10. பாதாள சாக்கடைத் திட்டம் இராமேஸ்வரம், இனாம் கரூர் மற்றும் திருச்செந்தூர் ஆகிய பேரூராட்சிகளில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ், இராமேஸ்வரம் மற்றும் திருச்செந்தூர் பேரூராட்சிகளில் முறையே ரூ.13.92 இலட்சம் மற்றும் ரூ.1.00 இலட்சமும் பயனீட்டாளர் பங்குத் தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

### அடிப்படை வசதி திட்டப் பணி

11. இத் திட்டத்தின்கீழ், அடிப்படை வசதிப் பணிகளான குடிநீர், தெரு விளக்கு, சாலை மற்றும் வடிகால் அமைக்க அரசு மானியம் வழங்குகிறது. 2001-2002 ஆம் ஆண்டில், இத் திட்டத்தின்கீழ், ரூ.10.00 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டிலும்



இத் திட்டம் தொடரப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின் 10-ஆவது முக்கிய அம்சமான அடிப்படை வசதிகளை நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அமைத்துக் கொடுப்பது என்பதனை, இது பூர்த்தி செய்கிறது.

### மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு கழிப்பிட வசதி

12. சமுதாயத்தில் நலிவுற்ற பெண்கள், குழந்தைகள் ஆகியோர் பயன்பெறும் வகையில், நகர்ப்புறப் பகுதிகளில், ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியபடி, இம் மாநிலத்தில் ரூ.1,872 இலட்சம் மதிப்பீட்டில், பேரூராட்சிகளில் 720 கழிப்பறைகள் கட்டப்பட உள்ளன. இவை கட்டப்பட்டவுடன் பெண்கள் சுய உதவிக் குழுக்களிடம் எதிர்காலப் பராமரிப்பிற்கு விடப்படும்.

இத் திட்டம் கீழ்க்கண்டுள்ள நிதி உதவியின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது :—

| | |
|---|---|
| தமிழ்நாடு இரண்டாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் | ரூ. 1,310.40 இலட்சம் |
| வாம்பே திட்ட நிதி உதவி (மைய அரசு ஹட்கோ மூலம்) | ரூ. 561.60 இலட்சம் |

### சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம்

13. இத்திட்டத்தின் உட்பிரிவான நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 2001-2002-ல் ரூ.134.92 இலட்சம் அனைத்து பேரூராட்சிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 986 பணிகள் எடுக்கப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 92,366 மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. மைய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமாயின், இத்திட்டம் 2002-2003-லும் செயல்படுத்தப்படும்.

14. மற்றொரு உட்பிரிவு திட்டமான, நகர்ப்புற சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.212.95 இலட்சம் பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின்கீழ், குழுக்கள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டச் செயல்பாடு தொடர்பாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு நகரியல் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு

[2002 ஏப்ரல் 16

வருகிறது. மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கும்பட்சத்தில் இத்திட்டம் 2002-2003-லும் செயல்படுத்தப்படும்.

**பேரூராட்சிகளின் திறன் மேம்படுத்துதல்**

15. தற்போது மாநிலத்தில் பேரூராட்சிகளில் பின்பற்றப்படும் கணக்கீட்டு முறையினை 2002-2003ஆம் நிதியாண்டு முதல் இயல்பு கணக்கீட்டு முறையாகப் பராமரிக்கவும். இதற்கான முழுச் செலவு, தமிழ்நாடு இரண்டாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மானியமாகப் பெற்று மேற்கொள்ளப்படும்.

16. 2001-2002 ஆம் ஆண்டில் 28 சிறப்புநிலை பேரூராட்சிகள் மற்றும் 16 மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள் அலுவலகங்கள் (44 எண்ணிக்கை) ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் கணினிமயமாக்கப்பட எடுத்துக்கொள்ளப்பட்டன. மீதமுள்ள 583 பேரூராட்சிகள், 2002-2003ஆம் ஆண்டில் தமிழ்நாடு இரண்டாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் நிதி உதவி மூலம் ரூ.583.00 இலட்சம் மதிப்பீட்டில் கணினி மயமாக்கப்படவுள்ளது. இதன்மூலம் பேரூராட்சிகள் இயக்ககம் மற்றும் அனைத்துப் பேரூராட்சிகளில் கணினிமயமாக்கப்படும் திட்டம் நிறைவு பெறும்.

## IX தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் — II

1. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II-ன்கீழ் நிதியாதாரம் திரட்டும் பணியின் ஒரு பகுதியாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் உலக வங்கியிடமிருந்து 80 மில்லியன் அமெரிக்க டாலர்களைக் (ரூ.336 கோடி) கடனாகப் பெற்றுள்ளது. இது தவிர, நிறுவன மேம்பாடு மற்றும் ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டத்திற்காக, தமிழ்நாடு இரண்டாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திட்ட நிர்வாக அலகிற்கு 25 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ.105 கோடி) கடன் வழங்கப்பட்டுள்ளது.

**நிறுவன மேம்பாட்டுக் கூறு**

2. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II-ன் நிறுவன மேம்பாட்டு கூறின்கீழ், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத் திறனை உயர்த்தும் வகையில் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 16]

(i) நகர கூட்டாண்மைத் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் 5 ஆண்டு மூலதன முதலீட்டுத் திட்டங்கள் தயாரித்தல்.

11 நகரங்களுக்கு இத்திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 20 நகரங்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் தயாரிக்கப்படும்.

(ii) நகர்ப்புற சேவை வழங்கலின் செயல்திறன் குறியீடுகளை (Performance Indicators) தயாரித்தல்.

செயல்திறனுக்கான குறியீடுகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை அளவிடுவதற்கு உதவும். இத்திட்டமானது 2002-2003 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

(iii) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மேலாண்மை நிதி மற்றும் தொழில்நுட்பத் திறன்களை வலிமையாக்குதல்.

இத்திட்டத்தின்கீழ் 400 குழுக்களுக்கான 32 திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. 3,686 நபர்களுக்கு 200 குழுக்களாக இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 7 கூடுதல் திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. 2002-2003-ல் 233 குழுக்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.

(iv) அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கல்விப் பயணங்கள் ஏற்பாடு செய்தல்.

நகர்ப்புற மேலாண்மை மற்றும் நிர்வாகத் துறையில் உள்ள சிறந்த முன்னுதாரணங்களைக் கற்பிக்கும் நோக்கத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சார்ந்த அலுவலர்களுக்கும் கல்விப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படும்.

(v) கணக்கு வழிமுறைகள், பொறியியல் அளவீடுகள், திடக்கழிவு மேலாண்மை, ஒப்பந்தங்கள் குறித்து நடைமுறை நூல் தயாரித்தல்.

ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம், கணக்கு வைப்பு முறை, பொறியியல், இயல்பு-நிலைக் கணக்கு பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான நடைமுறை நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(vi) நிலப்பயன்பாடுகள், பூகோளத் தகவல் அமைப்பு, நகராட்சி கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள் குறித்தான ஆய்வு மேற்கொள்ளல்:

இந்த ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

(vii) கணினி ஆதரவு அளித்தல்:

இத்திட்டத்தின்கீழ் கணினிகள் மற்றும் மென்பொருட்கள் வாங்குவதுடன் கணினிமயமாக்குதலினால் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவை மேம்படுத்தப்படும். பூகோளத் தகவல் அமைப்பு திட்டமும் செயல்படுத்தப்படும்.

(viii) மண்டல அலுவலகங்களில் வல்லுநர்கள் அமர்த்துதல்.

(ix) இயல்பு நிலைக் கணக்குகள் 102 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(x) நகராட்சி நிர்வாகத் துறையின் செயல்திறனை உயர்த்துதல்:


நகராட்சி நிர்வாகத் துறைக்கு கணினி, மென்பொருள் மற்றும் நூல் நிலையத்திற்கு நூல்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்

3. உலக வங்கி நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டத்தின் கீழ் ரூ.52.50 கோடி செலவில் 102 நகராட்சிகளிலும் 5 மாநகராட்சிகளிலும் 525 சுகாதார வளாகங்கள் கட்டப்பட உள்ளன. தமிழ்நாடு இரண்டாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமும் மத்திய அரசின் வாம்பே திட்டத்தின் மூலமும் ஒவ்வொரு சுகாதார வளாகமும் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில், வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் மக்களின் தேவைக்கேற்ப, சரியான இடத்தில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளால் கட்டப்படும். இந்தச் சுகாதார வளாகங்களில், கழிப்பிட வசதிகளுடன் குளிப்பதற்கும், துணி துவைப்பதற்கும் வசதிகள் செய்து கொடுப்பதோடு, பயனாளிகளைத் தேர்வு செய்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்து அவர்கள் மூலமாகவே சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படும்.







கோயம்புத்தூர் மாநகராட்சியில் கட்டப்பட்டுள்ள சுகாதார வளாகம்

4. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III-ல், கீழ்க்கண்டவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து செய்யத்தக்கமைக்கான ஆய்வு (feasibility study) மேற்கொள்ள ஆலோசகரை நியமிக்க உலக வங்கியிடம் ஒப்புதல் வேண்டப்பட்டுள்ளது.

(அ) நகர்ப்புறக் கழிவு மேலாண்மை:

கழிவு நீர் மறுசுழற்சி மற்றும் அகற்றுதல், திடக்கழிவு பயன்பாடு மற்றும் அகற்றுதல்;

(ஆ) நகர்ப்புறச் சுற்றுச்சூழல் மேலாண்மை:

நகர்ப்புறச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் தரத்தாழ்வைத் தடுத்தல் - சுகாதாரமின்மையால் ஏற்படும் நோய்கள் வராமல் தடுப்பது மற்றும் குறைப்பது - நகர்ப்புறங்களில் கால்நடை/விலங்குகளால் ஏற்படும் நோய்களைத் தடுப்பது/குறைப்பது, நகர்ப்புறச் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் பொருட்டு, விளையாட்டுத் திடல்கள், திறந்தவெளி மற்றும் நிழல் தரும் மரங்களைப் பராமரித்தல் ஆகியவை.

(இ) கிராமப்புறங்களில் உள்ள மக்கள் நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்வதால் கணிசமான அளவில் தாக்கத்தினை சந்தித்துக் கொண்டிருக்கிற நகர்ப்புறச் சுற்றுச்சூழல், மேலும் தரந்தாழாமல் தடுக்கப்பட வேண்டுமெனில், மேற்கண்ட துறைகளில் முறையான கவனம் செலுத்தப்பட வேண்டுமென அரசு நம்புகிறது.

[2002 ஏப்ரல் 16

(ஈ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், தகவல், கணக்கு, நிதி ஆதாரங்கள் மற்றும் மனித வளத்தினை அதிகபட்ச அறிவியல் திறனோடு நிர்வகிக்கும் திறமை வாய்ந்ததாக அமைய நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகிகளுக்கு, மேலாண் திறனை மேம்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தப்படும்.

## X. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி

1. தமிழ்நாடு அரசு 1988ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் பன்னாட்டு வளர்ச்சி நிறுவன நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதில் ஒரு பிரிவு நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியாகும். நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதித் திட்டத்தின் வெற்றி, உலக வங்கி உதவியுடன் இத்திட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் எனும் பொறுப்பாட்சியை உருவாக்க தமிழ்நாடு அரசுக்கு ஊக்கமளித்தது. இந்த பொறுப்பாட்சியின் நிதி ஆதாரங்களைப் பயன்படுத்த நிதி மேலாளராக தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் நகர உள்கட்டமைப்பினை உருவாக்க காப்புறுதி இல்லாமல் நீண்ட காலக் கடன் வழங்கும் முதல் அரசு-தனியார் கூட்டமைப்பாகும்.

2. நகர்ப்புற உள்கட்டமைப்பிற்கு நிதியுதவி அளித்தலும் நகரங்களின் நிதித் தேவைகளுக்கும் மூலதனச் சந்தைகளுக்கும் இணைப்பினை ஏற்படுத்தி சேவைப்பணிகளில் தனியார் துறைகளின் பங்கேற்பினை எளிதாக்குவதும் இந்தப் பொறுப்பாட்சியின் முக்கிய நோக்கமாகும்.

3. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் இதுவரை ரூபாய் 675.02 கோடிக்கு 179 திட்டங்களுக்கு ஒப்புதலளித்துள்ளது. 31-3-2002 வரை 172 திட்டங்களுக்கு ரூ.447.28 கோடி வழங்கியுள்ளது. மழைநீர் வடிகால், கழிவுநீர், திடக்கழிவு நிர்வாகம் போன்ற அடிப்படை வசதிகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தும் திட்டங்களும், மொத்த வணிகக் கூடங்கள், போக்குவரத்து வசதிகள் போன்ற வணிகத் திட்டங்களும் இதில் அடங்கும். 2002-2003 ஆம் ஆண்டில், ரூபாய் 50 கோடி மதிப்பீட்டிற்கு 20 திட்டங்களுக்கு ஒப்புதலளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 16]

*மூலதனச் சந்தைகளை அணுகல்*

4. மதுரை மாநகராட்சி மே 2001-ல் கடன் பத்திரங்கள் வெளியீட்டின் மூலம் ரூபாய் 29 கோடி உள் வட்டச் சாலை திட்டத்திற்கு நிதி திரட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவை நிறுவனம் உதவியுள்ளது.

5. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டுவது மட்டுமின்றி, நகர்ப்புற உள்கட்டமைப்பிற்கு மூலதனச் சந்தைகளை அணுக வசதி செய்துள்ளது. இது தொடர்பாக 2001-2002-ல் மொத்தமாக பணம் திரட்டி நிதியுதவி அளிக்கும் வசதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை ஒன்று திரட்டி வெளிச் சந்தையிலிருந்து கடன் பெறலாம். இதனால் இன்றியமையாத உள்கட்டமைப்பு தேவைகளுக்குக் கடன் பெறுவதற்கான செலவும் பல்வேறு வணிக நடவடிக்கைகளும் குறையும். மேலும், கடன் பத்திரங்கள் மூலம் திரட்டப்பட்ட அசல் தொகையில் 50 சதவிகிதம் வரைக்கும் காப்புறுதி அளிக்க அமெரிக்க பன்னாட்டு வளர்ச்சி முகமை முன்வந்துள்ளது.

## XI. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

1. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், பல்வேறு அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகின்றது. மேலும், இந்நிறுவனம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களான மாநகரத் திட்டம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கு மையத் தொடர்பு முகமையாகவும் செயல்பட்டு வருகிறது.

டுபிட்கோ உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

2. இந்நிறுவனம் 2001-2002ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.44.73 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.50.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கத் தீர்மானித்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.17.00 கோடி நிதி வழங்கியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.45.00 கோடி நிதி வழங்கவும் தீர்மானித்துள்ளது.

*மகாநகரத் திட்டம்*


3. சென்னை நகரம் மட்டுமல்லாமல், 8 நகராட்சிகள் மற்றும் 24 பேரூராட்சிகள் அடங்கிய சென்னை மாநகரப் பகுதியில், நகர் உள்கட்டமைப்பினை மேம்படுத்துவதே மகாநகரத் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.53.98 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.90.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க தீர்மானித்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.29.00 கோடி நிதி வழங்கியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.56.00 கோடி நிதி வழங்க தீர்மானித்துள்ளது.

*சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்*

4. இந்நிறுவனம் 2001-2002ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 25.73 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.25.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.2.00 கோடி நிதி விடுவித்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.12.50 கோடி நிதி விடுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.


5. ஆக மொத்தம், இந்நிறுவனம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.124.44 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.165.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கத் தீர்மானித்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.48.00 கோடி நிதி விடுவித்துள்ளது. 2001-2003 ஆம் ஆண்டில் ரூ.113.50 கோடி நிதி விடுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நகராட்சிகளில் சாலைப் பணிகள்







நகராட்சிகளில் தெரு விளக்குகளின் வளர்ச்சி





நகராட்சிகளில் முடிக்கப்பட்ட பொது கழிப்பிடப் பணிகள்




[2002 ஏப்ரல் 16


நகராட்சிகளில் குடிநீர் வழங்கல்




மாநகராட்சிகளில் சாலைப் பணிகள் (சென்னை நீங்கலாக)




மாநகராட்சிகளில் தெரு விளக்குகளின் வளர்ச்சி (சென்னை நீங்கலாக)







2002 ஏப்ரல் 16]

மாநகராட்சிகளின் வரி வசூல் (சென்னை நீங்கலாக)





மாநகராட்சிகளின் மாநில நிதி ஆணைய பகிர்வு (சென்னை நீங்கலாக)




[2002 ஏப்ரல் 16

## துப்புரவு

மாநகராட்சிகளில் முடிக்கப்பட்ட பொது கழிப்பிடப் பணிகள் (சென்னை நீங்கலாக)





மாநகராட்சிகளில் குடிநீர் வழங்கல் (சென்னை நீங்கலாக)







2002 ஏப்ரல் 16]




[2002 ஏப்ரல் 16







2002 ஏப்ரல் 16]




[2002 ஏப்ரல் 16





2002 ஏப்ரல் 16]

பேரூராட்சிகளில் சொத்துவரி வசூல்




## XII. குடிநீர் வழங்கல்

மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்ச திட்டத்தில், "நீர் வளப் பாதுகாப்பு" என்பது முக்கியமானதொரு அங்கமாகும். பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது அரசின் முன்னுரிமையாய் உள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் ஆகிய இரண்டும் மக்கள் நலம் மற்றும் வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பிற்கு இன்றியமையாதது என்று கருதி 15 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது.

### 2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாட்டில் சென்னை மாநகர் நீங்கலாக அனைத்து மாவட்டங்களுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றும் நிறுவனமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை சிறப்பாக நிறைவேற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால்

[2002 ஏப்ரல் 16

வாரியம், மாவட்ட மற்றும் மாநில அளவிலான அரசு துறைகள், மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புத் துறை, நீர் ஆதார அமைச்சகம், தேசிய நதிநீர் பாதுகாப்பு இயக்ககம், இராஜீவ் காந்தி தேசிய குடிநீர் குழுமம், மத்திய நிலத்தடி நீர் வாரியம், அரசு சாரா நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களான அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் காந்தி கிராம ஊரக நிறுவனம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுகின்றது.

**3. ஊரகக் குடிநீர்த் திட்டம்**

**2001-2002 ஆம் ஆண்டில் குடிநீர் திட்டங்களின் செயலாக்கம்**

| திட்டத்தின் பெயர் | இலக்கு | சாதனை | விழுக்காடு |
|---|---|---|---|
| தனி மின்விசைத் திட்டம் | 4085 | 4917 | 120 |
| கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 51 | 51 | 100 |
| கையிறைப்பான் திட்டம் | 2500 | 2500 | 100 |
| சிறு மின்விசைத் திட்டம் | 4000 | 4389 | 110 |
| குடிநீரின் தன்மை பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான தனி மின்விசைத் திட்டம் | 900 | 900 | 100 |
| அரசு பள்ளிகளுக்கான குடிநீர்த் திட்டம் | 9016 | 8500 | 94 |
| ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் (2001-2003) | 700 | 995 | 142 |

**மத்திய அரசின் துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டங்களின் செயலாக்கம்**

மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் துரிதப் படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்தினை 2001-2002ஆம் ஆண்டில் 100 விழுக்காடு சாதனை புரிந்து சிறப்பாக செயல்படுத்தியதால் மத்திய அரசு தமிழகத்திற்கு ஊரக குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்துவதற்கு முதலில் ஒதுக்கீடு செய்த ரூ.79.56 கோடியைத் தவிர கூடுதலாக ரூ.20 கோடி அளித்துள்ளது.



2002 ஏப்ரல் 16]

**4. 2002-2003 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

2002-2003 ஆம் ஆண்டு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் வருடமாகும். கடந்த ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டபடி, நடப்பு ஆண்டில் திட்டங்கள் புதிய மறு ஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். புதிய மறு ஆய்வின்படி மொத்தமுள்ள 80,421 குடியிருப்புகளில் உத்தேசமாக 28,623 முழுமையான குடிநீர் வசதி பெற்றவைகளாகவும், 51,294 ஓரளவே குடிநீர் வசதி பெற்றவைகளாகவும், 504 குடியிருப்புகளில் ஆண்டு முழுவதும் நிலைத்த நீராதாரமற்றவைகளாகவும் உள்ளன.

2. நடப்பு நிதி ஆண்டில் 6500 குடியிருப்புகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக எடுத்துக் கொள்ளப்பட உள்ளன. இவற்றில் நிலைத்த நீராதாரமற்ற 504 குடியிருப்புகளும் அடங்கும். ரூ.1170 கோடி மதிப்பீட்டில் தற்பொழுது செயலாக்கத்தில் உள்ள 89 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை முடித்து மக்கள் பயனுக்கு கொண்டு வர முன்னுரிமை அளிக்கப்படும்.

3. கைப்பம்புகளிலிருந்து குடிநீர் பெறுவதில் கிராமப்புற பெண்கள் படும் சிரமங்களை நீக்கும் வகையில் கடந்த நிதி ஆண்டு 2001-2002-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்து செயலாக்கப்பட்ட சிறு மின்விசைத் திட்டங்கள் பொதுமக்களின், குறிப்பாக ஊரகப் பகுதி மகளிரின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளது. ஆகவே நடப்பு நிதி ஆண்டில் 10,000 அடி குழாய்களுக்கு இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. இவற்றில் 4000 திட்டங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் ரூ.60 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

4. கிராமப்புற பகுதிகளிலும் நகர்ப்புறத்தைப் போன்றே குடிநீர் வசதி செய்திட அரசு உறுதி பூண்டுள்ளது. ஆகவே கிராமப்புற குடியிருப்புகளில் குடிநீர் வீட்டிணைப்பு பெறுவது ஊக்குவிக்கப்படும். வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளோருக்கு வீட்டிணைப்பு பெறுவதற்காக நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.1000 முன் வைப்புத் தொகையினை ரூ.500 ஆகக் குறைத்து அத்தொகையையும் 2 அரையாண்டுத் தவணைகளில் செலுத்த அனுமதிக்கப்படும். மற்றவர்களுக்கு ரூ.1000-ஐ இரண்டு அரை ஆண்டு தவணைகளில் செலுத்த அனுமதிக்கப்படும். இவ்வாறு அனுமதிப்பதால் ஊரகப் பகுதிகளில் வீட்டிணைப்புகள் விரைவாக

[2002 ஏப்ரல் 16

அளிப்பதற்கும் முக்கியமாக வீட்டிணைப்பின் வழியாக வழங்கப்படும் குடிநீருக்கான தொகையினை வசூலிப்பதன் மூலம் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பு மற்றும் மின் உபயோகத்திற்கான தொகையினை செலுத்திட உள்ளாட்சி மன்றங்களுக்கு வசதியாக இருக்குமாதலால் மன்றங்களின் நிதிச் சுமை குறைந்திட ஏதுவாக இருக்கும்.

5. ஊரகக் குடிநீர்த் திட்டங்களின் நிலைத்தன்மையே அரசின் முக்கிய கொள்கையாகும். கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் டேனிடா உதவியுடன் WASDEP (Water and Sanitation Demand Project) திட்டத்தின் கீழ் நடைபெற்ற ஊரக குடிநீர்த் திட்டங்கள் மற்றும் மத்திய அரசின் உதவியின் மூலம் பகுதி சீரமைப்பு திட்டத்தின் கீழ் கோவை, வேலூர், கடலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் மக்கள் பங்கேற்புடன் நிறைவேற்றப்படும் குடிநீர்த் திட்டங்களில் இருந்து பெற்ற அனுபவம் மூலம் குடிநீர்த் திட்டங்களில் மக்களின் பங்கேற்பு, குடிநீர்த் திட்டங்களின் வடிவமைப்பு, நிறைவேற்றுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றை மிகவும் மேம்படுத்துவதாக உள்ளது. குடிநீர் வழங்கலில் மக்களின் பங்கேற்பு மிகவும் பயனுள்ளதாகும். மக்களின் பங்கேற்புடன் கூடிய திட்டமானது மக்களின் தேவையைக் கருதி வாலாயமாக செய்வதைத் தவிர்த்து பயனை முன்னிறுத்தி தேவையின் அடிப்படையில் திட்டத்தை நிறைவேற்ற உதவுகிறது. மேலும் இத்திட்டத்தின் மூலம் மக்களை திட்டத்தின் உரிமையாளர்களாக மாற்ற வழி வகுக்கப்படுகிறது. இதன் மூலம் மக்களின் முதலீடு பயன் உள்ளதாகவும், நல்ல பணிகளுக்கு பணம் செலுத்தும் முறையும் உருவாகிறது. இதன் பயனாக திட்டச் செலவினை திருப்பிப் பெறும் முறை மற்றும் பணிகளின் நீண்ட நிலைத்தன்மையும் உருவாகும். இக்குடிநீர்த் திட்டங்களில் முக்கிய அங்கமான மகளிர் அதன் உரிமையாளர்களாகவும் ஆகின்றனர். இதன் அடிப்படையில் (1) அரசு தேவைமுறை அணுகுமுறையை மேற்கொள்ளுதல், (2) குடிநீர்த் திட்டங்களை மக்களின் பங்கேற்புடன் நிறைவேற்றுதல், (3) திட்டச் செலவில் ஒரு பகுதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தலின் முழு செலவினை ஏற்றுக் கொள்வதின் மூலம் பயனாளிகளை திட்டங்களின் உரிமையாளர்களாக மாற்றுதல் ஆகிய மூன்று அணுகுமுறைகளையும் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாகச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.



2002 ஏப்ரல் 16]

6. நீராதாரத்தின் நிலைத்தன்மை அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். 2002-2003ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும் அனைத்துக் குடிநீர்த் திட்டங்களின் கட்டுமானப் பணிகளிலும் மழை நீரைச் சேகரித்தல் மற்றும் மழைநீரைச் செறிவூட்டும் பணிகள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படவுள்ளன. மேலும் திட்ட மதிப்பீட்டில் இப்பணிகளுக்கும் தனியாக ஒதுக்கீடு அளிக்கப்படும்.

**5. சிறப்பு உள்ளடக்கத் திட்டம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தில் அதிக கவனம் செலுத்தி விரைவாக திட்டங்களை முடித்திட நடவடிக்கை எடுக்கப்படும். 2001-2002ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்டவாறு 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சத் தேவை திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.411 கோடியில் 22.4 விழுக்காடான ரூ.92.14 கோடி செலவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

2. நடப்பாண்டில் 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்பிற்கு குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 4000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு சிறு மின்விசைத் திட்டங்கள் மூலம் குடிநீர் வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**6. குடிநீர்த் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல்**

குடிநீர்த் தரம் பாதிக்கப்படுவதால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்படவுள்ளது. வெவ்வேறு தன்மைகளினால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் குடிப்பதற்கு உகந்ததற்ற தன்மையுள்ள நீராதாரங்களைக் கொண்டுள்ள குடியிருப்புகளுக்கு கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பரிசீலித்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட உள்ளது.

1. குறைந்த செலவிலான தள சுத்திகரிப்பு
2. தரம் பாதிக்கப்பட்ட நீராதாரங்களிலுள்ள நீரினை நன்னீருடன் சரியான விகிதாசாரத்தில் சேர்த்தல்

[2002 ஏப்ரல் 16

3. தனியார் வசம் உள்ள குடிநீர் ஆதாரங்களை வாடகைக்கு எடுத்தல்

4. குடிநீர் வழங்கலில் இரட்டை முறையை மேற்கொள்ளுதல்

5. தொலைதூர நீராதாரத்திலிருந்து குடிநீர் வழங்குதல்

2. அனைத்து வகை குடிநீர் நீராதாரங்களையும், பயனற்ற ஆழ்துளைக் கிணறுகளையும் அறிந்திட தற்போது மாநில அளவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பயனற்ற ஆழ்துளை கிணறுகள், மழைநீர் சேகரிப்பு மற்றும் குடிநீர்த் தரத்தை உயர்த்தும் செறிவூட்டு கட்டமைப்புகளாக பயன்படுத்தப்படும். மாநில அளவிலான ஆய்வின் அடிப்படையில், 2002-2003ஆம் ஆண்டில் குடிநீர்த் தரம் பாதிக்கப்பட்ட 1000 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள காந்தி கிராம ஊரக நிறுவனத்தின் மூலம் புளோரைடு சுத்திகரிப்பு கலன்கள் 10 இடங்களில் குறைந்த செலவில் தளத்திலேயே அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் மொத்தம் 40 இடங்களில் இரும்புச் சத்து சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

4. இராமநாதபுரம் மாவட்டத்தில் 74 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் ஒரு பேரூராட்சிக்கு (கீழக்கரை) பாதுகாக்கப்பட்ட குடிநீரை மொத்த விகிதத்தில் அளிக்கும் பொருட்டு தனியார் மூலம் 5 இடங்களில் உவர்நீரை நன்னீராக்கும் கலன்களை நிறுவி, உரிமத்துடன் இயக்கி பின்னர் உரிமம் மாற்றம் செய்யும் வகையில் (BOOT) திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. உப்பூர், முந்துவார்கொண்டான், களரி, வாலிநோக்கம், கோம்பிட-மதுரை ஆகிய இடங்களில் உவர்நீரை நன்னீராக்கும் கலன்கள் ரூ.645.64 இலட்சங்கள் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

### 7. ஊரகப் பகுதிகளில் பகுதி சீரமைப்புத் திட்டம்

1999-2000ஆம் ஆண்டிலிருந்து துரிதப்படுத்தப்பட்ட ஊரக குடிநீர்த் திட்டங்களில் சமுதாயப் பங்களிப்பை ஊக்குவிக்கும் மாநிலங்களுக்கு திட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் நிதி ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படுகிறது.



2002 ஏப்ரல் 16]

2. இம்மாநிலத்தில் இத்திட்டம் கீழ்க்கண்ட நான்கு மாவட்டங்களில் செயல்பாட்டில் உள்ளது :

(1) கோயம்புத்தூர்

(2) வேலூர்

(3) கடலூர்

(4) பெரம்பலூர்

நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை

| திட்ட விவரம் | பகுதி சீரமைப்பு திட்ட மாவட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | கோயம் புத்தூர் | வேலூர் | கடலூர் | பெரம்பலூர் | மொத்தம் |
| பொதுமக்களின் பங்களிப்பு தொகை (ரூ. இலட்சத்தில்) | 194.50 | 183.27 | 55.01 | 184.55 | 617.33 |
| அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் | 350 | 24.36 | 107 | 471 | 3364 |
| நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் | 258 | 1165 | 30 | 248 | 1701 |
| மொத்தம் | 929.10 | 1384.65 | 81.97 | 611.59 | 3007.31 |

3. தமிழகத்தில் பகுதி சீரமைப்பு திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தியுள்ளதை மத்திய அரசு பாராட்டியுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்கள் இந்தியாவிலேயே பகுதி சீரமைப்பு திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட மாவட்டங்களில் சிறந்த மாவட்டங்களாக விளங்குகின்றன. இவ்வாறு தமிழ்நாடு, பகுதி சீரமைப்பு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியுள்ளதால் இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்திட மத்திய அரசின் கருத்துக்கிணங்க கரூர், காஞ்சிபுரம், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்திட பரிந்துரைக்கப்பட உள்ளது.

[2002 ஏப்ரல் 16

### 8. பிரதமரின் கிராம யோஜனாத் திட்டம்

2001-2002 ஆம் ஆண்டில் மத்திய அரசின் உதவியின் மூலம் பிரதம மந்திரியின் கிராம யோஜனாத் திட்டத்தின் கீழ் நதிகள், ஓடைகள், இவற்றின் குறுக்காக 117 எண்ணம் குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகள் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் நிலத்தடி நீர் நிலை பற்றி அறிந்திட தொலையுணர்வு ஆய்வு நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு நிலைகளில் உள்ள இப்பணிகள் இந்த ஆண்டு முடிக்கப்படும். நீர்வளத்தை மேம்படுத்தும் கட்டமைப்புகள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டிலுள்ளன. இத்திட்டம் 2002-2003ஆம் ஆண்டிலும் தொடங்கப்படவுள்ளது. நடப்பாண்டில் 311 குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகள் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 9. நகர குடிநீர்த் திட்டம்

2001-2002 ஆம் ஆண்டில் 2 மாநகராட்சிகள், 33 நகராட்சிகள், 169 பேரூராட்சிகள் ஆகிய 204 நகரங்களை உள்ளடக்கிய 150 திட்டப் பணிகள் தொடரப்பட்டன. 5 நகராட்சிகள் மற்றும் 58 பேரூராட்சிகள் உள்ளடக்கிய 63 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

2. ரூ.683 கோடி மதிப்பீட்டில் 2 மாநகராட்சிகள், 28 நகராட்சிகள் மற்றும் 111 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் ரூ.113 கோடி மதிப்பீட்டில் 3 நகராட்சிகள் மற்றும் 35 பேரூராட்சிகளை உள்ளடக்கிய 38 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டங்கள் தொடங்கப்பட உள்ளன. 2 மாநகராட்சிகள் 9 நகராட்சிகள் மற்றும் 56 பேரூராட்சிகளை உள்ளடக்கிய 67 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட உள்ளன.

3. 2001-2002 ஆம் ஆண்டில் மத்திய அரசு உதவியுடன் கூடிய துரிதப்படுத்தப்பட்ட நகர குடிநீர்த் திட்டத்தின்கீழ் 16 நகரங்களுக்கான குடிநீர் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு 8 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 8 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள் நடப்பாண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இவைகளில் புஞ்சைப் புகளூர், பாலக்கோடு, அரூர், நாசரேத் மற்றும் பள்ளப்பட்டி ஆகிய நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள்



2002 ஏப்ரல் 16]

நடப்பாண்டில் 2002-2003-ல் முடிக்கப்படும். இதுதவிர ஆடுதுறை, திருவிடைமருதூர் மற்றும் திருபுவனம் ஆகிய மூன்று நகரங்கள் நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

4. துரிதப்படுத்தப்பட்ட நகரக குடிநீர்த் திட்டங்கள் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிடையே 50:45:5 என்ற விகிதாச்சார நிதி பங்கீடுகளின் அடிப்படையில் செயலாக்கப்படுகின்றன. 2001-2002-ல் அரசு பெற்ற ரூ.5.58 கோடி நிதி ஒதுக்கீடு, முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளதால் கூடுதலாக ரூ.3.20 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது.

### 10. பெரிய அளவிலான குடிநீர் வழங்கு திட்டங்கள்

ஊரகப் பகுதிகளுக்கான தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் கீழ் 10,000 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.2,300 கோடி மதிப்பீட்டிலான-திட்ட வரைவு-நிதியுதவி பெறுவதற்காக மத்திய அரசு மூலம் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கி குழு மார்ச், 2002-ல் தமிழ் நாட்டிற்கு வருகைபுரிந்து அரசு அலுவலர் மட்டத்தில் ஆலோசனை நடத்திச் சென்றுள்ளது.

2. உசிலம்பட்டி நகராட்சி, ஆண்டிப்பட்டி, பேரையூர், தி.கல்லுப்பட்டி, ஏழுமலை பேரூராட்சிகள், மதுரை, தேனி மாவட்டங்களில் உசிலம்பட்டி, சேடப்பட்டி, தி.கல்லுப்பட்டி, ஆண்டிப்பட்டி, கள்ளிக்குடி, செல்லம்பட்டி மற்றும் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியங்களில் 488 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றில் 4,324 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான சேடப்பட்டி-ஆண்டிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் இவ்வாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

3. நிலத்தடி நீராதாரங்களைச் செறிவூட்டுவதற்காக பவானி ஆற்றிலிருந்து வெளியேறும் உபரி நீரை மடை மாற்றி, ஈரோடு மாவட்டத்தில் நம்பியூர், ஊத்துக்குளி, சென்னிமலை, பெருந்துறை மற்றும் பவானிசாகர் ஊராட்சி ஒன்றியங்களிலும், கோவை மாவட்டத்தில் அன்னூர், அவிநாசி, காரமடை, சூலூர் மற்றும் சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள குளங்கள் மற்றும் குட்டைகளில் தேக்கி நிலத்தடி நீரை செறிவூட்டும் அவிநாசி-அத்திக்கடவு குடிநீர் செறிவூட்டும் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று பல்வேறு கட்டங்களாக

[2002 ஏப்ரல் 16

செயலாக்கப்படவுள்ளது. ரூ.270 கோடி மதிப்பீட்டுடன் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தினால் 9,55,307 மக்கள் பயன்பெறுவார்கள்.

4. தருமபுரி மாவட்டத்தில் ஓகேனக்கல் குடிநீர் வழங்கு திட்டம் ரூ.1008 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நிதியுதவி பெறுவதற்காக, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு வங்கி (JBIC)யை அணுகுமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசு இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

5. நாகப்பட்டினம், கீழையூர், திருமருகல், தலைஞாயிறு மற்றும் கீழ் வேளூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 890 ஊரகக் குடியிருப்புகள், திட்டச்சேரி, கீழ்வேளூர் மற்றும் வேளாங்கண்ணி ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் நாகப்பட்டினம் நகராட்சி ஆகியவற்றில் உள்ள 7 இலட்சம் மக்கள் பயன்பெறத்தக்க வகையில் நாகப்பட்டினம்-வேளாங்கண்ணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.65.63 கோடி மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

6. தூத்துக்குடி மாவட்டத்தில் கயத்தார், கழுகுமலை, எட்டயபுரம் நகரப் பேரூராட்சிகள், சாத்தூர் மற்றும் கோவில்பட்டி நகராட்சிகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் 132 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவை பயன்பெறத்தக்க வகையில் ரூ.30.16 கோடி மதிப்பீட்டில் கயத்தார்-எட்டயபுரம்-சாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

## 11. நகரங்களுக்கான பாதாள சாக்கடை பெருந்திட்டம்

தற்போது 4 மாநகராட்சிகள், 11 நகராட்சிகள் உள்ளடக்கிய 15 நகரங்களில் சில பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. நகரங்களுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்களின் தேவையினை அரசு உணர்ந்துள்ளது. அதன்படி, நகரங்களுக்குத் தேவையான பாதாள சாக்கடைத் திட்டங்களை, குறித்த காலக்கெடுவுக்குள் மாநிலம் முழுவதும் செயல்படுத்த பெருந்திட்ட வரைவு அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. இந்த மகத்தான திட்டம் அனைத்து நகரகப் பகுதிகளுக்கும் தேவையான துப்புரவு வசதிகளுடன் முழு அமைப்பை காட்டும் கால அட்டவணை மற்றும் திட்ட அமைப்புடன் கூடியதாக விளங்கும்.



2002 ஏப்ரல் 16]

## 12. தேசிய நதிநீர் தூய்மைத் திட்டம்

தேசிய நதிநீர் தூய்மைத் திட்டத்தின்கீழ் ஈரோடு பவானி, குமாரபாளையம், பள்ளிபாளையம் மற்றும் திருச்சி நகரப் பகுதிகளில் காவிரி ஆறு மாசுபடுதலைத் தடுக்கும் முகமாக மத்திய அரசு உதவியுடன் தேசிய நதிநீர் தூய்மைத் திட்டத்தின்கீழ் ரூ. 30.41 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயல்பாட்டிலுள்ளன. இத்திட்டத்தின்கீழ் செய்யப்படும் பணிகளில் திருச்சி மற்றும் ஈரோடு நகரப் பணிகள் இந்த ஆண்டில் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. பவானி மற்றும் குமாரபாளையம் நகரப் பணிகள் 2003-2004 ஆம் ஆண்டில் முடிவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 13. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதியுதவியுடன் கீழ்க்கண்ட நகரங்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன :

(1) திருநெல்வேலி மாநகராட்சி

(2) திருச்சி மாநகராட்சி

(3) மதுரை மாநகராட்சி

(4) தஞ்சாவூர் நகராட்சி

(5) மயிலாடுதுறை நகராட்சி

(6) கரூர் நகராட்சி

(7) கும்பகோணம் நகராட்சி

(8) இனாம் கரூர் நகரப் பேரூராட்சி

(9) இராமேஸ்வரம் நகரப் பேரூராட்சி

(10) திருச்செந்தூர் நகரப் பேரூராட்சி

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 571 கோடி ஆகும்.

2. மேற்கூறிய பத்து நகரங்களில், திருநெல்வேலி, தஞ்சாவூர், மயிலாடுதுறை, மதுரை மற்றும் கும்பகோணம் ஆகிய ஐந்து

நகரங்களுக்கான விரிவான திட்ட மதிப்பீடுகளுககு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. எஞ்சியுள்ள 5 திட்டங்களுக்கு நடப்பு நிதியாண்டில் மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 14. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கொடைக்கானல் ஏரி மாசுபடுவதைத் தடுக்க புனரமைப்புத் திட்டம் மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஏரிக்குள் செல்லும் கழிவு நீரை இடைமறித்து திசை மாற்றும் பணிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், களையெடுப்பு, ஆழப்படுத்துதல், தூர் எடுப்பு ஆகிய பணிகள் ரூ.10.33 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ.5.4 கோடி மதிப்பீட்டிலான கழிவு நீரை இடைமறித்து வழி மாற்றும் பணிகள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு பணிகளை நிறைவேற்றும்.

### 15. குடிநீராதாரத்தின் நிலைத்தன்மை

ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் தமிழகத்தில் வெவ்வேறு பகுதிகளில் 57 கசிவு நீர்க் குட்டைகள் மற்றும் 393 தடுப்பணைகள் உள்ளடங்கிய 450 மழை நீர் சேகரிக்கும் கட்டமைப்புகள் அமைத்திட தேசிய விவசாய ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (VII) உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. நடப்பாண்டில் தேசிய விவசாய ஊரக வளர்ச்சி வங்கி இத்திட்டத்திற்கு நிதி உதவி அனுமதி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ.50 கோடி மதிப்பீட்டில் 321 கசிவு நீர்க் குட்டைகள் மற்றும் 1679 தடுப்பணைகள் தமிழ்நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அமைத்திட நிலத்தடி நீரைச் செறிவூட்டும் பெருந்திட்ட கருத்துரு மத்திய நிலத்தடி நீர் வாரியத்திற்கு நிதி உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

### 16. மனித வள மேம்பாடு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மனிதவள மேம்பாட்டுப் பிரிவு 1996 முதல் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. மனிதவள மேம்பாட்டுப் பிரிவின் அடிப்படை நோக்கம் ஒவ்வொரு கிராமத்திலும் கீழ்மட்டத்தில் ஒரு பயிற்சி பெறுபவர்/கம்மியர்/பொறுப்பாளி/





ஊக்கப்படுத்துபவர் மற்றைய தொழில் வல்லுநராக (எடுத்துக்காட்டாக கட்டட தொழில் நுட்ப வல்லுநர்) உருவாக்க வேண்டும் என்பதாகும்.

2. 2001-2002 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ.144.51 இலட்சங்களுக்கு மனிதவள மேம்பாட்டுப் பணிகளை தமிழ்நாட்டில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கியது. 2001-2002-ம் ஆண்டில் 59 மாவட்ட அளவில் பயிற்சி பெறுபவர், 2592 அடிப்படைப் பயிற்சி பெறுபவர் மற்றும் 92 தொழில் நுட்ப அதிகாரிகள் பயிற்றுவிக்கப்பட்டனர். இதுவரை 18,133 அடிப்படைப் பயிற்சி பெறுபவர், 312 மாவட்ட அளவில் பயிற்சி பெறுபவர் மற்றும் 1546 தொழில் நுட்பப் பணியாளர்கள் ரூ.142.40 இலட்சம் செலவில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் திண்டுக்கல், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டன.

3. 2002-2003-ம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் பின்வருமாறு:

* 5220 பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளித்தல்
* 2880 தொழில் முறைமை பயிற்சி அளித்தல்
* மாநில மற்றும் மாவட்ட அளவில் கருத்தரங்கு
* மனிதவள மேம்பாட்டுச் செயல்களுக்கு இணையதளம் உருவாக்குதல்

### 17. கணினிமயமாக்கும் திட்டம்

தனித்தியங்கும் கணினிகளை ஒருங்கிணைத்து ஒன்றுபட்ட முறையாக கீழ்க்கண்ட பணிகளில் இயங்குவதற்கு வான் (WAN) இணைப்பை ஏற்படுத்துவதற்கான கருத்துரு ஒன்று செயலாக்கத்திலுள்ளது :

* பொறியியல் வடிவமைப்பு மற்றும் மதிப்பிடுதல்.
* கணக்கு மற்றும் பணிமேலாண்மை
* ஒலித் தொகுப்பு மற்றும் விவரக் குறிப்புகள் பரிமாற்றம்
* மின்வலைப் பின்னல் (WEB) தொழில் நுட்பம்
* பயிற்சிகள்

இத்திட்டம் வெகுவிரைவில் செயல்படுத்தப்படும்

[2002 ஏப்ரல் 16

**18. மழை நீரைச் சேகரித்தல்**

மாண்புமிகு தமிழக முதல்வரின் உத்தரவின்படி மாநிலம் முழுவதும் கிராம மற்றும் நகரப் பகுதிகளில் மழை நீரைச் சேகரிக்கும் திட்டங்களை ஊக்குவிக்க விரிவான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

* மழை நீர் சேகரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள மாநில மற்றும் மத்திய அரசுத் துறைகள், அரசு சாரா நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பு மற்றும் ஆய்வுகளை மாநில அரசு மாதந்தோறும் செய்து வருகிறது.
* மாவட்ட ஆட்சியாளரிடம் மாவட்ட தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டத்தின் பிற பகுதிகளிலுள்ள அலுவலகங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஒருங்கிணைந்து உருவாக்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.
* நிர்வாக ஆணையாளர், வருவாய்த் துறை அவர்கள் மழை நீர் சேகரிப்பை வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாகக் கருதி செயலாக்க மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.
* பேரழிவுத் தடுப்பு மேலாண்மைக்கான கருத்தரங்கு ஒன்று 27-9-2001-இல் நடத்தப்பட்டு மழைநீர் சேகரிப்பை வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக மேற்கொள்ளும் முறைகள் பற்றி மாவட்ட அலுவலகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
* தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மழைநீரின் சேகரிப்பிற்கென www.aboutrainwater.com என்ற மின்வலைப் பின்னல் உருவாக்கப்பட்டுள்ளது.

**18.1. மழைநீர் சேகரிப்பை ஊக்குவிக்க மேற்கொள்ளும் முயற்சிகள்**

* சிறிய திரைப்படங்கள், தொலைக்காட்சி மற்றும் தமிழகம் முழுவதிலுமுள்ள திரையரங்குகளில் ஒளிபரப்புதல், நிகழ்ச்சிகளினிடையே சிறிய செய்திகள், ஒலி மற்றும் ஒளி அமைப்புகள் எனப் பல்வேறு சாதனங்களின் மூலமாக விரிவான விளம்பரங்கள் செய்தல்.
* தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைமையகத்தில் 31-7-2001-ல் மழை நீர் சேகரிப்புத் தகவல் மையம் தொடங்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 16]

* மாநகரப் பேருந்துகளில் மழைநீர் சேகரிப்பு விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டு விரிவான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

**18.2. பயிற்சித் திட்டங்கள், பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் வழியே விழிப்புணர்வு ஏற்படுத்த—**

* டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரியமும்,
* தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள் மூலம் மாநிலம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பைப் பரவலாக்க பெருமுயற்சி மேற்கொண்டுள்ளன.
* அரசு சாரா நிறுவனங்களும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பைப் பரவலாக்க பெருமுயற்சி மேற்கொண்டுள்ளன.
* தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நாட்டு நலப் பணித்திட்ட அமைப்பின் உறுதுணையுடன் மாணவர்கள் மற்றும் தேசிய சமூக சேவை அமைப்பாளர்களை ஈடுபடுத்தி ஒரு திட்டப் பணியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.
* நீராதாரம் மற்றும் நீரியல் பற்றிய பயிலரங்கம் மழை நீர் சேகரிப்பை பிரதான ஆய்வுக் கருத்துருவாக எடுத்துக் கொள்ளப்பட்ட நீர்வளம் மற்றும் நீர் மேலாண்மை தேசியக் கருத்தரங்கு சென்னையில் நடத்தப்பட்டது. இதில் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், தேசிய மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் யூனிசெப் நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். மழைநீர் சேகரிப்பில் தமிழ்நாடு மேற்கொண்ட தொடக்க முயற்சிகள் வெகுவாகப் பாராட்டப்பட்டன.

**18.3.** பிரதான நிறுவனம்

* சென்னைக்கு, சென்னைக் குடிநீர் வாரியமும், மற்ற மாவட்டங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், மழை நீர் சேகரிப்பை மேம்படுத்துவதற்கான பிரதான நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

* அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலை தூர உணர்வுத் தொழில் நுட்ப வாயிலாக மேற்கொண்ட நில நீர் ஆய்வுகளின் அடிப்படையில் நிலத்தடி நீர்ச்செறிவூட்டுதல் மற்றும் மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் பெருவாரியாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயலாக்கப்படுகின்றன. தமிழ்நாடு முழுவதும் இத்தகைய 13,000 கட்டமைப்புகளை உருவாக்க ரூ.200 கோடி மதிப்பீடு திட்டக் கருத்துரு தேசிய விவசாய ஊரக வளர்ச்சி வங்கிக்கு நிதி பெற அனுப்பப்பட்டுள்ளது. 62 தடுப்பணைகள், 40 ஊருணிகள், 9 நிலத்தடித் தடுப்புகள், 5 செறியூட்டுக் குழிகள் மற்றும் 1 நீரூற்றுக் குட்டை அடங்கிய 117 மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளுடன் ரூ.15 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் நடப்பாண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

* மழை நீர் சேகரிப்பு, குடிநீர்த் திட்டங்களின் வடிவமைப்பில் ஒருங்கிணைந்த பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

* ஆலயங்களிலுள்ள குளங்களைத் தூர்வாரி மழைநீர் சேகரிப்பு அமைப்புகளாக்கத் திட்டங்கள் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியர்களின் ஒத்துழைப்புடன் செய்யப்பட உள்ளன.

* மத்திய நிலத்தடி வாரியத்திற்கு ரூ.50.51 கோடி மதிப்பீட்டில் தனித் திட்டம் ஒன்று மாவட்டங்களில் நிலத்தடி நீர் செறியூட்டும் முகமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



**18.4.** மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் செயல்படுத்தப்பட்ட இடங்கள்

*மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள்*

மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட அளவில் ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வனத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் விவசாயத் துறை ஆகிய துறைகளுடன் மழைநீர் சேகரிப்பு திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஒருங்கிணைந்து முனைப்பாக செயல்படுகின்றனர்.


28 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்கின்றன.

*பொதுப்பணித் துறை:* மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகக் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பொதுப் பணித் துறை முனைப்புடன் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

*தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்:* தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ரூ.6.00 இலட்சம் செலவில் 17 இடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை நிறுவியுள்ளது. இவற்றில் உபயோகத்தில் இல்லாத 258 ஆழ்துளைக் கிணறுகளை செறிவூட்டம் செய்ததும் அடங்கும். இது உண்மையிலேயே வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும்.

*தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்:* தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அனைத்துக் குடியிருப்புகளிலும் இவ்வாரியம், மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. 42 அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள 15,728 குடும்பங்கள் இதன் மூலம் பயன் அடைந்துள்ளன.

# ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கு நிலை 01-04-2002 அன்றைய நிலவரப்படி




| குடிநீர் வழங்கு நிலை | குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக குடிநீர் வசதி பெற்றவை | 28,623 |
| பகுதியாக குடிநீர் வசதி பெற்றவை | 51,294 |
| நிலையான குடிநீர் ஆதாரமற்றவை | 504 |
| மொத்தம் | 80,421 |



# சிறு மின் இறைப்பான் திட்டம்





கையிறைப்பான்கள் மூலம் நீர் இறைப்பதில் கிராமப்புற மகளிருக்கு ஏற்படும் இடர்பாடுகளை நீக்கும் பொருட்டு, சிறு மின் இறைப்பான் திட்டத்தை **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** அறிமுகப்படுத்தினார்கள். 2001-2002ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. 2001-2002-ஆம் ஆண்டில் 4,389 கையிறைப்பான்கள் சிறு மின் இறைப்பான் திட்டங்களாக மாற்றப்பட்டன.

2002-2003-ஆம் ஆண்டில் 10,000 கையிறைப்பான்களை சிறு மின் இறைப்பான்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 4,000 சிறு மின் இறைப்பான் திட்டங்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் வாழும் குடியிருப்புகளில் அமைக்கப்படும்.

# பள்ளிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்










# ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்




தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான ஒரு சிறப்புத் திட்டம், 2001-2002-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 2002-2003-ஆம் ஆண்டின் இறுதிக்குள் குடிநீர் வசதி அமைத்துத் தர முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 2001-2002-ஆம் ஆண்டிற்கான இலக்கு 700 என முடிவு செய்யப்பட்டு, 995 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.



# நாகப்பட்டினம் - வேளாங்கண்ணி கூட்டுக் குடிநீர்த் திட்டம்




## பயனாளிகள்

நாகப்பட்டினம் நகராட்சி

வேளாங்கண்ணி வரைப் பேரூராட்சி

கீழ்வேளூர் வரைப் பேரூராட்சி

திட்டச்சேரி வரைப் பேரூராட்சி


**890 ஊரகக் குடியிருப்புகள்**

| | | |
|---|---|---|
| தலைஞாயிறு ஒன்றியம் | - | 159 |
| கீழையூர் ஒன்றியம் | - | 127 |
| நாகப்பட்டினம் ஒன்றியம் | - | 143 |
| திருமருகல் ஒன்றியம் | - | 264 |
| கீழ்வேளூர் ஒன்றியம் | - | 197 |

*திட்டத்தின் மூலம் பயன்பெறும் மக்கட்தொகை 7 இலட்சம்*



# கயத்தார், கழுகுமலை, எட்டயபுரம் மற்றும் சாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்




## பயனாளிகள்


கயத்தார் நகரப் பேரூராட்சி
கழுகுமலை நகரப் பேரூராட்சி
எட்டயபுரம் நகரப் பேரூராட்சி
சாத்தூர் நகராட்சி
கோவில்பட்டி நகராட்சி

**132 ஊரகக் குடியிருப்புகள்**

| | | |
|---|---|---|
| கயத்தாறு ஒன்றியம் | - | 77 |
| ஓட்டப்பிடாரம் ஒன்றியம் | - | 8 |
| கோவில்பட்டி ஒன்றியம் | - | 47 |

*திட்டத்தின் மூலம் பயன்பெறும் மக்கட்தொகை - 1.43 இலட்சம்*

## தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி ஒன்றியத்தில் தொலையுணர்வு நுட்பத்தின் மூலம் நிலத்தடி நீர் செறிவு



[2002 ஏப்ரல் 16

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்: 17,256 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இதுவரை 29,60,673 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் தனி நபர் வீடுகள், அரசுக் கட்டடங்கள், நிறுவனங்கள்/ வர்த்தக அமைப்புகள் மற்றும் இதர கட்டடங்கள், கோயில் குளங்கள், ஏரிகள், குட்டைகள், ஊருணிகள், பொதுக் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அமைப்பை மாற்றி அமைத்தல்

குடிநீர் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஊரக மற்றும் நகரக உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ந்து வரும் தொழில் நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அமைப்பை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## XIII. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் ஒன்றான குடிநீர்ப் பாதுகாப்பு அளிப்பது அரசின் ஒரு முக்கிய நோக்கமாகும். எனவே, சென்னை குடிநீர் வாரியம், சென்னைக்குக் குடிநீர் பாதுகாப்பு அளிக்க உறுதி பூண்டுள்ளது. சென்னை மாநகரையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் வறட்சிப் பிடியிலிருந்து நீக்குவதே சென்னைக் குடிநீர் வாரியத்தின் அடிப்படையான நீர் மேலாண்மைக் கொள்கையாகும். சென்னைப் பெருநகரப் பகுதியில் வாழும் மக்களுக்கு குறைந்தபட்சத் தேவையான குடிநீரை வழங்குவதையே இவ்வாரியம் கோட்பாடாகக் கொண்டுள்ளது. வாரியம் நீராண்மை கொள்கை கோட்பாட்டை உறுதி செய்யும் பொருட்டு இயன்ற அளவில் குறைந்தபட்ச அளவிற்குக் குறையாமல் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கும்.



2002 ஏப்ரல் 16]

### 1. நீர் மேலாண்மைத் திட்டம்

பருவமழை பொய்ப்பினும் சென்னை நகரின் தேவைக்கு குறைந்தபட்சம் நாளொன்றுக்கு 220 மில்லியன் லிட்டரும், தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டரும் வழங்குவதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் "குடிநீர் வறட்சியற்ற நிலைத் திட்டம்" ஒன்றை வகுக்கும். இத்திட்டம் ஏரிகளின் மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் மற்றும் சுழற்சி முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீரை ஒருங்கிணைத்து அடுத்த பத்தாண்டுகளில் வழங்குவதற்கானதாகும்.

### குடிநீர் வறட்சியற்ற நிலைத் திட்டத்தின் செயல்பாடுகளாவன

1. ஒவ்வோர் ஆண்டும் பருவ மழைக்குப் பின், அதாவது ஜனவரி முதல் தேதியிலிருந்து, அடுத்துவரும் பருவ மழைக்கால ஆரம்பம் வரை அதாவது அக்டோபர் ஒன்றாம் தேதி வரை ஏரிகளில் குறைந்தபட்ச கொள்ளளவில் தண்ணீர் இருக்குமாறு நீர் மேலாண்மைத் திட்டம் தீட்டப்படும்.

2. இத்திட்டத்தின் ஒரு பகுதியின் முயற்சியாக சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-1 உருவாக்கப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதில் வீராணம் ஏரியிலிருந்து தினமும் 180 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை குழாய்கள் மூலமாக சென்னைக்குக் கொண்டுவருவதும் அடங்கும்.

3. தொழிற்சாலைகளுக்குத் தங்குதடையின்றி தண்ணீர் வழங்குவதற்குக் கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்திகரிக்கும் 50 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலையம் இவ்வாண்டில் நிறுவப்படும்.

4. இத்திட்டத்தின்கீழ் மூன்று முக்கிய நீர் ஆதாரங்களான (1) ஏரியில் உள்ள மேற்பரப்பு நீர், (2) கிணற்று தளங்களிலுள்ள நிலத்தடி நீர் மற்றும் (3) மறுசுழற்சி நிலையங்களில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட நீர் ஆகியவற்றை இணைத்து கூட்டாகவும், தனித் தனியாகவும் வழங்கப்படும். மேற்படி நிலை மிதமான செலவினத்தில் அதிக அளவு குடிநீரை உறுதி செய்யும்.

[2002 ஏப்ரல் 16

உதாரணமாக நல்ல மழை பெய்யும் காலங்களில் மேற்பரப்பு நீரை மட்டும் அதிகமாகப் பயன்படுத்தி நிலத்தடி நீர்மட்ட அளவினை பாதுகாத்தலும்;

குறைந்த அளவு மழை பெய்யும் காலங்களில் மேற்கூறிய மூன்று நீர் ஆதாரங்களிலிருந்தும் கிடைக்கும் நீரைக் கூட்டாக வழங்கியும் குறைந்தபட்ச அளவு குடிநீர் வழங்குதல் உறுதி செய்யப்படும்.

5. சென்னை நகருக்கு அருகிலுள்ள ஆரணி கொசத்தலையாறு படுகைகளை மேம்பாடு செய்ய ஆலோசனைக் குழுவின் அறிக்கைக்குப்பின் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 200 மில்லியன் லிட்டர் நீர் நிலத்தடியிலிருந்து எடுக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதற்காக உலக வங்கியின் ஒப்புதல் பெற்று ஆய்வு நிறுவனத்தின் மூலம் ஆய்வு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. சென்னைப் பெருநகர குடிநீர் . வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-2-ல் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஓடும் ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் மற்றும் சிறிய நீர்த்தேக்கங்கள் அமைத்து அதன் மூலம் மழைநீரைச் சேமித்து நிலத்தடி நீரைப் பெருக்க வழிவகை செய்யப்படும்.

7. சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள போரூர் ஏரி, அம்பத்தூர் ஏரி மற்றும் இரட்டை ஏரி ஆகியவற்றை தூர்வாரி, ஆழப்படுத்தி, புதுப்பித்து அதன் கொள்ளளவு உயர்த்தப்படும். 2001-ம் ஆண்டில் செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள கொளவாய் ஏரியிலிருந்து தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்கியதை ஒரு கூடுதல் நீராதாரமாக எடுத்துக்கொள்ளலாம். இந்த நீராதாரங்கள் மூலம் பெறப்படும் தண்ணீரைச் சுத்திகரிப்பு செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீராக மாற்றி அவற்றையும் சென்னைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தோடு இணைக்கலாம் என்றும் கருதப்படுகிறது.



2002 ஏப்ரல் 16]

8. சென்னையைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிவாழ் மக்களுக்கு குடிநீர் வழங்கவும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்குத் தட்டுப்பாடின்றி தண்ணீர் வழங்கவும் தேவையான அளவு உவர்நீர் கிடைக்கும் பல்வேறு இடங்களில் 100 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட 10 மறுசவ்வூடு நிலையங்கள் நிறுவி, உரிமத்துடன் இயக்கி பின்னர் உரிமம் மாற்றம் செய்யும் அடிப்படையில் (BOOT) அமைக்கப்படும்.

9. சென்னை மாநகரப் பகுதிக்கு 2025-ம் ஆண்டின் குடிநீர்த் தேவை சுமார் 20 முதல் 30 ஆயிரம் மில்லியன் கன அடியாக இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. முன்பு குறிப்பிட்டுள்ளதுபோல் சென்னைக் குடிநீர் வாரியம் அனைத்து திட்டங்களையும் சேர்த்துப் பாதுகாப்பான குறைந்த அளவு குடிநீரை எந்நேரமும் வழங்குவதற்காக சுமார் 20 முதல் 30 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் அளவு இருக்குமாறு திட்டங்கள் தீட்டப்படும்.

10. சிறந்த தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி நீர் கொள்முதல் ஒப்பந்தங்கள் மூலம் பெருமளவில் நீரை வாரியம் கொள்முதல் செய்யும். இதன்மூலம், சென்னைக் குடிநீர் வாரியம் தொழில்நுட்ப சமன்பாடுடைய நிறுவனமாக மாறும்.

11. குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் நலிந்த பிரிவினர்களின் நிதி நிலைக்கேற்ப குடிநீர் இணைப்புக் கட்டணம் நிர்ணயத்தலின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் 100 சதவீத குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளைப் படிப்படியாக வழங்குவது வாரியத்தின் தலையாய நோக்கமாகும்.

12. சென்னைக் குடிநீர் வாரியம் சென்னை நகரின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் மட்டுமின்றி அனைத்து வீடுகளுக்கும் உரிய குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும்.

13. சென்னை நதி நீர் பாதுகாக்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் நடவடிக்கை மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் மழை நீர் கால்வாய்கள், ஆறுகள் மற்றும் அனைத்து நீர்வழித் தடங்களில் கழிவுநீர் கலக்காமல் தடுத்து நிறுத்தி நீரை மாசுபடாமல் பாதுகாப்பதே தலையாய கொள்கையாகும்.

[2002 ஏப்ரல் 16

14. மழை நீர் சேகரிப்பின் கோட்பாட்டினை பொதுமக்களிடம் மேலும் ஊக்குவிப்பதன் மூலம் தாங்களாகவே இத்திட்டத்தில் முழு ஈடுபாட்டுடன் கலந்துகொள்ள இயலும். இது நீரைப் பாதுகாப்பதற்கான தொலை நோக்கு முயற்சியாகும்.

**2. 2001-ம் ஆண்டின் வறட்சி நிவாரணப் பணிகள்**

கடந்த ஆண்டில் இதுகாறும் இல்லாத அளவிற்கு கடுமையான குடிநீர் வறட்சி நிலவியது. இதனை திறமையோடு சமாளித்து வாரியம், சென்னை நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றது.

2. சென்னை நகரின் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க நெய்வேலி, மாமண்டூர், பாலூர் மற்றும் கன்னிகைப்பேர் ஆகிய இடங்களிலிருந்து லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டுவரப்பட்டது. இதேபோல், மேட்டூர் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலிருந்தும் தண்ணீர் ரெயில் மூலமாக தினசரி கொண்டுவரப்பட்டது. அயோத்தியாகுப்பம், காசிமேடு குப்பம் ஆகிய இடங்களில் உவர்நீரை குடிநீராக மாற்றும் இரண்டு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. 214 தனியார் விவசாயக் கிணறுகளை வாடகைக்கு அமர்த்தி அதிலிருந்து நீர் எடுக்கப்பட்டு கிணற்று தளங்களில் ஏற்கெனவே உள்ள குழாய்களில் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீர் கூடுதலாக நகருக்கு வழங்கப்பட்டது.

3. வறட்சி காலத்தில் தொழிற்சாலைகள் பாதிக்காத வண்ணம் முதல் முறையாக செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள கொளவாய் ஏரியிலிருந்து லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டுவரப்பட்டு தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டது.

**3. தற்போதைய குடிநீர் வழங்கல்**

மூன்று ஏரிகளின் தண்ணீர் இருப்பில் முன்னேற்றம் ஏற்பட்டதினால் டிசம்பர் 2001-ல், நாள்தோறும் வழங்கப்பட்ட 140 மில்லியன் லிட்டர் குடிநீரின் அளவை 12-1-2002-லிருந்து 220 மில்லியன் லிட்டராக படிப்படியாக அதிகப்படுத்தப்பட்டது. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்த தண்ணீரின் அளவு 40 மில்லியன் லிட்டராக அதிகப்படுத்தப்பட்டது. இந்த அளவு, முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், கோடைக் காலங்களில் சென்னை நகரில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிக்க, குடிநீர் வழங்கலைப் படிப்படியாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 16]

3.1. கண்டலேற்றிலிருந்து நீர் வரத்து

கண்டலேற்றிலிருந்து பூண்டிக்கு வரும் தண்ணீர்வரத்தைப் பற்றி 18-12-2001, 6-2-2002 மற்றும் 21-2-2002 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச அதிகாரிகளுக்கு இடையே நடந்த பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட தீர்மானத்தின்படி கே.பி. கால்வாயில் ஏற்பட்டிருக்கும் உடைப்பை சரிபார்க்கும் பணி முடிக்கப்பட்டு 27-2-2002 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டு 7-3-2002 அன்று தமிழ்நாட்டு எல்லையில் உள்ள பூஜ்ஜிய முனைக்கு வந்து சேர்ந்தது. மேலும் 8-3-2002 அன்று அத்தண்ணீர் பூண்டி ஏரியைச் சென்றடைந்தது.



7-3-2002 அன்று கண்டலேறிலிருந்து பூஜ்யம் முனைக்கு தண்ணீர் பெறுதல்

4. சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் - 1

2001-2002-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி அரசாணை எண் 105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 9-8-2001-ல் வீராணம் ஏரியிலிருந்து நீர் எடுத்து சுத்திகரித்து, குழாய் மூலம் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீரை சென்னை நகருக்கு கொண்டு சென்று விநியோகம் செய்வதற்காக, சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-1-ஐ ரூ.720.00 கோடி மதிப்பீட்டில் செயலாக்க அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தினால் செயல்படுத்தப்படும்.



மேம்படுத்தப்பட்ட பணிகளுக்குப் பின் வடவர் கால்வாய்

[2002 ஏப்ரல் 16

5. சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் - 2

இத்திட்டத்தின் நோக்கம் சென்னை நகருக்கு அருகிலுள்ள நீராதாரங்களைக் கண்டுபிடித்து நகருக்கு நீர் வழங்குதல் ஆகும். திருக்கண்டலம், ஜமீன்கொரட்டூர், திருநீர்மலை மற்றும் பள்ளிக்கரணை பகுதிகளில் நான்கு புதிய நீர்த்தேக்கங்கள் கட்டுதல், கொசத்தலையாறு, அடையாறு, கூவம் மற்றும் பாலாறு ஆகிய ஆறுகளின் குறுக்கே நான்கு தடுப்பணைகளைக் கட்டுதல் மற்றும் மாதவரம், இரட்டை ஏரி, கொரட்டூர், அம்பத்தூர் ஆகிய ஏரிகளைத் தூர் வாரி ஆழப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். சுமார் ரூ.493 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

6. சென்னை நகரின் குடிநீர் வழங்கலை மேம்படுத்துவதற்கான இதர நடவடிக்கைகள்

சென்னை நகரில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக மேட்டூர் அணை, பள்ளிப்பாளையம் மற்றும் ஒகேனக்கல் பகுதிகளில் உள்ள காவிரி நதி நீரை எடுத்துவருவது குறித்த செய்யத்தக்கமைக்கான அறிக்கைகள் (Feasibility Reports) அரசின் ஆய்வில் உள்ளன. மேலும், நெய்வேலி நீராதாரத்திலிருந்து தண்ணீரை எடுத்து சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-1-வுடன் இணைத்து சென்னைக்கு தண்ணீர் கொண்டுவருவது குறித்த செயற்குறிப்பு ஒன்றும் ஆய்வில் உள்ளது.

7. 50 எம்எல்டி கொள்ளளவு கொண்ட மும்முறை சுத்திகரிப்பு/ சவ்வூடு பரவல் நிலையம் நிறுவுதல்

மணலி பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் அதிகரித்து வரும் நீரின் தேவைக்காக கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தற்போதுள்ள இரண்டாம் முறை சுத்திகரித்த கழிவுநீரைக் கொண்டு கொடுங்கையூரில் 50 எம்எல்டி கொள்ளளவு கொண்ட மும்முறை சுத்திகரிப்பு / சவ்வூடு பரவல் நிலையம் ஒன்றை அமைப்பது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முடிக்க 24 மாதங்கள் ஆகும். 2002-2003-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இதற்காக ரூ.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 16]

8. உவர் நீரைக் குடிநீராக்கும்/சவ்வூடு முறை சுத்திகரிப்பு நிலையங்கள்

கடற்கரை பகுதிகளிலும், மற்றும் சென்னைப் பெருநகர்ப் பகுதிகளிலும் உவர் நீரை/உப்புநீரைக் குடிநீராக மாற்றும் முறையை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்த முறையில் தரமற்ற நிலத்தடி நீர், குடிப்பதற்கு ஏற்றதாக மாற்றப்படுகிறது.

2. தற்பொழுது சென்னை நகரில் நொச்சிக்குப்பம், காசிமேடு, காசிமேடு குப்பம், அயோத்தியா குப்பம், வேளச்சேரி ஆகிய ஐந்து இடங்களில் உவர்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு மேற்கண்ட முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

3. மேலும் பத்து இடங்களில் அதிக திறனுள்ள சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு, குறைந்தபட்சமாக ஒரு நாளைக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்குவதற்கு, கட்டுதல் பராமரித்தல் முறையில் செயல்படுத்தப்பட உள்ளது.

4. மேற்கண்ட சுத்திகரிப்பு நிலையங்கள் கடற்கரைப் பகுதிகளிலும், சென்னை நகரைச் சுற்றியுள்ள ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம், அம்பத்தூர், ஆவடி மற்றும் மாதவரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன.

9. செம்பரம்பாக்கத்தில் 530 எம்எல்டி கொள்ளளவு திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவுதல்

ஆந்திர மாநிலத்திலிருந்து பெறப்படும் கூடுதல் கிருஷ்ணா நதி நீரை சுத்திகரிப்பதற்காக செம்பரம்பாக்கத்தில் 530 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கூடுதல் சுத்திகரிப்பு நிலையம் பிரெஞ்சு அரசாங்க நிதியுதவியுடன் கட்டப்படவுள்ளது. 2002-2003-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.87 கோடி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு ஆணை வழங்கப்படவுள்ளது.

10. இரண்டாம் சென்னைக் குடிநீர்த் திட்டம்

1996-ம் ஆண்டு ரூ.778.79 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் தற்போது பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளது.

[2002 ஏப்ரல் 16

சென்னை நகருக்கு ஒரே நிறையான அளவில் குடிநீர் வழங்கும் பொருட்டு 7 புதிய நீர் பகிர்மான நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டு அவற்றில் 6 நிலையங்கள் கட்டிமுடித்து செயல்பட்டு வருகின்றன. பிரதான குடிநீர் கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. அனைத்துத் திட்டப் பணிகளும் ஜூன் 2002-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 10.1. இணைந்து செயல்படும் கலந்தாய்வுப் பணி

சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயல்பாடுகள் மற்றும் இயக்கங்களின் திறமைகளை முன்னேற்றுவதற்காகவும், உலக வங்கியின் கருத்தின்படியும் சென்னைக் குடிநீர் வாரியம், நீர் வழங்குதலில் நன்கு செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஜெனரல் டி இக்ஸ் பிரான்க என்ற நிறுவனத்துடன் இணைந்து செயல்படும் கலந்தாய்வுப் பணிக்காக ஏற்பாடு செய்து கொண்டுள்ளது. இந்த கலந்தாலோசனைப் பணி ரூ.26.50 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு, மார்ச் 2004-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கீழ்ப்பாக்கம் சுத்திகரிக்கும் நிலையத்தை மேம்படுத்த திட்டங்கள் தீட்டப்பட்டு, இதனை 2002-2003-ம் ஆண்டில் எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் கணக்கிடல், வசூலித்தல், நிதி கணக்கிடல் மற்றும் நுகர்வோர் சேவை கண்காணித்தல் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு தகவல் வழங்கும் முறை மற்றும் தொழில்நுட்ப திட்டமிடலை ஒரு முன்மாதிரி திட்டமாக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

### 11. குடிநீர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

குடிநீர் கசிவு கண்டறிதல் மற்றும் சரிசெய்தல் பணி

குடிநீர் வழங்கும் குழாய்களில் ஏற்படும் தண்ணீர் கசிவினை குறைப்பதற்காக, வாரியம் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட "குடிநீர் கசிவு கண்டறிதல் மற்றும் சரிசெய்தல் திட்டம்" ஒன்றை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் குடிநீர் வழங்கும் குழாய்களில் சுமார் 65 விழுக்காடு பணிகள் நடைபெற்று வருகிறது. திட்டம் நடைபெற்று வரும் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் எம்டிபிஇ குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், அடைப்பு ஏற்பட்டுள்ள பிரதான குழாய்களை மாற்றும் பணிகளும் மற்றுமுள்ள அனைத்து பணிகளும்



2002 ஏப்ரல் 16]

திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றன. இவை ஜூன் 2002-ல் முடிவடையும்.

### 12. சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம்

சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் அட்டவணைப்படி தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2. தற்போதுள்ள கழிவுநீர் அமைப்புகளின் கொள்திறன் போதுமானதாக இல்லாததால் சுத்திகரிக்கப்படாத, சுத்திகரிக்கப்பட்ட மற்றும் குறைவாக சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை ஆற்று வழிகளில் சேருவதை தடுக்க பெரிய அளவில் முன்னேற்றப் பணிகள் செய்யும்படி வேண்டியுள்ளது.

3. அதன்படி மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறைகளை நீக்க சுமார் ரூ.1,700 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதில் சென்னைக் குடிநீர் வாரியத்தால் நிறைவேற்றப்படும் பணியின் மதிப்பீடு ரூ.720.15 கோடியாகும். மத்திய அரசு மானியமாக ரூ.491.52 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள ரூ.228.63 கோடியை சென்னை குடிநீர் வாரியத்தின் நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

4. இப்பணிகளானது நகர நீர் வழிகளில் விடப்படும் கழிவு நீரை இடைமறித்தல், மடைமாற்றி அமைத்தல், மற்றும் சுத்திகரித்தலும், மேலும் தற்போதுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலுள்ள கொள்ளளவைக் கூடுதலாக்குதலாகும். இப்பணிகள் 16 செறிவுகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளன. அவற்றில் 11 செறிவுகளுக்கு ஒப்பந்தங்கள் நிறைவு பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன. நான்கு செறிவுகளுக்கான ஒப்பந்தங்கள் ஆய்வுகளில் உள்ளன. மத்திய அரசு இதுவரை மானியமாக ரூ.84.17 கோடி வழங்கியுள்ளது. வரும் 2002-2003-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.211.70 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிக்கப்படும் காலம் 30 மாதங்களாகும். இப்பணிகள் டிசம்பர் 2003-ல் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 13. கழிவுநீர் சீரமைப்பு

சென்னை நகரில் தற்பொழுது கழிவுநீர் அகற்றும் திட்டம் 97 விழுக்காடாக உள்ளது. தற்போதைய திட்டத்தில், 2300 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் திட்டம் செயல்பட்டு வருகிறது.

[2002 ஏப்ரல் 16

2. சென்னை நகரில் இதை 100 விழுக்காடாக மாற்றுவதற்கு 12 கோடி ரூபாய் செலவில் மேலும் 80 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் அகற்றும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. தற்போது உள்ள 168 கழிவுநீரகற்று நிலையங்களைத் தவிர மேலும் புதியதாக 5 கழிவு நீரகற்று நிலையங்கள் வாரியத்தால் அமைக்கப்பட உள்ளன.

3. குடிசைப் பகுதிகளில், பொருளாதாரத்தால் நலிவடைந்த மக்கள் வசிக்கும் பகுதிகளில் சுற்றுப்புறத்தையும், மற்றும் பொது சுகாதாரத்தையும் மேம்படுத்துவதற்காக, ஒவ்வொரு குடியிருப்புகளிலும் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கப்பட உள்ளன. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக, தற்போது உள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்களை பாதியாக (50 சதவீதம்) குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது. எல்லா வீடுகளும் இணைப்புகள் பெறவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

4. தற்போதுள்ள கழிவுநீர் நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 268 மில்லியன் லிட்டராகும். இதை படிப்படியாக 2003-ம் ஆண்டுக்குள் 532 மில்லியன் லிட்டராக மேம்படுத்துவதற்காக ரூ.140 கோடி செலவிடப்பட உள்ளது.


5. மழைநீர் கால்வாய்களிலும், ஆறுகள் மற்றும் நீர்வழித் தடங்களில் கழிவுநீர் கலக்காமல் தடுப்பது வாரியத்தின் மற்றொரு குறிக்கோளாகும். அனுமதியின்றி அமைக்கப்படும் இணைப்புகளின் பேரில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6. கழிவுநீரை மறு சவ்வூடு முறையில் சுத்திகரித்து 50 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலையத்தை ஏற்படுத்தி, தொழிற்சாலைகளுக்கு குளிரூட்டுதலுக்கும் மற்றும் பிற உபயோகத்திற்கும் வழங்கப்பட உள்ளது.

7. தற்பொழுதுள்ள நெசப்பாக்கம் (30 ஏக்கர்), கோயம்பேடு (60 ஏக்கர்), கொடுங்கையூர் (100 ஏக்கர்) ஆகிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 190 ஏக்கரில் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சுற்றுப்புறத்தை மேம்படுத்தும் பொருட்டு எதிர்காலத்தில் பெருங்குடி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் காடு வளர்ப்பு திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.



2002 ஏப்ரல் 16]




8. வில்லிவாக்கத்திலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில் அதற்கு ஏற்ற மீன் வகைகள் வளர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

9. மேலும், வடசென்னையில் உள்ள ஜி.எம்.ஆர். வாசவி மின் நிறுவனத்திற்கு சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வழங்கப்படுகிறது. இந்நிறுவனம் இந்த நீரை சுத்திகரித்து குளிர்விப்பதற்கும், பிற தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகிறது.

10. மேலும், இரண்டாம் நிலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் சென்னை பெட்ரோலியம் நிறுவனத்திற்கும், மெட்ராஸ் உரத் தொழிற்சாலைக்கும் வழங்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் இந்த நீரை அந்த நிறுவனங்களிலுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் மேலும் சுத்திகரித்து பயன்படுத்தி வருகின்றன.

## 14. நிலத்தடி நீர் ஒழுங்குபடுத்தும் சட்டத்தை அமல்படுத்துதல்

சென்னை நகருக்கு வடபகுதியில் உள்ள ஆரணியாறு, கொசத்தலையாறு படுகையில் உள்ள மீஞ்சூரில் கடல்நீர் கலந்ததால் நிலத்தடி நீர் எடுப்பதை கட்டுப்படுத்த அரசு சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் ஒழுங்குச் சட்டம் கொண்டு வந்தது. இச்சட்டம் 15-02-1988-ம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்களின் ஒத்துழைப்புடன் சென்னை மாநகர் மற்றும் மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 243 வருவாய் கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தை மேலும் வலுப்படுத்த ஏற்கெனவே உள்ள விதிமுறைகளுடன் புதிதாக சில விதிமுறைகளைச் சேர்க்க முன்மொழியப்பட்டுள்ளது.

1) சட்ட ரீதியான முறைகளை வலுப்படுத்துதல்
2) பட்டியலிடப்பட்ட வருவாய் கிராமங்களின் பட்டியலுடன் கூடுதலான கிராமங்களைச் சேர்த்தல்
3) ஏற்கெனவே உள்ள அபராதத் தொகையை மாற்றியமைத்தல்
4) எல்லாக் கட்டடங்களுக்கும் மழைநீர் சேகரிக்கும் முறையை கட்டாயப்படுத்துதல்

[2002 ஏப்ரல் 16

5) சுத்திகரிக்கப்பட்ட நீரை குடிநீர் அல்லாத வீட்டு உபயோகத்திற்கும், தொழிற்சாலை உபயோகத்திற்கும் பயன்படுத்துதல்

6) குழாய் கிணறுகளின் ஆழத்தைக் கட்டுப்படுத்துதல்

**14.1. ஆரணியாறு-கொசத்தலையாறு நதிப்படுகை ஆய்வுப் பணி**

உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆரணி, கொசத்தலையாற்றுப் பகுதிகளில் உள்ள நிலத்தடி நீர் வளத்தைக் கண்டறிய திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய திட்டம் இந்தியாவிலேயே முதலாவதாகும். தற்போது சுமார் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீர் இந்தப் படுகையிலிருந்து எடுக்கப்பட்டு சென்னை நகருக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த ஆதாரத்திலிருந்து நாளொன்றுக்கு சுமார் 300 மில்லியன் லிட்டர் கூடுதலாக எடுப்பது எந்த அளவுக்கு சாத்தியம் என்பதைக் கண்டறிய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பன்னாட்டு அனுபவங்களின் அடிப்படையில் நிலத்தடிநீர் பரிமாற்ற உரிமையை உருவாக்குதலும் அடங்கும்.

**15. மழைநீர் சேகரிப்பு**

நீர் வளங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர்ந்து, அரசு மழைநீர் சேகரிப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு சென்னைக் குடிநீர் வாரியம், மழைநீர் சேகரிப்பு முறைகளை சென்னை நகர மக்களிடையேயும், சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பிரபலப்படுத்தி வருகிறது. சென்னை நகரத்தில் பதிவுருக்களின்படி சராசரியாக ஆண்டுக்கு 1100 மி.மீ. முதல் 1300 மி.மீ. வரை மழை பெய்து வருவது தெரிகிறது. இவ்வாறு பெய்யும் மழைநீரில் 60 விழுக்காட்டை சேமித்தாலே, வருடத்திற்கு 1.60 இலட்சம் லிட்டர் நீரை 2400 சதுர அடியுள்ள வீட்டு மனையில் சேமிக்க முடியும்.



**26.01.2002 அன்று குடியரசு தினத் தன்று பங்கு பெற்ற மழைநீர் சேகரிப்பு மிதவை**



2002 ஏப்ரல் 16]

2. மதிப்பு மிக்க நிலத்தடி நீரைப் பாதுகாக்க வழி செய்யும் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை உணர்ந்து, சென்னைக் குடிநீர் வாரியம், முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட மழைநீர் சேகரிப்புப் பிரிவைத் தொடங்கியுள்ளது. இப்பிரிவின் முக்கிய குறிக்கோள் மக்களிடையே மழைநீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அது பற்றிய தொழில்நுட்ப உதவிகளை இலவசமாக வழங்குதல் மற்றும் குறைந்த செலவில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு முறைகளை அமல்படுத்துவது பற்றி விளக்குதல் ஆகியவையாகும். சென்னைக் குடிநீர் வாரியம் இதற்கான பல முன் மாதிரிகளையும், விவரமான செயல்திட்டங்கள் கொண்ட கையேடுகளையும், சிறு புத்தகங்களையும் மக்களுக்கு வழங்கி வருகிறது. சமீப காலங்களில் இது பற்றிய விவரங்களை தொலைகாட்சி மூலமும், பத்திரிகைகள் வாயிலாகவும் விறுவிறுப்பாக சொல்லி வருகிறது. மழைநீர் சேகரிப்பு பற்றிய தகவல் மையம், சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 10-8-2001 முதல் செயல்பட்டு வருகின்றது.

3. மழைநீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வு இயக்கத்தை அரசு துவங்கியுள்ளது. அதை மக்கள் இயக்கமாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுபற்றிய கருத்தரங்கங்களும், பொருட்காட்சிகளும் வெவ்வேறு அரசுத் துறையினராலும், அரசு சாரா அமைப்பினராலும், தனி நபர்களினாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய தீவிர நடவடிக்கையினால் தற்பொழுது மழைநீர் சேகரிப்பு முறைகள் சென்னை நகர மக்களிடையே பிரபலமாகி, அவர்களாகவே முன்வந்து தங்கள் வீடுகளில் அமல்படுத்தி வருகின்றனர்.



**சுற்றுலா மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மழை நீர் சேகரிப்பு நிலையத்தின் மாதிரி**

4. மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதை வரைமுறைப்படுத்தும் விதமாக சென்னைக் குடிநீர் வாரியம், அனைத்து புதிய கட்டடங்களுக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கு, மழைநீர் சேகரிப்பு முறைகளை அமல்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 16


மேற்கூறிய மழைநீர் சேகரிப்பு முறைகளை அமைத்துக் கொடுக்கும் நபர்களின் விவரங்கள் மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் சேகரிப்புப் பற்றிய விவரங்கள் சென்னைக் குடிநீர் வாரிய இணைய தளத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது.



நொச்சிக்குப்பம் குடிசைவாழ் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு நிலையம்

5. மழைநீர் சேகரிப்புப் பற்றிய பல்வேறு செயல் திட்டங்கள், வரைமுறைகள், இதை அமைத்துக் கொடுக்கும் நபர்களின் முகவரிகள் ஆகியவை ``www.chennaimetrowater.com" என்ற சென்னைக் குடிநீர் வாரிய இணைய தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.


இணைப்பு I






2002 ஏப்ரல் 16]

இணைப்பு II





இணைப்பு III



[2002 ஏப்ரல் 16

இணைப்பு IV



சென்னை நகரில் இதுவரை தனியார் மற்றும் அரசு கட்டிடங்களில் மொத்தமாக 39,485 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

6. சென்னை நகரில் மழைநீர் சேகரிப்பு முறைகளை மக்களிடையே பெருமளவில் பரப்புவதற்காக, சென்னைக் குடிநீர் வாரியம் ரூ.44 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்பு மாதிரி வடிவமைப்புகளை நகரில் பல்வேறு இடங்களில் உருவாக்கியுள்ளது. இவற்றில் ஆளுநர் மாளிகை, மாநிலக்



2002 ஏப்ரல் 16]

[illegible] வெலலிங்டன் மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.



ஆளுநர் மாளிகையில் மழைநீர் சேகரிப்பு நிலையம்

7. ஜூலை-ஆகஸ்ட் 2001-ல் ஆரம்பிக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு இயக்கம் தற்பொழுது தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

8. வரும் 2002-03 நிதி ஆண்டில் மழைநீர் சேகரிப்பு இயக்கத்தை வறட்சியை சமாளிக்கும் உத்தியாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## XIV. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

1. கடந்த பத்தாண்டுகளாக, இந்தியாவின் பின்னலாடை ஏற்றுமதியில் முக்கிய மையமான திருப்பூர் நகரம் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை சந்தித்து வருகிறது. அதன் விளைவாக, கிடைக்கின்ற நீரின் விலை அதிகமாகவும் தரம் குறைவாகவும் உள்ள காரணத்தால் காலப்போக்கில் பின்னலாடைத் தொழில் நலிவடைந்துள்ளது மட்டுமின்றி புறச்சூழலில் பெருகிவரும் தொழிற்போட்டியினால் மேலும் பாதிக்கப்படக்கூடும். இதன் பின்விளைவாக, பின்னலாடைத் தொழிலே முற்றிலுமாக நசிந்துவிடக்கூடிய அபாயம் மட்டுமின்றி வேலையின்மை, சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு ஆகியவையும் ஏற்படுமோ என்ற கவலை ஏற்பட்டுள்ளது.

2. இப்பிரச்சினைக்கு ஏற்ற ஒரு தீர்வாக, 'புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்' என்ற ஒரு சிறப்பு செயலாக்க நிறுவனத்தை அரசு உருவாக்கியது. அரசு மற்றும் தனியார் கூட்டுறவு என்ற சட்டத்திற்குள் உருவாக்கப்பட்ட இக்கழகம், அரசு ஐ.எல்.எப்.எஸ் மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் ஆகியவற்றால் கூட்டாக ஆதரிக்கப்பட்டு வருகிறது. இக்கழகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த திருப்பூர் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்றுத் திட்டம் நாட்டிலேயே 'கட்டி, சொந்தமாக்கி, இயக்கி, ஒப்படைத்தல்' என்ற முறையில் செயற்படுத்தப்படவுள்ள முதல் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் திருப்பூர் பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 185 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படும். மொத்தத்தில், திருப்பூரில் வாழும் 3.25 இலட்சம் மக்களும், வழியோர

[2002 ஏப்ரல் 16

ஊர்களில் வசிக்கும் 4.13 இலட்சம் மக்களும் பயன்பெறுவதுடன், சுமார் 700 சாயம் மற்றும் அச்சுத் தொழிற்சாலைகளும் இத்திட்டத்தின் கீழ் பயனடையும். இதில் 4 ஊராட்சி ஒன்றியங்கள், 3 பேரூராட்சிகள் மற்றும் 15 ஊராட்சிகள் அடங்கும்.

3. தற்போதைய விலைமதிப்பின் அடிப்படையில் இதற்கான மொத்த திட்டச் செலவு ரூ.1,000 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனமான புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் திட்டத்திற்கான கடனுக்கும், முதலீட்டுக்கும் ஏற்பாடு செய்துள்ளது. மார்ச் 2002 இறுதியில் நிதி ஏற்பாடுகள் அதிகாரபூர்வமாக முடிக்கப்பட்டுவிடும் நிலையில் உள்ளன. இவ்வாறு நிதி ஏற்பாடுகள் இறுதி செய்யப்பட்டுள்ள இந்நிலையில் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நம் நாட்டிலேயே முதன்முதலாக தனியார் பங்கேற்புடன் நடைமுறைப்படுத்தப்படும் மிகப் பெரிய குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றுத் திட்டமாக இத்திட்டம் இருக்கும். சலுகை காலம் (30 ஆண்டுகள்) முடிந்தபின் உருவாக்கப்பட்ட வசதி அமைப்புகளுடன் இத்திட்டம் முழுமையாக அரசுக்கு திரும்பி ஒப்படைக்கப்படும்.

**கோரிக்கை 33**

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 2002-2003 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு**

| | துறைத் தலைவர்கள் | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | முதலீடு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 41,66,76 | 1 | 41,66,77 |
| 2. | நகராட்சி நிருவாக ஆணையரகம் | 6,38,84,70 | 2,48,70,02 | 8,87,54,72 |
| 3. | பேரூராட்சி இயக்ககம் | 2,22,40,72 | .. | 2,22,40,72 |
| 4. | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 1,48,07,51 | 5,31,39,13 | 6,79,46,64 |
| 5. | சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் | 11,86,60 | 1,27,16,00 | 1,39,02,60 |
| 6. | தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம் | .. | 17,00,00 | 17,00,00 |
| | மொத்தம் | **10,62,86,29** | **9,24,25,16** | **19,87,11,45** |



2002 ஏப்ரல் 16]

## இணைப்பு-II

**(71 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)**

**கோரிக்கை எண் 40 ஊரக வளர்ச்சித் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003**

### I. முன்னுரை

*கொள்கை*

தமிழ்நாட்டில் பெரும்பான்மையான மக்கள் ஊரகப் பகுதிகளில் வசிப்பதால், ஊரக வளர்ச்சிக்கு அரசு பிரதான முக்கியத்துவம் அளிக்கின்றது. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 3.5 கோடி மக்கள், அதாவது சுமார் 57 சதவிகிதம் 12,619 கிராம ஊராட்சிகளில் உள்ள 77,962 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். சமுதாய வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை ஊக்கப்படுத்துவதன் மூலம் ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், சமுதாய நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துவதுமே ஊரக வளர்ச்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். ஊரக வளர்ச்சித் துறை, கிராமப்புற மக்களுக்கான பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தியும், சேவைகளை வழங்கியும் வருகிறது. இதற்காக, அரசு சாரா அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற சமுதாய அமைப்புகளின் பங்கேற்புடனான அணுகுமுறையை இத்துறை ஊக்குவிக்கின்றது. இதன்மூலம், நிலம் மற்றும் நீர் ஆதார மேம்பாடு, அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதி மற்றும் சுய வேலைவாய்ப்பு மூலமாக, வாழ்வாதார வளர்ச்சிக்கும் வழிவகை செய்யப்படுகின்றது. ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் பயன்கள் மக்களைச் சென்றடையும் வண்ணம் திட்டங்களை செயல்படுத்துவதும் ஊரக வளர்ச்சித் துறையின் முக்கிய நோக்கமாகும்.

வேலைவாய்ப்பின்மை, போதுமான உள்கட்டமைப்பு வசதியின்மை போன்றவற்றின் காரணமாக, மக்களின் சமூக, பொருளாதார வாழ்வியல் நிலைகளில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் அது தொடர்பான பொருளாதார பின்தங்கிய நிலை ஆகியவற்றிற்கு, கிராமப்புறங்களில் நிலவும் வறுமையே காரணம் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே, இக்காரணிகளை அவற்றின் வேரிலேயே தாக்கி தகர்க்கக்கூடிய வகையில்

கொள்கைகளையும் திட்டங்களையும் இந்த அரசு வடிவமைத்துள்ளது. இதனால் வாழ்வியல் ஆதார மேம்பாட்டிற்கு கிராம அளவிலேயே திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்படும். மேலும் நகரங்களிலும், நகரை ஒட்டியுள்ள பகுதிகளிலும் மக்கள் நுகரும் வசதிகளை, கிராமப்புற மக்களுக்கும் வழங்க வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. இந்நோக்கம் நிறைவேற மாநில மற்றும் மத்திய அரசுகளின் பங்கேற்புடனான பல்வேறு திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறை செயல்படுத்துகின்றது. இத்திட்டங்கள் ஊரக வளர்ச்சித் துறையின், தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆதரவுடன் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படும்.

**ஊரக வளர்ச்சிக்கான யுக்திகள்**

ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே, ஊரக வளர்ச்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். குடிநீர் வசதி, மின்வசதி, சாலை வசதி, சுகாதார வசதி, வீட்டு வசதி, மற்றும் கல்வி வசதி போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலமும், சுயவேலைவாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும் மேலே குறிப்பிடப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படும். ஊரக வளர்ச்சியிலும், வளர்ச்சி வாய்ப்புகளை உருவாக்குவதிலும், தமிழ்நாட்டை முதன்மையான மாநிலமாக உயர்த்தும் தொலைநோக்குடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற பின்வரும் இனங்களுக்கு இத்துறை முன்னுரிமை அளிக்கும்.

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் விகிதாச்சாரத்தினை குறைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். வறுமை ஒழிப்பிற்கு தனிநபர் சார்ந்த அணுகுமுறையைவிட, குழு அடிப்படையிலான அணுகு முறையே ஏற்றதாகும் என்பதான ஒரு மாற்றம், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படையில், ஊரக மக்களை குறிப்பாக ஊரக மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வேளாண்மை சார்ந்த சிறுதொழில்கள் ஊக்குவிக்கப்படும். வேளாண் சாரா தொழில் இனங்களில் உரிய பயிற்சி அளித்தல், கடன் வசதியை ஏற்படுத்தித் தருதல் மற்றும் விற்பனை மேம்பாட்டிற்கான ஆதார வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் மக்களின் பொருளாதார நிலை மேம்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



* கிராமப்புறங்களில் உள்ள அநேக விவசாய மற்றும் நிலமில்லாத தொழிலாளர்களுக்கு வேலையில்லா காலங்களில், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும். மேலும் இத்திட்டத்தின் மூலம் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படும்.

* கிராமப்புறங்களில், குடிநீர் வசதி, சாலை வசதி, குடியிருப்பு வசதி, தெருவிளக்கு வசதி மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படும்.

* உள்ளூர் அளவில் திட்டமிடுதலில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக பங்களிப்பு இருக்கும் வகையில், அதிகாரம் பரவலாக்கப்படும்.

* பயிற்சி அளித்தல், திறன் மேம்பாடு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் தேவையான தகவல்கள் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றின் மூலமாக ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் நிர்வாகத்திறன் மேம்பாட்டிற்கு வழிவகை செய்யப்படும்.

* கிராமப்புறங்களிலுள்ள நீர்நிலை மற்றும் பிற இயற்கை வள ஆதாரங்களை சிக்கனமாக பயன்படுத்துவது மற்றும் பராமரிப்பது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

* 500-க்குமேல் மக்கள் தொகையுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் எல்லா பருவ காலங்களுக்கும் ஏற்றவகையிலான சாலைகள் 2004ஆம் ஆண்டிற்குள் ஏற்படுத்தப்படும்.

* வளர்ச்சி வேகத்தை அதிகப்படுத்தும் பொருட்டு, மக்கள் பங்கேற்புடன் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் ஊக்குவிக்கப்படும்.

* நிதிப்பகிர்வு மற்றும் வரி விதிப்பு ஆகியவற்றின் மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் வலுப்படுத்தப்படும்.

## II. நிதி ஒதுக்கீடு (2002-2003)

மானியக் கோரிக்கை எண் 40-ன் கீழ் ஊரக வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.1739.17 கோடியாகும். இதில் ரூ.639.24 கோடி திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் விவரம் கீழ்வருமாறு :

[2002 ஏப்ரல் 16

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண். | | கணக்குத் தலைப்பு | திட்டம் சாராதது. | திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| 1 | 2202 | பொதுக் கல்வி | 2784 | - | 2784 |
| 2 | 2210 | மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் | 27664 | - | 27664 |
| 3 | 2215 | குடிநீர் வடிகால் மற்றும் துப்புரவு | 20486 | 308762 | 329248 |
| 4 | 2216 | வீட்டு வசதி | - | 1 | 1 |
| 5 | 2225 | பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் நலம் | 47409 | - | 47409 |
| 6 | 2236 | சத்துணவு | 1672989 | 1405 | 1674394 |
| 7 | 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | - | 239287 | 239287 |
| 8 | 2515 | ஊரக வேலை வாய்ப்பு | - | 1047802 | 1047802 |
| 9 | 2515 | இதர ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | 1164131 | 3462564 | 4626695 |
| 10 | 2551 | மலைப் பகுதிகள் | - | 3798 | 3798 |
| 11 | 2702 | சிறுபாசனம் | 10000 | - | 10000 |
| 12 | 2810 | மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் | - | 21581 | 21581 |
| 13 | 3454 | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளி விவரங்கள் | 1875 | - | 1875 |
| 14 | 3604 | உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | 8030207 | 932236 | 8962443 |
| 15 | 4515 | இதர ஊரக வளர்ச்சி திட்டங்களுக்கான மூலதனம் | 5070 | 187501 | 192571 |
| 16 | 6515 | ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கான கடன்கள் | - | 187500 | 187500 |
| | | மொத்தம் மானியக் கோரிக்கை எண் 40 | 10982615 | 6392437 | 17375052 |
| கூட்டுக | | வசூலிக்க வேண்டியவை | - | - | 16687 |
| | | நிகர மொத்தம் | 10982615 | 6392437 | 17391739 |

## III. 2002-2003 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

### 1. கிராம குளங்கள் சீரமைப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் 23156 ஊராட்சி ஒன்றியக் குளங்களும், மற்றும் பெரும் எண்ணிக்கையிலான கிராமக் குளங்களும், நீண்டகாலமாக முக்கிய பங்கு வகித்து வருகின்றன. இந்தக் குளங்கள் கடந்த பல ஆண்டுகளாக சரியான பராமரிப்பு இல்லாமல் தூர்ந்த நிலையில்



2002 ஏப்ரல் 16]

உள்ளன. அதன் காரணமாக இக்குளங்களின் நீர்க் கொள்ளளவு குறைந்து அதனால் குடிநீர் தேவை, கால்நடை மற்றும் விவசாயத் தேவைகளுக்கு போதுமான நீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையை அகற்றி, கிராமக் குளங்களில், குடிநீர், விவசாயம் மற்றும் இதர தேவைகளுக்குப் போதிய நீரினை தேக்கி வைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எனவே நடப்பு நிதியாண்டில், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஒரு குளமாவது சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி மொத்தமுள்ள 12619 குளங்களில் முதற்கட்டமாக 6309 ஊராட்சி ஒன்றியக் குளங்கள் ரூ.63.00 கோடி செலவில் 2002-2003 ஆம் ஆண்டில் சீரமைப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 2. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மையக் கட்டடம் கட்டுதல்

தமிழ்நாட்டில் சுமார் 1 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்களுக்கு கூட்டம் நடத்துவதற்கோ, பயிற்சியளிப்பதற்கோ, அல்லது தங்களின் உற்பத்திப் பொருட்களை இருப்பு வைத்து விற்பனை செய்ய கட்டட வசதியோ எதுவும் இதுவரை செய்து தரப்படவில்லை. எனவே ஒரு கிராம ஊராட்சிக்கு ஒரு கட்டடம் என்ற விகிதத்தில் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 2002-2003 ஆம் நிதியாண்டில் ரூ.47.32 கோடி மதிப்பீட்டில் 6309 கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

### 3. கதிர் அடிக்கும் களங்கள் அமைத்தல்

நெல் பயிரிடுதலில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக இருந்தபோதிலும், போதுமான கதிரடிக்கும் இட வசதியின்மையால் அறுவடைக் காலங்களில் விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அதனால் தானியங்களைப் பிரிப்பதற்கும், உலர்த்துவதற்கும் கிராமச் சாலைகளையும், நெடுஞ்சாலைகளையும் பயன்படுத்துகின்றனர். எனவே, விவசாயிகளுக்கு இந்த அடிப்படை வசதியை ஏற்படுத்தித் தரும்பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஒரு கதிரடிக்கும் களம் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 6,309 கதிரடிக்கும் களங்கள் ரூ.39.50 கோடி மதிப்பீட்டில் 2002-2003 ஆம் ஆண்டில் கட்டித் தரப்படும்.

### 4. மாவட்ட தகவல் சேவை மையம் அமைத்தல்

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் செயல்படும் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அந்தந்த குழுக்களாலோ, அல்லது அவர்கள் உறுப்பினர்களாகவுள்ள கூட்டுறவுச் சங்கங்கள்/ இணையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. இது தவிர அரசுத் துறைகள்/

நிறுவனங்கள், அரசுச் சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் வியாபார நிறுவனங்கள் மூலமும் ஊரக உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் இப்பொருட்களை உற்பத்தி செய்யும் கிராமப்புற ஏழை மக்களுக்கு உரிய விலை மற்றும் வருமானம் கிடைப்பதில்லை. இதனால் தங்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான வருமானத்தை இழக்கின்றார்கள். மேலும் வருமானத்தின் பெரும் பகுதி இடைத்தரகர்களுக்கும், வியாபாரிகளுக்கும் சென்று விடுகின்றன. இதற்கு முக்கிய காரணம் கிராமப்புற ஏழை மக்களுக்கு விற்பனை வாய்ப்புகள் குறித்த சரியான தகவல்கள் கிடைக்கப் பெறாததேயாகும். மேலும் இந்த உற்பத்திப் பொருட்களுக்கு வணிகச் சின்னமிடுதல், உற்பத்தி விலை நிர்ணயித்தல், தரக் கட்டுப்பாடு மற்றும் விளம்பரம் செய்தல் ஆகிய துறைகளில் சுய உதவிக் குழுக்களுக்கு போதிய தகவல் கிடைக்காத நிலை உள்ளது. எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட தகவல் சேவை மையம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த மையங்கள் ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் அமையப் பெறும். இவை ஊரக உற்பத்திப் பொருட்களின் விற்பனை மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான தகவல்களை சேகரித்து அவ்வப்போது வழங்கும்.

இந்த மாவட்ட தகவல் சேவை மையங்கள், சிறுதொழில்கள் துறையால் நிறுவப்படவிருக்கும் ஏற்றுமதி வழிகாட்டி குழுமத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, சந்தையின் ஏற்ற இறக்க நிலையை தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

**5. இணைய தள அடிப்படையிலான தகவல் தொழில்நுட்ப மையம் அமைக்க சுய உதவிக் குழுக்களுக்கு உதவுதல்**

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தபட்சம் ஓர் இணையம் சார்ந்த தகவல் தொடர்பு மையம் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இம்மையங்கள் அமைத்திட பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மானியம் மற்றும் கடன் உதவி இணைந்த வகையில் சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி வழங்கப்படும். சென்னை ஐ.ஐ.டி. நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட கம்பியில்லா வளைய இணைப்பு தொழில்நுட்பத்தினை இம்மையங்கள் பயன்படுத்தும்.

தகவல் தொடர்பு மையத்தினை இயக்கும் முறை குறித்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இம்மையங்கள் வழியாக அடிப்படைத் தேவைகள் குறித்த அத்தியாவசியமான மற்றும் சரியான தகவல்களை சரியான நேரத்தில் வழங்குவதன் மூலம் சுய உதவிக் குழுக்கள் தங்களின் அடிப்படை வருவாயை ஈட்டும்.





உதாரணமாக, அரசுத் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள், படிவங்கள் மற்றும் சான்றிதழ்களை ஊராட்சி தகவல் மையங்கள் உதவியுடன் பெறுவதன் மூலம் கிராம மக்கள் 10 அல்லது 15 கி.மீ. தொலைவிலுள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்வதைத் தவிர்க்க முடியும். இந்த இணைய தளத்தின் மூலம் மின்அஞ்சல் மற்றும் மின் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம் விவசாயம் சார்ந்த தகவல்கள் மற்றும் விளைபொருட்களின் சந்தை விலை ஆகியவற்றினை கிராம விவசாயிகள் அறிய முடியும். கிராம மக்களுக்கு தகவல் தொடர்பு, சேவைகளை வழங்குவதற்கு நியாயமான கட்டணம் நிர்ணயிப்பதன் மூலம் இம்மையங்களை இயக்குபவர்கள் வருவாய் பெறுவார்கள். இணையத்தினை உபயோகிக்க அனுமதிப்பதன் மூலம் வருவாய் பெறமுடியும். இம்மையங்களில் புத்தகம் பதிப்பு மற்றும் அச்சடிப்பு மூலம் கூடுதல் வருவாய் பெற முடியும். இந்தவகையில் இம்மையங்கள் மூலம் சுய உதவிக் குழுக்கள் வருவாய் ஈட்ட ஏராளமான வழிகள் உள்ளன.

2002-2003 ஆம் ஆண்டில், மதுரை, கடலூர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், தேனி, திருநெல்வேலி, சேலம், நாகப்பட்டினம், ஈரோடு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென நடப்பாண்டில் மேற்சொன்ன மாவட்டங்களில் உள்ள 6000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30 கோடி நிதி உதவி வழங்கப்படும்.

**6. ஊரக வளர்ச்சி குறித்த இணைய தளம் அமைத்தல்**

பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த விவரங்களை பொதுமக்கள், குறிப்பாக கிராமப்புற ஏழை மக்கள் அறிந்திடும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஓர் இணைய தளத்தை உருவாக்க இத்துறை உத்தேசிக்கிறது.

## IV. மாநில அரசுத் திட்டங்கள்

**1. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு முழுமையாக மாநில அரசினால் வழங்கப்படுகிறது. சட்டமன்றத் தொகுதிகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் நிறைவேற்றப்படும் அடிப்படை வசதிகளில் காணப்படும் இடைவெளியை நிறைவு செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யும் பணிகள் அவரது தொகுதியில் நிறைவேற்றப்படுகின்றன. 2001-2002ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.77.00 இலட்சத்திலிருந்து ரூ.82.00 இலட்சமாக

உயர்த்தப்பட்டது. முக்கியப் பணிகளான மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டுதல், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியர் விடுதிகள் கட்டுதல் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடம் கட்டுதல் போன்றவை முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களால் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு தேர்வு செய்யப்படும் ஏனைய பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2002-2003ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.192.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. தன்னிறைவுத் திட்டம்**

ஊரகப் பகுதி மக்களிடையே சுய சார்பு மற்றும் சுய உதவி என்ற எண்ணத்தை வளரச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அனைத்திற்கும் அரசையே நம்பி இருக்கும் ஊரகப் பகுதி மக்களின் எண்ணத்தை மாற்றி வளர்ச்சித் திட்டங்களில் சமுதாய பங்கேற்பை ஏற்படுத்த இத்திட்டம் வழிவகுக்கும். கிராமச் சபை மூலமாக மக்கள் தங்கள் தேவைக்கு ஏற்ப பணிகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து அப்பணிகளை நிறைவேற்ற அரசு நிதி உதவியுடன் பொதுமக்கள் தங்கள் பங்காக பணத்தையோ, பொருளையோ அல்லது உடலுழைப்பையோ வழங்கலாம். அரசு இத்தகைய திட்டங்களை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும். இதனால் அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறும். இத்திட்டத்தினால் பணிகள் விரைவாக செய்து முடிப்பதுடன் அப்பணியின் தரமும் உயர்கிறது. இத்திட்டம், முடிக்கப்பட்ட பணிகளை பொதுமக்களே பராமரிப்பது என்கிற எண்ணத்தை ஏற்படுத்தும். 2001-2002ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 2313 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

2002-2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**3. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் கட்டுதல்**

ஊரகப் பகுதிகளில் போதுமான துப்புரவு மற்றும் கழிப்பிட வசதிகள் இல்லாத காரணத்தினால் அங்குள்ள மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு சொல்லொணாத் துயரம் ஏற்படுகிறது. இத்தகைய வசதிகளை ஊரகப் பகுதிகளில் செய்து கொடுப்பதன் மூலம் மகளிருக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் மறைப்பு நிலை அளிப்பதுடன், ஊரக மகளிரின் பொதுவான சுகாதாரம் மற்றும் குடும்ப நல நிலையை மேம்படுத்தும். தமிழ்நாட்டில், தற்போது 11 சதவீத அளவிற்குத்தான் ஊரகத் துப்புரவு வசதியுள்ளது. இது தேசிய அளவான 15 சதவீதத்தைக் காட்டிலும் குறைவானதாகும். குடிநீர் மற்றும் சுகாதாரத்தில் பெண்கள் முக்கிய பங்கு வகிப்பதால் பெண்களுக்கான ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டுவதை அரசு தொடக்கி உள்ளது. இந்த துப்புரவு வளாகங்கள், கழிவறைகள், குளியல் அறைகள், மற்றும் துவைப்பதற்கான வசதிகளை ஒரே இடத்தில் உள்ளடக்கியதாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நகர்ப்புறப் பகுதிகளிலும் இத்திட்டம் செயலாக்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் வாழும் பெண்களுக்கு சுகாதார வசதி ஏற்படுத்திக் கொடுக்க ஏதுவாக, அடுத்த இரண்டு ஆண்டுகளில், இத்திட்டத்தை 12619 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வளாகத்திலும் சுமார் 750 சதுர அடிப்பரப்பில் 10 கழிவறைகள் மற்றும் 3 குளியல் அறைகள் இருக்கும். பெண்கள் துணிகளைத் துவைப்பதற்கு ஏதுவாக கருங்கற்களும் பதிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வளாகத்திலும், பயன்படுத்துபவர்களின் உபயோகத்திற்காக தொடர்ந்து தண்ணீர் கிடைக்கும் வகையில் வசதிகள் செய்து கொடுக்கப்படும். இந்த வளாகத்தில் மோட்டார் அறையும் நீர்த்தேக்கத் தொட்டியும் இருக்கும். ஒரு வளாகம் கட்டுவதற்கான மொத்த செலவு ரூ.2.0 இலட்சம் ஆகும். இந்த வளாகம் பெண்கள் தடையில்லாமல் குளிக்கும் வகையிலும், கழிவறைகளை உபயோகப்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் பெண்களின் சுகாதாரம் மற்றும குடும்ப நலனில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

இந்த வளாகங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவை ஊராட்சி மற்றும் சுய உதவிக் குழுக்களின் பொறுப்பில் இருக்கும். மின் கட்டணம் செலுத்துதல், மோட்டார் அறைகளைப் பராமரித்தல், ஆகியவற்றுக்கான செலவினங்களை ஊராட்சிகள் ஏற்கும். வளாகத்தின்

அன்றாட பராமரிப்புப் பணிகள் பெண்கள் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைக்கப்படும். இந்தத் திட்டத்தை கண்காணிப்பதற்கு கிராம, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

2001-2002ஆம் ஆண்டில் கிராம ஊராட்சிகளில் 6309 வளாகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய 6310 வளாகங்கள் கட்டும் பணி ரூ. 110 கோடி மதிப்பீட்டில் நடப்பாண்டில் (2002-2003) மேற்கொள்ளப்படும்.

4. கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடம் கட்டுதல்

நிர்வாக வசதியை மக்களின் வாழ்விடங்களுக்கே கொண்டு செல்லுதல் என்பதே இந்த அரசின் முழக்கமாகும். இந்நோக்கத்தினை அடைய, கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகம் கட்டும் திட்டம் இந்த ஆண்டும் தொடரும்.

கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்களை ஒட்டினாற்போல் இணைத்து கட்டப்படுகின்றன. இந்த அலுவலகக் கட்டடம் 180 சதுர அடி பரப்பு கொண்டதாகவும், மேற்படி கட்டடத்தில் ஒரு கூடம் மற்றும் ஒரு கழிவறை வசதி கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தின் மதிப்பீடு ரூ.0.60 இலட்சமாகும். 2001-2002ஆம் ஆண்டில், ரூ.23.10 கோடி மதிப்பீட்டில் 3850 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

நடப்பு நிதியாண்டில் சுமார் 4000 அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும். 1650 கட்டடங்கள் கட்ட ரூ.9.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. மீதமுள்ள கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டப்படும்.

5. கிராமச் சந்தை மேம்பாட்டுத் திட்டம்

ஊரகப் பொருளாதாரத்தில், விவசாயம் சார்ந்த தொழில்கள் இன்றியமையாத பங்கை வகிக்கின்றன. இடைத்தரகர்களை ஒதுக்கி, விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்வது அவசியமாகும். விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக கிராமச் சந்தைகளை மேம்படுத்தும் திட்டம் தொடக்கப்பட்டுள்ளது. தற்போது விவசாயப் பொருட்கள், கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் சந்தைகளில் விற்கப்பட்டு வருகின்றன. இந்தச் சந்தைகள் போதுமான அடிப்படை வசதிகள் இல்லாமல் பராமரிக்கப்பட்டு



வருகின்றன. இத்தகைய சந்தைகளில் கடைகள், குடிநீர் வசதி, பொதுக்கழிப்பிடம், தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் மற்றும் வணிகர்களுக்கு இடையே இடைத்தரகர்களின் குறுக்கீடு ஏதுமில்லாமல் ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாக வாய்ப்புள்ளது. மேலும், இந்த வசதிகளினால், ஊரக மக்களின் விளை பொருட்களை விற்பதற்கு எளிதாக இருப்பதுடன் உள்ளாட்சிகளின் வருமானமும் பெருக வாய்ப்பு ஏற்படும்.

மேற்படி திட்டம், 2002-2003ஆம் ஆண்டில், நபார்டு வங்கி உதவியுடன் ரூ.19.84 கோடி மதிப்பீட்டில் 25 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

V. மத்திய அரசுத் திட்டங்கள்

1. ஊரகக் குடியிருப்புத் திட்டம்

அ. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் (புதிய வீடுகள்)

இத்திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் வீடு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. இத்திட்டத்திற்கான நிதியை, மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் வழங்குகின்றன. சாதாரண நிலத்தில் கட்டப்படும் வீட்டிற்கான செலவு ரூ.20,000 எனவும், களிமண் நிலப்பரப்பில் கட்டப்படும் வீட்டிற்கான செலவு ரூ.22,000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தவிர, தமிழக அரசு ஒவ்வொரு வீட்டிற்கும் கான்கிரீட் கூரை போடுவதற்கு தலா ரூ.12,000/- கூடுதலாக நிதி வழங்குகிறது. இத்திட்டத்திற்கான பயனாளிகள் கிராமச் சபைகள் மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஆண்டு ஒதுக்கீட்டில் 60 சதவிகிதம் நிதி ஒதுக்கினால் போதுமானது ஆகும். ஆனால், மாநில அரசு ஆண்டு ஒதுக்கீட்டில் 85 விழுக்காடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்கிறது. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வீடுகள் ஒதுக்கீடு செய்யும்போது குடும்பத் தலைவியின் பெயரிலேயே ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2001-2002ஆம் நிதி ஆண்டில், இத்திட்டத்திற்காக, ரூ. 63.18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கு முறையே ரூ.47.38 கோடி மற்றும் ரூ. 15.80 கோடியாகும். இது தவிர, கான்கிரீட் கூரை அமைக்க மாநில அரசு கூடுதலாக ரூ. 36.95 கோடி விடுவித்துள்ளது. மொத்தம் 31,745 வீடுகள் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டது.

[2002 ஏப்ரல் 16

தமிழக அரசு, இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தியதன் விளைவாக, தமிழகத்திற்கு இத்திட்டத்தின் கீழ் சாதாரணமாக வரவேண்டிய ஒதுக்கீட்டைக் காட்டிலும், கூடுதலாக ரூ.11.16 கோடியை மத்திய அரசு மார்ச் 2002-ல் வழங்கியுள்ளது. இந்த கூடுதலான ஒதுக்கீட்டில், மேலும் 7000 வீடுகள் நடப்பாண்டில் ஆதிதிராவிடர்களுக்கு கட்டித் தரப்படும். 2002-2003 ஆம் ஆண்டில், ரூ.123.41 கோடி மதிப்பீட்டில் 39,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. குடியிருக்க இயலாத கச்சா வீடுகளை மேம்படுத்தும் திட்டம்

இத்திட்டம் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் உபதிட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட ஒதுக்கீட்டில் 20 விழுக்காடு இதற்கென செலவிடப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழைக் குடும்பங்களின் வீடுகள் மிகவும் பழுதுபட்டு குடியிருக்க இயலாத நிலை இருப்பின் அவற்றைப் பழுது நீக்கி குடியிருப்புக்கு ஏற்றதாக மேம்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் வீடு ஒன்றுக்கு ரூ.10,000/- வழங்கப்படுகிறது. இந்நிதியை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து அளிக்கின்றன. இத்திட்டத்திற்கான பயனாளிகள் கிராமச் சபை மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். மொத்த ஒதுக்கீட்டில், 60 சதவிகித நிதி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்படுகிறது.

2001-2002ஆம் ஆண்டில், ரூ.15.72 கோடி இதற்கென ஒதுக்கப்பட்டு, 15,795 வீடுகள் மேம்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில், 16,000 குடியிருக்க இயலாத வீடுகளை, குடியிருக்கத் தகுதியான வீடுகளாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இ. நூதன வீட்டு வசதி மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்

குறைந்த செலவிலான கட்டுமானத் தொழில் நுட்பத்தை ஊரகப் பகுதிகளில் பிரபலப்படுத்தவும், அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் கட்டுமானப் பொருட்களைக் கொண்டே கட்டடங்கள் கட்டுவதை ஊக்கப்படுத்தவும், இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின்கீழ், ஊரக ஏழை மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, தெருக்கள் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் நடைமுறையில் உள்ள பிற திட்டங்களின் மூலம் ஏற்படுத்தப்பட்டு ஊரகக் குடியிருப்புகள் இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கான நிதி முழுவதும் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம்,



2002 ஏப்ரல் 16]

ஒரு மாவட்டத்தில் இரண்டு திட்டங்களைச் செயல்படுத்தலாம். ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சம் வரை செலவிடலாம். இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட 1999-2000 ஆம் ஆண்டிலிருந்து, ரூ.3.87 கோடி மதிப்பீட்டில் தஞ்சை, திண்டுக்கல், ஈரோடு, மதுரை, காஞ்சிபுரம், கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தை கரூர், திருநெல்வேலி, வேலூர், கோயம்புத்தூர், திருவள்ளூர், விருதுநகர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்த திட்ட முன்மொழிவுகள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

2002-2003-ம் ஆண்டில், இத்திட்டம் திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி, நீலகிரி, நாகப்பட்டினம், தேனி, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது.

ஈ. கடன் மற்றும் மானியத்துடன் கூடிய குடியிருப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் ஆண்டு வருமானம் ரூ.32,000 வரை உள்ள குடும்பங்கள் சொந்தமாக வீடு கட்டிக்கொள்வதற்கு மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், ஒரு வீட்டிற்கு ரூ.10,000 மானியமாகவும், ரூ.40,000 வரை வங்கிக் கடனாகப் பெறுவதற்கும் வசதி செய்து கொடுக்கப்படும். இத்திட்டத்திற்கான மானியத் தொகையினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன. மொத்த ஒதுக்கீட்டில் 60 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட 1999-2000ஆம் ஆண்டிலிருந்து, இத்திட்டப் பயனாளிகள் வங்கியில் கடன் பெற, தங்களது இலவச வீட்டு மனைப் பட்டாவை அடமானம் வைக்க அரசின் தடை இருந்ததாலும், முத்திரைத் தாள் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவது சுமையாக இருந்து வந்தது. இச்சுமையினைக் களைய, இலவச வீட்டு மனைப் பட்டாக்களை அடமானம் வைக்க இருந்த தடையை நீக்கி அனுமதி வழங்கியும், முத்திரைத் தாள் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளித்தும் இந்த அரசு 2001ஆம் ஆண்டில் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த நடவடிக்கையினால், இத்திட்டம் புதிய பொலிவுடன் செயல்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

[2002 ஏப்ரல் 16

2001-2002ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.1.83 கோடி ஒதுக்கப்பட்டு 1828 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. மத்திய அரசின் ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி, 2002-2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உ. பாரதப் பிரதமர் கிராம வளர்ச்சித் திட்டம் (ஊரகக் குடியிருப்பு)

ஊரகப் பகுதிகளில், குடியிருப்பு, ஆரம்பக் கல்வி, சுகாதார்ரம், சத்துணவு, குடிநீர் மற்றும் மின் வசதிகளை மேம்படுத்த கூடுதல் நிதி வழங்கும் ஏற்பாட்டின் கீழ் மத்திய அரசு பாரதப் பிரதமர் கிராம வளர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. மேற்குறிப்பிட்ட 6 உட்கூறுகளில் "ஊரகக் குடியிருப்பு" மட்டும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். மொத்த ஒதுக்கீட்டில் 60 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில், மத்திய அரசு, ரூ.22.23 கோடி ஒதுக்கியது. இந்நிதியின் மூலம் 6895 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன. 2002-2003ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 7000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. பாரதப் பிரதமர் ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம்

பாரதப் பிரதமர் ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம் 2000-2001ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். 1000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட, இணைப்புச் சாலை வசதி இல்லாத அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும், அனைத்துக் காலங்களுக்கும் ஏற்ற சாலை வசதி 2003ஆம் ஆண்டுக்குள்ளும், 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும், அனைத்துக் காலங்களுக்கும் ஏற்ற சாலை வசதி 2007 ஆம் ஆண்டுக்குள் செய்து கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட பணிகள் ரூ.1.0 கோடி முதல் ரூ.5.0 கோடி வரையிலான சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மூலம் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குடியிருப்புகளில், இணைப்புச் சாலை நிலைமை பற்றிய தற்போதைய விவரங்கள் அடங்கிய மாவட்ட ஊரகச் சாலைத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.



2002 ஏப்ரல் 16]

இத்திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில் ரூ.151.32 கோடி மதிப்பீட்டில் 1446.498 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 2002-2003ஆம் ஆண்டில் ரூ.115.812 கோடி மதிப்பீட்டில் 844.652 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், டிரைசம், சிட்ரா, மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம், கங்கா கல்யாண் திட்டம், மில்லியன் கிணறு திட்டம் போன்ற திட்டங்களை ஒருங்கிணைத்து, 1-4-1999 முதல் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. கிராமப்புறத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள நபர்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள் அமைத்து, குழு உறுப்பினர்களுக்கு திறமையை மேம்படுத்துவதற்கான தொழில் நுட்பப் பயிற்சி அளித்து, நிதி நிறுவனங்கள் மூலம் வங்கிக் கடன் வசதி செய்து கொடுப்பது இத்திட்டதின் நோக்கமாகும்.

மத்திய மற்றும் மாநில அரசுகள் இத்திட்டத்திற்கான செலவினத்தை 75:25 என்கிற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு நிதி பல்வேறு கூறுகளின்கீழ் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. அதாவது 10 சதவீதம் சுழற்சி நிதிக்காகவும், 10 சதவீதம் பயிற்சிக்காகவும், 20 சதவீதம் அடிப்படைக் கட்டமைப்புக்காகவும், எஞ்சிய 60 சதவீதம் மானியத்திற்காகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத தனி நபருக்கு தொழில் தொடங்க அதிக பட்சமாக ரூ.7500/- அல்லது திட்ட மதிப்பீட்டில் 30 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த பயனாளிகளின் தனி நபருக்கு தொழில் தொடங்க அதிக பட்சமாக ரூ.10,000 அல்லது திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு நிதி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும், 40 விழுக்காடு மகளிருக்கும், மற்றும் 3 விழுக்காடு உடல் ஊனமுற்ற நபர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2001-2002ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.36.17 கோடி ஒதுக்கப்பட்டது. 2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.36 கோடி செலவு செய்யப்படும்.

4. சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், உள் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும் 2001-2002 வரை

[2002 ஏப்ரல் 16

செயல்படுத்தப்பட்டு வந்த ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு "சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம்" என்ற புதிய திட்டம், மத்திய அரசால் 1-4-2002 தேதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பினை அளிப்பதும், உணவுக்கான பாதுகாப்பு அளிப்பதும், அத்துடன் சமுதாய, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய சொத்துக்களை ஏற்படுத்துவதும், இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்திற்கான நிதி மத்திய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் மற்றும் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள அனைத்து நபர்களும் பயன் பெறுவர். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளோருக்கும், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பினருக்கும் மற்றும் உடலுக்கு ஊறு விளைவிக்கும் தொழிற்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் நிதி மற்றும் உணவு தானிய ஒதுக்கீடு ஊரகப் பகுதி மக்கட் தொகை விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இப்புதிய திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழ்வருமாறு:-

*கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி (ஊராட்சி ஒன்றியம்) மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான ஆண்டு ஒதுக்கீடு 50:30:20 என்ற விகிதாச்சாரத்தில் இருக்கும்.

*பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கான கூலியின் ஒரு பகுதி நாள் ஒன்றுக்கு 5 கிலோ அரிசியாகவும், கூலியின் எஞ்சிய பகுதி ரொக்கமாகவும் வழங்கப்படும். இதன்மூலம் அரசு அறிவித்துள்ள குறைந்த பட்ச ஊதியம் உறுதி செய்யப்படும்.

*கூலி ரொக்கமாகவும், அரிசியாகவும் வாரம் ஒருமுறை வழங்கப்படும்.

*இத்திட்டத்தின்கீழ், கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கும் பணிகளும் மற்றும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய சொத்துக்களை உருவாக்கும் பணிகளும் எடுத்துக் கொள்ளப்படும். நீர் நுபப்பு சேகரிப்புப் பணிகள், நீர்ப் பிடிப்பு மேம்பாடு, ஏற்கெனவே உள்ள நீர் நிலை ஆதாரங்களை மேம்படுத்துதல், கிராம உட்கட்டமைப்பு வசதிகள், இணைப்புச் சாலைகள், ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள், மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகள், சந்தை வசதிகள் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.



2002 ஏப்ரல் 16]

2001-2002ஆம் ஆண்டில், ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.116.97 கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, 47928 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதேபோன்று, வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.117.33 கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு 9329 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும் 2001-2002ஆம் ஆண்டில், 17599 மெட்ரிக் டன் அரிசி வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழும், 17599 மெட்ரிக் டன் அரிசி ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழும் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டதனால், மத்திய அரசு மார்ச் திங்கள் 2002-ல் கூடுதலாக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இக்கூடுதல் நிதியும் சேர்த்து 2002-2003-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.267 கோடியாக இருக்கும். இந்தத் தொகைக்கு இணையாக, மத்திய அரசு வழங்கும் அரிசியின் அளவு இருக்கும்.

5. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் (லோக்சபா மற்றும் இராஜ்ய சபா) தெரிவு செய்யும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆண்டொன்றுக்கு தலா ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மக்களவை உறுப்பினர்களைப் பொறுத்த அளவில், அவர்கள் தொகுதிக்குட்பட்ட மாவட்டங்களில் மட்டும் இத்திட்டத்தைச் செயல்படுத்தலாம். மாநிலங்களவை உறுப்பினர்களைப் பொறுத்த வரை அவர்கள் சார்ந்துள்ள மாநிலத்திற்குள் அவர்கள் தெரிவு செய்யும் எந்த மாவட்டத்திலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தலாம். மக்களவையில் இடம் பெறும் நியமன உறுப்பினர்கள் இந்தியாவில் எந்த ஒரு மாவட்டத்தையும் தெரிவு செய்யலாம். தமிழ்நாட்டில் 39 மக்களவை உறுப்பினர்களும் 18 மாநிலங்களவை உறுப்பினர்களும் உள்ளனர்.

2001-2002 ஆம் ஆண்டில், இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ. 91.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. 2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

6. மறு வடிவமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதாரத் திட்டம்

மத்திய அரசு, ஊரக சுகாதாரத் திட்டத்தினைத் திருத்தியமைத்து, திருத்திய வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. இத்திட்டம் கீழ்கண்ட இரண்டு கூறுகளைக் கொண்டதாகும்:-

1. ஒதுக்கீடு அடிப்படையாலான திட்டம்

2. முழுமையான சுகாதாரத் திட்டம்.

[2002 ஏப்ரல் 16

ஒதுக்கீடு அடிப்படையாலான திட்டம், இலக்கு அடிப்படையிலான திட்டமாகும். இத்திட்டம் 2001-2002ஆம் ஆண்டுடன் முடிவடைந்துவிட்டது. இதுவரை 16,458 தனி நபர் வீட்டுக் கழிப்பிடங்களும், 23 பள்ளிக்கூடக் கழிப்பறைகளும், மற்றும் 7 துப்புரவு வளாகங்களும் முடிக்கப்பட்டுள்ளன. 2001-2002ஆம் ஆண்டில் மத்திய மாநில அரசுகள் முறையே ரூ.69.99 இலட்சம் மற்றும் ரூ.58.43 இலட்சம் நிதியை விடுவித்துள்ளன. இத்திட்டம் 31 மார்ச் 2002-வுடன் முடிவடைந்து விட்டது.

கல்வி மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாக, கிராமப்புற மக்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்களின் பங்கேற்போடு, தேவையின் அடிப்படையிலான அணுகுமுறையினை மக்களிடையே கொண்டு செல்ல, முழுமையான சுகாதாரத் திட்டம் வழிவகுக்கிறது. கிராம மக்கள் தொகையில் இத்திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம் 80 விழுக்காடு மக்கள் பயன்பெறும் வகையில் மூன்று ஆண்டுகளுக்கு உள்ளாக, ஒவ்வொரு திட்டமும் 24 மாதங்களில் முடிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினங்களை மத்திய மாநில அரசுகள் 80:20 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டம் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தேனி, திருநெல்வேலி, காஞ்சிபுரம். இராமநாதபுரம் மற்றும் கரூர் மாவட்டங்களில் ரூ. 75 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

### 7. தேசிய மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டம்

இத்திட்டம் முற்றிலும் மத்திய அரசால் நிதியுதவி வழங்கப்படும் திட்டமாகும். காடுகள் அழிவிலிருந்து தடுப்பதும், மக்கள் எளிதில் பயன்படுத்தக் கூடிய மரபு சாரா எரிசக்தி வளங்கள் உபயோகப்படுத்துவதை ஊக்கப்படுத்துவதும், பெண்கள் உடல்நலன் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதும் போன்ற நோக்கத்தைக் கொண்ட இத்திட்டம், மரபு சாரா எரிசக்தியை வழங்குவதோடு, சுற்றுப் புறச் சுகாதாரம் மற்றும் இயற்கை வளமுள்ள உரங்கள் உற்பத்தியை ஊக்குவிக்கும்.

இத்திட்டத்தின்கீழ், குறைந்தது ஐந்து வருட உத்தரவாதத்துடன் கூடிய நிலையான சூளா அடுப்புகள் அமைக்கப்படுகின்றன. புகையில்லா மண் சூளா அடுப்புகள் அல்லது புகையில்லா நிலையான சூளா அடுப்புகள் அமைக்க ஓர் அடுப்பிற்கு ரூ. 80/-வீதம் மானியம் வழங்கப்படுகிறது. 2001-2002ஆம் ஆண்டில் 60,000 சூளா அடுப்புகள் நிறுவப்பட்டன. இதில் 10,002 சூளா அடுப்புகள் ஆதிதிராவிடர் பழங்குடியினர் வீடுகளில் நிறுவப்பட்டுள்ளன. மத்திய அரசு, இத்திட்டத்தை 2002-2003 ஆம் ஆண்டில் மாநில அரசுக்கு மாற்ற உத்தேசித்துள்ளது.



2002 ஏப்ரல் 16]

### 8. தேசிய கரிம வாயுத் திட்டம்.

இத்திட்டம் மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்தி, பல்முனைப் பயன்களை அடையும் நோக்குடன் செயல்படும் திட்டமாகும். மாற்று எரிசக்தித் திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இத்திட்டத்தினை மத்திய அரசு 20 அம்ச திட்டத்தில் ஒரு திட்டமாக அங்கீகரித்துள்ளது. காடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்கவும், தரம் வாய்ந்த உரங்களை உற்பத்தி செய்வதும், கரிம வாயுக் கலங்களுடன், சுகாதாரச் கழிப்பறைகளை இணைப்பதன்மூலம் சுகாதாரத்தை மேம்படுத்துதல் ஊரக எரிசக்தித் திட்டத்தின் நோக்கமாகும். இது முழுமையான மத்திய அரசின் திட்டமாகும். இதற்கான பொதுப் பிரிவிற்கு ரூ.1800-ம், அட்டவணை இனத்தவருக்கு ரூ.2,300-ம். மலைப் பகுதியில் வசிப்பவர்களுக்கு ரூ.3,500-ம் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், சுழர்காவி முகவர்களுக்கு கூடுதலாக பொருத்துதல் மற்றும் பராமரிப்பிற்காக ரூ.500 வழங்கப்படுகிறது.

## VI. மனித வள மேம்பாடு

ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளின் அறிவு மற்றும் திறமையை வளர்ப்பதற்கு தேவையான பயிற்சி அளிப்பதற்காக மறைமலை நகரில் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் ஒன்றும், மேலும் பவானிசாகர், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை, டி.கல்லுப்பட்டி மற்றும் எஸ்.வி. நகரம் ஆகிய 5 இடங்களில் ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைக்கு மேல் உள்ள அலுவலர்களுக்கு மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திலும், மற்ற அலுவலர்களுக்கு ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்களிலும் உரிய பயிற்சி அளிக்கப்படுகிறது.

2001-2002-ஆம் ஆண்டில், 3,655 அலுவலர்களுக்கு நிர்வாகம்/ தொழில்நுட்பம் சம்பந்தமாக 10 நிலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நிறுவனங்களுக்கான நிர்வாகச் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. 2001-2002ஆம் ஆண்டில் 5 ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்களுக்கு ரூ.184.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2002-2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.226.24 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம்

தற்போது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 12619 கிராம ஊராட்சித் தலைவர்களும், 385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும்,

[2002 ஏப்ரல் 16

மற்றும் 29 மாவட்ட ஊராட்சித் தலைவர்களும் பொறுப்பேற்றுள்ளனர். இவர்களுடன் 649 மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களும், 6499 ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பேற்றுக் கொண்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு ரூ.3.70 இலட்சத்தில் ஒரு நாள் அறிமுகப் பயிற்சி அளிக்கப்பட்டது.

மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தேவைகளின் அடிப்படையில் பயிற்சி நடத்துவதற்கான குறிப்பேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2002-2003ஆம் ஆண்டில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு, முனைப்பான பயிற்சி அளிக்க கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண். (1) | பயிற்சி பெறுவர்களின் விவரம் (2) | பயிற்சியின் காலம் (3) | பயிற்சி நிறுவனங்கள் (4) | பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை (5) |
|---|---|---|---|---|
| 1 | கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி | 3 நாட்கள் | மாவட்டத் தலைமையிடம் | 25,328 |
| 2 | ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி | 2 நாட்கள் | ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம் | 1,155 |
| 3 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி | 2 நாட்கள் | மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் | 58 |
| 4 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களுக்கான பயிற்சி | 1 நாள் | மாவட்டத் தலைமையிடம் | 6,499 |
| 5 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கான பயிற்சி | 1 நாள் | ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம் | 649 |

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.3.78 கோடியில் திறன் வளர்ப்பதற்கான பயிற்சித் திட்ட முன்மொழிவிற்கு மத்திய அரசு



2002 ஏப்ரல் 16]

ஒதுக்கீடு அளித்ததோடு. முதல் தவணையாக 2001-2002ஆம் ஆண்டிற்கு ரூ. 39 இலட்சம் விடுவித்துள்ளது.

**2. பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கான தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டம்**

மகளிருக்கான அதிகாரம் அவர்களது பொருளாதாரத் தேவையினைப் பூர்த்தி செய்வதில் இருந்து ஆரம்பமாகிறது. எனவே, மகளிருக்குத் தேவையான இத்தகைய பொருளாதார சுதந்திரம் அடையச் செய்வது அவசியமாகிறது. பெண்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டு நிலைகளை உயர்த்துவதன் மூலம் அவர்களுடைய மதிப்பு குடும்பத்திலும் சமுதாயத்திலும் மற்றும் மாநில அளவிலும் உயர வழிவகுக்கும்.

பொருளாதார சுதந்திரம் அடைவதற்காக, மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியின் மூலம், ஊரக மகளிர் சுயதொழில் தொடங்கி, அதன்மூலம் சுயமாக வாழ வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்புத் துறையான சமூகநலத் துறை. ஐந்து ஆண்டுகளில் 5 இலட்சம் மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டது. இதில், ஊரக வளர்ச்சித் துறைக்கு 30,000 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் 2001-2002ஆம் ஆண்டில், 30160 மகளிருக்கு இத்துறையால் பயிற்சி அளிக்கப்பட்டது. 8239 ஊரக மகளிருக்கு திறமையை மேம்படுத்தும் பயிற்சி வழங்கப்பட்டது. இவர்களில் 1900 மகளிருக்கு கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

2002-2003ஆம் ஆண்டில், 30,000 பெண்களுக்கு ரூ.155 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சிகள் நடத்துவதற்கான செலவை பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டப் பயிற்சி ஒதுக்கீட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**3. ஊரகப் பகுதியில் படித்து வேலையில்லாத இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டம்**

ஊரகப் பகுதிகளில் படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு வழங்குவதற்கு ஏதுவாக, 18 முதல் 35 வயது வரை உள்ள படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு தொழில்முனைவோர் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பயிற்சிக்கு வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு,

அவர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி அளித்து, சிறுதொழில் தொடங்குவதற்குத் தேவையான கடனுதவி கிடைக்க வசதி செய்து கொடுக்கபபடும். 2001-2002ஆம் ஆண்டில், 7,237 ஊரக இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 10,000 ஊரக இளைஞர்களுக்கு ரூ.29.50 இலட்சத்தில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## VII. ஊராட்சி அமைப்புகள்

### 1. மாநில நிதிக் குழு மானியம்

மாநில அரசு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு சேர்மம் 'ஆ' வருவாயில் 8 விழுக்காடு ஒதுக்கீடு செய்கிறது. இதன்படி, 2001-2002ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 175 கோடியாகும். கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் முறையே 47:45:8 என்ற விகிதத்தில் பங்கீடு செய்யப்படுகின்றன. மேற் சொன்ன ஒதுக்கீட்டில், 2001-2002ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சமன்பாடு மற்றும் ஊக்க நிதியான ரூ.83.51 கோடியும் இதில் அடங்கும்.

2002-2003 ஆம் ஆண்டில், மாநில நிதிக்குழு மானியம் மாதாந்திர அடிப்படையில் விடுவிக்கப்படும்.

### 2. மத்திய நிதிக்குழு மானியம்

2000-2001 மற்றும் 2001-2002ஆம் ஆண்டுகளுக்கு பதினோராம் நிதிக் குழு மானியமாக ரூ.186.45 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு, அடிப்படை வசதிகளைப் பராமரிப்பதற்காக ரூ.171.92 கோடியும் தணிக்கை கணக்குகளைப் பராமரித்து, அடிப்படை புள்ளி விவரங்களை மேம்படுத்துவதற்காக ரூ.14.53 கோடியும் ஒதுக்கப்பட்டது.

### 3. சமூகக் கல்வி மானியம்

அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 'தமிழரசு' மற்றும் திட்ட பருவ இதழ்களை வழங்கவும், சென்னையில் நடைபெறும் அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில், ரூ.27.84 இலட்சம் விடுவிக்கப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டுக்கு ரூ.27.84 இலட்சம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 4. ஊரக மருந்தகங்களுக்கான மானியம்

ஊரக மருந்தகங்களைத் தோற்றுவித்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவை ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ளது. முழு நேர மருந்தகங்களுக்கு ரூ.5400-ம், பகுதி நேர மருந்தகங்களுக்கு ரூ.2040-ம் அல்லது ஆண்டு செலவினத்தில் 50 விழுக்காடு மானியம் அளிக்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில், ரூ.8.06 இலட்சம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.8.06 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5. தல பாசன மானியம்

ஊராட்சி ஒன்றியங்கள் 100 ஏக்கருக்கும் குறைவான ஆயக்கட்டுகள் உள்ள ஏரிகளைப் பராமரிக்கின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1.00 கோடி ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## VIII. கிராம சபை

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஊராட்சியில் உள்ள வாக்காளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, கிராம சபை ஏற்படுத்தலாம். கிராம சபை, மக்களாட்சி நிறுவனங்களின் அடிப்படை ஆணிவேராகும். கிராம சபையின் ஒட்டுமொத்த ஆலோசனை, ஊராட்சி நிறுவனங்கள் திட்டமிடுதலிலும் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்துவதிலும் உதவி செய்கிறது. சமூகத் தணிக்கை கிராம சபையின் ஓர் அங்கமாகும். இது ஊராட்சிகளின் வெளிப்படையான நிர்வாகத்தையும் பொறுப்பையும் உறுதி செய்கிறது.

கிராம சபை, கிராமத் திட்டம், கிராம வரவு செலவுத் திட்டம், கிராம ஊராட்சியின் கணக்குத் தணிக்கை அறிக்கை பல திட்டங்களில் பயனாளிகளின் பட்டியலை ஒப்புதல் செய்வதோடு திட்டங்களின் முன்னேற்றத்தையும் ஆய்வு செய்கிறது.

* ஆண்டில் குறைந்தது நான்கு முறை கிராம சபை கூட்டப்பட வேண்டும். குறிப்பாக ஜனவரி 26, மே 1, ஆகஸ்ட் 15 மற்றும் அக்டோபர் 2-ஆம் தேதிகளில் கூட்டப்பட வேண்டும்.
* தகுதியுடைய அனைத்து வாக்காளர்களும் கிராம சபையின் உறுப்பினர்களாவர்.
* கிராம சபையின் கூட்டம் குறித்து குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னதாக அறிவிப்பு செய்ய வேண்டும்.
* கிராம சபை கூட்டத்தில் குறைந்தபட்சம் பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டும்.

* கிராம ஊராட்சித் தலைவர் கிராம சபைக் கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.

## IX. டேனிடா உதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்

இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில், தொடர்ச்சியாக குடிநீர் வழங்குதல் மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல் ஆகியவை இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் ரூ.42.97 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. தேவையின் அடிப்படையில், மக்கள் பங்கேற்புடன் பயனாளிகள் தொகை மற்றும் பொருளாக அளிக்கப்படும் பங்களிப்புடன் செயல்படுத்துவது இத்திட்டத்தின் தன்மையாகும். ஊரக ஏழை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்தத் திட்டம் வழிவகுக்கிறது. இந்தத் திட்டத்திற்கான செலவை டென்மார்க் அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் ஊராட்சிகள் முறையே ரூ.33.60 கோடி, ரூ.5.46 கோடி மற்றும் ரூ.3.91 கோடி அளவில் பகிர்ந்து கொள்கின்றன.

இத்திட்டத்தின்கீழ் 230 குடிநீர் வழங்கல் பணிகளும், 332 பள்ளிக் கழிப்பறைகளும் மற்றும் 13600 தனிநபர் கழிப்பறைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## X. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிருவாகம்

மத்திய மற்றும் மாநில அரசுகள் செயல்படுத்தும் வளர்ச்சித் திட்டங்கள் நிதியிலிருந்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாகத்தின் செலவைச் செய்துவந்த முறையை மாற்றி, மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிர்வாகச் செலவுக்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்யும் புதிய முறையை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மத்திய அரசு, ஒரு மாவட்டத்திற்கு ஆகும் ஆண்டுச் செலவினைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தியுள்ளது.

தொகுப்பு அ—ஐந்திற்கும் குறைவான ஒன்றியங்கள்

தொகுப்பு ஆ—ஆறிலிருந்து பத்து வரையிலான ஒன்றியங்கள்

தொகுப்பு இ—பதினொன்றிலிருந்து பதினைந்து வரையிலான ஒன்றியங்கள்





தொகுப்பு ஈ—பதினாறு மற்றும் அதற்கு மேற்பட்ட ஒன்றியங்கள்

2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.16.06 கோடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாகச் செலவினமாக மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டிற்கும் இதே தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூ.401.56 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## XI. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்துவது ஊரக வளர்ச்சித் துறையின் முன்னுரிமைப் பணிகளில் ஒன்றாகும். இத்துறையால் செயல்படுத்தப்படும் பெரும்பாலான வளர்ச்சித் திட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை அளிப்பதற்காக தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டங்களின் மூலம் ஊரக ஆதிதிராவிடர் / பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மக்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களாவன:-

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் (புதிய வீடுகள் கட்டுதல்)

இலக்கில் 85 விழுக்காடு ஆதிதிராவிடர்/பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 2001-2002ம் ஆண்டில், மொத்தம் 31745 தொகுப்பு வீடுகளில் 26,983 வீடுகள் ஆதிதிராவிடர் / பழங்குடியின மக்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன.

குடியிருக்க இயலாத கச்சா வீடுகளை மேம்படுத்துதல்

இலக்கில் 60 விழுக்காடு இந்த இனத்து மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில், மொத்தம் 15795 கச்சா வீடுகளில் 9477 கச்சா வீடுகள் குடியிருக்க தகுந்த வீடுகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

கடன் மற்றும் மானியத்துடன் கூடிய குடியிருப்பு திட்டம்

இலக்கில் 60 விழுக்காடு இந்த இனத்து மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில், மொத்தம் 1828 வீடுகளில் 1097 வீடுகள் இவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

[2002 ஏப்ரல் 16

பாரதப் பிரதமர் கிராம வளர்ச்சித் திட்டம் (ஊரகக் குடியிருப்பு)

இலக்கில் 60 விழுக்காடு இந்த இனத்து மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் மொத்தம் 6895 வீடுகளில் 4137 வீடுகள் இவர்களுக்காக கட்டப்பட்டுள்ளன.

பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம்

ஒதுக்கீட்டில் 50 விழுக்காடு இந்த இனத்து மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில், மொத்த ஒதுக்கீடான ரூ.36.17 கோடியில் ரூ.18.08 கோடி இவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம்

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டில் 22.5 விழுக்காடு ஆதிதிராவிடர்/பழங்குடியின பயனாளிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக ஒதுக்கப்படுகிறது.

மறு வடிவமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதார திட்டம்

இத்திட்டத்தின்கீழ் குறைந்த பட்சமாக 25 விழுக்காடு தனிநபர் கழிப்பிடங்கள் கட்டுவதற்காக ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தேசிய கரிம வாயுத் திட்டம்

இலக்கில் 2 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பொது வகுப்பினருக்கு ஒரு கரிமவாயு கலனுக்கு ரூ.1800/- மானியமாக வழங்குகையில், ஆதிதிராவிடர்/ பழங்குடியின மக்களுக்கு உயர்த்தப்பட்ட மானியமாக ரூ.2300 வழங்கப்படுகிறது.

தேசிய மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புத் திட்டம்

2001-2002ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 60,000 மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புகளில், 10002 அடுப்புகள் ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்காக நிறுவப்பட்டன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.12 இலட்சம் ஆதிதிராவிட/பழங்குடியின மாணவ/மாணவியர்களுக்கான விடுதிகள் கட்டுவதற்காக ஒதுக்கப்படுகிறது.

சென்னை-600 008